# திருக்குறள்

## மணக்குடவர் உரை

# பொருளடக்கம்


## அறத்துப்பால்

1. பாயிரவியல் அதிகாரம்: 1 முதல் 4 வரை
2. இல்லறவியல் அதிகாரம்: 5 முதல் 34 வரை
3. துறவறவியல் அதிகாரம்: 35 முதல் 37 வரை
4. ஊழியல் அதிகாரம்: 38

## பொருட்பால்

1. அரசியல் அதிகாரம்: 39 முதல் 63 வரை
2. அமைச்சியல் அதிகாரம்: 64 முதல் 73 வரை
3. அரணியல் அதிகாரம்: 74 முதல் 75 வரை
4. கூழியல் அதிகாரம்: 76
5. படையியல் அதிகாரம்: 77 முதல் 78 வரை
6. நட்பியல் அதிகாரம்: 79 முதல் 95 வரை
7. குடியியல் அதிகாரம்: 96 முதல் 108 வரை

## இன்பத்துப்பால்

1. களவியல் அதிகாரம்: 109 முதல் 115 வரை
2. கற்பியல் அதிகாரம்: 116 முதல் 133 வரை

# திருக்குறளை எப்படிப் படிப்பது?

எப்பொருள், யார்-யார்-வாய்க் கேட்பினும்; அப்பொருள்
மெய்ப்பொருள், காண்பது; அறிவு.

1. யார் சொல்வதையும், உண்மை என்று நம்பக்கூடாது.
2. கேள்விகள் கேட்க, கற்றுக் கொள்ள வேண்டும்.
3. என்ன கேள்விகள்?
    1. இது உண்மையா?
    2. ஏன்? எப்பொழுது?
    3. எப்படி? எங்கு?
    4. ஆதாரம் எது? உண்மையான ஆதாரமா?
    5. பிற கேள்விகள்? என்ன கேட்கலாம்?

சொல்லுக, சொல்லில் பயன்-உடைய! சொல்லற்க,
சொல்லில் பயன்-இலாச் சொல்!

1. எவை பயன் உடையவை? எவை பயன் இல்லாதவை? ஏன்?
2. பயன் உடையவை: ஆராய்ந்து, தெளிய வேண்டும்
    1. எது எனக்கு நல்ல வழியில் உயர்வைத் தரும்?
    2. எது எனக்கு நல்லது?
3. பயன் இல்லாதவை: ஆராய்ந்து, தெளிய தேவை-இல்லாதவை. எனக்குத் தெரியாது என்று ஒதுக்கி விட வேண்டும். அதைப் பற்றிப் பேசுவதையும், கேட்பதையும் தவிர்க்க வேண்டும்.

கற்க, கசடு-அற, கற்பவை; கற்ற-பின்,
நிற்க, அதற்குத் தக!

1. கற்றுக் கொள்ள வேண்டும். (எதை? ஏன்? எப்படி? யாரிடம்?)
2. நன்றாக கற்றுக் கொள்ள வேண்டும்.
3. நன்றாக கற்று (ஆராய்ந்து, முயற்சி செய்து, பயிற்சி செய்து), தெளிய வேண்டும்.
4. கற்றதை தினமும் பயன்படுத்த வேண்டும். அதன் வழியில் நடக்கவேண்டும்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை

திருவள்ளுவர் திருக்குறளைக் கற்கும் ஒவ்வொருவரும், தத்தமக்குக் கிடைக்கும் உரைகளைத் துணையாக வைத்துக்கொண்டு, குறள்களின் பொருள்களைத் தானே ஆராய வேண்டும் என்பது என் விருப்பம்.

## திருக்குறள் - உற்சாகம் ஊட்டும் வரிகள் - தினமும்

உள்ளத்து அனையது, உயர்வு.
அசாவாமை வேண்டும்;

என் உயர்வு, என்னிடம் உள்ளது. நல்ல எண்ணத்தோடு, நல்ல செயலை, நல்ல முயற்சியோடு நான் செய்தால், என் உயர்வு நிச்சயம். மன உறுதியோடு முயற்சி செய்வேன்.

முயற்சி, திருவினை ஆக்கும்.
முயற்சி, தன்-மெய்-வருத்தக் கூலி-தரும்.
பெருமை, முயற்சி தரும்.

மனம்-தூய்மை, செய்-வினை தூய்மை;
அகம்-தூய்மை, வாய்மையால் காணப்படும்.
மனத்துக்கண் மாசு-இலன் ஆதல்;
பணிவு-உடையன், இன்சொலன் ஆதல்;
பொறுமை-உடைமை, போற்றி ஒழுகப்-படும்.

நல்லதை நினைப்பேன். நல்லதை பேசுவேன்.
அளவாக பேசுவேன். நல்லதை செய்வேன்.
பணிவையும், பொறுமையையும் வளர்த்துக் கொள்வேன்.

அற்றார் அழி-பசி தீர்த்தல்!

பசியால் வாடுபவர்க்கு/இல்லை என்று கேட்பவர்க்கு, என்னால் முடிந்ததை கொடுப்பேன்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்-சொல்;
நெடு-நீர், மறவி, மடி, துயில்;
புறம்-கூறான் என்றல் இனிது.

பொறாமை, பேராசை, கோபம், கடும் சொல் - இவைகளை முயற்சி செய்து தவிர்ப்பேன்.
காலம் தாழ்த்தி செய்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் - இவைகளை முயற்சி செய்து தவிர்ப்பேன்.

அற்றால், அளவு-அறிந்து உண்க!

பசித்தால், உடலுக்கு நலம் தருவதை, அளவாக சாப்பிடுவேன்.
உடலுக்கு நலம் தராத உணவை, தவிர்ப்பேன்.

# நன்றி

1. தமிழ் இணையக் கல்விக்கழகம்
2. தமிழ் இணையக் கல்விக்கழகம் - திருக்குறள்
3. தமிழிணையம் - மின்னூலகம்
4. மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்
5. அழகி - மென்பொருள் செயலி

இந்த முயற்சி, அனைவரும் திருக்குறளை

1. எளிதில் படிக்க
2. நகல் எடுக்க
3. ஒரு அதிகாரத்தை மட்டும் நகல் எடுத்து படிக்க
4. தாளில் படிக்க வசதியாக, எழுத்து அளவு பெரியதாக

1. திருக்குறள் முழுவதும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வலைத்தளத்தில் இருந்து எடுக்கப்பட்டது.
2. சில இடங்களில், படிப்பதற்கு எளிதாக மாற்றப்பட்டு உள்ளது.

# நன்றி

1. திருக்குறளுக்கு உரை எழுதிய, உரை ஆசிரியர்கள் அனைவருக்கும்.
2. இனி காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப, தமிழிலும், ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் உரை எழுதப்போகும் ஆசிரியர்கள் அனைவருக்கும்.

நிறை-உடைமை நீங்காமை வேண்டின்; பொறை-உடைமை, போற்றி ஒழுகப்-படும்.

# திருக்குறள் அதிகாரங்கள்


1. கடவுள் வாழ்த்து ........ 1
2. வான் சிறப்பு ........ 4
3. நீத்தார் பெருமை ........ 6
4. அறன் வலியுறுத்தல் ........ 9
5. இல்வாழ்க்கை ........ 12
6. வாழ்க்கைத்துணை நலம் ........ 15
7. புதல்வரைப் பெறுதல் ........ 17
8. அன்பு உடைமை ........ 19
9. விருந்து ஓம்பல் ........ 21
10. இனியவை கூறல் ........ 23
11. செய்ந்நன்றி அறிதல் ........ 25
12. நடுவு நிலைமை ........ 27
13. அடக்கம் உடைமை ........ 29
14. ஒழுக்கம் உடைமை ........ 31
15. பிறன் இல் விழையாமை ........ 33
16. பொறை உடைமை ........ 35
17. அழுக்காறாமை ........ 37
18. வெஃகாமை ........ 39
19. புறம் கூறாமை ........ 41
20. பயன் இல சொல்லாமை ........ 43
21. தீவினை அச்சம் ........ 45
22. ஒப்புரவு அறிதல் ........ 47
23. ஈகை ........ 49
24. புகழ் ........ 51
25. அருள் உடைமை ........ 53
26. புலால் மறுத்தல் ........ 55
27. தவம் ........ 57
28. கூடா ஒழுக்கம் ........ 59
29. கள்ளாமை ........ 61
30. வாய்மை ........ 63
31. வெகுளாமை ........ 65
32. இன்னா செய்யாமை ........ 67
33. கொல்லாமை ........ 69
34. நிலையாமை ........ 71
35. துறவு ........ 73
36. மெய் உணர்தல் ........ 75

37. அவா அறுத்தல் .................... 78
38. ஊழ் .................... 80
39. இறைமாட்சி .................... 82
40. கல்வி .................... 85
41. கல்லாமை .................... 87
42. கேள்வி .................... 89
43. அறிவுடைமை .................... 91
44. குற்றம் கடிதல் .................... 93
45. பெரியாரைத் துணைக்கோடல் .................... 95
46. சிற்றினம் சேராமை .................... 97
47. தெரிந்து செயல் வகை .................... 99
48. வலி அறிதல் .................... 101
49. காலம் அறிதல் .................... 103
50. இடன் அறிதல் .................... 105
51. தெரிந்து தெளிதல் .................... 107
52. தெரிந்து வினையாடல் .................... 110
53. சுற்றம் தழால் .................... 112
54. பொச்சாவாமை .................... 114
55. செங்கோன்மை .................... 116
56. கொடுங்கோன்மை .................... 118
57. வெருவந்த செய்யாமை .................... 120
58. கண்ணோட்டம் .................... 122
59. ஒற்று ஆடல் .................... 124
60. ஊக்கம் உடைமை .................... 126
61. மடி இன்மை .................... 128
62. ஆள்வினை உடைமை .................... 130
63. இடுக்கண் அழியாமை .................... 132
64. அமைச்சு .................... 134
65. சொல் வன்மை .................... 137
66. வினைத் தூய்மை .................... 139
67. வினைத் திட்பம் .................... 141
68. வினை செயல் வகை .................... 143
69. தூது .................... 146
70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல் .................... 148
71. குறிப்பு அறிதல் .................... 150
72. அவை அறிதல் .................... 152
73. அவை அஞ்சாமை .................... 154

74. நாடு ........ 156
75. அரண் ........ 158
76. பொருள் செயல் வகை ........ 160
77. படை ........ 162
78. படைச் செருக்கு ........ 164
79. நட்பு ........ 166
80. நட்பு ஆராய்தல் ........ 168
81. பழைமை ........ 170
82. தீ நட்பு ........ 172
83. கூடா நட்பு ........ 174
84. பேதைமை ........ 176
85. புல்லறிவு ஆண்மை ........ 178
86. இகல் ........ 181
87. பகைமாட்சி ........ 183
88. பகைத் திறம் தெரிதல் ........ 185
89. உட்பகை ........ 187
90. பெரியாரைப் பிழையாமை ........ 189
91. பெண்வழிச் சேறல் ........ 191
92. வரைவு இல் மகளிர் ........ 193
93. கள் உண்ணாமை ........ 195
94. சூது ........ 197
95. மருந்து ........ 199
96. குடிமை ........ 201
97. மானம் ........ 203
98. பெருமை ........ 205
99. சான்றாண்மை ........ 207
100. பண்பு உடைமை ........ 209
101. நன்றி இல் செல்வம் ........ 211
102. நாண் உடைமை ........ 213
103. குடி செயல் வகை ........ 215
104. உழவு ........ 217
105. நல்குரவு ........ 220
106. இரவு ........ 222
107. இரவு அச்சம் ........ 225
108. கயமை ........ 228

# 1. கடவுள் வாழ்த்து

1 அகரம்-முதல, எழுத்து-எல்லாம்; ஆதி-
பகவன் முதற்றே, உலகு.

2 கற்றதனால் ஆய பயன்-என்கொல்; வால்-அறிவன்
நல்-தாள் தொழாஅர் எனின்?

3 மலர்மிசை ஏகினான் மாண்-அடி சேர்ந்தார்,
நிலமிசை நீடு-வாழ்வார்.

4 வேண்டுதல், வேண்டாமை இலான்; அடி-சேர்ந்தார்க்கு
யாண்டும், இடும்பை-இல.

5 இருள்-சேர் இரு-வினையும் சேரா; இறைவன்
பொருள்-சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6 பொறி-வாயில் ஐந்து-அவித்தான்; பொய்-தீர் ஒழுக்க
நெறி-நின்றார், நீடு-வாழ்வார்.

7 தனக்கு-உவமை இல்லாதான் தாள்-சேர்ந்தார்க்கு-அல்லால்,
மனக்-கவலை மாற்றல் அரிது.

8 அற-ஆழி அந்தணன் தாள்-சேர்ந்தார்க்கு-அல்லால்,
பிற-ஆழி நீந்தல் அரிது.

9 கோள்-இல் பொறியில் குணம்-இலவே; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10 பிறவிப் பெருங்-கடல் நீந்துவர்; நீந்தார்,
இறைவன் அடி சேராதார்.

1. எழுத்துக்களெல்லாம் அகரமாகிய வெழுத்தைத் தமக்கு முதலாக வுடையன. அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக வுடைத்து.

2. மேற்கூறிய வெழுத்தினா னாகிய சொற்க ளெல்லாங் கற்றதனானாகிய பயன் வேறியாது? விளங்கின வறிவினை யுடையவன் திருவடியைத் தொழாராயின்.

சொல்லினானே பொருளறியப்படுமாதலான் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடுபெறலாகும். மீண்டும் வணக்கம் கூறியது எற்றுக்கென்றாற்கு, இஃது அதனாற் பயனிது வென்பதூஉம், வேறுவேறு பயனில்லையென்பதூஉம் கூறிற்று. கற்பக் கழிமட மஃகும் என்றாருமுளர்.

3. மலரின்மேல் நடந்தானது மாட்சிமைப்பட்ட திருவடியைச் சேர்ந்தவரன்றே, நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்வார்.

'நிலம்' என்று பொதுப்படக் கூறியவதனான் இவ்வுலகின் கண்ணும் மேலுலகின்கண்ணுமென்று கொள்ளப்படும். தொழுதாற் பயனென்னையென்றாற்கு, போகநுகர்தலும் வீடுபெறலுமென்று கூறுவார் முற்படப் போகநுகர்வாரென்று கூறினர்.

4. இன்பமும் வெகுளியு மில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர் எவ்விடத்து மிடும்பை யில்லாதவர்.

பொருளுங் காமமுமாகாவென்றற்கு "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்று பெயரிட்டார்.

5. மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினையென்னு மிரண்டு வினையுஞ் சேரா; தலைவனது ஆகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார் மாட்டு.

6. மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம் பொறிகளின் வழியாக வரும் ஊறு சுவை யொளி நாற்ற மோசை யென்னு மைந்தின்கண்ணுஞ் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கினானது பொய்யற்ற வொழுக்க நெறியிலே நின்றாரன்றே நெடிது வாழ்வார்?

இது சாவில்லையென்றது.

7. தனக்கு நிகரில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்க்கல்லது மனத்துண்டாங் கவலையை மாற்றுத லரிது.

வீடுபெறலாவது அவலக்கவலைக் கையாற்றினீங்கிப் புண்ணிய பாவமென்னுமிரண்டினையுஞ் சாராமற் சாதலும் பிறத்தலுமில்லாத தொரு தன்மையை யெய்துதல். அது பெறுமென்பார் முற்படக் கவலை கெடுமென்றார். அதனால் எல்லாத் துன்பமும் வருமாதலின்.

8. அறமாகிய கடலையுடைய அந்தணனது திருவடியைச் சேர்ந்தவர்க்கல்லது, ஒழிந்த பேர்களுக்குப் பிறவாழியை நீந்தலாகாது. அது பெறுதலரிது.

இது காமமும் பொருளும் பற்றி வரும் அவலங் கெடுமென்றது.

9. அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் போல, ஒரு குணமுமுடையனவல்ல; எட்டுக் குணத்தினை யுடையவன் திருவடியினை வணங்காத தலையினையுடைய உடம்புகள்.

உயிருண்டாகில் வணங்குமென் றிழித்து உடம்புக ளென்றார்

10. பிறவியாகிய பெரிய கடலை நீந்தியேறுவர், இறைவனது அடியைச் சேர்ந்தவர்; சேராதவ ரதனு ளழுந்துவார்

# 2. வான் சிறப்பு

11 வான்-நின்று உலகம், வழங்கி வருதலால்,
தான்-அமிழ்தம்-என்று உணரல்-பாற்று.

12 துப்பார்க்குத் துப்பு-ஆய துப்பு-ஆக்கி; துப்பார்க்குத்
துப்பு-ஆய தூஉம்; மழை.

13 விண்-இன்று-பொய்ப்பின்; விரிநீர் வியன்-உலகத்து-
உள் நின்று-உடற்றும்; பசி.

14 ஏரின் உழாஅர், உழவர்; புயல்-என்னும்
வாரி வளம்-குன்றிக்கால்.

15 கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய்; மற்று-ஆங்கே
எடுப்பதூஉம்; எல்லாம் மழை.

16 விசும்பின் துளி, வீழின்-அல்லால்; மற்று-ஆங்கே
பசும்-புல் தலை காண்பு-அரிது.

17 நெடுங்-கடலும் தன்-நீர்மை குன்றும்; தடிந்து-எழிலி
தான்-நல்காது ஆகி-விடின்.

18 சிறப்பொடு பூசனை செல்லாது; வானம்
வறக்குமேல், வானோர்க்கும், ஈண்டு.

19 தானம், தவம் இரண்டும் தங்கா வியன்-உலகம்;
வானம் வழங்காது எனின்.

20 நீர்-இன்று அமையாது உலகு-எனின்; யார்யார்க்கும்
வான்-இன்று அமையாது ஒழுக்கு.

11. மழைவளம் நிலை நிற்றலானே உலகநடை தப்பாது வருதலான், அம்மழைதான் உலகத்தார் அமுதமென்றுணரும் பகுதியது.

இஃது அறம் பொரு ளின்பங்களை யுண்டாக்குதலானும், பலவகைப்பட்ட வுணவுகளை நிலை நிறுத்தலானும். இம்மழையினை மற்றுள்ள பூத மாத்திரமாக நினைக்கப் படாதென்ற நிலைமை கூறிற்று.

12. பிறிதொன்றுண்பார்க்கு அவருண்டற்கான வுணவுகளையு முண்டாக்கித் தன்னை யுண்பார்க்குத் தானே உணவாவதும் மழையே.

இது பசியைக் கெடுக்கு மென்றது.

13. வானமானது நிலைநிற்கப் பொய்க்குமாயின், விரிந்த நீரினையுடைய அகன்ற வுலகத்திடத்தே பசியானது நின்று வருத்தாநிற்கும், எல்லாவுயிர்களையும்.

பொய்த்தல்- தன்றொழில் மறுத்தல். இது பசி என்று பொதுப்படக் கூறியவதனான் மக்களும் விலங்கும் பொருளுங் காமமுந் துய்க்கலாற்றாது துன்ப முறுமென்று கூறிற்று.

14. ஏரினுழுதலைத் தவிர்வாருழவர், புயலாகிய வாரியினுடைய வளங்குறைந்தகாலத்து.

இஃது உழவாரில்லை யென்றது.

15. பெய்யாது நின்று எல்லாப் பொருளையுங் கெடுப்பதும் அவை கெடப் பட்டார்க்குத் துணையாய்த் தான் பெய்து பொருள்களெல்லாவற்றையும் அவ்விடத்தே யுண்டாக்குவதும் மழை.

இஃது இரண்டினையுஞ் செய்யவற்றென்றவாறு.

16. வானின்று துளிவீழினல்லது அவ்விடத்துப் பசுத்த புல்லினது தோற்றமுங் காண்டல் அரிது.

ஆங்கென்பதனை அசையாக்கினு மமையும். இஃது ஓரறிவுயிருங் கெடுமென்றது.

17. நிலமேயன்றி நெடியகடலும் தனது தன்மை குறையும், மின்னி மழையானது பெய்யாவிடின்.

தடிந்தென்பதற்கு, கூறுபடுத்து என்று பொருளுரைப்பாரு முளர். இது நீருள் வாழ்வனவும் படுவனவுங் கெடுமென்றது. இவை நான்கினானும் பொருட்கேடு கூறினார், பொருள்கெட இன்பங்கெடு மென்பதனால் இன்பக்கேடு கூறிற்றிலர்.

18. சிறப்புச் செய்யப்படுகின்ற விழவு பூசனை நடவாது, வானம் புலருமாகில் தேவர்களுக்கும் இவ்வுலகின்கண்.

மழைபெய்யாக்கால் வருங் குற்றங் கூறுவார் முற்பட நான்குவகைப்பட்ட அறங்களில் பூசை கெடுமென்றார்.

19. தானமும் தவமுமாகிய விரண்டறமு முளவாகா; அகன்ற வுலகத்துக்கண் மழை பெய்யாதாயின்.

இது தானமும் தவமுங் கெடுமென்றது.

20. நீரையின்றி யுலகம் அமையாதாயின் யாவர்க்கும் மழையையின்றி ஒழுக்கம் உண்டாகாது.

ஒழுக்கம்- விரதம். இஃது ஆசாரங்கெடுமென்றது. இவை மூன்றினானும் நான்கறமுங் கெடுமென்று கூறினார்.

# 3. நீத்தார் பெருமை

21 ஒழுக்கத்து நீத்தார்-பெருமை, விழுப்பத்து
வேண்டும்; பனுவல் துணிவு.

22 துறந்தார் பெருமை துணைக்-கூறின்; வையத்து
இறந்தாரை எண்ணிக்-கொண்டற்று.

23 இருமை, வகை-தெரிந்து ஈண்டு அறம்-பூண்டார்;
பெருமை பிறங்கிற்று, உலகு.

24 உரன்-என்னும் தோட்டியான், ஓர்-ஐந்தும்-காப்பான்;
வரன்-என்னும் வைப்பிற்கு, ஓர்-வித்து.

25 ஐந்து-அவித்தான்-ஆற்றல்; அகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும், கரி.

26 செயற்கு-அரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கு-அரிய செய்கலாதார்.

27 சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின்-
வகை தெரிவான்கட்டே; உலகு.

28 நிறை-மொழி மாந்தர் பெருமை; நிலத்து
மறை-மொழி காட்டிவிடும்.

29 குணம்-என்னும் குன்று-ஏறி நின்றார், வெகுளி
கணம்-ஏயும், காத்தல் அரிது.

30 அந்தணர் என்போர் அறவோர்; மற்று-எவ்-உயிர்க்கும்
செந்-தண்மை பூண்டு-ஒழுகலான்.

21. ஒழுக்கத்தின் பொருட்டு எல்லாப் பொருளையுந் துறந்தாரது பெருமையை நூல்களின் துணிவு விழுப்பத்தின் பொருட்டு வேண்டும்.

யாதானுமொரு பொய்யைச் சொல்லும் நூலும் தன்னை யெல்லாருங் கொண்டாடுவதற்காகத் துறந்தார் பெருமையை நன்கு மதித்துக் கூறும். அதனானே யானுஞ் சொல்லுகின்றேனென்பது.

22. காம முதலாகத் துறந்தார் பெருமைக்கு அளவு கூறின் உலகத்துப் பிறந்திறந்தாரை இத்துணையாரென்று எண்ணி யறியலுற்றாற் போலும்.

இது பெருமைக்கெல்லை கூறுத லரிதாயினுஞ் சில சொல்லப் புகாநின்றே னென்றது கருதிக் கூறிற்று.

23. பிறப்பும் வீடுமென்னு மிரண்டினது கூறுபாட்டை யாராய்ந்து இவ்விடத்தே துறவறத்தை மேற்கொண்டவரது பெருமை உலகத்தில் மிக்கது.

இஃது எல்லாரானும் போற்றப்படுமென்றது.

24. அறிவாகிய தோட்டியானே பொறியாகிய யானையைந் தினையும் புலன்களிற் செல்லாமல் மீட்பவன் மேலாகிய விடத்தே யாதற்கு இவ்விடத்தேயிருப்பதொரு வித்து.

25. நுகர்ச்சியாகிய வைந்தினையுந் துறந்தானது வலிக்கு அகன்ற விசும்பிலுள்ளார்க்கு நாயகனாகிய இந்திரனே யமையுஞ் சான்று.

இந்திரன் சான்றென்றது இவ்வுலகின்கண் மிகத் தவஞ் செய்வாருளரானால் அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான். இது தேவரினும் வலியனென்றது.

26. செயற்கு அரியன செய்வாரைப் பெரியோரென்று சொல்லுவர். அவற்றை செய்யமாட்டாதாரைத் துறந்தாராயினுஞ் சிறியோரென்று சொல்லுவர்.

செயற்கரியன- இயம நியம முதலாயின. இவ்வதிகாரம் நீத்தார் பெருமையென்று கூறப்பட்டதாயினும், துறந்த மாத்திரத்தானே பெரியரென்று கொள்ளப்படார். செயற்கரியன செய்வாரே பெரியரென்று கொள்ளப்படுவரென்று இது கூறிற்று.

27. சுவை முதலாகக் கூறிய வைந்து புலன்களின் வகையை யாராய்வான் கண்ணதே யுலகம்.

எனவே, இவற்றின் காரியம் வேறொன்றாகத் தோன்றுமன்றே அதனை அவ்வாறு கூறுபடுத்துக் காணக் காரணந் தோற்றுமாதலால், காரியமான வுலகம் அறிவான் கண்ணதா மென்றவா றாயிற்று.

28. நிரம்பிய கல்வியுடைய மாந்தரது பெருமையை அவராற் சொல்லப்பட்டு நிலத்தின்கண் வழங்காநின்ற மந்திரங்களே காட்டும்.

இஃது அவராணை நடக்குமென்று கூறிற்று.

29. குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றார்மாட்டு உளதாகிய வெகுளியால் வருந்தீமையைச் சிறிது பொழுதாயினும் வாராமற் காத்தலரிது.

நகுஷன் பெரும்பாம்பாயினன். இது வெகுளி பொறுத்தலரிதென்றது.

30. எல்லாவுயிர்க்குஞ் செவ்விய தட்பஞ்செய்தலை மேற்கொண்டொழுகலானே, அந்தணரென்போரும் துறந்தாராகக் கொள்ளப்படுவர்.

மேல் துறந்தவர்களினுஞ் சிறியாருளரென்று கூறினார். இதனானே துறவாதாரினும் பெரியாருளரென்று கூறினார். இவை யெட்டானும் துறவறத்தின் பெருமை கூறப்பட்டது.

# 4. அறன் வலியுறுத்தல்

31 சிறப்பு-ஈனும்; செல்வமும்-ஈனும்; அறத்தின் ஊஉங்கு
ஆக்கம் எவனோ, உயிர்க்கு.

32 அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு.

33 ஒல்லும்-வகையான் அறவினை, ஓவாதே
செல்லும்-வாய் எல்லாம் செயல்.

34 மனத்துக்கண் மாசு-இலன் ஆதல்; அனைத்து-அறன்;
ஆகுல நீர, பிற.

35 அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்-சொல்; நான்கும்
இழுக்கா இயன்றது, அறம்.

36 ‘அன்று-அறிவாம்’ என்னாது, அறம்-செய்க; மற்று-அது
பொன்றுங்கால் பொன்றாத்-துணை.

37 ‘அறத்து-ஆறு-இது’ என-வேண்டா; சிவிகை
பொறுத்தானொடு ஊர்ந்தான் இடை.

38 வீழ்-நாள் படாஅமை நன்று-ஆற்றின்; அஃது-ஒருவன்
வாழ்-நாள் வழி-அடைக்கும் கல்.

39 அறத்தான் வருவதே இன்பம்; மற்று-எல்லாம்
புறத்த; புகழும் இல.

40 செயற்பாலது ஒரும் அறனே; ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.

31. முத்தியுந்தரும் செல்வமும் தரும் ஆதலால், அறத்தின் மேல் உயிர்கட்கு ஆக்கமாவது பிறிதில்லை.

இது பொருளான் ஆக்கமுண்டென்பாரை மறுத்து, அறன் வலி யுடைத்தென்று கூறிற்று.

32. ஒருவனுக்கு அறஞ் செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை; அதனைச் செய்யாமையின் மேற்பட்ட கேடுமில்லை.

இஃது அறஞ் செய்யாக்காற் கேடுவருமென்று கூறிற்று.

33. தமக்கியலுந் திறத்தானே, அறவினையை ஒழியாதே செய்யலாமிடமெல்லாஞ் செய்க.

இயலுந்திறமென்பது மனமொழிமெய்களும் பொருளும். செல்லும்வாய் என்பது அறஞ்செய்தற் கிடமாகிய பல விடங்களும் ஒழியாதென்றது நாடோறு மென்றது. இஃது அறம் வலி தென்றறிந்தவர்கள் இவ்வாறு செய்க வென்றது.

34. ஒருவன் தன்மனத்தின்கட் குற்றமிலனாதலே எல்லாவறமுமாம்; அதில் அழுக்குண்டாயின் மேற்செய்வன வெல்லாம் ஆரவார நீர்மைய.

பிறரறியவேண்டிச் செய்தானாமென்றவாறாயிற்று. மேல் நான்கு பொருளைக் கடியவேண்டுமென்றார் அவை நான்கும் மனமொன்றுந் தூயதாகப் போமென்று அதன்பின் இது கூறினார்.

35. மனக்கோட்டமும், ஆசையும், வெகுளியும், கடுஞ்சொல்லும் என்னும் நான்கினையும் ஒழித்து நடக்குமது யாதொன்று அஃது அறமென்று சொல்லப்படும்.

பின்னர்ச் செய்யலாகாதென்று கூறுவனவெல்லாம் இந்நான்கினுள் அடங்குமென்று கூறிய அறம் எத்தன்மைத் தென்றார்க்கு இது கூறப்பட்டது.

36. பின்பே அறிந்து செய்வோமென்னாது முன்பே அறத்தைச் செய்க. அது சாங்காலத்தினுஞ் சாகாதே நின்று பிறக்கு மிடத்திற்குத் துணையாம்.

இஃது அறஞ்செய்யுங்கால் விரைந்து செய்யவேண்டு மென்பதும் அது மறுமைக்குத் துணையாமென்பதும் கூறிற்று.

37. நீங்கள் அறநெறி யித்தன்மைத்தென் றறிய வேண்டா, சிவிகைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காணலாம்.

இது பொன்றினாலுந் துணையாகுமோ என்றார்க்குத் துணையாயினவாறு காட்டிற்று.

38. ஒருவன் ஒரு நாளிடைவிடாமல் நன்மையைச் செய்வானாயின் அச்செயல் அவனது பிறப்பும் இறப்புமாகிய நாள் வருகின்ற வழியை யடைப்பதொரு கல்லாம்.

இது வீடு தருமென்றது.

39. அறத்தால் வருவது யாதொன்று, அதுவே இன்பமும் புகழுமாம்; அதனாலன்றி வருவனவெல்லாந் துன்பமாம்; புகழுமிலவாம்.

இஃது எல்லாப் போக நுகர்ச்சியும் இதனானே வருமென்றது.

40. ஒருவனுக்குச் செய்யும் பகுதியது அறமே, தப்பும் பகுதியது பழியே.

மேல் அறஞ் செய்யப் பிறப்பறு மென்றார், அதனோடு பாவமுஞ் செய்யின் அறாதென்றற்கு இது கூறினார்.

# 5. இல்வாழ்க்கை

41 இல்வாழ்வான் என்பான் இயல்பு-உடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

42 துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும்;
இல்வாழ்வான் என்பான் துணை.

43 தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்; என்று ஆங்கு-
ஐம்புலத்து-ஆறு, ஓம்பல் தலை.

44 பழி-அஞ்சிப் பாத்து ஊண்-உடைத்தாயின்; வாழ்க்கை
வழி-எஞ்சல், எஞ்ஞான்றும், இல்.

45 அன்பும், அறனும் உடைத்து-ஆயின்; இல்வாழ்க்கை
பண்பும், பயனும் அது.

46 அறத்து-ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்; புறத்து-ஆற்றில்
போஒய்ப் பெறுவது எவன்?

47 இயல்பினான், இல்வாழ்க்கை-வாழ்பவன் என்பான்;
முயல்வாருள் எல்லாம் தலை.

48 ஆற்றின் ஒழுக்கி, அறன்-இழுக்கா இல்வாழ்க்கை;
நோற்பாரின் நோன்மை-உடைத்து.

49 அறன்-எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்-பழிப்பது இல்-ஆயின் நன்று.

50 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்; வான்-உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

41. இல்வாழ்வானென்று சொல்லப்படுபவன் இயல்புடைய மூவர்க்கும் நல்ல வழியின்கண்ணே நின்றவொருதுணை. (தவசி, பிரமச்சாரி, துறவியாகிய மூவர்)

என்றது தானமாகிய வில்லறஞ் செய்யுமவன் தவத்தின்பாற்பட்ட விரதங் கொண்டொழுகாநின்ற பிரமச்சாரிக்கும், தவமேற் கொண்டொழுகாநின்ற வானப்பிரஸ்தன் ஸந்நியாசிகளுக்கும், தத்தம் நிலைகுலையாம லுணவு முதலாயின கொடுத்துப் பாதுகாத்தலின் அவர்க்கு நல்லுலகின்கண் செல்லும் நெறியிலே நின்ற வொரு துணையென்று கூறியவாறாயிற்று. துணையென்பது இடையூறு வாராமலுய்த்து விடுவாரை.

42. வருணத்தினையும் நாமத்தினையுந் துறந்தார்க்கும், துறவாது நல்குரவாளரா யுண்ணப் பெறாதார்க்கும், பிறராய் வந்து செத்தார்க்கும் இல்வாழ்வானென்று சொல்லப்படுமவன் துணை யாவான். (வறுமையாளர், கைவிடப்பட்டவர், திக்கற்றவர்)

மேற்கூறிய மூவரும் வருணநாமங்களைத் துறவாமையாலீண்டுத் துறந்தாரென்று கூறினார். செத்தார்க் கிவன் செய்ய வேண்டிய புறங்காட்டுய்த்தல் முதலாயின. இது மேற்கூறியவர்க்கேயன்றி இவர்க்கும் துணையென்று கூறிற்று.

43. பிதிரர், தேவர், புதியராய் வந்தார், சுற்றத்தார், தானென்னு மைந்திடமாகிய நெறியைக் கெடாம லோம்புதல் தலையான இல்வாழ்க்கை.

தனக்குண்டான பொருளை ஆறு கூறாக்கி ஒருகூறு அரசற்குக் கொடுத்து ஒழிந்தவைந்து கூறினுந் தான் கொள்வது ஒரு கூறென்றற்குத் தன்னையு மெண்ணினார். இது தலையான இல்வாழ்க்கை வாமும் வாழ்வு கூறிற்று: என்னை? இவையெல்லா மொருங்கு செய்யப்படுதலின் மேற்கூறிய அறுவரும் விருந்தினது வகையினரென்று கொள்ளப்படுவர்.

44. இல்வாழ்க்கையாகிய நிலை, பழியையுமஞ்சி பகுத்துண்டலையுமுடைத்தாயின், தனதொழுங்கு, இடையறுதல் எக்காலத்தினுமில்லை.

மேல் பகுக்குமாறு கூறினார். பகுக்குங்காற் பழியோடு வாராத பொருளைப் பகுக்க வேண்டுமென்று கூறினார்.

45. இல்வாழ்க்கையாகிய நிலை யாவர்மட்டும் அன்பு செய்தலையும் அறஞ்செய்தலையும் உடைத்தாயின், அதற்குக் குண மாவதும் பயனாவதும் அவ்விரண்டினையு முடைமை தானே.

பயன் வேறு வேண்டாம் :தனக்கும் பிறர்க்கும் உண்டான முகமலர்ச்சி தானே யமையுமென்பது. இது பழியோடு வாராத வுணவை நுகர வேற்பார் மாட்டு அன்புசெய்யவேண்டுமென்பதும் சீலனாய்க் கொடுக்க வேண்டுமென்பதும் கூறிற்று.

46. இல்வாழ்க்கையாகிய நிலையை அறநெறியிலே செலுத்தவல்லவனாயின் புறநெறியாகிய தவத்திற் போய்ப் பெறுவது யாதோ?.

மேல் சீலனாய்க் கொடுக்க வேண்டுமென்றார் அவ்வாறு செய்யின் தவப்பயனும் இதுதானே தருமென்றார்.

47. நெறியினானே யில்வாழ்க்கை வாழ்பவனென்பான், முயல்வாரெல்லாரினுந் தலையாவான்.

முயறல்- பொருட்கு முயறல்.

48. பிறரையும் நன்னெறியிலே ஒழுகப்பண்ணித் தானும் அறத்தின் பாலொழுகும்

இல்வாழ்க்கை தவஞ்செய்வாரினும் வலியுடைத்து. ஒழுகப் பண்ணலாவது அவர்க்கு வேண்டுவன அமைத்தல். இது தவத்தினும் வலியுடைத்தென்றது.

49. அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. அதுவும் நன்றாவது பிறனொருவனாற் பழிக்கப்படுவதொன்றை யுடைத்தல்லவாயின்.

பழிக்கப்படுவதென்றது இழிகுலத்தாளாகிய மனையாளை. இனி வாழ்க்கைத் துணைநலங் கூறுகின்றாராகலின், இது கூறப்பட்டது.

50. இல்வாழ்க்கை வாழும்படியிலே வாழுமவன் உலகத்திலே தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவன்.

இவன் எல்லாராலும் நன்கு மதிக்கப்படுவ னென்றவாறு.

# 6. வாழ்க்கைத்துணை நலம்

51 மனைத்-தக்க மாண்பு-உடையள்-ஆகி, தற்-கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை.

52 மனை-மாட்சி, இல்லாள்கண் இல்-ஆயின்; வாழ்க்கை
எனை-மாட்சித்து-ஆயினும், இல்.

53 இல்லது-என், இல்லவள் மாண்பு-ஆனால்? உள்ளது-என்,
இல்லவள் மாணாக்கடை?

54 பெண்ணின் பெருந்தக்க யா-உள? கற்பு-என்னும்
திண்மை உண்டாகப் பெறின்?

55 தெய்வம் தொழாஅள், கொழுநன், தொழுது-எழுவாள்;
'பெய்' என, பெய்யும் மழை.

56 தற்காத்து, தற்-கொண்டாற்-பேணி, தகை-சான்ற
சொற்காத்து, சோர்வு-இலாள்; பெண்.

57 சிறை-காக்கும் காப்பு, எவன்-செய்யும்? மகளிர்
நிறை-காக்கும் காப்பே, தலை.

58 பெற்றாற்-பெறின் பெறுவர், பெண்டிர்; பெருஞ்-சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

59 புகழ்-புரிந்த இல்-இலோர்க்கு இல்லை; இகழ்வார்-முன்
ஏறு-போல் பீடு- நடை.

60 'மங்கலம்' என்ப, மனைமாட்சி; மற்று-அதன்
நன்கலம், நன்-மக்கட்-பேறு.

51. தான் பிறந்த குடிக்குத்தக்க வொழுக்கத்தை யுடையாளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க செலவினை யுடையவள் இல்வாழ்க்கைத் துணையாவள்.

52. குடிக்குத்தக்க வொழுக்கம் மனையாள்மாட்டு இல்லையாகில், அவ்வில்வாழ்க்கை எத்துணை நன்மைகளை யுடைத்தாயினும் ஒரு நன்மையும் இன்றாம்.

53. ஒருவனுக்கு மனையாள் மாட்சிமையுடையாளானால் எல்லாமிலனேயாயினும் இல்லாதது யாது? மனையாள் மாட்சிமை இல்லாளானால் எல்லாமுடையானாயினும் உண்டானது யாது?.

54. பெண் பிறப்புப்போல் மேம்பட்டன யாவையுள? கற்பாகிய திண்மை யுண்டாகப் பெறின்.

55. தெய்வத்தைத் தெய்வமென்று தொழாளாய், எல்லாத் தெய்வமுந் தன்கணவனென்றே கருதி, அவனை நாடோறுந் தொழுதெழுமவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்.

56. தன்னையுங் காத்துத் தன்னைக் கொண்ட கணவனையும் பேணி நன்மையமைந்த புகழ்களையும் படைத்துச் சோர்வின்மை யுடையவளே பெண்ணென்று சொல்லப்படுவள்.

57. மகளிரைச் சிறைசெய்து காக்குங்காவல் யாதினைச் செய்யும்? அவரது கற்புக் காக்குங் காவலே தலையான காவல்.

58. பெண்டிரானவர் தம்மை மனைவியராகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப் பெறின் தேவர் வாழும் பெரிய சிறப்பினையுடைய உலகத்தைப் பெறுவர்.

59. புகழ்பொருந்தின மனையாளை இல்லாதார்க்கு இல்லையாம்: தம்மை யிகழ்ந்துரைப்பார்முன் ஏறுபோல நடக்கும் மேம்பட்ட நடை.

ஏறு நடை- அசைவும் தலையெடுப்பும் பொருந்திய நடை.

60. ஒருவனுக்கு அழகென்று சொல்லுப, மனையாள் ஒழுக்கமுடையாளாதலை: அவ்வழகின்மேலே நல்ல அணிகலனென்று சொல்லுப, நல்ல புதல்வரைப் பெறுதலை.

# 7. புதல்வரைப் பெறுதல்

61 பெறுமவற்றுள் யாம்-அறிவது-இல்லை; அறிவு-அறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

62 எழு-பிறப்பும் தீயவை தீண்டா; பழி-பிறங்காப்
பண்புடை மக்கட்-பெறின்.

63 தம்-பொருள் என்ப தம்-மக்கள்; அவர்-பொருள்
தம்தம் வினையால் வரும்.

64 அமிழ்தினும் ஆற்ற இனிதே; தம்-மக்கள்
சிறு-கை அளாவிய கூழ்.

65 மக்கள் மெய்-தீண்டல், உடற்கு-இன்பம்; மற்று-அவர்
சொல்-கேட்டல் இன்பம், செவிக்கு.

66 ‘குழல்-இனிது, யாழ்-இனிது’ என்ப; தம்-மக்கள்
மழலைச்-சொல் கேளாதவர்.

67 தந்தை, மகற்கு-ஆற்றும்-நன்றி; அவையத்து,
முந்தி இருப்பச் செயல்.

68 தம்மின், தம்-மக்கள் அறிவுடைமை; மா-நிலத்து
மன்-உயிர்க்கு எல்லாம் இனிது.

69 ஈன்ற-பொழுதின் பெரிது-உவக்கும்; தன்-மகனைச்
சான்றோன் எனக்-கேட்ட தாய்.

70 மகன், தந்தைக்கு-ஆற்றும் உதவி; ‘இவன் தந்தை
என் நோற்றான்கொல்!’ எனும் சொல்.

61. ஒருவன் பெறும் பொருள்களுள் அறிவுடைய மக்களைப் பெறுதல் பயன்படுவது: ஒழிந்த பொருள்களெல்லாம் அவற்றினும் சிறந்தனவாக யாம் கண்டறிவதில்லை.

62. எழுபிறப்பினுந் துன்பங்கள் சாரா: ஒரு பிறப்பிலே பழியின்கண் மிகாத குணத்தினையுடைய புதல்வரைப் பெறுவாராயின்.

63. தம்முடைய பொருளென்று சொல்லுவர் உலகத்தார் தம்மக்களை: அம்மக்களுடைய பொருள் தத்தமுடைய வினையோடே கூடவருதலான்.

64. இனிமையுடைத்தாகிய அமிழ்தினும் மிகவினிது, தம்முடைய மக்கள் சிறுகையாலே யளையப்பட்ட கூழ்.

65. தம்மக்கள் தமதுடம்பினைச் சார்தல் தம்முடம்பிற் கின்பமாம்: அவர் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பமாம்.

66. குழலோசை யினிது, யாழோசை யினிதென்று சொல்லுவர் தம் மக்களது மழலைச் சொற்களைக் கேளாதவர்; கேட்டவர் சொல்லார்.

67. தந்தை மகனுக்குச் செய்யும் உபகாரம் அவையத்தின் கண்ணே முந்தியிருக்குமாறு கல்வி யுண்டாக்குதல்.

68. தம்மக்க ளறிவுடையாரானால் அது தம்மினும் உலகத்துயிர்கட்கெல்லாம் இனிதாம்.

69. தான்பெற்ற காலத்தினும் மிக மகிழும்; தன்மகனைச் சான்றோனென்று பிறர் சொல்லக் கேட்ட காலத்துத் தாய்.

70. மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரம் இவன் தந்தை என்ன தவஞ்செய்தானென்று உலகத்தார் சொல்லுஞ் சொல்லைப் படைத்தல்.

இது நெறியினொழுகுவாரை உலகத்தார் புகழ்வாராதலான், மகனும் ஒழுக்கமுடையனாக வேண்டுமென்றது.

# 8. அன்பு உடைமை

71 அன்பிற்கும் உண்டோ, அடைக்கும்-தாழ்? ஆர்வலர்
புன்கண்-நீர் பூசல் தரும்.

72 அன்பு-இலார், எல்லாம் தமக்கு-உரியர்; அன்பு-உடையார்
என்பும் உரியர், பிறர்க்கு.

73 ‘அன்போடு இயைந்த வழக்கு’ என்ப; ‘ஆர்-உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு’.

74 அன்பு-ஈனும் ஆர்வம் உடைமை; அது-ஈனும்,
‘நண்பு’ என்னும் நாடாச்-சிறப்பு.

75 ‘அன்புற்று அமர்ந்த வழக்கு’ என்ப; ‘வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு’.

76 ‘அறத்திற்கே அன்பு சார்பு’ என்ப, அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

77 என்பு-இலதனை வெயில் போலக் காயுமே!
அன்பு-இலதனை அறம்.

78 அன்பு, அகத்து-இல்லா உயிர்-வாழ்க்கை; வன்பாற்கண்
வற்றல், மரம்-தளிர்த்தற்று.

79 புறத்து-உறுப்பு எல்லாம் எவன்-செய்யும்? யாக்கை
அகத்து-உறுப்பு அன்பு-இலவர்க்கு?

80 அன்பின் வழியது உயிர்நிலை; அஃது-இலார்க்கு
என்பு தோல்-போர்த்த உடம்பு.

71. அன்பினை யடைக்குந்தாழுமுளதோ? அன்புடையார் மாட்டு உளதாகிய புல்லிய கண்ணின் நீர்தானே ஆரவாரத்தைத் தரும்.

72. அன்பிலாதார் எல்லாப் பொருளையுந் தமக்கு உரிமையாக வுடையர்: அன்புடையார் பொருளேயன்றித் தம்முடம்புக்கு அங்கமாகிய வெலும்பினையும் பிறர்க்கு உரிமையாக வுடையர்.

அன்புடையார்க்கல்லது அறஞ்செய்த லரிதென்றாயிற்று.

73. முற்பிறப்பின்கண் அன்போடு பொருந்தச் சென்ற செலவென்று சொல்லுவர்; பெறுதற்கரிய வுயிர்க்கு இப்பிறப்பின்கண் உடம்போடு இடைவிடாத நட்பினை.

74. அன்பு தரும் ஆர்வமுடைமையை அவ்வார்வமுடைமை தரும். நட்பென்று சொல்லப்பட்ட ஆராய்தலில்லாத சிறப்பினை.

75. முற்பிறப்பின்கண் பிறர்மேலன்பு வைத்துச் சென்ற செலவென்று சொல்லுவர்: இப்பிறப்பின்கண் உலகத்தில் இன்பமுற்றார் அதன் மேலுஞ் சிறப்பெய்துதலை.

76. அன்பானது அறஞ்செய்வார்க்கே சார்பாமென்பர் அறியாதார். அவ்வன்பு மறஞ் செய்வார்க்குந் துணையாம்.

77. என்பிலாத சீவனை வெயில் சுடுமாறு போற் சுடும்: அன்பிலாதவுயிரினை அறம்.

78. தன்னிடத்து அன்பில்லாத உயிரினது வாழ்க்கை வலிய பாரிடத்து (பாறை) உண்டாகிய உலர்ந்த மரம் தளிர்த்தாற் போலும்.

தளிர்த்தற்குக் காரணமின்மையால் தளிராதென்றவாறு.

79. உடம்பிற்கு அகத்துறுப்பாகிய அன்பிலார்க்குப் புறத்துறுப்புகளெல்லாம் யாதினைச் செய்யும்?.

80. உடம்பிற்கு அகத்துறுப்பாகிய அன்பிலார்க்குப் புறத்துறுப்புகளெல்லாம் யாதினைச் செய்யும்?.

# 9. விருந்து ஓம்பல்

81 இருந்து, ஓம்பி இல்-வாழ்வது-எல்லாம்; விருந்து-ஓம்பி,
வேளாண்மை செய்தற்-பொருட்டு.

82 விருந்து புறத்ததாத் தான்-உண்டல், சாவா-
மருந்து-எனினும், வேண்டற்பாற்று அன்று.

83 வரு-விருந்து வைகலும், ஓம்புவான் வாழ்க்கை;
பருவந்து பாழ்படுதல் இன்று.

84 அகன்-அமர்ந்து செய்யாள் உறையும்; முகன்-அமர்ந்து
நல்-விருந்து ஓம்புவான் இல்.

85 வித்தும் இடல்வேண்டும் கொல்லோ? விருந்து-ஓம்பி,
மிச்சில் மிசைவான் புலம்.

86 செல்-விருந்து ஓம்பி, வரு-விருந்து பார்த்திருப்பான்;
நல்-விருந்து, வானத்தவர்க்கு.

87 இனைத்-துணைத்து என்பது-ஒன்று-இல்லை; விருந்தின்
துணைத்-துணை, வேள்விப் பயன்.

88 ‘பரிந்து-ஓம்பி, பற்று அற்றேம்’ என்பர்; விருந்து-ஓம்பி
வேள்வி தலைப்படாதார்.

89 உடைமையுள் இன்மை; விருந்து-ஓம்பல் ஓம்பா-
மடமை; மடவார்கண் உண்டு.

90 மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்-திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

81. இல்லின்கண் இருந்து பொருளைப் போற்றி வாழும் வாழ்க்கை யெல்லாம் வந்தவிருந்தினரைப் போற்றி அவர்க்கு உபகரித்தற்காக.

82. விருந்தினர் இற்புறத்தாராகத் தானே யுண்டல், சாவாமைக்கு உண்ணும் மருந்தாயினும் வேண்டும் பகுதி யுடைத்தன்று.

83. நாடோறும் வந்தவிருந்தினரைப் போற்றுவானது ஆக்கம், வருத்தமுற்றுக் கேடுபடுவதில்லை.

84. திருவினாள் மனம்பொருந்தி உறையும்: நல்ல விருந்தினரை முகம் பொருந்திப் போற்றுவானது மனையின்கண்.

இது கேடின்மையன்றிச் செல்வமுமுண்டா மென்றது.

85. விருந்தினரை ஊட்டி மிக்க வுணவை யுண்ணுமவன் புலத்தின் கண், விளைதற் பொருட்டு விதைக்கவும் வேண்டுமோ? தானே விளையாதோ?

பொருள் வருவாயாக இயற்றுமிடம் நன்றாகப் பயன்படுமென்றவாறு.

86. வந்த விருந்தினரைப் போற்றி வாராத விருந்தினரது வரவு பார்த்திருக்குமவன், வானத்தவர்க்கு நல்விருந்தாவன்.

வரவு பார்த்தல்-விருந்தின்றி யுண்ணாமை.

87. விருந்தினர்க்கு அளித்ததனால் வரும் பயன் இன்ன அளவினையுடைத்தென்று சொல்லலாவது ஒன்றில்லை. அவ்விருந்தினரின் தன்மை யாதோ ரளவிற்று அத்தன்மை யளவிற்று விருந்தோம்பலின் பயன்.

88. விருந்தினரைப் போற்றி உபசரிக்க மாட்டாதார், வருந்தியுடம் பொன்றையும் ஓம்பிப் பொருளற்றோமென் றிரப்பர்.

89. உடைமையின் கண்ணே யில்லாமைபோல, விருந்தினர்க்கு அளித்தலைப் போற்றாத பேதைமை, பேதைமையார் மாட்டேயுளதாம்.

90. எல்லா மலரினும் மெல்லிதாகிய அனிச்சப்பூ மோந்தாலல்லது வாடாது: விருந்தினரை முகந்திரிந்து நோக்க அவர் வாடுவர்.

இது முகம்நோக்கி யினிமை கூறவேண்டுமென்றது.

# 10. இனியவை கூறல்

91 இன்-சொல்; ஆல்-ஈரம்-அளைஇ, படிறு-இல-ஆம்
செம்பொருள் கண்டார் வாய்ச்-சொல்.

92 அகன்-அமர்ந்து ஈதலின் நன்றே; முகன்-அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

93 முகத்தான்-அமர்ந்து, இனிது-நோக்கி, அகத்தான் ஆம்
இன்-சொலினதே; அறம்.

94 துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்; யார்மாட்டும்
இன்புறூஉம் இன்-சொலவர்க்கு.

95 பணிவு-உடையன், இன்சொலன் ஆதல்; ஒருவற்கு-
அணி; அல்ல, மற்றுப் பிற.

96 அல்லவை தேய, அறம் பெருகும்; நல்லவை-
நாடி, இனிய சொலின்.

97 நயன்-ஈன்று நன்றி-பயக்கும்-பயன்; ஈன்று-
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

98 சிறுமையுள் நீங்கிய இன்சொல்; மறுமையும்,
இம்மையும் இன்பம்-தரும்.

99 இன்-சொல் இனிது-ஈன்றல்-காண்பான்; எவன்கொலோ,
வன்-சொல் வழங்குவது?

100 இனிய உளவாக இன்னாத கூறல்;
கனி இருப்ப, காய் கவர்ந்தற்று.

91. ஒருவன் இனியவாகச் சொல்லுஞ் சொற்கள் இன்பத்தைப் பயத்தலைக் காண்பான். அதற்கு மறுதலையாகிய வன்சொல்லை வழங்குவது எப்பயனை நோக்கியோ?

92. மனம் பொருந்திக் கொடுத்தலினும் நன்று: முகம் பொருந்தி இனிமைச்சொல் சொல்ல வல்லவனாயின்.

93. கண்ணாலே பொருந்தி, இனிதாக நோக்கி மனத்தோடே பொருந்திய இன்சொல் சொல்ல வல்லவனாயின் அதுதானே யறமாம்.

94. துன்பமுறுவிக்கின்ற நுகராமையாகிய நல்குரவு இல்லையாகும். யாவர்மாட்டுங் கூற இன்பமுறுவிக்கின்ற இனிய சொல்லை யுடையார்க்கு.

95. ஒருவனுக்கு அழகாவது தாழ்ச்சி யுடையனா யினிய சொற்களைக் கூற வல்லவ னாதல்: பிறவாகிய அழகெல்லாம் அழகெனப்படா.

இது தாழ்த்துக் கூறவேண்டு மென்பதும் அதனாலாம் பயனுங் கூறிற்று.

96. நல்லவான சொற்களை யாராய்ந்து இனியவாகச் சொல்லுவானாயின் அதனானே அறமல்லாதன தேய அறம் வளரும்.

97. பிறரால் விரும்பப்படுதலையும் பயந்து, பொருளையும் பயந்து, அறத்தினையும்

பயக்கும்; குணத்தினின்று நீங்காத சொல்.

98. புன்மையுள் நின்று நீங்கிய இனிய சொற்கள் இம்மையின் கண்ணும் மறுமையின் கண்ணும் இன்பத்தைத் தரும்.

99. இருவர் மாறுபடச் சொன்ன மாற்றத்தினது உண்மைப் பொருளைக் கண்டார் கூறும் மெய்யாகிய சொற்களும் இன்சொலாதலானே அருளொடு பொருந்திக் குற்றமிலவாம்.

இஃது ஒருவனைக் கடிந்து சொல்லவேண்டு மிடத்தும் இன்சொல்லாலே கடிய வேண்டுமென்றது.

100. பிறர்க் கினியவாகச் சொல்லுஞ் சொற்க ளின்பத்தைத் தருதலைக் கண்டவன் இனிய சொற்கள் இருக்கக் கடிய சொற்களைக் கூறுதல், பழமுங் காயும் ஓரிடத்தே யிருக்கக் கண்டவன், பழத்தைக் கொள்ளாது காயைக் கொண்ட தன்மைத்து.

# 11. செய்ந்நன்றி அறிதல்

101 செய்யாமல் செய்த உதவிக்கு; வையகமும்,
வானகமும் ஆற்றல்-அரிது.

102 காலத்தினால் செய்த நன்றி, சிறிது-எனினும்;
ஞாலத்தின் மாணப்-பெரிது.

103 பயன்-தூக்கார் செய்த உதவி, நயன்-தூக்கின்;
நன்மை, கடலின்-பெரிது.

104 தினைத்-துணை நன்றி செயினும், பனைத்-துணையாக்
கொள்வர்; பயன் தெரிவார்.

105 உதவி வரைத்து-அன்று, உதவி; உதவி,
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

106 மறவற்க, மாசு-அற்றார் கேண்மை! துறவற்க,
துன்பத்துள் துப்பு-ஆயார் நட்பு!

107 எழுமை எழு-பிறப்பும் உள்ளுவர்; தம்-கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

108 நன்றி மறப்பது நன்று-அன்று; நன்று-அல்லது
அன்றே மறப்பது நன்று.

109 கொன்றன்ன இன்னா-செயினும்; அவர்-செய்த-
ஒன்றும், நன்று உள்ள, கெடும்.

110 எந்-நன்றி கொன்றார்க்கும் உய்வு-உண்டாம்; உய்வு-இல்லை,
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

101. முன்னோருதவி செய்யாதார்க்கு ஒருவன் செய்த வுதவிக்கு உலகமுஞ் சுவர்க்கமும் நிறையாற்றுத லரிது.

102. உதவவேண்டுங்காலந் தப்பாமற் செய்தவுதவி தான்சிறிதாயிருந்ததாயினும், உலகத்தினும் மிகப் பெரிது.

இது காலந் தப்பாமற் செய்த வுதவி உலகத்தினும் பெரிதென்றது.

103. தமக்கொரு பயனை நோக்காதவராய்ச் செய்த வுபகாரத்தாலுண்டாய நன்மையை யாராயின், அதனா லுண்டாய நன்மை கடலினும் பெரிது.

104. தினையளவு நன்றி செய்தாராயினும், அதனை யவ்வளவிற்றென்று நினையாது, பனையளவாகக் கொள்வார் அதன் பயனை யறிபவர்.

பனையளவு- அதனுயர்ச்சி

105. முன்னே செய்த வுதவியின் அளவன்று பின்பு செய்யும் மாற்றுதவி: அவ்வுதவி செய்யப்பட்டவர் தன்மை எவ்வளவிற்று அவ்வளவிற்று அவர் செய்யும் மாற்றுதவி.

இது மாற்றுதவிக்கு அளவில்லை என்றது.

106. தனக்குத் துன்பம் வந்தகாலத்து வலியாயினர் நட்பை விடாதொழிக: எக்காலத்துங் குற்றமற்றாரது நட்பை மறவாதொழிக.

107. தங்கண் உற்ற துன்பத்தை நீக்கினவரது நட்பை அப்பிறப்பிலே யன்றி எழுமையிலுந் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர் சான்றோர்.

108. பிறர் செய்த நன்றியை மறப்பது என்றும் நன்றல்ல: பிறர் செய்த தீமையை அன்றே மறப்பதன்றே நன்றாம்.

இது தீமையை மறக்க வேண்டுமென்று கூறிற்று.

109. தமக்கு முன்பு நன்மை செய்தார் தம்மைக் கொன்றாலொத்த இன்னாமையைப் பின்பு செய்யினும் அவர் முன்பு செய்த நன்றி யொன்றை நினைக்க அவ்வின்னாமை யெல்லாங் கெடும்.

110. எல்லா நன்மைகளையுஞ் சிதைத்தார்க்கும் பின்பொரு காலத்தேயாயினும் உய்வுண்டாம்: ஒருவன் செய்த நன்றியைச் சாவாக்கின மகனுக்கு ஒரு காலத்தினும் உய்தலில்லை.

# 12. நடுவு நிலைமை

111 தகுதி-என-ஒன்றும் நன்றே; பகுதியான்
பாற்பட்டு ஒழுகப்-பெறின்.

112 செப்பம் உடையவன் ஆக்கம், சிதைவு-இன்றி;
எச்சத்திற்கு ஏமாப்பு-உடைத்து.

113 நன்றே தரினும், நடுவு-இகந்து ஆம் ஆக்கத்தை;
அன்றே ஒழிய-விடல்!

114 தக்கார், தகவு-இலர் என்பது; அவர்-அவர்
எச்சத்தால் காணப்-படும்.

115 கேடும், பெருக்கமும் இல்-அல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு-அணி.

116 ‘கெடுவல்-யான்’ என்பது அறிக; தன்-நெஞ்சம்
நடுவு-ஓரீஇ, அல்ல செயின்.

117 கெடுவாக வையாது உலகம்; நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

118 சமன்-செய்து, சீர்-தூக்கும் கோல்-போல் அமைந்து-ஒருபால்
கோடாமை; சான்றோர்க்கு அணி.

119 சொற்-கோட்டம் இல்லது, செப்பம் ஒருதலையா;
உட்-கோட்டம் இன்மை பெறின்.

120 வாணிகம் செய்வார்க்கு வாணிகம்; பேணிப்-
பிறவும் தமபோல் செயின்.

111. நடுவு நிலைமை யென்று சொல்லப்படுகின்ற தொன்று நல்லதே: அவரவர்நிலைமைப் பகுதியோடே அறத்தின்பாற்பட்டு ஒழுகப் பெறுமாயின்.

112. நடுவு நிலைமை யுடையவனது செல்வம் தன்னளவிலுங் கேடின்றியே நின்று, தன் வழியுள்ளார்க்குங் கேடுவாராமற் காவலாதலையுடைத்து.

நடுவுநிலைமையுடையார் செல்வம் அழியாதென்றவாறு.

113. பெருமையே தரினும் நடுவுநிலைமையை நீங்கி வரும் ஆக்கத்தை அவ்வாக்கம் வருதற்குத் தொடக்கமான அன்றே யொழிய விடுக.

114. செவ்வை யுடையார் செவ்வையிலரென்பது அவரவர் ஆரவாரத்தொழிலினானே காணப்படும்.

இது தம்மளவிலே நிற்பதல்லது தம் மக்களையும் விடாதென்பது கூறிற்று. (இதனால் எச்சத்தால் என்பதற்கு மக்களானே என்றுரையிருக்கலாமென்பது விளங்குகின்றது.)

115. கேடுவருதலும் ஆக்கம் வருதலும் உலகத்தில்லையல்ல: அவ்விரண்டினுள்ளும் யாதானுமொன்று வந்த காலத்துத் தன்னெஞ்சு கோடாம லொழுகல் சான்றோர்க்கு அழகாம்.

116. தனது நெஞ்சு நடுவுநிலைமையை நீங்கி நடுவல்லாதவற்றைச் செய்யுமாயின் அஃதேதுவாக எனக்குக் கேடு வருமென்று தானே யறிக.

117. நன்மையின்கண்ணே நடுவாக நின்றவனுக்கு அது காரணமாகப் பொருட்கேடு உண்டாயின் அதனை உலகத்தார் கேடாகச் சொல்லார். ஆக்கத்தோடே யெண்ணுவர்.

118. சமன்வரைப்பண்ணி யிரண்டுதலையுஞ் சீரொத்தால் தூக்கிப் பார்க்கப்படுகின்ற கோலைப்போல, வீக்கம் தாக்கமற்று ஒருவன் பக்கமாக நெஞ்சைக் கோடவிடாமை சான்றோர்க்கு அழகாவது.

இது நடுவுநிலைமை வேண்டுமென்றது.

119. நடுவுநிலைமையாவது கோட்டமில்லாததாய சொல்லாம்: உறுதியாக மனக்கோட்ட மின்மையோடு கூடுமாயின்.

இது நடுவுநிலைமையாவது செவ்வை சொல்லுத லென்பதூஉம் இது பொருட் பொதுமொழி கூறதலன்றென்பதூஉம் கூறிற்று.

120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகமாம், பிறர் பொருளையுந் தமது பொருள்போலப் பேணிச் சோர்வுபடாமற் செய்வாராயின்.

வாணிகம் - இலாபம்.

# 13. அடக்கம் உடைமை

121 அடக்கம், அமரருள் உய்க்கும்; அடங்காமை,
ஆர்-இருள் உய்த்து-விடும்.

122 காக்க-பொருளா, அடக்கத்தை; ஆக்கம்
அதனின் ஊங்கு-இல்லை, உயிர்க்கு!

123 செறிவு-அறிந்து சீர்மை பயக்கும்; அறிவு-அறிந்து
ஆற்றின் அடங்கப்-பெறின்.

124 நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்;
மலையினும் மாணப்-பெரிது.

125 எல்லார்க்கும் நன்று-ஆம், பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

126 ஒருமையுள், ஆமை-போல், ஐந்து-அடக்கல் ஆற்றின்;
எழுமையும், ஏமாப்பு-உடைத்து.

127 யா-காவார் ஆயினும், நா-காக்க; காவாக்கால்,
சோகாப்பர், சொல்-இழுக்குப்-பட்டு.

128 ஒன்றானும் தீச்சொற் பொருட்-பயன் உண்டாயின்;
நன்று-ஆகாது-ஆகிவிடும்.

129 தீயினால் சுட்ட-புண், உள்-ஆறும்; ஆறாதே
நாவினால் சுட்ட, வடு.

130 கதம்-காத்து, கற்று, அடங்கல்-ஆற்றுவான் செவ்வி;
அறம்-பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

121. மன மொழி மெய்களை யடக்கி யொழுக அவ்வடக்கம் தேவரிடத்தே கொண்டு செலுத்தும்: அவற்றை யடக்காதொழிய அவ்வடங்காமை தானே நரகத்திடைக் கொண்டு செலுத்திவிடும்.

மேல் பலவாகப் பயன் கூறினாராயினும், ஈண்டு அடக்கத்திற்கும் அடங்காமைக்கு மிதுவே பயனென்று தொகுத்துக் கூறினார்.

122. ஒருவன் தனக்குப் பொருளாக அடக்கத்தை யுண்டாக்குக. அவனுயிர்க்கு ஆக்கம் அதனின் மேற்பட்டது பிறிதில்லை.

123. அறியப்படுவனவும் அறிந்து அடக்கப்படுவனவும் அறிந்து நெறியினானே யடங்கப்பெறின் அவ்வடக்கம் நன்மை பயக்கும்.

அறியப்படுவன- சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்: அடக்கப் படுவன- மெய் வாய் கண் மூக்கு செவி.

124. தனது நிலையிற் கெடாதே யடங்கினவனது உயர்ச்சி மலையினும் மிகப் பெரிது.

நிலை- வன்னாச்சிரம தன்மம்.

125. அடங்கியொழுகல் எல்லார்க்கும் நன்மையாம்: அவரெல்லாரினுஞ் செல்வமுடை

யார்க்கே மிகவும் நன்மை யுடைத்தாம். செல்வம் - மிகுதி.

126. ஒருபிறப்பிலே பொறிகளைந்தினையும் ஆமைபோல அடக்க வல்லவனாயின், அவனுக்கு அதுதானே எழுபிறப்பினுங் காவலாதலை யுடைத்து.

127. எல்லாவற்றையும் அடக்கிலராயினும் நாவொன்றினையும் அடக்குக: அதனை அடக்காக்காற் சொற்சோர்வுபட்டுத் தாமே சோகிப்பா ராதலான்.

இது சோகத்தின்மாட்டே பிணிக்கப் படுவரென்பது.

128. ஒரு சொல்லேயாயினும் கேட்டார்க்கு இனிதாயிருந்து தீயசொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்மையாகாதாகியே விடும்.

இது சால மொழிகூறினாலுந் தீதாமென்றது.

129. தீயினாற் சுட்டபுண் உள்ளாறித் தீரும்: நாவினாற் சுட்ட புண் ஒருகாலத்தினுந் தீராது.

130. வெகுளியும் அடக்கிக் கல்வியுமுடையனாய் அதனால் வரும் பெருமிதமும் அடக்கவல்லவன்மாட்டு, அறமானது நெறியானே வருந்தித் தானே வருதற்குக் காலம் பார்க்கும்.

இஃது அடக்கமுடையார்க்கு அறமுண்டாமென்றது.

# 14. ஒழுக்கம் உடைமை

131 ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்-படும்.

132 பரிந்து ஓம்பிக்-காக்க, ஒழுக்கம்; தெரிந்து-ஓம்பித்
தேரினும், அஃதே துணை!

133 ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

134 மறப்பினும், ஒத்துக்-கொளல் ஆகும்; பார்ப்பான்
பிறப்பு-ஒழுக்கம் குன்றக்-கெடும்.

135 அழுக்காறு உடையான்கண், ஆக்கம்-போன்று இல்லை;
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

136 ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்; இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

137 ஒழுக்கத்தின் எய்துவர், மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர், எய்தாப்-பழி.

138 நன்றிக்கு வித்து-ஆகும், நல்-ஒழுக்கம்; தீ-ஒழுக்கம்,
என்றும் இடும்பை தரும்.

139 ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே; தீய
வழுக்கியும், வாயால் சொலல்.

140 உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல-கற்றும்,
கல்லார் அறிவிலாதார்.

131. ஒழுக்கமுடைமை சீர்மையைத் தருதலானே, அவ்வொழுக்கத்தைத் தனது உயிரைக் காட்டினும் மிகக் காக்க வேண்டும்.

இஃது ஒழுக்கம் மேற்கூறிய நன்மையெல்லாந் தருமாதலின், அதனைத் தப்பாமற் செய்யவேண்டுமென்று வலியுறுத்திற்று.

132. வருந்திப் போற்றி யொழுக்கத்தினைக் காக்க: எல்லா வறங்களினும் நல்லதனைத் தெரிந்து அதனையுந் தப்பாமலாராய்ந்து பார்ப்பினும் தமக்கு அவ்வொழுக்கமே துணையாமாதலால்.

இஃது ஒழுக்கங் காக்கவேண்டுமென்றது.

133. ஒருவன் இழிந்த குலத்தானாயினும் ஒழுக்க முடையவனாக உயர் குலத்தனாம்; அதனைத் தப்பி ஒழுகுவா னாயின், உயர்குலத்தினாயினும் இழிகுலத்தானாயே விடும்.

இது குலங்கெடுமென்றது.

134. பிராமணன் வேதத்தினை ஓதி மறந்தானாயினும் பின்னும் ஓதிக் கொள்ளலாம்: ஒழுக்கங் குறையுமாயின் குலங்கெடும்.

இஃது ஒழுக்கம் கல்வியிலும் வலிதானவாறு கூறிற்று.

135. மனக்கோட்ட முடையவன்மாட்டு ஆக்கம் இல்லை யானாற் போல ஒழுக்கமில்லாதான் மாட்டு மிகுதியில்லையாம்.

இஃது உயர்ச்சியில்லையா மென்றது.

136. ஒழுக்கத்தினின்று நீங்கார் அறிவுடையார்: அதனைத் தப்பினாற் குற்றம் வருதலை

யறிந்து. இஃது இதனை அறிவுடையார் தவிராரென்றது. குற்றம் வருதல் பின்னே காணப்படும்.

137. ஒழுக்கத்தாலே தமக்கு எய்தாத மேம்பாட்டை எய்துவர்; அஃதின்மையாலே தமக்கு அடாதபழியை எய்துவர்.

138. முத்திக்கு விதையாகும் நல்லொழுக்கம்: தீயவொழுக்கம் என்றும் இடும்பையைத் தரும்.

தீயவொழுக்கம் நாடோறுந் துன்பத்தையே தருமென்றவாறு. என்றும்-இருமையின்கண்ணுமென்றவாறு.

139. தீமைபயக்குஞ் சொற்களை மறந்தும் தம்வாயாற் சொல்லுதல் ஒழுக்க முடையார்க்கு இயலாது.

140. அறிவிலாதார் பல நூல்களைக் கற்றாலும் உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதலை அறியார்.

இஃது ஒழுக்கமாவது உயர்ந்தாரொழுகின நெறியில் ஒழுகுதலென்பதூஉம் அவ்வொழுக்கம் கல்வியினும் வலி யுடைத்தென்பதூஉம் கூறிற்று.

# 15. பிறன் இல் விழையாமை

141 பிறன்-பொருளாள் பெட்டு-ஒழுகும் பேதைமை; ஞாலத்து
அறம், பொருள் கண்டார்கண் இல்.

142 அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன்கடை
நின்றாரின், பேதையார் இல்.

143 விளிந்தாரின் வேறு-அல்லர், மன்ற; தெளிந்தார்-இல்
தீமை புரிந்து-ஒழுகுவார்.

144 எனைத்-துணையர் ஆயினும் என்னாம்? தினைத்-
துணையும்
தேரான், பிறன்-இல் புகல்?

145 ‘எளிது’ என இல்-இறப்பான், எய்தும்; எஞ்-ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

146 பகை, பாவம், அச்சம், பழி என-நான்கும்
இகவா-ஆம்; இல் இறப்பான்கண்.

147 அறன்-இயலான் இல்வாழ்வான் என்பான்; பிறன்-இயலாள்
பெண்மை நயவாதவன்.

148 பிறன்-மனை நோக்காத பேர்-ஆண்மை, சான்றோர்க்கு
அறன் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு.

149 ‘நலக்கு உரியார் யார்?’ எனின், நாம-நீர்-வைப்பில்
பிறற்கு-உரியாள் தோள் தோயாதார்.

150 அறன்-வரையான், அல்ல செயினும், பிறன்-வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

141. பிறனுடைய பொருளாயிருப்பவளை விரும்பி யொழுகுகின்ற அறியாமை
உலகத்து அறமும் பொருளும் அறிந்தார் மாட்டு இல்லையாம்.

142. காமத்தின்கண்ணே நின்றார் எல்லாரினும், பிறனொருவன் கடைத்தலை
பற்றி நின்றவர்களைப் போல் அறியாதாரில்லை.

143. தம்மைத் தெளிந்தா ரில்லின்கண்ணே தீமையைப் பொருந்தி ஒழுகுவார்
மெய்யாகச் செத்தாரின் வேறல்லர்.

இஃது அறம் பொருளின்பம் எய்தாமையின் பிணத்தோடொப்ப ரென்றது.

144. எல்லாவமைதியினையும் உடையவராயினும், தினையளவுந் தேராது
பிறனுடைய இல்லிலே புகுதல் யாதாய்ப் பயக்குமோ?

பிறனில் விழைவால் வருங் குற்றங் கூறுவார் முற்பட வெல்லாக்
குணமுமிழியுமென்று கூறினார்.

145. தனக்கு எளிதென்று நினைத்துப் பிறனுடைய இல்லின் கண்ணே
மிகுமவன் எல்லா நாளும் அழியாது நிற்கும் பழியைப் பெறுவான்.

இது பழியுண்டா மென்றது.

146. பகையும் பாவமும் அச்சமும் பழியுமென்னும் நான்கு பொருளும் நீங்காவாம்:
பிறனில்லின்கண்ணே மிகுவான் மாட்டு.

147. அறநெறியானே யில்வாழ்வானென்று சொல்லப் படுவான்.
பிறன்வழியானவளது பெண்மையை விரும்பாதவன்.

இது பிறனில் விழையாமை வேண்டும் என்றது.

148. பிறனது மனையாளைப் பாராத பெரியவாண்மைதானே சான்றோர்க்கு
அறனும்

அமைந்த வொழுக்கமுமாம். இஃது இதனை விரும்பாமைதானே அறனும்
ஒழுக்கமுமென்றது.

149. நலத்துக்கு உரியார் யாரெனின் நினைத்ததைத் தருகின்ற நீர் சூழ்ந்த
வுலகத்தில் பிறனுக்கு உரியவளது தோளைத் தீண்டாதார்.

நலக்குரியார்- விரும்புதற்குரியார்.

150. அறத்தை வரையாதே அறமல்லாதன செய்யினும் பிறனிடத்து
ஆளானவளது பெண்மையை விரும்பாமை நன்று.

இஃது ஓரறமுஞ் செய்திலனாயினும் நன்மை பயக்குமென்றது.

# 16. பொறை உடைமை

151 அகழ்வாரைத் தாங்கும் நிலம்-போல, தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

152 பொறுத்தல், இறப்பினை என்றும்; அதனை
மறத்தல், அதனினும் நன்று.

153 இன்மையுள் இன்மை விருந்து-ஒரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப்-பொறை.

154 நிறை-உடைமை நீங்காமை வேண்டின்; பொறை-உடைமை,
போற்றி ஒழுகப்-படும்.

155 ஒறுத்தாரை, ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப், பொன்போல் பொதிந்து.

156 ஒறுத்தார்க்கு, ஒரு-நாளை இன்பம்; பொறுத்தார்க்குப்,
பொன்றும் துணையும் புகழ்.

157 திறன்-அல்ல தன்-பிறர் செய்யினும்; நோ-நொந்து,
அறன்-அல்ல செய்யாமை நன்று.

158 மிகுதியான் மிக்கவை செய்தாரை; தாம்-தம்
தகுதியான், வென்று-விடல்!

159 துறந்தாரின் தூய்மை உடையர்; இறந்தார்வாய்
இன்னாச்-சொல் நோற்கிற்-பவர்.

160 உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்-சொல்லும்
இன்னாச்-சொல் நோற்பாரின் பின்.

151. தன்னை யகழ்வாரைத் தரிக்கின்ற நிலம்போலத் தம்மை யிகழுபவர்களைப் பொறுத்தல் தலைமையாம்.

இது பொறுத்தானென் றிகழ்வாரில்லை; அதனைத் தலைமையாகக் கொள்வார் உலகத்தாரென்றது.

152. பிறர் செய்த மிகையினை யென்றும் பொறுத்தல் நன்று; அதனை மறத்தல் அப்பொறையினும் நன்று.

153. வலிமையின்மையுள் வைத்து வலியின்மையாவது புதுமையை நீக்காமை: வலியுடைமையுள் வைத்து வலியுடைமையாவது அறியாதாரைப் பொறுத்தல்.

புதுமை யென்றது கேட்டறியாதது. நீக்காமை- பொறுமை.

154. தனக்கு நிறையுடைமை நீங்காதொழிய வேண்டுவனாயின், பொறையுடைமையைப் பாதுகாத்தொழுக வேண்டும்.

நிறையென்பது காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம்.

155. தமக்குத் துன்பஞ் செய்தாரை மாறாக ஒறுத்தாரை யொரு பொருளாக மதித்து வையார். பொறுத்தாரைப் பொன்னைப் பொதிந்து வைத்தாற்போலப் போற்றுவார் உலகத்தார்.

156. ஒறுத்தவர்க்கு அற்றைநாளை யின்பமே உண்டாம்: பொறுத்தவர்க்குத் தாம் சாமளவும் புகழுண்டாம்.

இது புகழுண்டா மென்றது.

157. தகுதியல்லாதவற்றைத் தனக்குப் பிறர்செய்தாராயினும் அவற்றைத் தானுஞ் செய்தால் அவர்க்கு உளதாம் நோவுக்கு நொந்து அறமல்லாதவற்றைச் செய்யாமை நன்று.

158. தமது செல்வ மிகுதியாலே மிகையானவற்றைச் செய்தவர்களைத் தாங்கள் தமது பொறையினாலே வென்று விடுக.

இது பொறுத்தானென்பது தோல்வியாகாது: அதுதானே வெற்றியாமென்றது.

159. மிகையாய்ச் சொல்லுவாரது தீச்சொல்லைப் பொறுக்குமவர், துறந்தவர்களைப் போலத் தூய்மை யுடையார்.

இது பற்றறத் துறந்தவரோ டொப்பரென்றது.

160. உண்ணாது பொறுப்பார் எல்லாரினும் பெரியர்: அவர் பெரியாராவது பிறர் சொல்லுங் கடுஞ்சொல்லைப் பொறுப்பாரின் பின்,

இது தவம் பண்ணுவாரினும் பெரியதென்றது.

# 17. அழுக்காறாமை

161 ஒழுக்கு ஆறாக் கொள்க; ஒருவன்-தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

162 விழுப்-பேற்றின் அஃது-ஒப்பது இல்லை; யார்-மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

163 அறன், ஆக்கம் வேண்டாதான் என்பான்; பிறன்-ஆக்கம்
பேணாது அழுக்கறுப்பான்.

164 அழுக்காற்றின் அல்லவை செய்யார்; இழுக்கு-ஆற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

165 அழுக்காறு உடையார்க்கு அது-சாலும்; ஒன்னார்
வழுக்கியும் கேடு-ஈன்பது.

166 கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்; உடுப்பதூஉம்,
உண்பதூஉம் இன்றிக்-கெடும்.

167 அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

168 அழுக்காறு என ஒரு-பாவி; திருச்-செற்று,
தீயுழி உய்த்து-விடும்.

169 அவ்விய நெஞ்சத்தான், ஆக்கமும்; செவ்வியான்,
கேடும்; நினைக்கப்-படும்.

170 அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது-இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

161. ஒருவன் தன்னெஞ்சத்து அழுக்காறு இல்லாத வியல்பைத் தனக்கு ஒழுக்க நெறியாகக் கொள்க.

இஃது அழுக்காறு தவிரவேண்டு மென்றது.

162. விழுமிய பேறுகளுள் யார் மட்டும் அழுக்காறு செய்யாமையைப் பெறுவனாயின், அப்பெற்றியினை யொப்பது பிறிதில்லை.

இஃது அழுக்காறு செய்யாமை யெல்லா நன்மையினும் மிக்கதென்றது.

163. தனக்கு அறனாகிய வாழ்வு வேண்டாதானென்று சொல்லப்படுவான், பிறனுடைய ஆக்கத்தை விரும்பாதே அழுக்காறு செய்வான்.

இஃது அழுக்காறுடையார்க்குப் புண்ணிய மில்லையாமென்று கூறிற்று.

164. அழுக்காற்றினானே அறமல்லாதவற்றைச் செய்யார்: நல்லோர் அவ்வறத்தைத் தப்பின நெறியினாற் குற்றம் வருவதை யறிந்து.

165. அழுக்காறுடையார்க்கு அவ்வழுக்காறு தானே அமையும்: பகைவர் கேடுபயத்தல் தப்பியும் கெடுப்பதற்கு,

இஃது உயிர்க்குக் கேடுவருமென்று கூறிற்று.

166. பிறனொருவன் மற்றொருவனுக்குக் கொடுப்பதனை அழுக்காற்றினாலே விலக்குமவனது சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும்.

இது நல்குரவு தருமென்றது.

167. அழுக்காறுடையானைத் திருமகள் தானும் அழுக்காறு செய்து, தன் தவ்வையாகிய மூதேவிக்குக் காட்டி இவன்பாற் செல்லென்று போம்,

இது நல்குரவிற்குக் காரணங் கூறிற்று.

168. அழுக்காற்றைச் செய்து பெரியராயினாரும் இல்லை: அச்செயலிலாதார் பெருக்கத்தி னீங்கினாரு மில்லை.

169. அழுக்காற்று நெஞ்சத்தானுடைய ஆக்கமும் செவ்விய நெஞ்சத்தானுடைய கேடும் விசாரிக்கப்படும்.

170. அழுக்காறென்று சொல்லப்படுகின்ற வொருபாவி செல்வத்தையுங் கெடுத்துத் தீக்கதியுள்ளுங் கொண்டு செலுத்தி விடும்.

ஒரு பாவி- நிகரில்லாத பாவி, இது செல்வங் கெடுத்தலே யன்றி நரகமும் புகுவிக்கு மென்றது.

# 18. வெஃகாமை

171 நடுவு-இன்றி நன்-பொருள் வெஃகின்; குடி-பொன்றி,
குற்றமும் ஆங்கே தரும்.

172 படு-பயன் வெஃகி, பழிப்படுவ செய்யார்;
நடுவு-அன்மை நாணுபவர்.

173 சிற்றின்பம் வெஃகி, அறன்-அல்ல செய்யாரே;
மற்று-இன்பம் வேண்டு-பவர்.

174 'இலம்' என்று வெஃகுதல் செய்யார்; புலம்-வென்ற
புன்மை-இல் காட்சி-யவர்.

175 அஃகி அகன்ற அறிவு, என்-ஆம்; யார்மாட்டும்
வெஃகி, வெறிய செயின்?

176 அருள்-வெஃகி, ஆற்றின்கண் நின்றான்; பொருள்-வெஃகிப்
பொல்லாத சூழ, கெடும்.

177 வேண்டற்க, வெஃகி-ஆம் ஆக்கம்; விளைவயின்
மாண்டற்கு அரிது-ஆம் பயன்!

178 'அஃகாமை செல்வத்திற்கு யாது?' எனின்; வெஃகாமை-
வேண்டும் பிறன் கைப்-பொருள்.

179 அறன்-அறிந்து வெஃகா அறிவு-உடையார்ச் சேரும்;
திறன்-அறிந்து ஆங்கே திரு.

180 இறல்-ஈனும், எண்ணாது வெஃகின்; விறல்-ஈனும்,
வேண்டாமை என்னும் செருக்கு.

171. நடுவுநிலைமையின்றி மிக்க பொருளை விரும்புவானாயின் அதனானே குலமுங்கெட்டு அவ்விடத்தே குற்றமுமுண்டாம்,

இது சந்தான நாச முண்டாமென்றது.

172. தமக்குப் பயனுண்டாக வேண்டிப் பழியொடுபடுவன செய்யார், நடுவன்மைக்கு நாணுபவர்.

இது நடுவுநிலைமை வேண்டுபவர் செய்யாரென்றது.

173. சிற்றின்பமாகிய பொருளை விரும்பி அறனல்லாதவற்றைச் செய்யார் பேரின்பமாகிய வீடுபேற்றைக் காமிப்பவர்.

இது வீடுபெற வேண்டுவார் செய்யாரென்றது.

174. வறிய மென்று பிறர்பொருளை விரும்புதல் செய்யார்: ஐம்புலனையும் வென்ற புன்மையிலாத தெளிவுடையார்.

இது தெளிவுடையார் செய்யா ரென்றது.

175. நுண்ணிதாகப் பரந்த அறிவுடையானாயினும் அதனாற் பயன் யாதாம்? எல்லார் மாட்டும் பொருளை விரும்பி யீரமில்லாதன செய்வனாயின்,

இஃது அறிவுடையார் செய்யாரென்றது.

176. அருளை விரும்பி யறனெறியிலே நின்றவனும் பொருளை விரும்பி அறனல்லாதவற்றைச் சூழக் கெடுவன்,

இஃது அருளுடையானுங் கெடுவனென்றது.

177. பிறர்பொருளை விரும்பிப் பெறுகின்ற ஆக்கத்தை வேண்டாதொழிக; அது பயன்படுங் காலத்தில் ஆகும் பயன் நன்றாதலில்லையாதலான்.

178. செல்வஞ் சுருங்காமைக்குக் காரண மியாதோவெனின், பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமை,

இது செல்வ மழியாதென்றது.

179. அறத்தை யறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தானே தகுதியறிந்து அப்போதே சேரும்,

அறனறிதல்- விரும்பாமை யென்றறிதல். இது செல்வமுண்டாமென்றது.

180. விசாரியாதே பிறர் பொருளை விரும்புவானாயின் அது கேட்டைத் தரும். அதனை வேண்டாமையாகிய பெருமிதம் ஆக்கத்தைத்தரும்.

இஃது உயிர்க்குக் கேடு தருமென்றது.

# 19. புறம் கூறாமை

181 அறம்-கூறான், அல்ல செயினும்; ஒருவன்
புறம்-கூறான் என்றல் இனிது.

182 அறன்-அழீஇ அல்லவை செய்தலின் தீதே;
புறன்-அழீஇப் பொய்த்து நகை.

183 புறம்-கூறி, பொய்த்து, உயிர்-வாழ்தலின்; சாதல்,
அறம்-கூறும் ஆக்கம் தரும்.

184 கண்-நின்று, கண்-அறச் சொல்லினும்; சொல்லற்க,
முன்-இன்று பின்-நோக்காச் சொல்.

185 அறம்-சொல்லும் நெஞ்சத்தான் அன்மை; புறம்-சொல்லும்
புன்மையால் காணப்-படும்.

186 பிறன்-பழி கூறுவான்; தன்-பழியுள்ளும்
திறன்-தெரிந்து கூறப்-படும்.

187 பகச்-சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்; நகச்-சொல்லி,
நட்பு-ஆடல் தேற்றா-தவர்.

188 துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்;
என்னைகொல், ஏதிலார்-மாட்டு?

189 அறன்-நோக்கி ஆற்றும்-கொல் வையம்; புறன்-நோக்கிப்
புன்-சொல் உரைப்பான் பொறை.

190 ஏதிலார் குற்றம்-போல் தம்-குற்றம் காண்கிற்-பின்;
தீது-உண்டோ, மன்னும் உயிரக்கு?

181. ஒருவன் அறத்தை வாயாற் சொல்லுதலுஞ் செய்யானாய்ப் பாவஞ் செய்யினும் பிறரைப் புறஞ் சொல்லானென்று உலகத்தாரால் கூறப்படுதல் நன்றாம்,

இது பாவஞ்செய்யினும் நன்மை பயக்கும் என்றது.

182. அறத்தை யழித்து அறமல்லாதவற்றைச் செய்வதனினும் தீது, ஒருவனைக் காணாத

விடத்து இழித்துரைத்துக் கண்டவிடத்துப் பொய் செய்து நகுதல். இது பாவத்தினும் மிகப் பாவமென்றது.

183. காணாவிடத்துப் புறஞ்சொல்லிக் கண்டவிடத்துப் பொய்செய்து உயிரோடு வாழ்தலின் புறங்கூறாதிருந்து நல்குரவினாற் சாதல் அறநூல் சொல்லுகின்ற ஆக்க மெல்லாந் தரும்.

184. ஒருவன் கண்ணெதிரே நின்று கண்பார்த்த லொழியச் சொல்லினும் அமையும்; பிற்காலத்து அவன் முன்னே நின்று எதிர் முகம் நோக்க வொண்ணாத சொல்லைச் சொல்லா தொழிக,

இது புறங் கூறுதல் தவிர்க வென்றது: இதனாற் கடிய சொற் கூறலும் ஆகாதென்றது.

185. ஒருவன் அறத்தை நினைக்கின்ற மனமுடையனல்லாமை, அவன் பிறரைப் புறஞ்சொல்லும் புல்லியகுண மேதுவாக அறியப்படும்.

இஃது இதனைச் சொல்லுவார் அறமறியா ரென்றது.

186. பிறனுடைய பழியைச் சொல்லுமவன் தனக்குண்டான பழிகளிலுஞ் சிலவற்றை வேறுபடத் தெரிந்து பிறராற் சொல்லப் படுவன்.

187. நீங்கும்படி சொல்லித் தங் கேளிரானாரைப் பிரிப்பர்: மகிழச் சொல்லி நட்பாடலை உயர்வுபண்ண மாட்டாதார்.

இது நட்டவரை யிழப்பர் என்றது.

188. தம்மோடு செறிந்தார் குற்றத்தையும் பிறர்க்கு உரைக்கின்ற சேதியை யுடையார் செறிவில்லாதார்மாட்டு யாங்ஙனஞ் செய்வாரோ?

இது யாவரோடும் பற்றிலரென்றது.

189. பிறனில்லாதவிடம் பார்த்துப் புறஞ்சொற் கூறுவானது உடற்பாரத்தை நிலம் தானே அறத்தை நோக்கிப் பொறுத்ததாம்: அல்லது போக்கும்.

இது புறங்கூறுவார்க்குத் துணையாவாரில்லை யென்றது.

190. பிறனில்லாதவிடம் பார்த்துப் புறஞ்சொற் கூறுவானது உடற்பாரத்தை நிலம் தானே அறத்தை நோக்கிப் பொறுத்ததாம்: அல்லது போக்கும்.

இது புறங்கூறுவார்க்குத் துணையாவாரில்லை யென்றது.

# 20. பயன் இல சொல்லாமை

191 பல்லார் முனியப் பயன்-இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்-படும்.

192 பயன்-இல பல்லார்முன் சொல்லல்; நயன்-இல
நட்டார்கண் செய்தலின், தீது.

193 நயன்-இலன் என்பது சொல்லும்; பயன்-இல
பாரித்து உரைக்கும் உரை.

194 நயன்-சாரா நன்மையின் நீக்கும்; பயன்-சாராப்
பண்பு-இல்-சொல் பல்லார்-அகத்து.

195 சீர்மை, சிறப்பொடு நீங்கும்; பயன்-இல,
நீர்மை-உடையார் சொலின்.

196 பயன்-இல்-சொல் பாராட்டுவானை மகன்-எனல்!
மக்கட்-பதடி எனல்!

197 நயன்-இல சொல்லினும், சொல்லுக! சான்றோர்
பயன்-இல, சொல்லாமை-நன்று.

198 அரும்-பயன் ஆயும் அறிவினார், சொல்லார்;
பெரும்-பயன் இல்லாத சொல்.

199 பொருள்-தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்; மருள்-தீர்ந்த
மாசு-அறு காட்சி-யவர்.

200 சொல்லுக, சொல்லில் பயன்-உடைய! சொல்லற்க,
சொல்லில் பயன்-இலாச் சொல்!

191. பயனில்லாதவற்றைப் பலர் வெறுக்கச் சொல்லுபவன் எல்லாராலும் இகழப்படுவான்,

192. பயனில்லாத சொல்லைக் கொண்டாடுவானை மகனென்னாதொழிக; மக்களில்

பதரென்று சொல்லுக, இது மக்கட் பண்பிலனென்றது.

193. நயனுடைய னல்லனென்பதனை யறிவிக்கும், பயனில்லாதவற்றைப் பரக்க விட்டுச் சொல்லுஞ் சொற்கள்,

இது பயனில சொல்வார் இம்மையின்கண் பிறரால் இயம்பப் படாரென்றது.

194. ஒருவன் ஒரு பயனைச் சாராத பண்பில்லாச் சொல்லைப் பலரிடத்துக் கூறுவானாயின் அவன் நடு சாராது நன்மையினீங்கும்.

இது விரும்பப்படாமையுமன்றி நன்மையும் பயவாதென்றது.

195. பயனில்லாதவற்றை நீர்மையுடையார் கூறுவாராயின் அவர்க்கு உண்டான சீர்மையும் சிறப்பும் போம்

இது நீர்மையுடையா ராயினும் எல்லா நன்மையும் போமென்றது

196. பயனில்லாதவற்றைப் பலர் முன்பு கூறுதல், விருப்பமில்லாதவற்றை நட்டார் மாட்டுச் செய்தலினுந் தீதே,

இது பயனில சொல்லல் இம்மை மறுமை யிரண்டின் கண்ணுந் தீமை பயக்கு மென்றது.

197. சான்றோர் நயனில்லாதவற்றைச் சொல்லினுஞ் சொல்லுக, அமையும்; பயனில்லாதவற்றைச் சொல்லாமை நன்று.

இது சான்றோர்க்கு ஆகாதென்றது.

198. அரிய பொருளை யாராயும் அறிவினையுடையார் சொல்லார்; பெரிய பயனில்லாத சொற்களை,

இது மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின் இதனை யறிவுடையார் கூறாரென்றது.

199. பொருளில்லாத சொல்லை மறந்துஞ் சொல்லார்; மயக்கந் தீர்ந்த குற்றமற்ற தெளிவினை யுடையார்,

இது தெளிவுடையார் கூறாரென்றது.

200. சொல்லுவனாயின் பயனுடைய சொற்களைச் சொல்லுக: சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லா தொழிக.

இது பயனில சொல்லாமை வேண்டுமென்றது.

# 21. தீவினை அச்சம்

201 தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்;
தீவினை என்னும் செருக்கு.

202 தீயவை தீய பயத்தலான்; தீயவை,
தீயினும் அஞ்சப்-படும்.

203 அறிவினுள் எல்லாம் தலை-என்ப; தீய,
செறுவார்க்கும் செய்யா விடல்.

204 மறந்தும், பிறன்-கேடு சூழற்க! சூழின்,
அறம்-சூழும், சூழ்ந்தவன் கேடு.

205 ‘இலன்’-என்று தீயவை செய்யற்க! செய்யின்,
இலன்-ஆகும், மற்றும் பெயர்த்து.

206 தீப்-பால தான் பிறர்கண் செய்யற்க; நோய்ப்-பால
தன்னை அடல் வேண்டாதான்!

207 எனைப்-பகை உற்றாரும் உய்வர்; வினைப்-பகை
வீயாது, பின்-சென்று, அடும்.

208 தீயவை செய்தார் கெடுதல்; நிழல்-தன்னை
வீயாது அடி-உறைந்தற்று.

209 தன்னைத்-தான் காதலன் ஆயின்; எனைத்து-ஒன்றும்
துன்னற்க, தீவினைப்-பால்!

210 அருங்-கேடன் என்பது அறிக; மருங்கு-ஓடித்
தீவினை செய்யான் எனின்?

201. என்றுந் தீத்தொழில் செய்வா ரஞ்சார்: சீரியரஞ்சுவர், தீவினையாகிய களிப்பை.

இஃது இதற்கு நல்லோ ரஞ்சுவ ரென்றது.

202. தீத்தொழிலானவை தமக்குத் தீமை பயத்தலானே, அத்தொழில்கள் தொடிற் சுடுமென்று தீக்கு அஞ்சுதலினும் மிக அஞ்சப்படும்.

203. எல்லா அறங்களையும் அறியும் அறிவு எல்லாவற்றுள்ளும் தலையான அறிவென்று சொல்லுவர் நல்லோர்; தமக்குத் தீமை செய்வார்க்குந் தாம் தீமை செய்யாதொழிதலை.

இஃது எல்லாவற்றுள்ளுந் தலைமை யுடைத்தென்றது.

204. பிறனுக்குக் கேட்டை மறந்துஞ் சூழாதொழிக: சூழ்வனாயின் அவனாற் சூழப்பட்டவன் அதற்கு மாறாகக் கேடு சூழ்வதன்முன்னே சூழ்ந்தவனுக்குக் கேட்டைத் தீமை செய்தார்க்குத் தீமை பயக்கும் அறந்தானே சூழும்.

இது தீமை நினையினுங் கேடு தருமென்றது.

205. நல்கூர்ந்தேமென்று நினைத்துச் செல்வத்தைக் கருதி தீவினையைச் செய்யாதொழிக; செய்வானாயின் பின்பும் நல்குரவினனாவன். அது செல்வம் பயவாது.

இது வறுமை தீரத் தீமை செய்யினும் பின்பும் வறியனாகுமென்றது.

206. தன்னைத் துன்பப்பகுதியானவை நலிதல் வேண்டாதவன் தீமையாயினவற்றைத் தான் பிறர்க்குச் செய்யதா தொழிக.

இது நோயுண்டாமென்றது.

207. எல்லாப்பகையும் உற்றார்க்கும் உய்தியுண்டாம்; தீவினை யாகிய பகை நீங்காது என்றும் புக்குழிப் புகுந்து கொல்லும்.

அஃதாமாறு பின் கூறப்படும்.

208. தீயவானவற்றைப் பிறர்க்குச் செய்தார் கெடுதல், நிழல் தன்னை நீங்காதே உள்ளடியின்கீழ் ஒதுங்கினாற் போலும்.

மேல் வினைப்பகை பின் சென்றடுமென்றார் அஃதடுமாறு காட்டினார்.

209. தனக்குத் தான் நல்லவனாயின், யாதொன்றாயினும் தீவினைப் பகுதியாயினவற்றைப் பிறர்க்குச் செய்யாதொழிக.

இது தீவினைக்கு அஞ்சவேண்டுமென்றது.

210. ஒருமருங்கு ஓடிப் பிறர்க்குத்தீவினைகளைச் செய்யானாயின் தனக்குக் கேடுவருவ

தில்லை யென்று தானே யறிக. இது கேடில்லை யென்றது.

# 22. ஒப்புரவு அறிதல்

211 கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு
என்-ஆற்றும் கொல்லோ, உலகு?

212 தாள்-ஆற்றித் தந்த-பொருள்-எல்லாம்; தக்கார்க்கு,
வேளாண்மை செய்தற் பொருட்டு.

213 புத்தேள் உலகத்தும், ஈண்டும், பெறல்-அரிதே;
ஒப்புரவின் நல்ல பிற.

214 ஒத்தது-அறிவான் உயிர்-வாழ்வான்; மற்றையான்,
செத்தாருள் வைக்கப்-படும்.

215 ஊருணி நீர் நிறைந்தற்றே; உலகு-அவாம்
பேர்-அறிவாளன் திரு.

216 பயன்-மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்; செல்வம்
நயன்-உடையான்கண் படின்.

217 மருந்து-ஆகித் தப்பா மரத்தற்றால்; செல்வம்
பெருந்தகையான்கண் படின்.

218 இடன்-இல் பருவத்தும், ஒப்புரவிற்கு ஒல்கார்;
கடன்-அறி காட்சி-யவர்.

219 நயன்-உடையான் நல்கூர்ந்தான் ஆதல்-செயும்; நீர-
செய்யாது அமைகலா ஆறு.

220 ‘ஒப்புரவினால் வரும், கேடு’ எனின்; அஃது-ஒருவன்
விற்றுக்-கோள் தக்கது உடைத்து.

211. ஒப்புரவு செய்யுங்காற் கைம்மாறு கருதிச் செய்ய வேண்டா: எல்லார்க்கும் நல்வழி சுரக்கின்ற மாரிக்கு உலகம் கைம்மாறு செய்தலுண்டோ?

கடப்பாடு- ஒப்புரவு. இஃது ஒப்புரவாவது கைம்மாறு வேண்டாத கொடை யென்று கூறிற்று.

212. ஒருவன் முயன்று ஈட்டிய பொருளெல்லாம் தகுதி யுடையார்க்கு உபகரித்தற்காகவாம்.

இது பொருளுண்டானால் ஒப்புரவு செய்கவென்றது.

213. ஒப்புரவு செய்தலின் நன்றாயிருப்பது தேவருலகத்தினும் இவ்வுலகத்தினும் பெறுதற்கு அரிதாம்.

214. ஒப்புரவறிவான் உயிர்வாழ்வானென்று சொல்லப்படுவன். அஃதறியான் செத்தவருள் ஒருவனாக எண்ணப்படுவன்.

இஃது ஒப்புரவறியாதார் பிணத்தோ டொப்ப ரென்றது.

215. ஊர் உண்கின்றகேணி நீர் நிறையப் புகுந்தாலொக்கும்: உலகத்தாரெல்லாராலும் நச்சப்படுகின்ற பெரிய வொப்புரவு அறிவானது செல்வம்.

இஃது ஒப்புரவறிவார்க்கு உளதாகிய செல்வம் நச்சிச்சென்றார் வேண்டியவாறு முகக்கலா மென்றது.

216. பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற் போலும்: பிறரால் விரும்பப்படுவான்மாட்டுச் செல்வ முண்டாயின்.

இது வேண்டாதார்க்கும் பயன்படு மென்றது.

217. பிணிமருந்தாகித் தேடுவார்க்கு மறைதலில்லாத மரத்தை யொக்கும், செல்வமானது பெருந்தகைமையான்மாட்டு உண்டாயின்.

தப்புதலென்றது ஒளித்தலை.

218. செல்வம் விரிவற்ற காலத்திலும் ஒப்புரவிற்குத் தளரார்: ஒப்புரவை யறியும் அறிவுடையார்.

இது செல்வம் விரிவில்லாத காலத்தினும் செய்யவேண்டு மென்றது.

219. நயனுடையான் நல்கூர்ந்தா னாகின்றது செய்ய வேண்டுவன செய்யாதே யமைய மாட்டாத இயல்பாம்.

இது செல்வங் குறைபடினுஞ் செய்வரென்றது.

220. ஒருவன் ஒப்புரவு செய்தலினாலே பொருட்கேடு வருமென்று சொல்லின், அக்கேட்டைக் கேடாகச் சேர்த்துக் கொள்ளல் கூடாது. அஃது ஒன்றை விற்று ஒன்றைக் கொள்ளுகின்ற வாணிகமாகக் கொள்ளுந் தகுதியுடைத்து.

கெட்டானாயினும் அதனை ஆக்கமாகக் கொள்ளல் தகும்: பிற்பயப்பன நன்மையாதலான்.

## 23. ஈகை

221 வறியார்க்கு-ஒன்று ஈவதே ஈகை; மற்று-எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

222 ‘நல்லாறு’ எனினும், கொளல் தீது; ‘மேல் உலகம்
இல்’ எனினும், ஈதலே நன்று.

223 ‘இலன்’-என்னும் எவ்வம் உரையாமை; ஈதல்,
குலன் உடையான்கண்ணே உள.

224 இன்னாது, இரக்கப்படுதல்; இரந்தவர்
இன்-முகம் காணும் அளவு.

225 ஆற்றுவார் ஆற்றல் பசி-ஆற்றல்; அப்-பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

226 அற்றார் அழி-பசி தீர்த்தல்! அஃது-ஒருவன்
பெற்றான் பொருள் வைப்பு-உழி.

227 பாத்து-ஊண் மரீஇ-யவனைப்; பசி-என்னும்
தீப்பிணி, தீண்டல் அரிது.

228 ஈத்து, உவக்கும் இன்பம் அறியார்கொல்? தாம்-உடைமை,
வைத்து-இழக்கும் வன்-கணவர்?

229 இரத்தலின் இன்னாது மன்ற; நிரப்பிய
தாமே தமியர் உணல்.

230 சாதலின் இன்னாதது இல்லை; இனிது, அதூஉம்
ஈதல் இயையாக்-கடை.

221. ஈகையாவது இல்லாதார்க்கு யாதானும் ஒன்றைக் கொடுத்தல்; இஃதொழிந்த கொடையெல்லாம் குறியெதிர்ப்பைக் கொடுத்த நீர்மையாதலையுடைத்து.

இது கொடுக்குங்கால் இல்லார்க்குக் கொடுக்கவேண்டுமென்றது.

222. ஒருவன்மாட்டுக் கொள்ளல் நன்மை பயக்கும் நெறியெனினும் கோடல் தீது: ஒருவர்க்குக் கொடுத்தாற் பாவ முண்டெனினும் கொடுத்தல் நன்று.

கொள்வோ ரமைதி யறிந்து கொடுக்கவேண்டுமெனினும் இது வரையாது கொடுத்தலாதலால் யாதொருவாற்றானுங் கொடை நன்றென்பது கூறிற்று.

223. இரந்துவந்தார்க்கு இலனென்னா நின்ற துன்பத்தைக் கூறாது ஈதலும் குடிப்பிறந்தான்மாட்டே யுளதாம்.

இது கொடுக்குங்கால் மாறாது கொடுக்க வேண்டுமென்றது.

224. பிறன் ஒருவனா லிரக்கப்படுதலும் இன்னாது எவ்வளவு மெனின், இரந்து வந்தவன் தான் வேண்டியது பெற்றதனானே இனிதான முகங் காணுமளவும்.

இது கொடுக்குங்கால் தாழாது கொடுக்க வேண்டுமென்றது.

225. பெரியாரது பெருமையாவது பசியைப் பொறுத்தல்: அதுவும் பெரிதாவது பிறர் பசியைத் தீர்ப்பாரது பெருமைக்குப் பின்பு.

இது தவம்பண்ணுவாரினும் தானம் பண்ணுவார் வலியுடைய ரென்றது.

226. பொருளற்றாராது குணங்களையழிக்கும் பசியைப் போக்குக. அது செய்ய ஒருவன் தான் தேடின பொருள் வைத்தற்கு இடம் பெற்றானாம்.

இது பகுத்துண்ணப் பொருளழியாது என்றது.

227. பகுத்து உண்டலைப் பழகியவனைப் பசியாகிய பொல்லா நோய் தீண்டுத லில்லை.

இஃது ஒருவன் பிறர்க்கீயா தொழிகின்றமை ஈந்தால் பொருள் குறையும். அதனாலே பசியுண்டாமென் றஞ்சியன்றோ? அவ்வாறு நினைத்தல் வேண்டா. பகுத்துண்ணப் பசிவாராதென்று கூறிற்று.

228. கொடுத்த கொடையினால் பெற்றவர்க்கு வரும் முகமலர்ச்சியைக் கண்டறியாரோ? தாமுடைய பொருளைக் கொடாதே வைத்துப் பின் னிழக்கின்ற வன்கண்ணர்.

இஃது இடார் இழப்பரென்றது.

229. இரத்தல்போல மெய்யாக இன்னாதாம்: தேடின உணவைத் தாமே தமியராயிருந் துண்டல்.

தமியரா யென்றது ஒருவருங் காணாமலென்றது.

230. சாதலின் மிக்க துன்பமில்லை. அதுவும் இனிதாம் இரந்து வந்தவர்க்குக் கொடுத்தல் முடியாவிடத்து.

இஃது ஈயாது வாழ்தலில் சாதல் நன்றென்றது.

# 24. புகழ்

231 ஈதல்! இசைபட வாழ்தல்! அது-அல்லது
ஊதியம் இல்லை, உயிர்க்கு.

232 உரைப்பார் உரைப்பவை எல்லாம்; இரப்பார்க்கு, ஒன்று-
ஈவார்-மேல் நிற்கும் புகழ்.

233 ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்,
பொன்றாது நிற்பது ஒன்று இல்.

234 நில-வரை நீள்-புகழ் ஆற்றின்; புலவரைப்
போற்றாது, புத்தேள் உலகு.

235 நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும்,
வித்தகர்க்கு அல்லால் அரிது.

236 தோன்றின், புகழொடு தோன்றுக! அஃது-இலார்
தோன்றலின், தோன்றாமை நன்று.

237 புகழ்பட வாழாதார் தம்-நோவார்; தம்மை
இகழ்வாரை நோவது எவன்?

238 ‘வசை’ என்ப, வையத்தார்க்கு எல்லாம்; ‘இசை’ என்னும்
எச்சம் பெறாஅவிடின்.

239 வசை-இலா வண்-பயன் குன்றும்; இசை-இலா
யாக்கை பொறுத்த நிலம்.

240 வசை-ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை-ஒழிய
வாழ்வாரே வாழா-தவர்.

231. புகழ்பட வாழ்தலாவது கொடுத்தல். அக்கொடையா னல்லது உயிர்க்கு இலாபம் வேறொன்றில்லை.

இது புகழுண்டாமாறு கூறிற்று.

232. சொல்லுவார் சொல்லுவனவெல்லாம் இரந்துவந்தார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பார்மேல் நில்லாநின்ற புகழாம்.

233. உயர்ந்த புகழல்லது இணை யின்றாக உலகத்துக் கெடாது நிற்பது பிறிதில்லை.

இது புகழ் மற்றுள்ள பொருள்போலன்றி அழியாது நிற்கு மென்றது.

234. ஒருவன் நிலத்தெல்லையின் கண்ணே நெடிய புகழைச் செய்வனாயின் தேவருலகம் புலவரைப் போற்றாது இவனைப் போற்றும்.

புலவரென்றார் தேவரை, அவர் புலனுடையாராதலான். இது புகழ் செய்தாரைத் தேவருலகம் போற்றுமென்றது.

235. ஆக்கம்போலக் கேடும் உளதானாற்போலச் சாதலும் வல்லவற்கல்லது அரிது.

இது புகழ்பட வாழ்தல் மக்களெல்லார்க்கும் அரிதென்றது.

236. பிறக்கிற் புகழுண்டாகப் பிறக்க; அஃதிலார் பிறக்குமதிற் பிறவாமை நன்று.

இது புகழ்பட வாழவேண்டு மென்றது.

237. புகழ்பட வாழ மாட்டாதார் தங்களை நோவாது தம்மை யிகழ்வாரை நோகின்றது யாதினுக்கு?

இது புகழ்பட வாழமாட்டாதார் இகழப்படுவரென்றது.

238. உலகத்தார்க்கெல்லாம் புகழாகிய ஒழிபு பெறாவிடின், அப்பெறாமைதானே வசையாமென்று சொல்லுவர்.

மேல் புகழில்லாதாரை யிகழ்பவென்றார் அவர் குற்றமில்லா ராயின் இகழப்படுவரோவென்றார்க்கு வேறு குற்றம் வேண்டா, புகழின்மைதானே யமையுமென்றார்.

239. புகழில்லாத வுடம்பைப் பொறுத்த நிலம் பழியற்ற நல்விளைவு குறையும்.

இது புகழில்லாதா னிருந்தவிடம் விளைவு குன்றுமென்றது.

240. வசையொழிய வாழுமவர்களே உயிர் வாழ்வாராவர்; புகழொழிய வாழ்வாரே உயிர் வாழாதார்.

இது புகழில்லார் பிணத்தோ டொப்ப ரென்றது.

# 25. அருள் உடைமை

241 அருள்-செல்வம், செல்வத்துள் செல்வம்; பொருள்-செல்வம்
பூரியார்கண்ணும் உள.

242 நல்-ஆற்றான் நாடி அருள்-ஆள்க! பல்-ஆற்றான்
தேரினும் அஃதே துணை.

243 அருள்-சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை; இருள்-சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

244 ‘மன்-உயிர்-ஓம்பி, அருள்-ஆள்வார்க்கு இல்’ என்ப;
‘தன்-உயிர் அஞ்சும் வினை’.

245 அல்லல், அருள்-ஆள்வார்க்கு இல்லை; வளி-வழங்கும்
மல்லல் மா-ஞாலம் கரி.

246 ‘பொருள்-நீங்கிப் பொச்சாந்தார்’ என்பர்; அருள்-நீங்கி
அல்லவை செய்து-ஒழுகுவார்.

247 அருள்-இல்லார்க்கு, அவ்-உலகம் இல்லை; பொருள்-
இல்லார்க்கு,
இவ்-உலகம் இல்லாகி-யாங்கு.

248 பொருள்-அற்றார், பூப்பர் ஒருகால்; அருள்-அற்றார்,
அற்றார்; மற்று-ஆதல் அரிது.

249 தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்; தேரின்,
அருளாதான் செய்யும் அறம்.

250 வலியார்-முன், தன்னை நினைக்க; தான்-தன்னின்
மெலியார்-மேல், செல்லும் இடத்து.

241. செல்வத்துள் வைத்துச் செல்வமாவது அருளுடைமையாகிய செல்வமாம்; பொருட்செல்வமானது கீழாயினோர்மாட்டும் உளவாதலால்.

இஃது அருள்நிலை கூறிற்று.

242. நல்ல வழியாலே நாடி அருளையுண்டாக்குக: பல வழியினும் ஓடி யாராயினும் தமக்கு அவ்வருளே துணையாம்.

நல்லாற்றானாடியருளாள்க என்றது அருளுடைமை யுண்டாகப் பலவறங்களையுஞ் செய்கவென்றவாறு. இஃது அருளுடைமை வேண்டுமென்றது.

243. அருளைப் பொருந்தின நெஞ்சினையுடைவர்க்கு இருளைப் பொருந்தின நரகலோகம் புகுதலில்லை.

இது நரகம் புகாரென்றது.

244. நிலைபெற்ற உயிரை ஓம்பி அருளை ஆள்வானுக்குத் தன்னுயிரஞ்ச வரும் வினை வருவ தில்லையென்று சொல்லுவார்.

இது தீமை வாராதென்றது.

245. அருளுடையார்க்கு அல்லலில்லை: அதற்குச் சான்று காற்றியங்குகின்ற வளப்பத்தினை யுடைய பெரிய வுலகம்.

இஃது அருளுடையார்க்கு அல்லலின்மை உலகத்தார்மாட்டே காணப்படுமென்றது.

246. முற்பிறப்பின்கண் அருளினின்று நீங்கி அல்லாதவற்றைச் செய்தொழுகினவர் இப்பிறப்பின்கண் பொருளினின்று நீங்கி மறவியுமுடையவரென்று சொல்லுவர்.

இது பொருளில்லையாமென்றது.

247. அருள் இல்லாதார்க்கு மேலுலகமுறுங் காட்சியில்லை; பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகின்கண் இன்பமுறுங்காட்சி யில்லையானாற்போல.

இஃது அருளில்லாதார் சுவர்க்கம் புகாரென்றது.

248. பொருளில்லாதார் ஒருகாலத்தே பொருளுடையராதலும் கூடும்; அருளில்லாதார் கெட்டார், பின்பு ஆக்கமுண்டாகாது.

இது பொருளின்மையேயன்றி எல்லாக் கேடு முண்டாமென்றது.

249. தெளிவில்லாதான் மெய்ப்பொருளைத் தெளிந்தாற்போலும்: ஆராயின்அருளில்லாதான் செய்யும் அறமும்.

இஃது அறஞ் செய்யவும் மாட்டாரென்றது.

250. தாம் தம்மின் மெலியார்மேல் வெகுண்டெழுமிடத்துத் தம்மின் வலியார் முன் தாம் நிற்கும் நிலையை நினைக்க.

# 26. புலால் மறுத்தல்

251 தன்-ஊன் பெருக்கற்குத் தான்-பிறிது ஊன்-உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

252 பொருள்-ஆட்சி போற்றாதார்க்கு இல்லை; அருள்-ஆட்சி
ஆங்கு-இல்லை, ஊன்-தின்பவர்க்கு.

253 படை-கொண்டார் நெஞ்சம்-போல், நன்று-ஊக்காது; ஒன்றன்
உடல்-சுவை, உண்டார் மனம்.

254 ‘அருள்’, அல்லது யாது? எனின்; கொல்லாமை, கோறல்;
பொருள்-அல்லது, அவ்-ஊன்-தினல்.

255 உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன்-உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

256 தினற்-பொருட்டால் கொல்லாது உலகு-எனின்; யாரும்
விலைப்-பொருட்டால் ஊன்-தருவார் இல்.

257 உண்ணாமை வேண்டும், புலாஅல்; பிறிது-ஒன்றன்
புண்; அது உணர்வார்ப் பெறின்.

258 செயிரின் தலைப்-பிரிந்த காட்சியார் உண்ணார்;
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

259 அவி-சொரிந்து ஆயிரம் வேட்டலின்; ஒன்றன்
உயிர்-செகுத்து உண்ணாமை நன்று.

260 கொல்லான், புலாலை மறுத்தானை; கைகூப்பி,
எல்லா உயிரும் தொழும்.

251. தன்னுடைம்பை வளர்த்ததற்குத் தான் பிறிதொன்றினது உடம்பை
உண்ணுமவன் அருளுடையவனாவது மற்றியா தானோ?

ஊனுண்ண அருள்கெடுமோ என்றார்க்கு இது கூறப்பட்டது.

252. பொருளினை யாளுதல் அதனைக் காக்கமாட்டாதார்க்கு இல்லை.
அதுபோல அருளினை யாளுதல் ஊன் தின்பவர்க்கு இல்லை.

இஃது ஊனுண்ண அருட்கேடு வருமென்றது.

253. ஆயுதம் கையிற்கொண்டவர் நெஞ்சுபோல் நன்மையை நினையாது:
ஒன்றினுடலைச் சுவைபடவுண்டார் மனம்.

254. அருளல்லது யாதெனின், கொல்லாமையைச் சிதைத்தல்; பொருளல்லது
யாதெனின் அவ்வூனைத் தின்றல்.

இஃது அதனை யுண்டதால் அருள் கெடுதலேயன்றிப் பெறுவதொரு
பயனுமில்லை என்றது.

255. புலாலை யுண்ணாமை வேண்டும். அது பிறிதொன்றின் புண். ஆதலால்
அதனை அவ்வாறு காண்பாருண்டாயின்.

இது புலால் மறுத்தல் வேண்டுமென்பதூஉம், அது தூயதாமென்பதூஉங்
கூறிற்று.

256. தின்னுதற்காக உலகத்தார் கொள்ளாராயின், விலைக்காக ஊன் விற்பார்
யாரும்

இல்லை. இது கொன்று தின்னாது விலைக்குக்கொண்டு தின்பார்க்குக்
குற்றமென்னை யென்றார்க்கு அதனாலுங் கொலைப்பாவம் வருமென்று கூறிற்று.

257. உயிர் நிலையைப் பெறுதல் ஊனை யுண்ணாமையினால் உள்ளது;
ஊனையுண்ண உண்டாரை எல்லாவுலகத்தினும் இழிந்த நரகம் விழுங்கிக்
கொண்டு அங்காவாது.

அங்காவாமை- புறப்பட விடாமை.

258. குற்றத்தினின்று நீங்கின தெளிவுடையார் உண்ணார்; உயிரினின்று
நீங்கின உடம்பை.

இது மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின் அதனைத்
தெளிவுடையாருண்ணாரென்றது.

259. நெய் முதலான அவியைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும்
ஒன்றினுயிரை நீக்கி அதனுடம்பை யுண்ணாமை நன்று.

260. கொல்லானுமாய்ப் புலாலையுண்டலையுந் தவிர்த்தவனைக் கை குவித்து
எல்லாவுயிருந் தொழும்.

மேல் எல்லாப்புண்ணியத்திலும் இது நன்றென்றார்; அது யாதினைத் தருமென்
றார்க்குக் கொல்லாதவன் தேவர்க்கும் மேலாவனென்று கூறினார்.

# 27. தவம்

261 உற்ற நோய்-நோன்றல், உயிர்க்கு-உறுகண் செய்யாமை-
அற்றே; தவத்திற்கு உரு.

262 தவமும் தவம்-உடையார்க்கு ஆகும்; அவம், அதனை
அஃது-இலார் மேற்-கொள்வது.

263 துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல்;
மற்றை-யவர்கள் தவம்!

264 ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும்;
எண்ணின், தவத்தான் வரும்.

265 வேண்டிய வேண்டியாங்கு எய்தலான்; செய்-தவம்
ஈண்டு முயலப்-படும்.

266 தவம்-செய்வார், தம்-கருமம் செய்வார்; மற்று-அல்லார்
அவம்-செய்வார், ஆசையுள்-பட்டு.

267 சுடச்-சுடரும், பொன்போல் ஒளிவிடும்; துன்பம்
சுடச்சுட, நோற்கிற்-பவர்க்கு.

268 தன்-உயிர், தான் அறப்-பெற்றானை; ஏனைய
மன்-உயிர் எல்லாம் தொழும்.

269 கூற்றம் குதித்தலும் கைகூடும்; நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு.

270 இலர், பலர்-ஆகிய-காரணம்; நோற்பார்
சிலர்; பலர் நோலாதவர்.

261. தமக்கு உற்றநோயைப் பொறுத்தலும் பிறவுயிர்க்கு நோய் செய்யாமையுமாகிய அத்தன்மையே தவத்திற்கு வடிவமாம்.

262. தவஞ்செய்தலும் முன்பு நல்வினை செய்தார்க்கு வரும்; அந்நல்வினையில்லாதார் அத்தவத்தை மேற்கொள்வது பயனில்லை.

இது தவமிலார்க்குத் தவம் வாராது வரினுந் தப்புமென்றது.

263. துறந்தவர்களுக்கு உணவு கொடுத்தலை வேண்டித் தவிர்ந்தாராயினரோ? இல்வாழ்வார் தவஞ் செய்தலை.

இது தானத்திலும் தவம் மிகுதியுடைத்தென்றது.

264. இவ்விடத்துப் பகைவரை தெறுதலும், நட்டோரை யாக்குதலுமாகிய வலி ஆராயின் முன்செய்த தவத்தினாலே வரும்.

இது பிறரை யாக்குதலும் கெடுத்தலுந் தவத்தினாலே வருமென்றது.

265. விரும்பின விரும்பினபடியே வருதலால், தவஞ்செய்தலை இவ்விடத்தே முயல வேண்டும்.

இது போக நுகர்ச்சியும் இதனானே வருமென்றது.

266. தங்கருமஞ் செய்வார் தவம் செய்வார்; அஃதல்லாதன செய்வாரெல்லாம் ஆசையிலே அகப்பட்டுப் பயனில்லாதன செய்கின்றார்.

இது தவம்பண்ண வேண்டுமென்றது.

267. நெருப்பின்கண்ணே இட இடத் தன்னோடு கலந்த மாசற்று ஒளிவிடுகின்ற பொன்னைப்போலத் துன்பம் நலிய நலியத் தவஞ்செய்வார்க்குத் தம்மோடு மருவின வினை விட்டு ஒளிவிடும்.

இது வினைவிட் டொளி யுண்டாம் என்றது.

268. தன்னுயிரானது தானென்று கருதுங் கருத்து அறப்பெற்றவனை, ஒழிந்தனவாகிய நிலைபெற்ற உயிர்களெல்லாம் தொழும்.

உயிரென்றது சலிப்பற்ற அறிவை; தானென்றது சீவனாகி நிற்கின்ற நிலைமையை; தானறுதலாவது அகங்கார மறுதல்.

269. கூற்றத்தைத் தப்புதலுங் கைகூடும்; தவத்தினாகிய வலியைக் கூடினார்க்கு.

இது மார்க்கண்டேயன் தப்பினாற்போல வென்றது.

270. பொருளில்லாதார் உலகத்துப் பலராதற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலராதல்; அது செய்யதார் பலராதல்.

# 28. கூடா ஒழுக்கம்

271 வஞ்ச-மனத்தான் படிற்று, ஒழுக்கம்; பூதங்கள்-
ஐந்தும், அகத்தே நகும்.

272 வான்-உயர் தோற்றம் எவன்-செய்யும்? தன்-நெஞ்சம்
தான்-அறி குற்றப்-படின்?

273 வலி-இல் நிலைமையான், வல்-உருவம் பெற்றம்;
புலியின் தோல்-போர்த்து மேய்ந்தற்று.

274 தவம்-மறைந்து, அல்லவை செய்தல்; புதல்-மறைந்து
வேட்டுவன், புள் சிமிழ்த்தற்று.

275 ‘பற்று அற்றேம்’ என்பார் படிற்று-ஒழுக்கம்; ‘எற்று! எற்று!’
என்று,
ஏதம் பலவும் தரும்.

276 நெஞ்சின் துறவார், துறந்தார்-போல் வஞ்சித்து,
வாழ்வாரின் வன்கணார் இல்.

277 புறம்-குன்றி கண்டனையரேனும், அகம்-குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

278 மனத்தது மாசு-ஆக, மாண்டார் நீர்-ஆடி,
மறைந்து-ஒழுகும் மாந்தர் பலர்.

279 கணை-கொடிது; யாழ்-கோடு செவ்விது; ஆங்கு-அன்ன
வினைபடு பாலால் கொளல்.

280 மழித்தலும், நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து-விடின்.

271. கள்ள மனத்தை யுடையானது குற்றத்தினையுடைய ஒழுக்கத்தைப் பிறரறியாராயினும், தன்னுடம்பி னுண்டான பூதங்களைந்தும் அறிந்து தம்முள்ளே நகாநிற்கும்.

பூதங்களைந்தும் அவையிற்றின் காரியமாகிய பொறிகளை.

272. வானளவும் உயர்ந்த பெருமையுண்டாயினும் அஃதியாதினைச் செய்யவற்று; தன்னெஞ்சறியக் குற்ற முண்டாயின்.

தான்- அசை. இஃது இக்கூடா ஒழுக்கத்தானைப் பிறரறிந்து இகழாராயினும் அவன் செய்கின்ற தவத்தினாற் பயனுண்டாகாது என்றது.

273. வலியில்லாத நிலைமையை யுடையவன் வலிதாகிய தவவுருவங் கோடல், பெற்றமானது பிறர் பயப்படும்படி புலியினது தோலைப் போர்த்துப் பைங்கூழ் மேய்ந்த தன்மைத்து.

274. தவத்திலே மறைந்து தவ மல்லாதவற்றைச் செய்தல் வேட்டுவன் தூற்றிலே மறைந்து புள்ளைப் பிணித்தாற் போலும்.

அர்ச்சுனன் தவமறைந்தல்லவை செய்தான்.

275. பற்றினை யற்றேமென்பாரது குற்றத்தினை யுடைய ஒழுக்கம் எல்லாரும் எற்றெற்

றென்று சொல்லும்படி பல குற்றமும் உண்டாக்கும். எற்றென்பது திசைச்சொல். இது தீமைபயக்கு மென்றது.

276. நெஞ்சிற் றுறவாராய்த் துறந்தாரைப் போல வஞ்சனை செய்து வாழுமவர்களைப் போலக் கொடியா ரில்லை யுலகத்து.

277. புறத்தே குன்றி நிறம்போன்ற தூய வேடத்தாராயிருப்பினும், அகத்தே குன்றி மூக்குப் போலக் கரியராயிருப்பாரை உடைத்து இவ்வுலகம்.

இஃது அறிஞர் தவத்தவரை வடிவு கண்டு நேர்படாரென்றது.

278. மாசு மனத்தின்கண் உண்டாக வைத்து மாட்சிமைப் பட்டாரது நீர்மையைப் பூண்டு, பொருந்தாத விடத்திலே மறைந்தொழுகு மாந்தர் பலர்.

இது பலர்க்குக் கூடாவொழுக்க முண்டாகு மென்றது.

279. செவ்விய கணை கொடுமையைச் செய்யும்; கோடியயாழ் செவ்வையைச் செய்யும்; அதுபோல யாவரையும் வடிவுகண்டறியாது; அவரவர் செய்யும் வினையின் பகுதியாலே யறிந்துகொள்க.

280. தவத்தினர்க்குத் தலையை மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகத்தார் கடிந்தவையிற்றைத் தாமுங்கடிந்து விடுவாராயின்.

இது வேடத்தாற் பயனில்லை: நல்லொழுக்கமே வேண்டுமென்றது.

# 29. கள்ளாமை

281 எள்ளாமை வேண்டுவான் என்பான்; எனைத்து-ஒன்றும்
கள்ளாமை காக்க, தன்-நெஞ்சு!

282 உள்ளத்தால் உள்ளலும் தீதே; ‘பிறன்-பொருளைக்
கள்ளத்தால் கள்வேம்’ எனல்!

283 களவினால் ஆகிய ஆக்கம்; அளவு-இறந்து,
ஆவது போல, கெடும்.

284 களவின்கண், கன்றிய காதல்; விளைவின்கண்,
வீயா விழுமம் தரும்.

285 அருள்-கருதி அன்புடையர் ஆதல்; பொருள்-கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்-கண் இல்.

286 அளவின்கண் நின்று ஒழுகல்-ஆற்றார்; களவின்கண்,
கன்றிய காதலவர்.

287 களவு-என்னும், கார்-அறிவு ஆண்மை; அளவு-என்னும்,
ஆற்றல் புரிந்தார்-கண் இல்.

288 அளவு-அறிந்தார் நெஞ்சத்து, அறம்-போல நிற்கும்;
களவு-அறிந்தார் நெஞ்சில், கரவு.

289 அளவு-அல்ல செய்து, ஆங்கே வீவர்; களவு-அல்ல
மற்றைய தேற்றாதவர்.

290 கள்வார்க்குத் தள்ளும், உயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது, புத்தேள் உலகு.

281. பிறரா லிகழப்படாமையை வேண்டுவா னிவனென்று சொல்லப்படுமவன் யாதொரு பொருளையுங் களவிற் கொள்ளாமல் தன்னெஞ்சைக் காக்க.

இது களவு ஆகாதென்றது.

282. பிறன் பொருளை நெஞ்சினால் நினைத்தலும் தீதாம்; ஆதலால் அதனை மறைவினாலே கள்வேமென்று முயலாதொழிக.

இது களவு தீதென்றது.

283. களவிற் கொண்ட பொருளா லாகிய ஆக்கம் மேன் மேலும் மிகுவதுபோலக் கெடும்.

இது பொருள் நிலையாதென்றது.

284. களவின்கண்ணே மிக்கஆசை, பயன்படுங் காலத்துக் கேடில்லாத நோயைத் தரும்.

இது நரகம் புகுத்தும் என்றது.

285. அருளைக் குறித்து உயிர்மீது அன்புடையரா யொழுகுதல் பொருளை குறித்துப் பிறரது மறவியைப் பார்ப்பார் மாட்டு இல்லை.

இஃது அருளும் அன்பு மில்லையாமென்றது.

286. களவின்கண்ணே மிக்க ஆசையையுடையவர் நேரின்கணின்று ஒழுகுதலைச் செய்யமாட்டார்.

இது நேர் செய்ய மாட்டாரென்றது.

287. களவாகிய பொல்லா அறிவுடைமை நேராகிய பெருமையைப் பொருந்தினார்மாட்டு இல்லை.

இது நேரறிந்தவர் களவு காணாரென்றது.

288. நேரறிந்தவர் நெஞ்சத்து அறம் நிற்குமாறுபோல நிற்கும்: களவறிந்தவர் நெஞ்சில் வஞ்சகமும்.

இது களவு காண்பாரைப் பின்பு களவினின்று தவிர்த்தல் முடியாதென்றது.

289. நேர் ஆகாதன செய்து அவ்விடத்தே கெடுவார்; களவல்லாத மற்றைய அறங்களைத் தெளியாதவர்.

இது கள்வாரை அரசர் கொல்வரென்றது.

290. பிறர் பொருளைக் கள்வார்க்கு உயிர்நிலையாகிய வீடு பெறுதல் தப்பும். கள்ளா

தார்க்குத் தேவருலகம் பெறுதல் தப்பாது. இது கள்வார் முத்தி பெறுதலுமிலர், கள்ளாதார் சுவர்க்கம் பெறாமையுமிலரென்றது.

# 30. வாய்மை

291 ‘வாய்மை எனப்படுவது யாது?’ எனின்; யாது-ஒன்றும்,
தீமை-இலாத சொலல்.

292 பொய்ம்மையும் வாய்மை இடத்த; புரை-தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

293 தன்-நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்த-பின்,
தன்-நெஞ்சே தன்னைச் சுடும்.

294 உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்; உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம், உளன்.

295 மனத்தொடு, வாய்மை மொழியின்; தவத்தொடு,
தானம் செய்வாரின், தலை.

296 பொய்யாமை, அன்ன புகழ்-இல்லை; எய்யாமை,
எல்லா-அறமும் தரும்.

297 பொய்யாமை, பொய்யாமை ஆற்றின்; அறம்-பிற
செய்யாமை, செய்யாமை நன்று.

298 புறம்-தூய்மை, நீரால் அமையும்; அகம்-தூய்மை,
வாய்மையால் காணப்படும்.

299 எல்லா-விளக்கும், விளக்கு-அல்ல; சான்றோர்க்குப்
பொய்யா-விளக்கே, விளக்கு.

300 யாம்-மெய்யாக் கண்டவற்றுள் இல்லை; எனைத்து-ஒன்றும்
வாய்மையின் நல்ல பிற.

291. பொய் சொல்லாத மெய்யென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், பிறர்க்கு யாதொன்றானும் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதல்,

வாய்மை யாது என்றார்க்கு இது கூறப்பட்டது.

292. பொய்யும் மெய்யோ டொக்கும், குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின்.

293. தன்னெஞ்சினாற் பொய்யை நினையாது ஒழுகுவனாயின் உலகத்தார் நெஞ்சினுளெல்லாம் உளனாவான்.

இது பொய்யை நினையாதாரை எல்லாரும் போற்றுவாரென்றது.

294. தன்னெஞ்சினாற் பொய்யை நினையாது ஒழுகுவனாயின் உலகத்தார் நெஞ்சினுளெல்லாம் உளனாவான்

இது பொய்யை நினையாதாரை எல்லாரும் போற்றுவாரென்றது

295. தன்னெஞ்சினாற் பொய்யை நினையாது ஒழுகுவனாயின் உலகத்தார் நெஞ்சினுளெல்லாம் உளனாவான்.

இது பொய்யை நினையாதாரை எல்லாரும் போற்றுவாரென்றது.

296. பொய்யாமையை யுடையன் என்பதனோடு ஒத்த புகழ் வேறொன்றில்லை; பொய்யாமையானது அவனறியாமல் தானே எல்லா அறங்களையுங் கொடுக்குமாதலான்.

297. பொய்யாமையைப் பொய்யாமல் செலுத்துவனாயின் பிற அறங்களைச் செய்தல் நன்றாம்; அல்லது தீதாம்.

298. உடம்பு தூயதாதல் நீரினாலே யமைந்து விடும்: மனத்தின் தூய்மை மெய்சொல்லுதலினாலே யறியப்படும்.

299. சான்றோர்க்கு எல்லாவறத்தினாலும் உண்டான ஒளியும் ஒளியல்ல: பொய்யாமையா னுண்டான ஒளியே ஒளியாகும்.

இது பொய்யாவிளக்குச் சான்றோர்க்கு இன்றியமையாதென்று கூறிற்று.

300. யாம் மெய்யாக் கண்டவற்றுள் மெய் சொல்லுதல்போல நன்றாயிருப்பன, வேறு யாதொன்றும் இல்லை.

இஃது எல்லா அறமும் இதனோடு ஒவ்வாதென்று அதன் தலைமை கூறிற்று.

# 31. வெகுளாமை

301 செல்-இடத்துக் காப்பான் சினம்-காப்பான்; அல்-இடத்து,
காக்கின்-என்? காவாக்கால்-என்?

302 செல்லா இடத்துச் சினம், தீது; செல்-இடத்தும்,
இல், அதனின் தீய பிற.

303 மறத்தல், வெகுளியை யார்மாட்டும்; தீய-
பிறத்தல், அதனான் வரும்.

304 நகையும், உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ, பிற?

305 தன்னைத்-தான் காக்கின், சினம்-காக்க! காவாக்கால்,
தன்னையே கொல்லும், சினம்.

306 சினம்-என்னும் சேர்ந்தாரைக்-கொல்லி; இனம்-என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

307 சினத்தைப் பொருள்-என்று கொண்டவன் கேடு;
நிலத்து-அறைந்தான் கை-பிழையாதற்று.

308 இணர்-எரி தோய்வன்ன இன்னா-செயினும்;
புணரின் வெகுளாமை நன்று.

309 உள்ளிய(து) எல்லாம் உடன்-எய்தும்; உள்ளத்தால்
உள்ளான், வெகுளி எனின்.

310 இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

301. தனக்கு இயலு மிடத்தே வெகுளாதவன் வெகுளாத வனாவான்;
இயலாவிடத்தில் அதனைத் தவிர்ந்ததனாலும் பயனில்லை,
தவிராததனாலும் பயனில்லை;

இது வெகுளாமையாவது வலியவன் வெகுளாமை யென்றது.

302. இயலாவிடத்துச் சினந்தீது; இயலுமிடத்திலும் அதிற் றீதாயிருப்பன பிறவில்லை.

303. வெகுளியை யார்மாட்டுஞ் செய்தலை மறக்க; தீயன பிறத்தல் அவ்வெகுளியானே வருமாதலான்.

இது வெகுளாமை வேண்டுமென்றது.

304. நகுதலையும் மகிழ்தலையுங் கெடுக்கின்ற சினத்தைப் போல, பகையா யிருப்பனவும் வேறு சிலவுளவோ?

இஃது இன்பக்கேடு வருமென்றது.

305. ஒருவன் தன்னைத் தான் காக்கவேண்டுவனாயின், சினந்தோன்றாமற் காக்க; காவானாயின் சினம் தன்னையே கொல்லும்,

இஃது உயிர்க்கேடு வருமென்றது.

306. சினமென்று சொல்லப் படுகின்ற நெருப்பு தான் துன்பக்கடலிலழுந்தாமல் தன்னைக் கரையேற விடுகின்ற நட்டோராகிய புணையைச் சுடும்.

சேர்ந்தாரைக் கொல்லி- நெருப்பு: இது காரணக்குறி. இது சினம் தன்னை யடுத்தாரைக் கொல்லு மென்றது.

307. சினத்தைப் பொருளாகக் கொண்டவன் கெடுதல், நிலத்தெறிந்தவன்கை தப்பாமற் பட்டதுபோலும்,

இது பொருட்கேடு வருமென்றது.

308. தொடர்வுபட்ட நெருப்பு மேன்மேலும் வந்துற்றாற்போல ஒருவன் தனக்கு இன்னாதவற்றைப் பலகாற்செய்யினும் கூடுமாயின் வெகுளாதொழிதல் நன்று.

மேல் வலியவன் பொறுக்க வேண்டுமென்றார் அவன் பொறுக்குங்கால் தீமை செய்யினும் பொறுக்க வேண்டுமென்றார்.

309. தன்னெஞ்சினால் வெகுளியை நினையானாகில் தானினைத்தனவெல்லாம் ஒருகாலத்தே கூடப்பெறுவன்,

310. சினத்தை மிகுந்தார் செத்தாரோடு ஒப்பர், அதனை யொழிந்தார் எல்லாப் பொருளையுந் துறந்தாரோடு ஒப்பர்,

இது வெகுளாதார் பெரியரென்றது.

# 32. இன்னா செய்யாமை

311 சிறப்பு-ஈனும் செல்வம் பெறினும்; பிறர்க்கு இன்னா-
செய்யாமை, மாசு-அற்றார் கோள்.

312 கறுத்து இன்னா-செய்த அக்கண்ணும்; மறுத்து இன்னா-
செய்யாமை, மாசு-அற்றார் கோள்.

313 செய்யாமல், செற்றார்க்கும் இன்னாத செய்த-பின்;
உய்யா விழுமம் தரும்.

314 இன்னா செய்தாரை ஒறுத்தல்; அவர்-நாண
நல்-நயம் செய்து விடல்.

315 அறிவினான் ஆகுவது உண்டோ; பிறிதின்-நோய்
தம்-நோய்-போல், போற்றாக்கடை?

316 இன்னா எனத்-தான் உணர்ந்தவை; துன்னாமை
வேண்டும், பிறன்கண் செயல்.

317 எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும்; மனத்தான்-ஆம்
மாணா-செய்யாமை தலை.

318 தன்-உயிர்க்கு, இன்னாமை தான்-அறிவான்; என்கொலோ
மன்-உயிர்க்கு, இன்னா செயல்?

319 பிறர்க்கு-இன்னா, முற்பகல் செய்யின்; தமக்கு-இன்னா,
பிற்பகல் தாமே-வரும்.

320 நோய்-எல்லாம், நோய்-செய்தார் மேலவாம்; நோய்-செய்யார்,
நோய்-இன்மை வேண்டுபவர்.

311. மிகுதியைத் தருகின்ற செல்வத்தைப் பெறினும் பிறர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு.

இது பழி வாராத செல்வம் பெறினும் தவிரவேண்டுமென்றது.

312. தாஞ்செய்த குற்றத்தினாலே வெகுண்டு, இன்னாதவற்றைத் தமக்குச் செய்தவன்மாட்டும் தாம் அதற்கு மாறாகப் பின்பு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு,

313. தானொரு குற்றஞ் செய்யாதிருக்கத் தனக்கு இன்னாத வற்றைச் செய்தவர்க்கும், இன்னாதவற்றைச் செய்யின் அஃது உய்வில்லாத நோயைத்தரும்.

இது காரணமின்றி இன்னாதன செய்தவர்க்கும் பொல்லாங்கு செய்தலைத் தவிரவேண்டுமென்றது.

314. இன்னாதன செய்தாரை ஒறுக்குமாறு என்னையெனின், அவர் நாணும்படியாக நல்ல நயமுடையவற்றைச் செய்துவிடுக.

இஃது ஒறுக்கும் நெறி கூறியது.

315. பிறிதோருயிர்க்குஉறும் நோயைத் தனக்கு உறும் நோய்போலக் காவாதவிடத்து, அறிவுடையனாகிய வதனால் ஆகுவதொரு பயன் உண்டாகாது.

இஃது அறிவுடையார் செய்யார் என்றது.

316. தான் இன்னாதன இவையென்று அறிந்தவற்றைப் பிறற்குச் செய்தலை மேவாமை வேண்டும்.

இஃது இன்னா செய்யாமை வேண்டு மென்றது.

317. யாதொன்றாயினும், எல்லா நாளும் யாவர்மாட்டும் இன்னாதவற்றை மனத்தினாலும் செய்யாமை நன்று.

318. தன்னுயிர்க்கு உற்ற இன்னாமையை உயிரில்லாப் பொருள்கள் போல அறியாது கிடத்தலன்றித் தான் அறியுமவன், பின்னைப் பிறவுயிர்க்கு இன்னாதவற்றைச் செய்கின்றது யாதினைக் கருதியோ?

319. பிறர்க்கு இன்னாதவற்றை முற்பொழுது செய்யின், தாமே பிற்பொழுது தமக்கு இன்னாதனவாய் வரும்: மற்றொருவன் செய்யாமல்.

இன்னாதன செய்ததனால் வருங் குற்றமென்னை யென்றார்க்கு இது கூறப்பட்டது.

320. இக்காலத்து நுகர்கின்ற துன்பமெல்லாம் முற்காலத்துப் பிறர்க்குத் துன்பம் செய்தார் மாட்டே யுளவாம்: ஆதலால் இக்காலத்துப் பிறர்க்கு துன்பத்தைச் செய்யார் வருங்காலத்துத் தமக்குத் துன்பம் வாராமையை வேண்டுபவர்.

## 33. கொல்லாமை

321 'அற-வினை யாது?' எனின், கொல்லாமை; கோறல்,
பிற-வினை எல்லாம் தரும்.

322 பகுத்து-உண்டு, பல்-உயிர் ஓம்புதல்; நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

323 ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று, அதன்-
பின்சாரப் பொய்யாமை நன்று.

324 'நல்லாறு எனப்படுவது யாது?' எனின்; யாது-ஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

325 நிலை-அஞ்சி, நீத்தாருள் எல்லாம்; கொலை-அஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

326 கொல்லாமை, மேற்கொண்டு ஒழுகுவான்; வாழ்நாள்மேல்
செல்லாது, உயிர்-உண்ணும் கூற்று.

327 தன்-உயிர் நீப்பினும், செய்யற்க; தான், பிறிது
இன் உயிர்-நீக்கும் வினை.

328 நன்று-ஆகும் ஆக்கம் பெரிது-எனினும்; சான்றோர்க்குக்
கொன்று-ஆகும் ஆக்கம், கடை.

329 கொலை-வினையர் ஆகிய மாக்கள் புலை-வினையர்,
புன்மை தெரிவார் அகத்து.

330 'உயிர்-உடம்பின் நீக்கியார்' என்ப; 'செயிர்-உடம்பின்
செல்லாத் தீ வாழ்க்கையவர்'.

321. நல்வினை யாதெனின் கொல்லாமை; கொல்லுதல் எல்லாத் தீவினைப் பயனையுந் தருமாதலால்.

இஃது அறத்தொழிலாவது கொல்லாமை யென்றது.

322. பல்லுயிர்களுக்குப் பகுத்துண்டு அவற்றைப் பாதுகாத்தல், நூலுடையார் திரட்டின அறங்களெல்லாவற்றினும் தலையான அறம்.

இஃது எல்லாச் சமயத்தார்க்கும் நன்றென்றது.

323. இணையின்றாக நல்லது கொல்லாமை; அதன்பின்பே அணைய, பொய்யாமையும்

நன்று. இது சொல்லிய அறத்தினும் பொய்யாமை நன்று: அதினும் நன்று கொல்லாமை யென்றது.

324. நல்ல வழியென்று சொல்லப்படுவது யாதெனின், அது யாதொருயிரையுங் கொல்லாமையைச் சிந்திக்கும் வழி.

இது நன்னெறியாவது கொல்லாமை யென்றது.

325. மனைவாழ்க்கையில் நிற்றலை யஞ்சித் துறந்தவரெல்லாரினும் கொலையை யஞ்சிக் கொல்லாமையைச் சிந்திப்பான் தலைமையுடையவன்; இல்வாழ்க்கையில் நிற்பினும்.

இஃது எல்லாத் துறவினும் நன்றென்றது.

326. கொல்லாமையை விரதமாகக் கொண்டு ஒழுகுமவன் வாழ்நாளின் மேல், உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது.

பிறவாமை யுண்டாமாதலால் கூற்றுச் செல்லாது என்றார். இது கொல்லாமையின் பயன் கூறிற்று.

327. தன்னுயிர் நீங்கினும் செய்யாதொழிக. தான் பிறிதொன்றி னுடைய இனிய வுயிரை விடுக்குந் தொழிலினை.

உயிர்க்குக் கேடுவருங் காலத்து நோய்க்கு மருந்தாகக் கொல்லுதல் குற்றமன்று என்பார்க்கு இது கூறப்பட்டது.

328. நன்மையாகும் ஆக்கம் பெரியதேயாயினும் ஒருயிரைக் கொன்று ஆகின்ற ஆக்கம் உயர்ந்தோர்க்கு ஆகாது.

இது பெரியோர் வீடுபேற்றை விரும்பிக் கன்மத்தை விடுத்தலால் வேள்வியின் வருங் கொலையும் ஆகாதென்றது

329. கொலைத் தொழிலினை யுடையராகிய மாக்கள் பொல்லாமையை யாராய்வாரிடத்துத் தொழிற்புலையராகுவர்.

இவரை உலகத்தர் கன்மசண்டாளரென்று சொல்லுவார்.

330. முற்பிறப்பின்கண் உயிரை யுடம்பினின்று நீக்கினார் இவரென்று பெரியோர் கூறுவர்; குற்றமான வுடம்பினையும் ஊணுஞ் செல்லாத தீய மனை வாழ்க்கையினையும் உடையாரை.

இது கொலையினால் வருங் குற்றங் கூறிற்று.

# 34. நிலையாமை

331 நில்லாதவற்றை நிலையின என்று-உணரும்;
புல்லறிவு-ஆண்மை, கடை.

332 கூத்தாட்டு அவைக்-குழாத்து-அற்றே, பெருஞ்-செல்வம்;
போக்கும், அது விளிந்தற்று.

333 அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது-பெற்றால்,
அற்குப ஆங்கே செயல்.

334 நாள்-என, ஒன்று-போல்-காட்டி; உயிர், ஈரும்
வாள்-அது; உணர்வார்ப் பெறின்.

335 நாச்-செற்று, விக்குள் மேல்-வாரா-முன்; நல்-வினை
மேற்சென்று செய்யப்படும்.

336 ‘நெருநல் உளன், ஒருவன்; இன்று-இல்லை!’ என்னும்
பெருமை-உடைத்து, இவ்-உலகு.

337 ஒரு-பொழுதும் வாழ்வது அறியார்; கருதுப
கோடியும் அல்ல பல.

338 குடம்பை தனித்து-ஒழியப் புள் பறந்தற்றே;
உடம்பொடு உயிரிடை நட்பு.

339 உறங்குவது போலும், சாக்காடு; உறங்கி-
விழிப்பது போலும், பிறப்பு.

340 புக்கில் அமைந்தின்று கொல்லோ; உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு!

331. நில்லாத பொருள்களை நிலைநிற்பனவென்று நினைக்கின்ற புல்லிய வறிவுடைமை இழிந்தது.

எனவே, பொருள்களை யுள்ளவாறு காணவொட்டாத மயக்கத்தைக் கடிய வேண்டுமென்றவாறாயிற்று.

332. கூத்தாட்டுக் காண்டற்கு அவைக் கூட்டம் திரண்டா லொக்கும் பெருஞ்செல்வத் திரளும்; அந்த அவை யெழுந்து போனாற் போலும் அது போமாறும்.

333. நில்லாத வியல்பை யுடைத்துச் செல்வம்; அதனைப் பெற்றால் அப்பொழுதே நிற்பனவாகிய அறங்களைச் செய்க.

நிலையாமை மூன்று வகைப்படும்: செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என.

334. நாளென்பது இன்பந் தருவ தொன்று போலக் காட்டி, உயிரையீர்வதொரு வாளாம்: அதனை யறிவாரைப் பெறின்.

இஃது உயிரீரும் என்றமையால் இளமை நிலையாமை கூறிற்று.

335. நாவழங்காமற் செறுத்து விக்குளானது மீதூர்ந்து வருவதன் முன்னே, நல்வினையை மேல் விழுந்து செய்ய வேண்டும்.

இஃது உயிரானது கழிவதன்முன்னே நல்வினையைச் செய்யவேண்டு மென்றது.

336. ஒருவன் நேற்றுளனாயிருந்தான், இன்றில்லையாயினா னென்று சொல்லும் பெருமையை இவ்வுலகம் உடைத்து.

இது யாக்கை நிலையாமை கூறிற்று.

337. ஒரு பொழுதளவும் தம்முயிர் நிலைநிற்கும் என்பதனை யறியாராயிருந்தும், தமது வாழ்நாளை கோடியுமல்ல, பலவாகக் கருதுவர் உலகத்தார்.

மேல் ஒருநாளுளனானவன் பிற்றை ஞான்று செத்தானென்றார் ஈண்டு ஒருபொழுதளவும் உயிர் நிலையாகாது என்றார்.

338. கூடு தனியேகிடக்கப் புள்ளுப் பறந்து போனாற்போலும்,உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு.

மேல் ஒருபொழுதென்று காலங்கூறினார் ஈண்டு உயிர் நினைக்காத பொழுது போமென்றார்.

339. உறங்குவதனோடு ஒக்கும் சாக்காடு: உறங்கி விழிப்பதனோடு ஒக்கும் பிறப்பு.

இது போன உயிர் மீண்டும் பிறக்கு மென்பதூஉம், இறத்தலும் பிறத்தலும் உறங்குதலும் விழித்தலும் போல மாறிவருமென்பதூஉம் கூறிற்று.

340. தனதல்லாத உடம்பினுள்ளே ஒதுக்குக்குடியாக விருந்த உயிர்க்குப் போயிருப்பதற்கிடம் அமைந்ததில்லையோ? அமைந்ததாயின் இதனுள் இராது.

புக்கில் என்பது முத்தி ஸ்தானம் இது மேற்கூறியவற்றால் உயிர் மாறிப் பிறந்து வரினும் ஓரிடத்தே தவறுமென்பது கூறிற்று.

# 35. துறவு

341 யாதனின், யாதனின்-நீங்கியான்; நோதல்
அதனின், அதனின் இலன்.

342 வேண்டின், உண்டாகத் துறக்க; துறந்தபின்,
ஈண்டு இயற்பால பல.

343 அடல்-வேண்டும், ஐந்தன் புலத்தை; விடல்-வேண்டும்,
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

344 இயல்பு-ஆகும், நோன்பிற்கு-ஒன்று இன்மை; உடைமை
மயல்-ஆகும், மற்றும் பெயர்த்து.

345 மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்பு-அறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

346 ‘யான்’, ‘எனது’, என்னும் செருக்கு-அறுப்பான்; வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

347 பற்றி-விடாஅ, இடும்பைகள்; பற்றினை,
பற்றி-விடாஅதவர்க்கு.

348 தலைப்பட்டார், தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார், மற்றையவர்.

349 பற்று அற்ற-கண்ணே பிறப்பு-அறுக்கும்; மற்றும்
நிலையாமை காணப்படும்.

350 பற்றுக, பற்று-அற்றான் பற்றினை! அப்-பற்றைப்
பற்றுக, பற்று-விடற்கு!

341. எவன் யாதொன்றினின்றும் யாதொன்றினின்றும் நீங்கினான் அவன் அதனளவு துன்பமுறுதலிலன்.

342. தன்னுயிர்க்கு ஆக்கம் உண்டாக வேண்டின், தன்னுடைமையெல்லாவற்றையுந் துறக்க; துறந்தபின் இவ்விடத்தே யியலும்பகுதியின பல.

இஃது இம்மைப் பயன் கூறிற்று.

343. துறப்பார்க்குப் பொறிக ளைந்தினுக்கும் நுகர்ச்சியான ஐந்தினையுங் கொல்லுதல் வேண்டும்: அதற்காகத் தாம் விரும்பின எல்லாவற்றையும் ஒரு காலத்திலே விடுதல் வேண்டும்.

344. யாதொரு பொருளும் இலதாதல் தவத்திற்கியல்பாகும்: பொருளுடைமை மீண்டும் பிறத்தற்குக் காரணமான மயக்கத்தைத் தரும்.

345. பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகையாயிருக்க, மற்றுஞ் சில தொடர்ப்பாடு உளதாவது யாதினைக்கருதியோ?

346. யானென்றும் எனதென்றும் நினைக்கின்ற மயக்கத்தை அறுக்குமவன், தேவர்க்கு மேலாகிய உலகத்தின் கண்ணே செல்லும்.

347. பொருள்களைப் பற்றி விடாதவரைத் துன்பங்கள் விடாதே பற்றி நிற்கும்.

இது பொருள்களைத் துறவாக்கால் வினை கெடாதென்றது.

348. பற்றறத் துறந்தார் முத்தியைத் தலைப்பட்டார்: அல்லாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையிலே யகப்பட்டார்.

இது மறுமைப் பயன் கூறிற்று.

349. ஒருவன் யாதொரு பொருளோடும் பற்றற்ற பொழுதே அது பிறப்பையறுக்கும்: அதனை விடாதபோது நிலையாமை காணப்படும்.

இஃது எல்லாப் பற்றினையும் அறுக்கப் பிறப்பு அறுமென்றது.

350. பற்றறுத்தானது பற்றினைப் பற்றுக; அதனைப் பற்றுங்கால் பயன் கருதிப் பற்றாது

பற்று விடுதற்காகப் பற்றுக. பற்றற்றான் பற்றாவது தியான சமாதி. பின் மெய்யுணர்தல் கூறுதலான், இது பிற்படக் கூறப்பட்டது.

# 36. மெய் உணர்தல்

351 பொருள்-அல்லவற்றைப் பொருள்-என்று உணரும்;
மருளான்-ஆம், மாணாப் பிறப்பு.

352 இருள்-நீங்கி இன்பம் பயக்கும்; மருள்-நீங்கி
மாசு-அறு காட்சியவர்க்கு.

353 ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, வையத்தின்,
வானம் நணியது-உடைத்து.

354 ஐ-உணர்வு எய்தியக் கண்ணும் பயம்-இன்றே;
மெய்-உணர்வு இல்லாதவர்க்கு.

355 எப்-பொருள், எத்-தன்மைத்து ஆயினும்; அப்-பொருள்,
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

356 கற்று, ஈண்டு மெய்ப்பொருள் கண்டார்; தலைப்படுவர்,
மற்று ஈண்டு வாரா-நெறி.

357 ஓர்த்து, உள்ளம்-உள்ளது உணரின்; ஒரு-தலையாப்
பேர்த்து, உள்ள-வேண்டா பிறப்பு.

358 பிறப்பு-என்னும் பேதைமை நீங்க; சிறப்பு-என்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

359 சார்பு-உணர்ந்து, சார்பு கெட ஒழுகின்; மற்று-அழித்துச்
சார்தரா, சார்தரும் நோய்.

360 காமம், வெகுளி, மயக்கம்; இவை-மூன்றன்
நாமம் கெட, கெடும் நோய்.

351. பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கொள்கின்ற மயக்கத்தினாலே உண்டாம்; மாட்சிமையில்லாத பிறப்பு.

இது மெய்யுணருங்கால் மயக்கங் காண்பானாயின் பிறப்புண்டாமென்றது.

352. மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற அறிவுடையார்க்கு, அறியாமையாகிய விருள் நீங்க முத்தியாகிய இன்ப முண்டாம்.

இது மெய்யுணர்ந்தார்க்கு வினைவிட்டு முத்தியின்ப முண்டா மென்றது.

353. மெய்ப்பொருளை ஐயப்படுதலினின்று நீங்கித் துணிந்தவர்க்கு இவ்வுலகத்தினும் மேலுலகம் நணித்தாம் தன்மையுடத்து.

துணிந்த அறிவின்கண்ணது எல்லாவுலகுமாதலின் அவ்வறிவுடையார்க்கு உலகம் ஒருங்குதோற்றுதலின் நணித்தாமென்றவாறு. இது மெய்யுணர்வு எவ்விடமும் அறியுமென்றது.

354. மெய் முதலாகிய பொறிகளைந்தினானும் அறியப் படுவனவெல்லாம் அறிந்தவிடத்தும், அதனான் ஒருபயனுண்டாகாது; உண்மையை யறியும் அறிவிலாதார்க்கு.

355. யாதொரு பொருள் யாதொரு தன்மைத்தாயினும் அப்பொருளினுடைய வுண்மையைத் தான் உண்மையாகக் காண்பது யாதொன்று அஃது அறிவாம்.

மெய்யென்பதூஉம், அறிவென்பதூஉம் ஒன்று: என்னை? எக்காலத்தும் எவ்விடத்தும் ஒரு தன்மையாக அழியாது நிற்றலின் மெய்யாயிற்று: எல்லாப் பொருளையுங் காண்டலால் அறிவாயிற்று.

356. இவ்விடத்தே மெய்ப்பொருளை யறிந்துதெளிந்தாரே அடைவார்; மீண்டு இவ்விடத்து வாராத வழியினை.

கல்வி யறிவால் அறிவை அறியப் பிறப்பறு மென்றவாறு.

357. உள்ளமானது உள்ள பொருளை யாராய்ந்து ஒருதலையாக வுணருமாயின், பின்னைப் பிறப்புண்டென்று நினையா தொழிக.

மெய்யுணர்ந்தவர் பிறப்புண்டென்று நினையாதொழிக வென்றவாறு.

358. பிறப்பாகிய அறியாமையினின்று நீங்கப் பிறவாமை யாகிய செவ்விய பொருளைக் காண்பது அறிவாம்.

பிறவாமை சிறந்ததாதலின், சிறப்பு என்னப்பட்டது. தான் பிறந்தானாகவும் செத்தானாகவும் கருதுகின்ற அறியாமையை விட்டுத் தனக்குச் சாவில்லையாகவும் பிறப்பில்லையாகவும் தான் நிற்கின்ற நிலைமையைக் காணவேண்டுமென்றவாறாயிற்று.

359. தன்னைச் சார்வனவற்றையறிந்து அவையிற்றின் சார்வுகெட ஒழுகுவானாயின் அவ்வொழுக்கத்தினையழித்துச் சார்தலைச் செய்யா: சாரக்கடவனவாய துன்பங்கள்.

சார்பு - வினைச்சார்பு. கெட ஒழுகல் - காமம், வெகுளி, மயக்கமின்றி மெய்யுணர்ச்சியான் ஒழுகுதல். இஃது உண்மையைக் கண்டு அக்காட்சியைத்

தப்பாமல் முடிய நிற்பனாயின் சாரக்கடவதாய் நிற்கின்ற வினை சாராதே விட்டுப் போமென்றது.

360. ஆசையும் வெகுளியும் மயக்கமு மென்னும் இவை மூன்றினது நாமம்போக வினைபோம்.

வினைகெடுதற்கு வழி இதுவென்று கூறுதலான் இது மெய்யுணர்தலாயிற்று.

# 37. அவா அறுத்தல்

361 ‘அவா’ என்ப‘; எல்லா-உயிர்க்கும், எஞ்-ஞான்றும்
தவாஅப் பிறப்பு-ஈனும், வித்து’.

362 வேண்டுங்கால், வேண்டும் பிறவாமை; மற்று-அது
வேண்டாமை வேண்ட, வரும்.

363 வேண்டாமை அன்ன விழுச்-செல்வம், ஈண்டு-இல்லை;
யாண்டும் அஃது-ஒப்பது இல்.

364 தூ-உய்மை என்பது அவா-இன்மை; மற்று-அது
வா-அய்மை வேண்ட, வரும்.

365 அற்றவர் என்பார் அவா-அற்றார்; மற்றையார்
அற்று-ஆக அற்றது இலர்.

366 அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா.

367 அவாவினை, ஆற்ற அறுப்பின்; தவாவினை,
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

368 அவா-இல்லார்க்கு இல்லாகும் துன்பம்; அஃது-உண்டேல்,
தவாஅது மேன்மேல் வரும்.

369 இன்பம் இடையறாது, ஈண்டும்; அவா-என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

370 ஆரா இயற்கை, அவா-நீப்பின்; அந்-நிலையே
பேரா இயற்கை, தரும்.

361. எல்லாவுயிர்க்கும் எல்லா நாளுங் கேடில்லாத பிறப்பைக் கொடுக்கும் விதையாவது ஆசையென்று சொல்லுவர்.

இஃது ஆசை துன்பம் தருதலேயன்றிப் பிறப்பையும் தருமென்றது.

362. வேண்டுங்கால் பிறவாமையை விரும்புதல் வேண்டும்: அப்பிறவாமை பொருளை விரும்பாமையை விரும்பத் தானே வரும்.

இது பிறவாமையும் இதனாலே வருமென்றது.

363. அவாவின்மை போல மிக்க செல்வம் இவ்விடத்தில் இல்லை: அவ்விடத்தினும் அதனை யொப்பது பிறிதில்லை.

இஃது இதனின் மிக்கதொரு பொருளுமில்லை யென்றது.

364. ஒருவர்க்கு அழுக்கறுத்தலாவது ஆசையின்மை; அவ்வாசை யின்மை மெய் சொல்லுதலை விரும்ப வரும்

இது பொருள்மேலாசையில்லாதார் பொய் கூறாராதலின் மெய் சொல்ல அவாவின்மை வரும் என்று அவாவறுத்தற்குக் கருவி கூறிற்று.

365. பற்றற்றவரென்பார் ஆசையற்றவரே; ஆசையறாதவர் பற்றினையறுத்தாராயினும் ஆசையற்றாரைப் போலப் பற்றறுதலிலர்.

366. ஒருவனை வஞ்சனை செய்வது ஆசை: ஆதலால் அதனை அஞ்சுவதே அறம்.

வஞ்சனை செய்தல்- நன்றி செய்வாரைப் போல முன்னே நின்று, பின்னே தீக்கதியுள் உய்த்தல். இஃது ஆசையின்மை வேண்டுமென்றது.

367. ஆசையை மிகவும் போக்குவானாயின், கேடில்லாத வினைதான் வேண்டின நெறியாலே வரும்.

368. ஆசையில்லார்க்குத் துன்பம் இல்லையாகும். அஃது உண்டாயின் துன்பமானது கெடாது மேன்மேல் வரும்.

369. அவாவாகிய துன்பங்களுள் மிக்க துன்பம் கெடுமாயின் இன்பமானது இடையறாமல் வந்து மிகும்.

இஃது இன்பமும் இதனாலே வருமென்றது.

370. நிறையா இயல்பினையுடைய ஆசையை விடுவானாயின் அது விட்ட பொழுதே அழியாத இயல்பினைத் தரும்.

இயல்பாவது என்றும் ஒருபடிப்பட்டது. இது தன்னுடைய உருவத்தைப் பெறுமென்றது.

# 38. ஊழ்

371 ஆகு-ஊழால் தோன்றும், அசைவு-இன்மை; கைப்பொருள்
போகு-ஊழால் தோன்றும், மடி.

372 பேதைப் படுக்கும், இழவு-ஊழ்; அறிவு-அகற்றும்,
ஆகல்-ஊழ் உற்றக்-கடை.

373 நுண்ணிய நூல்-பல கற்பினும், மற்றும்-தன்
உண்மை அறிவே மிகும்.

374 இரு வேறு, உலகத்து இயற்கை; திரு வேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு.

375 நல்லவை எல்லா-அம் தீய-ஆம்; தீயவும்
நல்ல-ஆம்; செல்வம் செயற்கு.

376 பரியினும் ஆகாவாம், பால்-அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா, தம.

377 வகுத்தான், வகுத்த வகை-அல்லால்; கோடி-
தொகுத்தார்க்கும், துய்த்தல் அரிது.

378 துறப்பார்மன், துப்புரவு இல்லார்; உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

379 நன்று-ஆம், கால் நல்லவாக் காண்பவர்; அன்று-ஆம், கால்
அல்லற்படுவது எவன்?

380 ஊழின், பெருவலி யா-உள? மற்று-ஒன்று
சூழினும், தான் முந்துறும்.

371. ஒருவனுக்கு ஆக்கங் கொடுக்கின்ற ஊழ் தோன்றினால் முயற்சி தோன்றும்; அழிவு கொடுக்கின்ற ஊழ் தோன்றினால் மடிதோன்றும்.

இஃது ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் ஏதுவான முயற்சியும் முயலாமையும் ஊழால் வருமென்றது.

372. கெடுக்கும் ஊழ் தோன்றினால் அறியாமையை யுண்டாக்கும்; ஆக்கும் ஊழ் தோன்றினால் அறிவை விரிக்கும்.

இஃது அறிவும் அறியாமையும் ஊழால் வருமென்றது.

373. நுண்ணியவாக வாராய்ந்த நூல்கள் பலவற்றையுங் கற்றானாயினும், பின்னையும்

தனக்கு இயல்பாகிய அறிவே மிகுத்துத் தோன்றும். மேல் அறிவிற்குக் காரணம் ஊழ் என்றார் அஃதெற்றுக்கு? கல்வியன்றே காரணமென்றார்க்கு ஈண்டுக் கல்வியுண்டாயினும் ஊழானாய அறிவு வலியுடைத்தென்றார்.

374. செல்வமுடையாராதலும் தெள்ளியாராதலும் வேறு வேறு ஊழினால் வரும்: ஆதலால் இரண்டு வகையாதல் உலகத்தியல்பு.

375. செல்வம் உண்டாக்குவதற்குத் தனக்குமுன்பு தீதாயிருந்தனவெல்லாம் நன்றாம்: அச்செல்வத்தை யில்லை யாக்குவதற்கு முன்பு நன்றாய் இருந்தனவெல்லாம் தீதாம்.

376. தம்முடைய பகுதியல்லாதனவற்றை வருந்திக் காப்பினும் அவை தமக்கு ஆகா: தம்முடைய பகுதியாயினவற்றைக் கொண்டு சென்று சொரிந்து விடினும் அவை போகா.

இது முன்புள்ள செல்வம் காவற்படுதலும் களவு போதலும் ஊழினாலேயா மென்றது.

377. விதானம் பண்ணினவன் விதானம் பண்ணின வகையினானல்லது கோடி பொருளை யீட்டினவர்க்கும் அதனால் வரும் பயன்கோடல் அருமையுடைத்து.

இது பொருள் பெற்றாலும் நுகர்தற்கு ஊழ்வேண்டுமென்றது.

378. நுகரும்பொரு ளில்லாதார் துறக்க அமைவர்: தமக்கு வந்துறுந் துன்பப்பகுதியானவை உறாதுபோமாயின்.

இது துறவறமானது ஊழினால் வருமென்றது.

379. நன்மை வருங்காலத்து நன்றாகக் காண்பவர் தீமை வருங்காலத்து அல்லற்படுவது யாதினுக்கு?

இஃது அறிந்தவர் வருவனவெல்லாம் இயல்பென்று கொள்ளவேண்டு மென்றது.

380. ஊழினும் மிக்க வலியுடையன யாவையுள? பிறிதொன்றை யாராயுங் காலத்தும் தான் முற்பட அவ்வாராய்ச்சிக்கு உடன்பட்டுநிற்கும்.

# 39. இறைமாட்சி

381 படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்; ஆறும்-
உடையான், அரசருள் ஏறு.

382 அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்; இந்-நான்கும்
எஞ்சாமை, வேந்தற்கு இயல்பு.

383 தூங்காமை, கல்வி, துணிவுடைமை; இம்-மூன்றும்
நீங்கா, நிலன்-ஆள்பவற்கு.

384 அறன்-இழுக்காது, அல்லவை நீக்கி, மறன்-இழுக்கா
மானம் உடையது; அரசு.

385 இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த-
வகுத்தலும்; வல்லது அரசு.

386 காட்சிக்கு எளியன், கடுஞ்சொல்லன் அல்லனேல்;
மீக்கூறும், மன்னன் நிலம்.

387 இன்சொலால் ஈத்து, அளிக்க-வல்லாற்குத் தன்சொலால்
தான் கண்டனைத்து, இவ்-உலகு.

388 முறை-செய்து காப்பாற்றும் மன்னவன்; 'மக்கட்கு
இறை' என்று வைக்கப்படும்.

389 செவி-கைப்பச், சொல்-பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும், உலகு.

390 கொடை, அளி, செங்கோல், குடி-ஓம்பல்; நான்கும்
உடையான்-ஆம், வேந்தர்க்கு ஒளி.

381. படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமென்னும் ஆறுபொருளினையும் உடையவன் அரசருள் ஏறுபோல்வன்.

ஈண்டுக் குடியுள் நாடு அடங்கிற்று. இஃது அரசனுக்கு உண்டாக்குவன கூறிற்று.

382. அஞ்சாமையும் ஈகையும் அறிவுடைமையும் ஊக்கமுடைமையுமென்னும் இந்நான்கு குணமும் ஒழியாமை வேந்தனுக்கியல்பு.

383. மடியின்மையும் கல்வியுடைமையும் ஒரு பொருளை ஆராய்ந்து துணிதலுடைமையும் என்று சொல்லப்பட்ட இம்மூன்றும் பூமியை யாள்பவனுக்கு நீங்காமல் வேண்டும்.

384. அறத்திற் றப்பாமலொழுகி அறமல்லாத காம வெகுளியைக் கடிந்து மறத்திற் றப்பாத மானத்தையுடையவன் அரசன்.

385. பொருள் வரும்வழி யியற்றலும் அதனை அழியாம லீட்டலும் அதனைச் சோர்வுபடாமற் காத்தலும் காத்த அதனை வேண்டுவனவற்றிற்குப் பகுத்தலும் வல்லவன் அரசனாவான்.

பகுத்தல்- யானை குதிரை முதலிய படைக்குக் கொடுத்து அவையிற்றை யுண்டாக்குதல். இது பண்டாரங் கூறுமாறு கூறிற்று.

386. காண்கைக்கு எளியனாய்க் கடுஞ்சொற்கூறுதலும் அல்லனாயின் அம்மன்னனை உலகத்தார் உயர்த்துக் கூறுவர்.

இது மன்னன் உலகத்தார்மாட்டு ஒழுகுந் திறங் கூறிற்று.

387. இனிய சொல்லோடே கொடுத்துத் தலையளி செய்ய வல்ல அரசனுக்குத் தன்னேவலாலே இவ்வுலகம் தான் கண்டாற் போலும் தன் வசத்தே கிடக்கும்.

388. குற்றஞ் செய்தாரை அதற்குச் செய்யும் முறைமை தப்பாமற் செய்து, எல்லாவுயிரையுங் காத்தலைச் செய்கின்ற அரசன் மனிதர்க்கு நாயகனென்று எண்ணப்படுவான்.

389. தன் செவி வெறுக்கும்படியாகப் பிறர் செய்த குற்றங்களைக் கேட்டு வைத்தும், அதனைப் பொறுக்கவல்ல குணமுடைய வேந்தனது குடைக் கீழே உலகு தங்கும்.

சொற்பொறுக்கும் என்பதற்குப் புரோகிதர் தன்னிடத்துச் சொல்லுஞ் சொற்களைப் பொறுக்கவல்ல என்பாருமுளர்.

390. கொடுத்தலும், தலையளி செய்தலும், செங்கோன்மையும் குடிகளைப் பாதுகாத்தலு

மென்று சொல்லப்படுகின்ற இந்நான்கினையு முடையவன் வேந்தர்க்கெல்லாம் விளக்காம். கொடுத்தல்- தளர்ந்த குடிக்கு விதை ஏர் முதலியன கொடுத்தல்: அளித்தல்- அவரிடத்துக் கொள்ளுங் கடமையைத் தளர்ச்சி பார்த்து விட்டு

வைத்துப் பின்பு கோடல்: செங்கோன்மை- கொள்ளும் முறையைக் குறையக் கொள்ளாமை: குடியோம்பல்- தளர்ந்த குடிக்கு இறை கழித்தல். இது குடிக்கு அரசன் செய்யுந் திறங் கூறிற்று.

# 40. கல்வி

391 கற்க, கசடு-அற, கற்பவை; கற்ற-பின்,
நிற்க, அதற்குத் தக!

392 ‘எண்’ என்ப, ஏனை ‘எழுத்து’ என்ப; இவ்-இரண்டும்
‘கண்’ என்ப, வாழும் உயிர்க்கு.

393 கண்-உடையர், என்பவர் கற்றோர்; முகத்து-இரண்டு
புண்-உடையர், கல்லாதவர்.

394 உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல்
அனைத்தே; புலவர் தொழில்.

395 உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்;
கடையரே, கல்லாதவர்.

396 தொட்டனைத்து ஊறும், மணற்-கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும், அறிவு.

397 யாதானும் நாடு-ஆமால்; ஊர்-ஆமால்; என், ஒருவன்
சா(கு)ம்-துணையும் கல்லாதவாறு?

398 ஒருமைக்கண், தான் கற்ற-கல்வி; ஒருவற்கு
எழுமையும், ஏமாப்பு உடைத்து.

399 தாம்-இன்புறுவது, உலகு-இன்புறக்-கண்டு;
காமுறுவர், கற்று-அறிந்தார்.

400 கேடு-இல் விழுச்செல்வம், கல்வி-ஒருவற்கு;
மாடு-அல்ல, மற்றையவை.

391. கற்கப்படுவனவற்றைக் குற்றமறக் கற்க: கற்றபின்பு அக்கல்விக்குத் தக வொழுக.

இது கற்கவும் வேண்டும்: அதனை கடைப்பிடிக்கவும் வேண்டுமென்றது.

392. எண்ணென்று சொல்லப்படுவனவும் மற்றை எழுத்தென்று சொல்லப்படுவனவுமாகிய இவ்விரண்டு பொருளையும் உலகின்கண் வாழுமுயிர்களுக்குக் கண்ணென்று சொல்லுவர் அறிவோர்.

393. கற்றோர் கண்ணுடைய ரென்று சொல்லப்படுவர்: கல்லாதார் முகத்தின்கண்ணே

இரண்டு புண்ணுடைய ரென்று சொல்லப்படுவர். அறிவு கல்வியின் கண்ணதாகலான் அக்கல்வியில்லாதார் கண் புண்ணாயிற்று.

394. மக்களிருவர் உவக்குமாறு கூடி அவர் நினைக்குமாறு பிரிதல் போலும் : கற்றோர் செய்யுந்தொழில்.

இஃது இன்பம் நுகரினும் வினை செய்யினும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியாலாமென்றது.

395. பொருளுடையார் முன்பு பொருளில்லாதார் நிற்குமாறு போல, அதனைக் காதலித்து நிற்றலுமன்றிக் கற்றாரிடத்தாவர் கல்லாதார்.

இது கற்றார் எல்லாரினுந் தலையாவாரென்றது.

396. அகழ்ந்த அளவு மணற்கேணி நீருண்டாம்: அதுபோல மாந்தர்க்குக் கற்ற அளவும் அறிவுண்டாம்.

இஃது அறிவுண்டாமென்றது.

397. யாதோரிடத்தே செல்லினும் அதுவே தனது நாடும் ஊரும் போலாம். ஆதலால் ஒருவன் சாந்துணையுங் கல்லா தொழுகுதல் யாதினைக்கருதி?

இது கல்வி எல்லாரானுங் கைக்கொள்ளப்படு மென்றது

398. ஒருவனுக்கு ஒரு பிறப்பிலே கற்ற கல்வி தானே எழுபிறப்பினும் ஏமமாதலை யுடைத்து.

கற்ற கல்வி தானென்று கூட்டுக. இது வாசனை தொடர்ந்து நன்னெறிக்கண் உய்க்குமென்றது.

399. தாம் இனிதாக நுகர்வதொன்றை உலகத்தார் நுகர்ந்து இன்புறுவாராகக் கண்டால் அதற்கு இன்புறுவர் கற்றறிந்தவர்.

இஃது அழுக்காறு செய்யாது இன்புறுதல் அறமாதலின் அது கல்வியானே வருமென்றது.

400. ஒருவனுக்குக் கேடில்லாத சீரிய பொருளாவது கல்வி: மற்றவையெல்லாம் பொருளல்ல.

இது கல்வி அழியாத செல்வமென்றது.

# 41. கல்லாமை

401 அரங்கு-இன்றி வட்டு ஆடியற்றே; நிரம்பிய
நூல்-இன்றிக் கோட்டி கொளல்.

402 கல்லாதான் சொல், காமுறுதல்; முலை-இரண்டும்
இல்லாதாள் பெண், காமுற்றற்று.

403 கல்லாதவரும் நனி நல்லர்; கற்றார்-முன்
சொல்லாது இருக்கப்பெறின்.

404 கல்லாதான் ஒட்பம் கழிய நன்று-ஆயினும்;
கொள்ளார், அறிவு-உடையார்.

405 கல்லா ஒருவன் தகைமை; தலைப்பெய்து
சொல்லாட, சோர்வு-படும்.

406 உளர்-என்னும் மாத்திரையர் அல்லால்; பயவாக்
களர்-அனையர் கல்லாதவர்.

407 நுண்-மாண், நுழை-புலம் இல்லான், எழில்-நலம்;
மண்-மாண், புனை பாவை-அற்று.

408 நல்லார்கண், பட்ட வறுமையின்; இன்னாதே,
கல்லார்கண், பட்ட திரு.

409 மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்து-இலர் பாடு.

410 விலங்கொடு மக்கள் அனையர்; இலங்கு-நூல்
கற்றாரொடு ஏனையவர்.

401. கொம்மையின்றி வட்டாடினாற் போலும்; நிரம்பிய நூல்களைக் கற்றலின்றி வார்த்தை சொல்லுதல்.

அரங்கு- சூது: வட்டாடுதல்- உருண்டை யுருட்டல்: கோட்டி கொளல்- 'புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி' என்றாற்போல. இது கல்லாதார் வார்த்தை சொல்லின் அது தப்புமென்றது.

402. கல்வியில்லாதான் சொல்லுதற்கு ஆசைப்படுதல், இரண்டு முலையுமில்லாதாள் பெண்மைக்குக் காமுற்றாற்போலும்.

இது தன்னாசையல்லது சொன்னாலும் விரும்புவாரில்லை யென்றது.

403. கல்லாதவரும் ஓரிடத்து மிகவும் நல்லவராவர், கற்றவர் முன்பு உரையாடாதிருக்கக்கூடுமாயின்.

சொல்லாதொழிய அறிவாரில்லையாவர் என்றவாறாயிற்று. இது கல்லாதார்க்கு உபாயம் இது என்றது.

404. கல்லாதானது ஒண்மை மிகவும் நன்றாயிருப்பினும் அதனை ஒண்மையாகக் கொள்ளார் அறிவுடையார்.

ஒண்மை யெனினும் அறிவெனினும் அமையும். இது கல்லாதார் ஒள்ளியாராயினும் மதிக்கப்படாரென்றது.

405. கல்லாத ஒருவனது பெருமை கற்றவன் கிட்டி உரையாட மறையும்.

இது பெருமையுடையாராயினும் மதிக்கப்படாரென்றது.

406. உளரென்னும் அளவினையுடையாரல்லது, பயன்படாத களர் நிலத்தை யொப்பர் கல்லாதவர்.

இது, பிறர்க்குப் பயன்படாரென்றது.

407. நுண்ணிதாகிய மாட்சிமைப்பட்ட ஆராய்ச்சியையுடைய கல்வியில்லாதான் அழகு, மண்ணினாலே நன்றாகச் செய்த பாவையின் அழகினை யொக்கும்.

இஃது அழகியராயினும் மதிக்கப்படாரென்றது.

408. நல்லார்மாட்டு உண்டாகிய வறுமைபோலப் பிறர்க்கு இன்னாமையைச் செய்யும்; கல்லாதார்மாட்டு உண்டாகிய செல்வம்.

இது செல்வமுண்டாயின், பிறரைத் துன்பமுறுவிப்பரென்றது.

409. கல்வியில்லாதார் உயர்குலத்திற் பிறந்தாராயினும், இழிகுலத்துப் பிறந்தும் கற்றாரோடு ஒத்த பெருமையிலர்.

இது குலமுடையாராயினும் மதிக்கப்படாரென்றது.

410. விலங்குச் சாதியோடும் மக்களோடும் உள்ள வேறுபாடுடையர்; விளங்கின நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர்.

இது கல்லாதார் விலங்கென்றது.

# 42. கேள்வி

411 செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்-செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

412 செவிக்கு உணவு-இல்லாத போழ்து, சிறிது,
வயிற்றுக்கும் ஈயப்படும்.

413 செவி-உணவின், கேள்வி-உடையார்; அவி-உணவின்
ஆன்றாரொடு ஒப்பர், நிலத்து.

414 கற்றிலன் ஆயினும், கேட்க; அஃது-ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்று-ஆம் துணை.

415 இழுக்கல் உடை-உழி ஊற்றுக்கோல் அற்றே;
ஒழுக்கம்-உடையார் வாய்ச்-சொல்.

416 எனைத்தானும் நல்லவை கேட்க! அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

417 பிழைத்து-உணர்ந்தும், பேதைமை சொல்லார்; இழைத்து-
உணர்ந்து,
ஈண்டிய கேள்வியவர்.

418 கேட்பினும், கேளாத் தகையவே; கேள்வியால்,
தோட்கப்-படாத-செவி.

419 நுணங்கிய கேள்வியர்-அல்லார்; வணங்கிய
வாயினர், ஆதல் அரிது.

420 செவியின் சுவை-உணரா, வாய்-உணர்வின் மாக்கள்;
அவியினும் வாழினும் என்.

411. ஒருவற்குச் சிறப்புடைய செல்வமானது செவியான் வருஞ் செல்வம்: அச்செல்வம் பிறசெல்வங்க ளெல்லாவற்றினும் தலையாகலான்.

412. செவிக்கு உணவாகிய கேள்வி யில்லாதபோது வயிற்றுக்கும் சிறிது உணவு கொடுக்கத் தகும்.

பெருக உண்ணின் கேள்வியை விரும்பாது காமநுகர்ச்சியை விரும்புமாதலான், சிறிது என்றார். இஃது எல்லாக்காலமும் கேட்க வேண்டு மென்றது.

413. செவிக்கு உணவு போன்ற கேள்வியை யுடையவர் நிலத்தின் கண்ணே யிருப்பினும் அவியை யுணவாக வுடைய தேவரோடு ஒப்பர்.

414. கற்கமாட்டானாயினுங் கேட்க: அக்கேள்வி ஒருவன் தளர்ச்சிக்குத் தாங்கலாவதொரு துணையாம்.

இது கேள்வி வேண்டுமென்றது.

415. வழுக்குத லுண்டான விடத்து உதவும் ஊன்றுகோல் போலும்: ஒழுக்கமுடையார் கூறுஞ் சொற்கள்.

இது கேட்பது ஒழுக்கமுடையார்மாட்டென்பது கூறிற்று.

416. எவ்வளவிற்றாயினும் நல்ல நூல்களைக் கேட்க; அக்கேள்வி அவ்வளவிற்றே யாயினும் நிரம்பின பெருமையைத் தரும்.

இஃது எல்லாக்காலமுங் கேட்டிலனாயினும், கேட்குங்கால் நல்ல கேட்க வேண்டுமென்றது.

417. (இ-ள்) ஒரு பொருளைத் தப்ப உணர்ந்தாலும், அறிவின்மை யாயின சொல்லார், ஆராய்ந்துணர்ந்து நிரம்பிய கேள்வியை யுடையார்.

இது கேட்டறிந்தார் அறியாமை சொல்லா ரென்றது.

418. ஓசை மாத்திரம் கேட்டனவாயினும் அதுவுங் கேளாத செவி போலும்; நல்லோர் கூறுஞ் சொற்களால் துளைக்கப்படாத செவி.

இது கேள்வியில்லாதார் செவிட ரென்றது.

419. நுண்ணியதாகிய கேள்வியை யுடையாரல்லாதார், தாழ்ந்த சொற்கூறும் நாவுடையாராதல் இல்லை.

இது கேள்வியுடையார் தம்மை வியந்து சொல்லா ரென்றது.

420. செவியால் நுகரும் இன்பத்தை யறியாத, வாயால் நுகரும் இன்பத்தையறியும் மாக்கள் செத்தால் வருந் தீமை யாது? வாழ்ந்தால் வரும் நன்மை யாது? உலகத்தார்க்கு.

இது கேள்வியில்லாதார் பிறர்க்குப் பயன் படாரென்றது.

# 43. அறிவுடைமை

421 அறிவு, அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்,
உள்-அழிக்கல் ஆகா அரண்.

422 சென்ற இடத்தால் செலவிடா, தீது-ஒரீஇ;
நன்றின்-பால் உய்ப்பது-அறிவு.

423 எப்பொருள், யார்-யார்-வாய்க் கேட்பினும்; அப்பொருள்
மெய்ப்பொருள், காண்பது; அறிவு.

424 எண்-பொருளவாகச் செலச்சொல்லி, தான்-பிறர்வாய்
நுண்-பொருள் காண்பது; அறிவு.

425 உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்,
கூம்பலும் இல்லது; அறிவு.

426 எவ்வது, உறைவது உலகம்; உலகத்தொடு
அவ்வது, உறைவது; அறிவு.

427 அறிவு-உடையார் ஆவது-அறிவார்; அறிவு-இலார்
அஃது-அறி கல்லாதவர்.

428 அஞ்சுவது, அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல், அறிவார் தொழில்.

429 எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை;
அதிர வருவதோர் நோய்.

430 அறிவு-உடையார் எல்லாம் உடையார்; அறிவு-இலார்
என்-உடையரேனும் இலர்.

421. ஒருவனுக்குக் குற்றமறைக்குங் கருவியாவது அறிவு: பகைவராலும் உட்புகுந்து அழிக்கலாகா அரணும் அதுதானே.

இது தனக்குள்ள குற்றத்தை மறைக்கு மென்றும் பிறரால் வருந்தீமையைக் காக்குமென்றும் அறிவினாலாம் பயன் கூறிற்று.

422. உள்ளஞ் சென்ற விடத்தே உடம்பையுஞ் செல்லவிடாது, தீமையை நீக்கி நன்மைப் பகுதியிலே செலுத்துவது அறிவாவது.

இது காம நுகர்ச்சியின்கண் பழியும் பாவமும் பொருட்கேடும் வாராமற் செலுத்துவது அறிவென்றது.

423. யாதொரு பொருளை யாவர் சிலர் சொல்லக் கேட்பினும் அப்பொருளினது உண்மையை யாராய்வது அறிவாவது.

இது யாவர் சிலர் நட்டோராயினும் பகைவராயினும் அவர் கூறக் கேட்டவற்றில் தெள்ளியராய் ஆராய்ந்து துணித லறிவென்றது.

424. அறிதற்கரிய பொருளவாகிய சொற்களைத் தெளியப் பொருளாம்படி பிறரிசையச் சொல்லிப் பிறர் சொல்லுஞ் சொற்களின் நுண்ணியவாகிய பொருள்களை அவர் சொல்லாமல் தானே காண்பது அறிவாவது.

இது சொற்பொருள் காண்ட லறிவென்றது.

425. ஒருவனுக்கு ஒள்ளிமையாவது உலகத்தோடு பொருந்தினது: அதனை நீர்ப்பூப்போல மலர்தலுங் குவிதலுமின்றி யொருதன்மையாகச் செலுத்துதல் அறிவு.

இஃது உயர்ந்தாரோடு நட்புப் பண்ணுதலும் அறிவென்றது.

426. யாதொருவாற்றா லொழுகுவது உலகம். அதனோடு கூடத்தானும் அவ்வாற்றா னொழுகுதல் அறிவாவது.

அறிவாவாது எத்தன்மைத்து என்றார்க்கு முற்பட உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதல் அறிவு என்றார்.

427. பிற்பயக்குமது அறிவார் அறிவுடையாராவார், அதனை யறியாதவர் அறிவில்லாதவராவர்.

இது மேற் சொல்லுவன எல்லாம் தொகுத்துக் கூறிற்று.

428. அஞ்சத் தகுவதனை அஞ்சாதொழிதல் ஒருவர்க்கு அறிவின்மையாதல்; அஞ்சத்தகுவதனை அஞ்சுதல் அறிவுடையார் தொழில்.

மேல் அஞ்சாமை வேண்டு மென்றாராயினும் ஈண்டு அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்சுதல் அறிவென்றார்.

429. துன்பம் வருவதற்கு முன்பே வருமென்று நினைத்துக் காக்கும் அறிவையுடையார்க்கு நடுங்க வருவதொரு துன்பம் இல்லை.

இது முன்னை வினையால் வருந் துன்பமும் முற்பட்டுக் காக்கின் கடிதாக வாராதென்றது.

430. அறிவினை யுடையார் யாதொன்றும் இல்லாராயினும் எல்லாமுடையர்: அறிவிலார் எல்லாப் பொருளும் உடையாராயினும் ஒரு பொருளும் இலர்.

இஃது அறிவுடைமை வேண்டுமென்றது.

# 44. குற்றம் கடிதல்

431 செருக்கும், சினமும், சிறுமையும் இல்லார்;
பெருக்கம், பெருமித நீர்த்து.

432 இவறலும், மாண்பு-இறந்த மானமும், மாணா-
உவகையும் ஏதம்; இறைக்கு.

433 தினைத்-துணையாம் குற்றம் வரினும்; பனைத்-துணையாக்
கொள்வர், பழி நாணுவார்.

434 குற்றமே காக்க, பொருளாக குற்றமே;
அற்றம் தரூஉம் பகை.

435 வரும்-முன்னர்க் காவாதான், வாழ்க்கை; எரி-முன்னர்
வைத்தூறு போல, கெடும்.

436 தன்-குற்றம் நீக்கி, பிறர்-குற்றம் காண்கிற்பின்;
என்-குற்றம்-ஆகும் இறைக்கு?

437 செயற்பால செய்யாது, இவறியான் செல்வம்;
உயற்பாலது அன்றிக் கெடும்.

438 பற்று-உள்ளம், என்னும் இவறன்மை; எற்றுள்ளும்
எண்ணப்படுவது, ஒன்று அன்று.

439 வியவற்க, எஞ்ஞான்றும் தன்னை! நயவற்க,
நன்றி பயவா வினை!

440 காதல, காதல்-அறியாமை உய்க்கிற்பின்;
ஏதில, ஏதிலார் நூல்.

431. பிறர்மனை நயத்தலும், வெகுளியும், சிறியார் செய்வன செய்தொழுகுதலும் இல்லா

தார்க்கு ஆக்கம் தலையெடுக்கும் நீர்மையுடைத்து. பிறர்மனை விரும்புதல் செருக்கினால் வருதலின் செருக்கு என்றார்.

432. உலோபமும் நன்மையைக் கடந்த மானமும் நன்மையைத் தாரா மகிழ்ச்சியுமாகிய இம்மூன்றும் அரசர்க்குக் குற்றமாம்.

இது பொதுப்படக் கூறாது இறைக்கு என்றமையால் பெரும்பான்மையும் அரசர்க்கே வேண்டுமென்பது கூறிற்று.

433. தினையளவு குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவிற்றென்று இகழாது பனையளவாகக் கொள்வர். பழிக்கு நாணுவார்.

434. தமக்குப் பொருளாகக் குற்றம் வாராமற்காக்க: அக்குற்றந்தானே இறுதியைத் தரும் பகையும் ஆதலான்.

இது குற்றங் கடிய வேண்டு மென்றது.

435. துன்பம் வருவதன்முன், அதற்குத் தக்கது அறிந்து காவல் செய்யானது செல்வம் எரிமுன்னர்க்கிடந்த வைத்திரள் போலக் கெடும்.

இது முந்துற்றுக் காவல் செய்வன செய்யாமையும் குற்ற மென்றது.

436. தனக்குள்ள குற்றத்தை நீக்கிப் பிறர்மாட்டுள்ள குற்றத்தை ஆராயவல்லனாயின் அரசனுக்கு என்ன குற்ற முளதாம்.

இது தன்மாட்டுள்ள குற்றத்தை நீக்குதலே யன்றிப் பிறர் மாட்டுள்ள குற்றத்தையும் கடிய வேண்டுமென்றது.

437. பொருளால் தனக்குச் செய்துகொள்ளப்படு மவற்றைச் செய்து கொள்ளாது. அதன்கண் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம் பின் உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும்.

438. கூடின பொருளை விடாமையாகிய உலோபம் யாதொன்றினுள்ளும் எண்ணப்படுவ தொன்றன்று.

இஃது உலோபம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் ஒரு பொருளாக மதிக்கப்படா தென்றது.

439. எல்லா நாளுந் தன்னைப் பெரியனாக நினைத்து வியவாதொழிக; வியந்தா னாயினும் அவ்வியப்பினானே நன்மை பயவாத வினையைச் செய்யாதொழிக.

செய்யிற் கெடு மென்றவாறாயிற்று

440. காதலிக்கப்பட்ட யாவற்றின்மேலுஞ் செல்லுங் காதலைப் பிறரறியாமற் செலுத்துவனாயின் பகைவர் இவனைக் கொல்லுமாறு சிந்திக்கும் சிந்தனை இவன் மாட்டுச் செல்லாது, அயலாம்.

நூலென்பது அவர்கற்ற கல்வி.

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

441 அறன்-அறிந்து, மூத்த அறிவு-உடையார், கேண்மை;
திறன்-அறிந்து, தேர்ந்து, கொளல்.

442 உற்ற-நோய் நீக்கி, உறாஅமை முன்-காக்கும்;
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

443 அரியவற்றுள் எல்லாம் அரிதே; பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

444 தம்மின் பெரியார், தமரா ஒழுகுதல்;
வன்மையுள் எல்லாம், தலை.

445 சூழ்வார் கண்-ஆக ஒழுகலான்; மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

446 தக்கார் இனத்தனாய், தான்-ஒழுக வல்லானை;
செற்றார், செயக்கிடந்தது இல்.

447 இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே,
கெடுக்கும் தகைமையவர்?

448 இடிப்பாரை இல்லாத, ஏமரா மன்னன்;
கெடுப்பார் இலானும், கெடும்.

449 முதல்-இலார்க்கு ஊதியம் இல்லை; மதலை-ஆம்
சார்பு-இலார்க்கு இல்லை, நிலை.

450 பல்லார் பகை-கொளலின், பத்து-அடுத்த தீமைத்தே;
நல்லார் தொடர், கைவிடல்.

441. அறத்தின் பகுதியறிந்து முதிர்ந்த அறிவுடையாரது கேண்மையை அவரவர் செய்தியாகிய திறங்களை யறிந்து ஆராய்ந்து கொள்க.

இது புரோகிதரைக் கூட்டுமாறு கூறிற்று.

442. அரசர் தமக்குற்ற நோயை விடுவித்துப் பின்பு துன்பமுறாமல் முன்னே காக்கவல்ல தன்மையுடையாரை விரும்பிக் கொள்க.

பெற்றியாரென்று பொதுப்படக்கூறினமையால், இது மந்திரிகளைக் கூட்டுமாறு கூறிற்று.

443. செய்தற்கரியன வெல்லாவற்றினும் அரிதே; தம்மின் முதிர்ந்த அறிவுடையாரை விரும்பித் தமக்குச் சுற்றமாகக் கொள்ளுதல்.

பெரியாரைக் கொளலென்பது மந்திரி புரோகிதரைக் கூட்டிக் கொள்கை.

444. தம்மின் மிக்க அறிவுடையார் தமக்குத் தமராக ஒழுகுதல், வலியானவை யெல்லாவற்றினும் தலையான வலி.

445. அரசன் தன்னைச் சூழ்ச்சியாற் கொல்ல நினைப்பாரைத் தானுஞ் சூழ்ச்சியாற் கொல்லவல்லவனாதல்; காரியமெண்ண வல்லார் தனக்குக் கண்ணாக வொழுகலான்.

446. தகுதியுடையா ரினத்தானாய்த் தானும் அவரோ டொக்க ஒழுகவல்லவனைப் பகைவர் செய்யக் கிடந்ததொருநெறி யில்லை.

இஃது இவனைப் பகைவரால் வெல்ல லொண்ணா தென்றது.

447. குற்றங் கண்டால் கழறுந் தன்மை யுடையாரைத் தமக்குத் தமராகக் கொள்ள வல்லாரைக் கெடுக்குந் தகைமையுடையார் உலகத்து யாவர்.

இது கேடில்லை யென்றது.

448. கழறுவாரை யில்லாத காவலில்லாத அரசன் தன்னைப் பகைவராய் வந்து கெடுப்பார் இல்லையாயினும் தான் வேண்டியவாறொழுகிக் கெடும்.

இஃது உயிர்க்குக் கேடு வருமென்றது.

449. முதலில்லாதார்க்கு இலாபமில்லையானாற் போலத் தாங்குதலாகிய சார்பு இல்லாதர்க்கு அரசு நிலைநிற்றல் இல்லை.

450. பலரோடு பகைகொண்டால் எவ்வளவு துன்பமுறும்; அதனினும் பத்துமடங்கு துன்பமுறும்; பெரியாரைத் துணையாகக் கொள்ளாதொழியின்.

# 46. சிற்றினம் சேராமை

451 சிற்றினம் அஞ்சும், பெருமை; சிறுமை-தான்
சுற்றமாச் சூழ்ந்துவிடும்.

452 நிலத்து-இயல்பான் நீர் திரிந்து, அற்று-ஆகும்; மாந்தர்க்கு
‘இனத்து’ இயல்பது ஆகும்; அறிவு.

453 மனத்தான்-ஆம், மாந்தர்க்கு-உணர்ச்சி; இனத்தான்-ஆம்,
‘இன்னான்’ எனப்படும் சொல்.

454 மனத்து-உளது-போலக் காட்டி; ஒருவற்கு
இனத்து-உளது-ஆகும்; அறிவு.

455 மனம்-தூய்மை, செய்-வினை தூய்மை; இரண்டும்
இனம்-தூய்மை, தூவா வரும்.

456 மனம்-தூயார்க்கு எச்சம் நன்று-ஆகும்; இனம்-தூயார்க்கு
இல்லை, நன்று-ஆகா வினை.

457 மன-நலம், மன்-உயிர்க்கு ஆக்கம்; இன-நலம்,
எல்லாப் புகழும் தரும்.

458 மன-நலம், நன்கு-உடையர் ஆயினும்; சான்றோர்க்கு
இன-நலம், ஏமாப்பு உடைத்து.

459 மன-நலத்தின் ஆகும், மறுமை; மற்று-அஃதும்
இன-நலத்தின், ஏமாப்பு உடைத்து.

460 நல்-இனத்தின் ஊங்கும் துணை-இல்லை; தீ-இனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

451. சிற்றினத்தை யஞ்சுவர் பெரியர்; சிறியவர் அதனைச் சுற்றமாகக் கொண்டு விடுவர்.

இது பெருமை வேண்டுவார் சிற்றினஞ் சேராரென்றது.

452. நிலத்தின் தன்மையால் நீர் தன் தன்மை வேறுபட்டு அந்நிலத்தின் தன்மைத்தாவது போல, மக்கட்கு அறிவு இனத்தின் தன்மையதாய் வேறுபடும்.

453. மாந்தர்க்கு அறிவு மனத்தினானே யுண்டாம், ஆயினும் தான் சேர்ந்த இனத்தினால் இனியனல்லன் என்று பிறரால் பழிக்கப்படுஞ் சொல் உண்டாம்.

இது பிறரால் பழிக்கப்படுமென்றது.

454. ஒருவனுக்கு உண்டாகும் அறிவு முற்பட மனத்துள்ளது போலத் தோற்றிப் பின் தான் சேர்ந்த இனத்தினுண்டான அறிவாகும்.

455. மனம் நன்றாதலும் செய்வினை நன்றாதலுமாகிய இரண்டும். இனம் நன்றாதலைப் பற்றி வரும்.

இனிச் சேராமையான் வரும் நன்மை கூறுவார் இவையிரண்டும் நன்றாம் என்று கூறினார்.

456. மனநல்லார்க்குப் பின்பு நிற்கும் காணம் முதலான பொருள்கள் நல்லவாம்: இன நல்லார்க்கு நன்றாகாத தொரு வினையும் இல்லை.

இது மேலதற்குப் பயன் கூறிற்று.

457. மனநன்மை நிலைபெற்ற உயிர்க்கு ஆக்கமாவதுபோல, இன நன்மை எல்லாவற்றானும் வரும் புகழினைத் தரும்.

இஃது எல்லாப் புகழுந் தருமென்றது.

458. மன நன்மை மிக வுடையராயினும் இன நன்மை யுடைமை சான்றோர்க்குக் காவலாதலையுடைத்து.

இஃது இனநலம் அல்லாராயின் பிறரா லிகழப்படுவராதலான் இனநலம் இகழ்ச்சி வாராமற் காக்குமென்றது.

459. மன நலத்தினாலே மறுமைப் பயன் நன்றாகும். அம்மனத்தின் நன்மையும் இனநன்மையாலே தீத்தொழிலிற் செல்லாமற் காவலாதலையுடைத்து.

இது மறுமைக்குத் துணையாமென்றது.

460. நல்லினத்தின் மிக்க துணையாயிருப்பதூஉம் இல்லை, தீயினத்தின் மிக்க அல்லற்படுப்பதூஉம் இல்லை.

இது சேராமைக்குக் காரணங் கூறிற்று.

# 47. தெரிந்து செயல் வகை

461 அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி, வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து; செயல்!

462 தெரிந்த இனத்தொடு, தேர்ந்து எண்ணிச்-செய்வார்க்கு;
அரும்பொருள், யாது-ஒன்றும் இல்.

463 ஆக்கம் கருதி, முதல்-இழக்கும் செய்வினை
ஊக்கார், அறிவு-உடையார்.

464 தெளிவு-இலதனைத் தொடங்கார்; இளிவு-என்னும்
ஏதப்பாடு அஞ்சுபவர்.

465 வகை-அறச் சூழாது, எழுதல்; பகைவரைப்
பாத்திப்-படுப்பது ஓர்-ஆறு.

466 செய்தக்க-அல்ல, செயக் கெடும்; செய்தக்க,
செய்யாமையானும் கெடும்.

467 எண்ணித் துணிக, கருமம்; துணிந்த-பின்,
எண்ணுவம் என்பது இழுக்கு.

468 ஆற்றின், வருந்தா வருத்தம்; பலர்-நின்று
போற்றினும், பொத்துப்படும்.

469 நன்று ஆற்றல்-உள்ளும், தவறு-உண்டு; அவரவர்
பண்பு-அறிந்து, ஆற்றாக்கடை.

470 எள்ளாத, எண்ணிச் செயல்-வேண்டும்; தம்மொடு
கொள்ளாத, கொள்ளாது உலகு.

461. வினை செய்து முடித்தற்கு அழியும் பொருளும் அது செய்து முடித்தாலுளதாகும் பொருளுமாய்நின்று அப்பொருளினாற் பின்புண்டாய் வரும் பயனும் எண்ணிப் பின்பு வினைசெய்ய வேண்டும்.

462. அமாத்தியர் பலருள் ஆராய்ந்து கூட்டிக்கொள்ளப்பட்ட மந்திரிகளாகிய இனத்தோடே கூடச் செய்யும் வினையை ஆராய்ந்து அதனைச் செய்யுமாறு எண்ணிச் செய்யவல்ல அரசர்க்குப் பெறுதற்கு அரிதா யிருப்பதொரு பொருள் யாதொன்று மில்லை.

463. தமக்கு ஆக்கம் உண்டாகவேண்டி முன்புண்டான முதலும் இழக்க வரும் வினையைச் செய்ய நினையார் அறிவுடையார்.

இது பிற்பயவாத வினை செய்யலாகாதென்றது.

464. ஆராய்ந்தறிதலில்லாத வினையைச் செய்யத் தொடங்கார், இகழ்ச்சியாகிய குற்றப்பாட்டிற்கு அஞ்சுபவர்.

465. மேற்சொன்னவகைகளில் போக்கறச் சூழாதே போர்கருதி யெழுதல் பகைஞராகிய விதையை நிலத்தின்கண்ணே இடுவதொரு நெறி.

இது பகைவர்க்கு ஆக்க முண்டாமென்றது.

466. செய்யத்தகாதனவற்றைச் செய்தலாலும் கெடும்; செய்யத் தகுவனவற்றைச் செய்யாமையாலும் கெடும்.

இது மேற்கூறாதனவெல்லாம் தொகுத்துக் கூறிற்று.

467. ஒருவினை செய்யத் துணிவதன் முன்னே அதனால் வரும் பயனை எண்ணிப் பின்பு செய்யத் துணிக: துணிந்தபின் எண்ணுவோமென்றல் தப்பாமாதலான்.

468. மேற்கூறிய நெறியினாலே முயலாத பொருள், பலர் நின்று காப்பினும் புரைபடும்.

இஃது எண்ணிச் செய்யாதது தப்பு மென்றது.

469. நன்மையைச் செய்யுமிடத்தினும் குற்றமுண்டாம்; அவரவர் குணமறிந்து செய்யாத விடத்து.

இதுவுமோரெண்ணம்.

470. முடியுமாயினும் பிறராலிகழப்படாதவற்றை எண்ணிச் செய்தல் வேண்டும்; தமக்குத் தகாத செய்தியை யுலகத்தார் கொள்ளாராதலான்.

இது பிறராலிகழப்படாதன செய்யவேண்டு மென்றது.

# 48. வலி அறிதல்

471 வினை-வலியும், தன்-வலியும், மாற்றான்-வலியும்,
துணை-வலியும்; தூக்கிச் செயல்.

472 ஒல்வது அறிவது அறிந்து, அதன்கண் தங்கிச்
செல்வார்க்கு; செல்லாதது இல்.

473 உடைத்-தம் வலி-அறியார்; ஊக்கத்தின் ஊக்கி,
இடைக்கண் முரிந்தார் பலர்.

474 அமைந்து ஆங்கு-ஒழுகான், அளவு-அறியான், தன்னை-
வியந்தான்; விரைந்து கெடும்.

475 பீலி-பெய் சாகாடும், அச்சு-இறும்; அப்பண்டம்,
சால மிகுத்துப் பெயின்.

476 நுனிக்-கொம்பர் ஏறினார், அஃது-இறந்து ஊக்கின்;
உயிர்க்கு இறுதி-ஆகி-விடும்.

477 ஆற்றின், அளவு-அறிந்து ஈக; அது, பொருள்
போற்றி வழங்கும் நெறி.

478 ஆகு-ஆறு, அளவு-இட்டிது ஆயினும்; கேடு-இல்லை
போகு-ஆறு, அகலாக்கடை.

479 அளவு-அறிந்து வாழாதான், வாழ்க்கை; உளபோல
இல்லாகித், தோன்றாக் கெடும்.

480 உள-வரை தூக்காத ஒப்புரவு-ஆண்மை;
வள-வரை வல்லைக் கெடும்.

471. செய்யும் வினையினது வலியும் தனக்கு உண்டான வலியும் பகைவனது வலியும் தனக்கும் பகைவர்க்கும் துணையாயினார் வலியும் எண்ணிப் பின்பு வினைசெய்க.

இது வலியறியும் இடம் கூறிற்று.

472. தமக்கியலும் வினைக்கு அறிய வேண்டுவதாய திறம் இதுவென அறிந்து அதன் பின்பு அவ்வளவிலே நின்று ஒழுகுவராயின் அவர்க்கு இயலாதது இல்லை.

இது வலியறிந்தாலும் அமைந்தொழுக வேண்டுமென்றது.

473. தம்முடைய வலியறியாது மனமிகுதியாலே வினை செய்யத் தொடங்கி அது முடிவதன்முன்னே கெட்டார் பலர்.

இது வலியறியாதார் கெடுவரென்றது.

474. அமைவுடையனாயொழுகுதலும் இன்றித் தன்வலி யளவும் அறியாதே தன்னை மதித்தவன் விரைந்து கெடுவன்.

இது மேற்கூறியவாறு செய்தார் கெடுவரென்றது.

475. பீலி யேற்றிய சகடமும் அச்சுமுறியும்; அப்பீலியை மிகவும் அளவின்றியேற்றின்.

இஃது அரண் மிகுதல் நன்றென்றிருப்பார்க்குப் பகைமிகின் அரண் நில்லாதென்று கூறிற்று.

476. ஒரு மரத்தின் நுனிக்கொம்பேறினவர் தம்மள வறிந்து வைத்துப் பின்னும் மேலேறுவாராயின் அஃது அவர்தம்முயிர்க்கு இறுதியாகிவிடும்.

இஃது அரசன் தன்னாற் செல்லலாமெல்லையளவு சென்றால் பின்பு மீள வேண்டுமென்றது. இதுவும் ஒரு வலியறிதல்.

477. பொருளை அளவறிந்து கொடுக்கும் வழியாலே கொடுக்க; பொருளையுண்டாக்கி வழங்கும் நெறி அதுவாதலால்.

இது பொருளினது வலியறிந்து அதற்குத்தக்க செலவுசெய்ய வேண்டுமென்று கூறிற்று.

478. பொருள் வரும்வழியளவு சிறிதாயினும் கேடில்லையாம்; அது போம்வழி போகாதாயின்.

இது முதலுக்குத் தக்க செலவு செய்ய வேண்டுமென்றது.

479. தன்வருவாய் அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோலத் தோன்றி அதன்பின் இல்லையாகித் தோன்றாது கெடும்.

பின்பு ஆக்கம் தோன்றாதென்றவாறு. இது மேற்கூறியவாறு செய்யாதார் கெடுவரென்றது.

480. தனக்கு உள்ளவளவை நினையாதே ஒப்புரவு செய்வானது செல்வத்தினளவு விரைவிற் கெடும்.

மேல் முதலுக்குச் செலவு குறைய வேண்டுமென்றார். அவ்வாறு செய்யின் ஒப்புரவு செய்யுமாறு என்னை யென்றார்க்கு இது கூறினார்.

# 49. காலம் அறிதல்

481 பகல்-வெல்லும், கூகையைக் காக்கை; இகல்-வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும், பொழுது.

482 பருவத்தொடு ஒட்ட ஒழுகல்; திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

483 அருவினை என்ப, உளவோ? கருவியான்,
காலம்-அறிந்து செயின்.

484 ஞாலம் கருதினும், கைகூடும்; காலம்-
கருதி, இடத்தான் செயின்.

485 காலம் கருதி இருப்பர்; கலங்காது,
ஞாலம் கருதுபவர்.

486 ஊக்கம் உடையான் ஒடுக்கம்; பொருதகர்
தாக்கற்குப், பேரும் தகைத்து.

487 பொள்ளென ஆங்கே புறம்-வேரார்; காலம்-பார்த்து,
உள்-வேர்ப்பர், ஒள்ளியவர்.

488 செறுநரைக் காணின், சுமக்க; இறுவரை
காணின், கிழக்காம் தலை.

489 எய்தற்கு அரியது இயைந்தக்கால்; அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

490 கொக்கு-ஒக்க, கூம்பும் பருவத்து; மற்று-அதன்
குத்து-ஒக்க, சீர்த்த இடத்து.

481. இராப்பொழுது வெல்லுங் கூகையைக் காக்கை பகற்பொழுது வெல்லும். ஆதலான் மாறுபாட்டை வெல்லும் அரசர்க்குக் காலம் வேண்டும்

இது காலமறிதல் வேண்டும் என்றது.

482. காலத்தோடு பொருந்த ஒழுகுதல் செல்வத்தை நீங்காமல் கட்டுவதொரு கயிறாம்.

இனிக் காலமறிந்ததனால் வரும் பயன் கூறுவார் முற்படச் செல்வம் கெடாதென்றார்.

483. அரிய வினையென்று சொல்லப்படுவன உளவோ? முடிக்கலாங் கருவியோடே கூடக் காலத்தை யறிந்து செய்ய வல்லாராயின்.

484. உலகமெல்லாம் பெறுதற்கு நினைத்தானாயினும் பெறலாம்: காலத்தைக் குறித்து இடனறிந்து செய்வனாயின்.

இஃது எல்லாப் பொருளையு மெய்துமென்றது.

485. செய்யுங்காலம் வருமளவு நினைத்து அசைவின்றி யிருப்பார்: ஞாலத்தைக் கொள்ளக் கருதுபவர்.

486. மன மிகுதி யுடையவன் காலவரவு பார்த்து ஒடுங்குதல், போரைக் கருதின தகர் வலிபெறத் தாக்குதற் பொருட்டுப் பெயர்ந்தாற் போலும்.

இது காலம் வருமளவுங் குறைத்தால் வலி மிகுமென்றது.

487. கதுமென அவ்விடத்தே யுடம்பு வேரார்: தமக்குச் செய்யலாங் காலம் பார்த்து மனமொப்பர் ஒள்ளியர்.

ஒப்புப் பொறாமையால் வருவதொன்று. இது பகைவர் பொறாதவற்றைச் செய்தாலும் காலம் பார்க்கவேண்டுமென்றது.

488. பகைவரைக் கண்டானாயின் தலையினாற் சுமக்க; இறுமளவாகின் தலை கீழாய் விடலாம்.

489. பெறுதற்கு அரிய காலம் வந்தால் அப்பொழுதே தன்னாற் செய்தற்கு அரியவாகிய வினைகளைச் செய்து முடிக்க.

இது காலம் வந்தால் அரிதென்று காணாமற் செய்யவேண்டு மென்றது.

490. காலம் பார்த்திருக்குமிடத்துக் கொக்குப் போல ஒடுங்கி இகழ்வின்றி யிருக்க, வினை செய்தற்கு வாய்த்த காலம் வந்தவிடத்து அக்கொக்குக் குத்துமாறுபோலத் தப்பாமல்

விரைந்து செய்க. இது காலம் வருமளவும் இகழ்ச்சியின்றிக் கொக்குப் போல இருத்தல் வேண்டுமென்பதூஉம் காலம் வந்தால் தப்பாமை விரைந்து செய்யவேண்டுமென்பதூஉம் கூறிற்று.

# 50. இடன் அறிதல்

491 தொடங்கற்க எவ்-வினையும்; எள்ளற்க; முற்றும்
இடம் கண்டபின் அல்லது!

492 முரண்-சேர்ந்த மொய்ம்பினவர்க்கும், அரண்-சேர்ந்து-ஆம்;
ஆக்கம் பலவும் தரும்.

493 ஆற்றாரும் ஆற்றி அடுப; இடன்-அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

494 எண்ணியார், எண்ணம் இழப்பர்; இடன்-அறிந்து
துன்னியார், துன்னிச் செயின்.

495 நெடும்-புனலுள், வெல்லும் முதலை; அடும், புனலின்-
நீங்கின், அதனைப் பிற.

496 கடல்-ஓடா, கால்-வல் நெடுந்தேர்; கடல்-ஓடும்
நாவாயும் ஓடா, நிலத்து.

497 அஞ்சாமை அல்லால், துணை வேண்டா; எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்.

498 சிறு-படையான் செல்-இடம் சேரின்; உறு-படையான்
ஊக்கம் அழிந்து விடும்.

499 சிறை-நலனும், சீரும்-இலர் எனினும்; மாந்தர்
உறை-நிலத்தொடு ஒட்டல் அரிது.

500 கால்-ஆழ் களரில், நரி-அடும்; கண்-அஞ்சா
வேல்-ஆள், முகத்த களிறு.

491. முடியுமிடங் கண்டாலல்லது யாதொரு வினையுந் தொடங்கா தொழிக; எளிதென்றிகழாதொழிக.

இஃது இடமறிதல் வேண்டுமென்பது கூறிற்று

492. பகை கொள்ளும் வலியுடையவர்க்கும் அரணைச் சேர்ந்தாகின்ற ஆக்கம் பலபயனையுந் தரும்.

இது பகைவரிடம் அறிதலே யன்றித் தமக்கு அமைந்த இடமும் அறிய வேண்டுமென்றது.

493. வலியில்லாதாரும் வலியுடையராய் வெல்வர்: பகைவர்மாட்டு வினைசெய்யும் இடமறிந்து தம்மைக் காத்து வினை செய்வாராயின்.

494. தம்மைக் கெடுத்தற் கெண்ணினவர் தங்களெண்ணம் இழப்பர்; வினைசெய்யும் இடமறிந்து நட்டோரானவர் மனம் பொருந்திச் செய்வாராயின்.

இஃது இடமறிந்து செய்வோர் அமைதியும் வேண்டுமென்றது.

495. நெடிய நீரின்கண் பலவற்றையும் முதலை வெல்லும்; அஃது அந்நீரினின்று நீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லும்.

இது மேலதற்குக் காரணங் கூறிற்று. இவை யைந்தும் இடமறியவேண்டு மென்பது கூறின.

496. கால் வலிய நெடுந்தேர் கடலின்கண் ஓடாது: கடலின் கண் ஓடும் நாவாயும் நிலத்தின்கண் ஓடாது.

இஃது இடத்திற்காங் கருவி பண்ணவேண்டுமென்றது.

497. தப்பாமலெண்ணி இடத்தோடு பொருந்த வினை செய்ய வல்லவராயின், அஞ்சாமையே வேண்டுவ தல்லாமல் வேறு துணையாவாரைத் தேட வேண்டுவதில்லை.

இஃது இடனறிந்தால் துணையின்றியும் வெல்வரென்றது.

498. சிறுபடையை யுடையவனுக்கு இயலுமிடத்தே பெரும்படையை யுடையவன் பொருந்துவனாயின் மன மிகுதி கெடும்.

இஃது இகழ்ந்து செல்லின், வெற்றியில்லையாமென்றது.

499. அரசன் பதியும் பெருமையும் இலராயினும் மாந்தர் உறைநிலத்தின்கண் பொருந்துத லரிது.

இது மாந்தர் உறைவிடத்தின்கண் செல்லுங்கால் அறிந்து செல்ல வேண்டுமென்றது.

500. கண்ணஞ்சாத வேலமுத்தப்பட்ட முகத்தினையுடைய களிற்றைக் கால் விழப்பட்ட களரின்கண் நரி கொல்லவற்றாம்.

இது மேலதற்குக் காரணங் கூறிற்று.

# 51. தெரிந்து தெளிதல்

501 அறம், பொருள், இன்பம், உயிர்-அச்சம்; நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்.

502 குடிப்பிறந்து, குற்றத்தின் நீங்கி, வடுப்பரியும்
நாண்-உடையான்; கட்டே தெளிவு.

503 அரிய கற்று, ஆசு-அற்றார் கண்ணும், தெரியுங்கால்
இன்மை அரிதே, வெளிறு.

504 குணம்-நாடி, குற்றமும்-நாடி, அவற்றுள்
மிகை-நாடி, மிக்க கொளல்!

505 பெருமைக்கும், ஏனைச்-சிறுமைக்கும்; தத்தம்
கருமமே, கட்டளைக் கல்.

506 அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று-அவர்
பற்று-இலர்; நாணார் பழி.

507 காதன்மை கந்தா, அறிவு-அறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்.

508 தேரான், பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

509 தேறற்க யாரையும், தேராது; தேர்ந்த-பின்,
தேறுக, தேறும் பொருள்.

510 தேரான் தெளிவும், தெளிந்தான்-கண் ஐயுறவும்,
தீரா இடும்பை தரும்.

501. அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமுமென்னும் நான்கின் கூறுபாட்டினையும் ஆராய்ந்து, ஆராய்ந்தபின்பு ஒருவன் அரசனால் தெளியப்படுவான்.

முன்பு நான்கு பொருளையும் ஆராயவேண்டுமென்றார் பின்பு தேறப்படுமென்றார்.

502. உயர்குடியிற் பிறந்து காமம் வெகுளி முதலான குற்றித்தினின்று நீங்கி, தனக்கு வரும் பழியை அறுக்கவல்ல நாணமுடையவன்கண்ணதே அரசனது தெளிவு.

இதுவும் உடன்பாடென்று கொள்ளப்படுமென்றவாறு.

503. கற்றற்கரிய நூல்களைக் கற்றுக் குற்றமற்றார்மாட்டும் ஆராயுங்கால் குற்றமின்மை இல்லை.

504. ஒருவனுக்குள்ள குணத்தையும் ஆராய்ந்து குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிக்கதனை யறிந்து அவற்றுள்ளும் தலைமையாயினும் பன்மையாயினும் மிக்கதனைக் கொள்.

505. ஒருவனைப் பெரியனாக்குதற்கும் மற்றைச் சிறியனாக்குதற்கும் வேறு தேறவேண்டா; அவரவர் செய்யவல்ல கருமந்தானே அதற்குத்தக ஆக்கும் படிக்கல்லாம்.

இஃது ஒருவனை ஒரு காரியத்திலே முற்படவிட்டு, அவன் செய்யவல்ல அளவுங் கண்டு பின்னைப் பெரியனாக்க அமையுமென்றது. இது குற்றங்கூறாமை பலவற்றிற்கு முள்ள வேறுபாடென்று கொள்ளப்படும்.

506. ஒழுக்கமற்றாரைத் தேறுதலைத் தவிர்க; அவர் ஓரிடத்துப் பற்றுடையாரும் அல்லர், பழிக்கும் நாணாராதலான்.

507. அன்புடைமையே பற்றாக, அறிவுடையாரல்லாதாரைத் தேறுதல் எல்லா அறியாமையும் தரும்.

அரசர் அன்புடையாரைத் தேறலாமென்பது பராசரர் மதம். இஃது இவ்வளவினால் தேறலாகாதென்றது.

508. பிறனை ஆராயாதே வழிமுறையென்று தெளிந்தவனுக்கு அத்தெளிவு தீர்தலில்லாத துன்பமுண்டாக்கும்.

இது தன் குலத்திலுள்ளாருள் அமாத்தியராயினார் வழியில் உள்ளாரைத் தேறலா மென்றது.

509. யாவரையும் ஆராயாது தெளியாதொழிக; ஆராய்ந்த பின்பு அவராற் றேறப்படும் பொருளைத் தேறுக.

இஃது ஒருபொருளிற் றேற்றமுடையாரை எல்லாப் பொருளினும் தெளிக வென்றது.

510. ஒருவனை ஆராயாது தெளிதலும் தெளிந்து கொள்ளப்பட்டவன் மாட்டுத் தான் ஐயப்படுதலுமாகிய இவ்விரண்டும் நீங்காத துன்பத்தைத் தரும்.

# 52. தெரிந்து வினையாடல்

511 நன்மையும் தீமையும் நாடி, நலம்-புரிந்த
தன்மையான் ஆளப்படும்.

512 வாரி பெருக்கி, வளம்-படுத்து, உற்றவை
ஆராய்வான் செய்க வினை!

513 அன்பு, அறிவு, தேற்றம், அவா-இன்மை; இந்-நான்கும்
நன்கு உடையான்-கட்டே தெளிவு.

514 எனை-வகையான் தேறியக்கண்ணும், வினை-வகையான்
வேறாகும் மாந்தர் பலர்.

515 அறிந்து, ஆற்றி, செய்கிற்பாற்கு அல்லால், வினை-தான்
சிறந்தான்-என்று ஏவற்பாற்று அன்று.

516 செய்வானை நாடி, வினை-நாடி, காலத்தோடு
எய்த உணர்ந்து, செயல்!

517 ‘இதனை, இதனால், இவன்-முடிக்கும்’ என்று-ஆய்ந்து,
அதனை அவன்கண் விடல்!

518 வினைக்கு-உரிமை நாடிய பின்றை, அவனை
அதற்கு உரியன்-ஆகச் செயல்.

519 வினைக்கண் வினை-உடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும், திரு.

520 நாள்-தோறும் நாடுக, மன்னன்; வினை-செய்வான்
கோடாமைக் கோடாது உலகு.

511. நன்மையானவற்றையும் தீமையானவற்றையும் ஆராய்ந்து தீமையைப் பொருந்தாது நன்மையின்கண்ணே பொருந்தின தன்மையுடையவன் வினை செய்வானாகச் செய்யப்படும்.

512. பொருள் வருதற்கு இடமானவற்றை முன்பு நின்ற நிலையிற் பெருக்கி, அவ்விடங்களி லுண்டாகும் பயனை முன்பு நின்ற நிலையிலுண்டாக்கி, அவ்விடத்துற்ற மிகுதி குறைவுகளை ஆராயவல்லவன் வினை செய்வானாக.

பொருள் வருதற்கிடமாவது நிலம் முதலான இடம்: அதனைப் பெருக்குதல்- பொருளும் இன்பமும் உண்டாகச் செய்தல்.

513. அன்புடைமையும் அறிவுடைமையும் ஒருபொருளை ஆராய்ந்து துணிவுடைமையும் அவாவின்மையுமென்னும் இந்நான்கு குணங்களையும் நிலை பெற உடையான்மேலதே வினையை விட்டிருக்கும் தெளிவு.

514. எல்லா வகையினாலும் ஆராய்ந்து தெளிந்தவிடத்திலும் அவர் செய்யும் வினையின் வகையினாலே மனம் வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலர்.

இது தெளிந்தே மென்று இகழலாகாதென்றது.

515. செய்யும் உபாயங்களை யறிந்து, செயலானும் இடையூறுகளானும் வருந் துன்பங்களைப் பொறுத்து முடிவு செய்யவல்லானையல்லது வினைதான் இவன் நம்மாட்டன்புடையானென்று பிறனொருவனையேவும் இயல்புடைத்தன்று.

516. வினை செய்வானையும் ஆராய்ந்து அவ்வினையினது இயல்பையும் ஆராய்ந்து அதுமுடியுங் காலத்தோடே பொருந்த அறிந்து, பின்பு அவ்வினை அவன் செய்வானாக அமைக்க வேண்டும்.

517. இக்கருமத்தினை இக்கருவியாலே இவன் செய்து முடிக்க வல்லவனென்று ஆராய்ந்து பின்பு அக்கருமத்தினை அவன்கண்ணே விடுக.

இது பெரும்பான்மையுஞ் சேனாதிபதியை நோக்கிக் கூறிற்று.

518. இவ்வினைக்கு இவன் உரியவனென்று ஆராய்ந்த பின்பு, அவனை அவ்வினை செய்தற்கு உரியவனாகப் பண்ணுக.

இஃது ஒழிந்த காரியங்களின் வினை செய்வாரை ஆக்குமது.

519. வினையிடத்து வினை செய்ய வல்லவனது நட்பை வேறுபாடாக நினைக்குமவனைத் திருமகள் நீங்குவள்.

520. வினை செய்வான் கோடாதொழிய உலகம் கோடாது செவ்வையிலே நிற்கும், ஆதலான் அவன் செயலை மன்னவன் நாடோறும் ஆராய வேண்டும்.

இது வினைசெய்வார் செயலை நாடோறும் ஆராய வேண்டுமென்றது.

# 53. சுற்றம் தழால்

521 பற்று அற்ற-கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார்-கண்ணே உள.

522 விருப்பு-அறாச் சுற்றம் இயையின், அறுப்பு-அறா
ஆக்கம் பலவும் தரும்.

523 அளவளாவு இல்லா-தான் வாழ்க்கை; குளவளாக்
கோடு-இன்றி நீர் நிறைந்தற்று.

524 சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்; செல்வம்-தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

525 கொடுத்தலும் இன்-சொலும் ஆற்றின்; அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும்.

526 பெரும்-கொடையான், பேணான் வெகுளி; அவனின்
மருங்கு-உடையார் மா-நிலத்து இல்.

527 காக்கை கரவா கரைந்து-உண்ணும்; ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

528 பொது-நோக்கான், வேந்தன் வரிசையா நோக்கின்,
அது-நோக்கி வாழ்வார் பலர்.

529 தமர்-ஆகி, தன்-துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

530 உழைப்-பிரிந்து காரணத்தின் வந்தானை, வேந்தன்
இழைத்து-இருந்து, எண்ணிக் கொளல்.

521. பொருளற்ற கண்ணும் பழைமையைக் கொண்டாடி விடாதொழுகுதல் சுற்றத்தார்மாட்டே யுளவாம்.

இஃது இல்லாக் காலத்தினும் விடாரென்றது.

522. அன்பறாத சுற்றம் ஓரிடத்தே பொருந்தி யொழுகு மாயின், அது கிளைத்தலறாத ஆக்கமாகிய பலவற்றையுந் தரும்.

523. கலக்கப் படுவாரோடு கலப்பின்றி யொழுகுவானது வாழ்க்கை, குளப்பரப்புக்

கரையின்றி நீர் நிறைந்தாற் போலும். இது சுற்றந் தழுவாக்கால் செல்வங் காக்கப்படாதென்றது. இத்துணையும் சுற்றத்தாரெல்லாரோடும் ஒழுகுந் திறங் கூறிற்று.

524. சுற்றத்தாராலே சூழப்பட ஒழுகுவது, செல்வத்தைப் பெற்றவதனால் உண்டான பயன்.

இது சுற்றஞ் சூழ்ந்து வருவதாக ஒழுக வேண்டுமென்றது.

525. வேண்டுமளவு கொடுத்தலும் இன்சொற் கூறுதலும் செய்வனாயின் தனக்கு முன்னாகியும் பின்னாகியும் வருகின்ற சுற்றத்தாராலே சூழப்படுவன்.

இஃது ஒழுகுந் திறம் கூறிற்று.

526. மிகக் கொடுக்க வல்லவனாய்ச் சினத்தையும் விரும்பானாயின் அவனின் துணையுடையார் பெரிய உலகின்கண் இல்லை.

இது மேற்கூறிய அளவின்றி யிவ்வாறு செய்யின் துணை யுடையானா மென்றது.

527. காக்கை ஓரிரை பெற்றால் அதனை மறையாது தன் சுற்றமெல்லாவற்றையும் அழைத்து உண்ணும். அதுபோலச் செல்வம் பெற்றால் அதனைத் தன் சுற்றத்தா ரெல்லாரோடும் நுகர்வார்க்கே ஆக்கம் உளதாவது.

இவை மூன்றும் அன்பமைந்த மக்கட்குச் செய்யுந் திறம் கூறின.

528. அரசன் எல்லாரையும் பொதுவாகப் பாராதே ஒருவனைத் தலைமையாலே பார்ப்பானாயின் அப்பார்வை நோக்கி அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் பலர்.

இஃது ஒருவனை இளவரசாக்க வேண்டுமென்றது.

529. முன்பு தனக்குத் தமராகி வைத்துத் தன்னை விட்டுப் போனவர் பின்பு வந்து சுற்றமாதல் அவர்மாட்டு அமராமைக்குக் காரணம் இன்றி யொழுக வரும்.

இது தன்னை விட்டுப்போன இராஜபுத்திரரைக் கூட்டிக் கொள்ளுமாறு கூறிற்று.

530. தன்னிடத்தினின்று நீங்கி ஒரு காரணத்தால் வந்தவனை அரசன் அக்காரணத்தைச் செய்துவைத்துப் பின்பு காரியமானபடி யெண்ணி அதற்குத் தக்கபடி கூட்டிக் கொள்ளுக.

# 54. பொச்சாவாமை

531 இறந்த வெகுளியின் தீதே; சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.

532 பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்சம் நிரப்புக் கொன்றாங்கு.

533 பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அது உலகத்து
எப்பால் நூலோர்க்கும் துணிவு.

534 அச்சம்-உடையார்க்கு அரண்-இல்லை; ஆங்கு-இல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

535 முன்னுறக் காவாது இழுக்கியான், தன்-பிழை,
பின்-ஊறு, இரங்கிவிடும்.

536 இழுக்காமை யார்-மாட்டும், என்றும், வழுக்காமை
வாயின், அஃது-ஒப்பது இல்.

537 அரிய-என்று ஆகாத இல்லை; பொச்சாவாக்
கருவியான் போற்றிச் செயின்.

538 புகழ்ந்தவை போற்றிச் செயல்-வேண்டும்; செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

539 இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்-தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து!

540 உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றும்-தான்
உள்ளியது உள்ளப்-பெறின்.

531. மிகுந்த வெகுளியினும் தனக்குத் தீமையைச் செய்யும்; மிக்க உவகைக்களிப்பினால் வரும் மறப்பு.

தனக்குச் சிறந்த உவகை தன்மகிழ்ச்சியாற் சோருஞ் சோர்வு என்றும், உய்க்க வேண்டுமவரிடத்து உய்க்கும் உவகை என்றுமாம்.

532. மறவியாகின்றது புகழைக்கொல்லும்: நாடோறும் இரவால் வருந்தி வயிற்றை நிறைக்கும் ஊண் அறிவைக் கொல்லுமாறு போல.

இவை மூன்றினாலும் பொருளின்கண் கடைப்பிடித்தல் கூறினார்.

533. பொச்சாப்பு உடையார்க்குப் புகழுடைமையில்லையாம்; அஃது உலகத்து வழங்குகின்ற எவ்வகைப்பட்ட நூலோர்க்குந் துணிவு.

இது பொச்சாப்பார்க்குப் புகழாகாதென்றது.

534. அச்சமுடையார்க்கு ஆவதொரு அரணில்லை: அதுபோலப் பொச்சாப்புடையார்க்கு வருவதொரு நன்மை இல்லை.

இது பொச்சாப்புடையார்க்குக் காவலில்லை என்றது.

535. தன்னாற் காக்கப்படும் துன்பங்களை அவை வருவதற்கு முன்னே அறிந்து காவாது மறந்திருந்தான், பின் வந்துற்றகாலத்துக் காக்கலாகாமையின் அப்பிழைப்பினை நினைந்திரங்கிவிடும்.

536. யாவர்மாட்டும் எல்லாநாளும் தப்புச்செய்யாமை தப்பாமல் வாய்க்குமாயின் அதனையொக்க நன்மை பயப்பது பிறிதொன்று இல்லை.

இது முறைமை செய்யுங்கால் கடைப்பிடித்துச் செய்யவேண்டு மென்றது.

537. செயற்கு அரியனவென்று செய்யலாகாதன வில்லை; மறவாமையாகிய கருவியாலே பாதுகாத்துச் செய்வானாயின்.

இது வினை செய்யுங்கால் மறவாமை வேண்டுமென்றது.

538. உயர்ந்தாரால் புகழப்பட்டவையிற்றைக் கடைப்பிடித்துச் செய்தல்வேண்டும். இவையிற்றைச் செய்யாது இகழ்ந்தவர்க்கு எழுபிறப்பிலும் நன்மையில்லையாமாதலான்.

இஃது அறத்தின்கண் இகழாமற் செய்வது கூறிற்று.

539. அரசர் குறித்துணரும் உணர்ச்சியின்மையாலே முன்பு கெட்ட அரசரை நினைக்க; தாமும் தம்முடைய மகிழ்ச்சியாலே வலியராயிருக்கும் பொழுது.

இஃது உண்பவை, உடுப்பவை, பூசுபவை சோதித்துக் கொள்க என்றது.

540. தான் நினைந்த பொருளைப் பெறுதல் எளிது; பின்பும் அதனை மறவாதே நினைக்கக் கூடுமாயின்.

இனிப் பொருளின்கண் மறவாமை கூறுவார் முற்பட நினைத்ததனை மறவாமை வேண்டுமென்றார்.

# 55. செங்கோன்மை

541 ஓர்ந்து, கண்ணோடாது, இறை-புரிந்து, யார்-மாட்டும்
தேர்ந்து, செய்வஃதே முறை.

542 வான்-நோக்கி வாழும் உலகு-எல்லாம்; மன்னவன்
கோல்-நோக்கி வாழும் குடி.

543 அந்தணர் நூற்கும், அறத்திற்கும், ஆதியாய்-
நின்றது; மன்னவன் கோல்.

544 குடி-தழீஇக் கோல்-ஓச்சும் மா-நில மன்னன்
அடி-தழீஇ நிற்கும், உலகு.

545 இயல்புளிக் கோல்-ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

546 வேல்-அன்று, வென்றி தருவது; மன்னவன்
கோல்; அதூஉம், கோடாது எனின்.

547 இறை-காக்கும், வையகம் எல்லாம்; அவனை
முறை-காக்கும், முட்டாச் செயின்.

548 எண்-பதத்தான் ஓரா, முறை-செய்யா, மன்னவன்
தண்-பதத்தான் தானே கெடும்.

549 குடி புறங்காத்து, ஓம்பி, குற்றம்-கடிதல்;
வடு-அன்று; வேந்தன் தொழில்.

550 கொலையில், கொடியாரை, வேந்து-ஒறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனொடு நேர்.

541. ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து நட்டோரென்று கண்ணோடாது தலைமையைப் பொருந்தி யாவர்மாட்டும் குற்றத்திற்குத் தக்க தண்டத்தை நூல்முகத்தாலாராய்ந்து அதன் வழியே செய்வது முறையென்று சொல்லப்படும்.

யார்மாட்டும் என்றது தன்சுற்றமாயினு மென்றது.

542. உலகத்தாரெல்லாம் மழையை நோக்கி யின்புறாநிற்பர்; அதுபோலக் குடிகளும் அரசனது செங்கோன்மையை நோக்கியின்புறாநிற்பர்.

543. அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும் அதனால் கூறப்பட்ட அறத்திற்கும் முதலாக நின்றது அரசன் செய்யும் முறைமை.

544. குடியைப் பொருந்தி முறைமை செலுத்துகின்ற பெரிய நில மன்னன் அடியைப் பொருந்தி நிற்கும் உலகு.

இது முறைமை செய்யும் அரசன்கண்ணதாம் உலகு என்றது.

545. மழைபெய்தலும் விளைதலுங்கூடி. நூல் சொன்ன இயல்பினானே முறையை

நடத்தவல்ல அரசனது நாட்டகத்தினவாம். இது மேற்கூறிய முறைமைசெய்ய மழையும் விளைவும் உண்டாமென்றது.

546. அரசனுக்கு வெற்றி தருவது அவன் கையிலுள்ள வேலன்று, முறை செய்தல்; அவன் அதனைக் கோடச் செய்யானாயின்.

இது செங்கோன்மை செய்ய வெற்றியுண்டாமென்றது.

547. அரசனுக்கு வெற்றி தருவது அவன் கையிலுள்ள வேலன்று, முறை செய்தல்; அவன் அதனைக் கோடச் செய்யானாயின்.

இது செங்கோன்மை செய்ய வெற்றியுண்டாமென்றது.

548. எளிய காலத்தோடே நூலாராய்ந்து முறைமை செய்யாத அரசன் தனது தண்பதத்தினானே கெடுப்பாரின்றித் தானே கெடும்.

எண்பதமாவது வந்தவர் தங்கள் குறையைச் சொல்லுதற்கு எய்துங்காலம்; தண்பதமாவது குறையைச் சொல்லுதற்குத் தாழ்க்குங்காலம்.

549. குடிகளை நலியாமற் காத்து, ஓம்புதற்காகக் குற்றஞ் செய்தாரை ஒறுத்தல் குற்றமன்று; அரசன் தொழில்.

550. கொடுமை செய்வாரைக் கொலையினானே அரசன் ஒறுத்தல் குற்றமன்று: உழவன் பைங்கூழ் வளர்தற்குக் களை களைந்ததனோடு ஒக்கும்.

கொடியாராவார் கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார்.

# 56. கொடுங்கோன்மை

551 கொலை-மேற்கொண்டாரின் கொடிதே; அலை-மே
மேற்கொண்டு
அல்லவை செய்து-ஒழுகும் வேந்து.

552 வேலொடு நின்றான், ‘இடு’ என்றது-போலும்
கோலொடு நின்றான் இரவு.

553 நாள்-தொறும் நாடி, முறைசெய்யா மன்னவன்
நாள்-தொறும் நாடு கெடும்.

554 கூழும் குடியும் ஒருங்கு-இழக்கும்; கோல் கோடி,
சூழாது, செய்யும் அரசு.

555 அல்லல்-பட்டு, ஆற்றாது, அழுத-கண்ணீர்-அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

556 மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃது-இன்றேல்
மன்னாவாம், மன்னர்க்கு ஒளி.

557 துளி-இன்மை ஞாலத்திற்கு எற்று? அற்றே, வேந்தன்
அளி-இன்மை வாழும் உயிர்க்கு.

558 இன்மையின் இன்னாது, உடைமை; முறை-செய்யா
மன்னவன் கோல் கீழ்ப்படின்.

559 முறை-கோடி மன்னவன் செய்யின்; உறை-கோடி
ஒல்லாது, வானம் பெயல்.

560 ஆ-பயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்-மறப்பர்;
காவலன் காவான் எனின்.

551. கொலைத்தொழிலை மேற்கொண்டவரினும் கொடியன், அலைத்தற்றொழிலை மேற்கொண்டு நீதியல்லாதன செய்து ஒழுகுகின்ற அரசன்.

552. தனியிடத்தே வேலொடு நின்றவன் கையிலுள்ளன தா வென்றல்போலும்: முறைசெய்தலை மேற்கொண்டு நின்றவன் குடிகள்மாட்டு இரத்தல்.

கோலொடு நிற்றல்- செவ்வைசெய்வாரைப் போன்று நிற்றல். நிச்சயித்த கடமைக்குமேல் வேண்டுகோளாகக் கொள்ளினும். அது வழியிற் பறிப்பதனோடு ஒக்குமென்றவாறு.

553. குற்றமும் குணமும் நாடோறும் ஆராய்ந்து அதற்குத் தக்க முறை செய்யாத அரசன் நாடு நாடோறும் கெடும்.

இது நாடு கெடுமென்றது.

554. பொருளையும் பொருள்தரும் குடியையும் கூட இழப்பன், முறை கோடி ஆராயாது செய்யும் அரசன்.

இஃது ஆராயாது செய்வதனால்வருங் குற்றங் கூறிற்று.

555. நீதியல்லன செய்தலானே அல்லற்பட்டு அதற்கு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் ஆயுதம்.

இஃது இவ்வரசன் கெடுமென்றது.

556. அரசர்க்கு ஒளி நிலைபெறுதல் செங்கோன்மை; அஃதில்லை யாயின் அரசர்க்கு ஒளி நிலையாதாம்.

முறை செய்யாமையால் அவன் நிலைபெறுதல் அருமையெனக் குற்றங் கூறுவார் முற்படப் புகழில்லையாம் என்றார்.

557. உலகத்திற் பல்லுயிர்க்கும் மழையில்லையானால் வருந்துன்பம் எத்தன்மைத்தாகின்றது; அத்தன்மைத்து, அரசன் அருளிலனாதால் அவன் கீழ் வாழும் மக்கட்கு.

இஃது அருள் செய்யாமையால் வருங் குற்றங் கூறிற்று.

558. நல்குரவினும் செல்வம் துன்பமாகும்: முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின் கீழே குடியிருக்கின்.

இது பொருளுடையாரும் துன்பமுறுவரென்றது. இவை மூன்றும் முறை செய்யாமையாலே வருங் குற்றங் கூறின.

559. முறைமைகோட மன்னவன் செய்வனாயின், மழை துளி விடுதலைத் தவிர்ந்து பெய்யாதொழியும்.

560. பசுக்கள் பால் குறையும்: அந்தணர் வேதம் ஓதார்: அரசன் காவானாயின்.

இது காவாமையால் வருங் குற்றங் கூறிற்று.

# 57. வெருவந்த செய்யாமை

561 தக்காங்கு நாடி, தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

562 கடிது-ஓச்சி, மெல்ல எறிக; நெடிது-ஆக்கம்
நீங்காமை வேண்டுபவர்.

563 வெருவந்த செய்து-ஒழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

564 'இறை கடியன்' என்று-உரைக்கும் இன்னாச்-சொல் வேந்தன்
உறை-கடுகி ஒல்லைக் கெடும்.

565 அரும்-செவ்வி, இன்னா முகத்தான் பெரும்-செல்வம்
பேஎய் கண்டன்னது உடைத்து.

566 கடும்-சொல்லன், கண்-இலன் ஆயின்; நெடும்-செல்வம்
நீடு-இன்றி, ஆங்கே கெடும்.

567 கடு-மொழியும், கையிகந்த தண்டமும்; வேந்தன்
அடு-முரண் தேய்க்கும் அரம்.

568 இனத்து-ஆற்றி, எண்ணாத வேந்தன்; சினத்து-ஆற்றிச்
சீறின், சிறுகும் திரு.

569 செரு-வந்த போழ்தில், சிறை-செய்யா வேந்தன்
வெருவந்து, வெய்து கெடும்.

570 கல்லார்ப் பிணிக்கும், கடும்-கோல்; அது-அல்லது
இல்லை, நிலக்குப் பொறை.

561. குற்றத்திற்குத் தக ஆராய்ந்து, ஒருவர்மேற் செல்லாமை காரணமாக உலகத்துப் பொருந்துமாறு ஒறுப்பவன் அரசன்.

562. கடிதாகச் செய்வாரைப் போன்று மெல்லிதாகச் செய்க, நெடிதாக வருகின்ற ஆக்கம் நீங்காமையை வேண்டுவார்.

இது குற்றத்திற்குத் தக்க தண்டத்தைக் குறையச் செய்யவேண்டு மென்றது.

563. அரசன் அஞ்சத்தகுவனவற்றைச் செய்தொழுகும் வெங்கோலையுடையனாயின் அவன் ஒருதலையாகக் கடிதிற் கெடும்.

564. தன்னிழலில் வாழ்வாரால் அரசன் கடியனென்று கூறப்பட்ட இன்னாத சொல்லையுடைய வேந்தனானவன் தானுறையும் இடம் வெகுளப்பட்டு விரைந்து கெடும்.

இது நாடும் தான்உறையும் இடமும் பொறுப்பினும் தெய்வத்தினாற் கெடுவனென்றது.

565. காண்டற்கரிய செவ்வியையும் இன்னா முகத்தையும் உடையவனது பெரிய செல்வம் பேயைக்கண்டதொக்க அச்சந் தருதலுடைத்து.

இது செல்வத்தை வாங்குவார் இன்மையின் படை சேரா தென்றது.

566. அரசன் கடிய சொல்லை யுடையவனுமாய்க் கண்ணோட்டமும் இலனாயின் அவனது தொன்றுதொட்டு வருகின்ற செல்வம் பின்பு நிற்றலின்றி அக்காலத்தே கெடும்.

இஃது குறைதலேயன்றி முழுதுங் கெடுமென்றது

567. கடுஞ்சொற் கூறுதலும் குற்றத்தின் மிக்க தண்டஞ் செய்தலும் அரசனுடைய பகைவரை வெல்லும் வலியைத் தேய்க்கும் அரமாம்.

இது வலியைக் கெடுக்கும் என்றது.

568. பிறர் செய்த குற்றத்தைத் தனக்கு இனமானாரோடே அமைந்து ஆராயாத அரசன் கடியசொல்லனுமாய்க் கண்ணோட்டமும் இலனாயின் அவனது செல்வம் நாடோறும்

சுருங்கும். ஆராயாத அரசன் சின்னெறியிற் றீரானாயின் அவன்செல்வம் குறையுமென்றாவறு. இனம்- மந்திரி, புரோகிதர்.

569. தனக்குக் காவலானவற்றை முன்னேயமைத்துச் செய்யாத வேந்தன் செருவந்த காலத்து அச்சமுற்றுக் கடிதுகெடும்.

இது தனக்கும் அச்சம் வருவன செய்யலாகாதென்றது.

570. கடுங்கோலனாகிய அரசன் அறிவில்லாதாரை அமாத்தியராகக் கூட்டிக் கொள்ளும்; அவ்வரசன் அல்லது நிலத்துக்குப் பாரம் வேறொன்றும் இல்லை.

# 58. கண்ணோட்டம்

571 கண்ணோட்டம் என்னும் கழி-பெரும்-காரிகை
உண்மையான், உண்டு இவ்-உலகு.

572 கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃது-இலார்
உண்மை நிலக்குப் பொறை.

573 பண்-என்-ஆம், பாடற்கு இயைபு-இன்றேல்? கண்-என்-ஆம்
கண்ணோட்டம் இல்லாத கண்?

574 உள-போல் முகத்து எவன்-செய்யும்? அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

575 கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது-இன்றேல்,
புண் என்று உணரப்படும்.

576 மண்ணொடு இயைந்த மரத்து-அனையர்; கண்ணொடு-
இயைந்து, கண்ணோடாதவர்.

577 கண்ணோட்டம் இல்லவர் கண்-இலர்; கண்-உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

578 கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து, இவ்-உலகு.

579 ஒறுத்தாற்றும் பண்பினார்-கண்ணும், கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

580 பெயக்கண்டும், நஞ்சு-உண்டு அமைவர்; நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்.

571. கண்ணோட்டமாகிய பெரிய அழகு அரசன்மாட்டு உண்டானபடியினாலே, இவ்வுலகநடை யாகின்றது.

இஃது அஃதில்லையாயின் உலகங்கெடும் ஆதலால் கண்ணோடவேண்டுமென்றது.

572. உலகநடை கண்ணோட்டத்தின்கண்ணது: ஆதலால், அஃதில்லாதார் உளராயிருத்தல் நிலத்துக்குப் பாரமாம்.

இது கண்ணோட்டமில்லாதாரை நிலம் பொறாதென்றது.

573. பண் என்ன பயனுடைத்தாம், பாடலொடு பொருந்தாதாயின். அதுபோலக் கண் என்ன பயனுடைத்தாம், கண்ணோட்ட மில்லாத காலத்து.

இது பிறர்க்கும் இன்பம் பயவாதென்றது.

574. அவரவர் வாழ்வு காரணமாகக் கண்ணோடுதலைச் செய்யாத கண்கள், முகத்தின்கண் உள்ளனபோன்று இருப்பதன்றி வேறென்ன பயனைச் செய்யும்?

அளவென்றது தகுதியை. இது தனக்கும் பயன்படாதென்றது.

575. கண்ணிற்கு அழகு செய்யும் அணிகலமாவது கண்ணோட்டமுடைமை: அஃதில்லையாயின் அவை புண்ணென்றறியப்படும்.

இது கண்ணோட்டமில்லாத கண்ணிற்குப் பெயர் கூறிற்று.

576. சுதைமண்ணோடு கூடச்செய்த மரப்பாவையோடு ஒப்பார்: ஒருவன் கண்ணோடு தங்கண்கலந்தபின்பு கண்ணோட்டத்தைச் செய்யாதவர்.

இது கண்ணோடாமை மரப்பாவைக்கு ஒக்கும் என்றது.

577. கண்ணோட்டமில்லாதவர் கண்ணிலரே: கண்ணுடையார் கண்ணோட்டமிலராதலும் இல்லை.

578. தங்கருமத்திற்கு அழிவு வாராமற் கண்ணோட வல்லவர்க்கு இவ்வுலகம் உரிமையாதலை உடையது.

இது நற்குணமாவது கண்ணோட்டமாயினும் அரசர்க்குப் பொருட்கேடு வாராமல் கண்ணோடவேண்டுமென்று கூறிற்று.

579. தம்மை யொறுத்துச் செய்யும் இயல்புடையார்மாட்டும் கண்ணோடிப் பொறுத்துச் செய்யும் குணமே தலையான குணம்.

580. நஞ்சு பெயக்கண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர், எல்லாரானும் விரும்பத்

தக்க நாகரிகத்தை விரும்புவார். நாகரிகம்- அறம் பொருள் இன்பத்திற்கண் நற்குணங்கள் பலவும் உடைமை.

# 59. ஒற்று ஆடல்

581 ஒற்றும், உரை-சான்ற நூலும்; இவை-இரண்டும்
தெற்றென்க, மன்னவன் கண்.

582 எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்-அறிதல், வேந்தன் தொழில்.

583 ஒற்றினான் ஒற்றி, பொருள்-தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்-கிடந்தது இல்.

584 வினை-செய்வார், தம்-சுற்றம், வேண்டாதார்; என்று-ஆங்கு
அனைவரையும் ஆராய்வது; ஒற்று.

585 கடாஅ உருவொடு கண்-அஞ்சாது, யாண்டும்
உகா-அமை வல்லதே; ஒற்று.

586 துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து, ஆராய்ந்து,
என்-செயினும் சோர்வு-இலது; ஒற்று.

587 மறைந்தவை கேட்க-வற்று-ஆகி, அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே; ஒற்று.

588 ஒற்று-ஒற்றித் தந்த பொருளையும், மற்றும்-ஓர்
ஒற்றினால் ஒற்றி, கொளல்.

589 ஒற்று-ஒற்று உணராமை ஆள்க; உடன்-மூவர்
சொல்-தொக்க தேறப்படும்.

590 சிறப்பு-அறிய ஒற்றின்-கண் செய்யற்க; செய்யின்,
புறப்படுத்தான் ஆகும், மறை.

581. ஒற்றினையும் முறையமைந்த நூலினையும் தெளியவறிந்த மன்னவனுக்கு இவையிரண்டையும் கண்களாகத் தெளிக.

அரசர்க்குக் கல்வி இன்றிமையாததுபோல ஒற்றும் இன்றிமையாததென்றவாறு. இஃது ஒற்றுவேண்டுமென்றது.

582. பகைவராகியும் நட்டாராகியும் மத்திமராகியும் உதாசீனராகியும் இருக்கின்ற அரசர்க்

கும், அவர் சுற்றத்திற்கும், தஞ்சுற்றத்திற்கும் அறம் பொருள் இன்பங்களைப் பற்றி நிகழ்பவை யெல்லாவற்றையும் நாடோறும் பிறர் அறிவதன் முன்னர்த் தான் ஒற்றால் விரைந்தறிதல் வேந்தனது தொழில்.

583. ஒற்றராலே ஒற்றிப் பொருள் விசாரியாத மன்னவன் கொள்ளக் கிடந்ததொரு வெற்றி இல்லை.

இஃது ஒற்றின்மையால் வருங் குற்றங்கூறிற்று

584. தமக்குக் காரியமானவற்றைப் பார்த்துச் செய்வாரும் தமக்குச் சுற்றமாயிருப்பாரும்

தம்மை வேண்டாதிருப்பாருமாகிய அனைவரையும் ஆராய்ந்தறிவான் ஒற்றனாவன். இவையிரண்டும் ஒற்றவேண்டுமிடங் கூறின.

585. வினாவப்படாத வடிவோடேகூடி கண்ணஞ்சுதலும் இன்றி, அறிந்தபொருளை எவ்விடத்தினும் சோர்வின்றியே அடக்கவல்லவன் ஒற்றனாவன்.

586. வினாவப்படாத வடிவோடேகூடி கண்ணஞ்சுதலும் இன்றி, அறிந்தபொருளை எவ்விடத்தினும் சோர்வின்றியே அடக்கவல்லவன் ஒற்றனாவன்.

587. பிறரால் மறைக்கப்பட்டவற்றைக் கேட்டறிய வல்லனாகி, அறிந்தவற்றைத் தீர அறியவல்லவனே ஒற்றனாவான்.

இவை மூன்றும் ஒற்றிலக்கணங்கூறின.

588. ஒற்றர் மாற்றரசர்மாட்டும் பொருள் பெற்று மாறுபடச் சொல்லுதல் கூடுமாதலால், ஓரொற்று அறிந்து சொன்ன பொருளைப் பின்னையும் ஓரொற்றினாலே ஒற்றியறிந்து பின்பு அதனுண்மை கொள்க.

589. ஒற்றரை விடுங்கால் ஒருவரையொருவர் அறியாமல் விடுக: மூவர் சொல் உடன்கூடின் அது தெளியப்படுமாதலால்.

இவை இரண்டும் ஒற்றரை யாளுந்திறங் கூறின.

590. ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால் பிறரறியாமற் செய்க: பிறரறியச் செய்வனாயின் அவர் ஒற்றிவந்த பொருளைப் புறத்துவிட்டானாம்.

இஃது ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால் பிறரறியாமற் செய்ய வேண்டுமென்றது.

# 60. ஊக்கம் உடைமை

591 உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃது-இல்லார்
உடையது உடையரோ, மற்று?

592 உள்ளம் உடைமை உடைமை; பொருள்-உடைமை
நில்லாது நீங்கி-விடும்.

593 ‘ஆக்கம் இழந்தேம்!’ என்று அல்லாவார்; ஊக்கம்
ஒருவந்தம் கைத்து-உடையார்.

594 ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவு-இலா
ஊக்கம் உடையான்-உழை.

595 வெள்ளத்து அனைய, மலர்-நீட்டம்; மாந்தர்-தம்
உள்ளத்து அனையது, உயர்வு.

596 உள்ளுவது எல்லாம் உயர்வு-உள்ளல்! மற்று-அது
தள்ளினும், தள்ளாமை நீர்த்து.

597 சிதைவிடத்து ஒல்கார், உரவோர்; புதை-அம்பின்
பட்டுப்-பாடு ஊன்றும் களிறு.

598 உள்ளம் இலாதவர் எய்தார்; ‘உலகத்து
வள்ளியம்’ என்னும் செருக்கு.

599 பரியது கூர்ங்கோட்டது ஆயினும், யானை
வெரூஉம், புலி தாக்குறின்.

600 உரம்-ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃது-இல்லார்
மரம்; மக்கள் ஆதலே வேறு.

591. ஒற்றரையுடைமை யென்று சொல்லப்படுவது ஊக்கமுடைமை: அஃதிலாதார் மற்றுடையதாகிய பொருளெல்லாம் உடையராகார்.

592. உடைமையாவது ஊக்கமுடைமை; பொருளுடைமை நிலை நில்லாது நீங்கும்.

பொருள் உடையார்க்கு எல்லா முண்டாம் என்பார்க்கு இது கூறப்பட்டது.

593. செல்வத்தை இழந்தோமென்று அலமரார்; உள்ள மிகுதியை ஒரு தலையாகத் தம்மாட்டுடையார்.

இது பொருட்கேடுவரினுந் தளராரென்றது.

594. அசைவில்லாத ஊக்கமுடையான்மாட்டு ஆக்கம், தானே வழி கேட்டுச் செல்லும்.

நினைத்ததனாலே ஊக்கமுண்டாமோ- என்றார்க்கு இது கூறப்பட்டது.

595. புகுந்த நீரின் அளவினது பூக்களது வளர்ச்சி; அதுபோல மாந்தரது உள்ளத்தின் அளவினது ஊக்கம்.

இஃது ஊக்கம் இதனானே உண்டாமென்றது.

596. நினைப்பனவெல்லாம் உயர்வையே நினைக்க: அந்நினைவு முடியாமல் தப்பினும் முயன்று பெற்றதனோடு ஒக்கும்.

இது தப்பினும் பழிக்கப்படா தென்றது.

597. தளர்ச்சி வந்தவிடத்துத் தளரார் உள்ள மிகுதியுடையார்: மெய் புதைந்த அம்பினுட்பட்டும் பாடூன்றும் களிறுபோல.

இஃது உயிர்க்கேடு வரினுந் தளரார் என்றது.

598. உள்ளமிகுதியில்லாதார் உலகின்கண் வண்மையுடைமை யென்னுங் களிப்பினைப் பெறார்.

இஃது உள்ளமிகுதி யில்லாதார்க்குப் பொருள்வரவு இல்லையாம் ஆதலான் அவர் பிறர்க்கு ஈயமாட்டாரென்றது.

599. யானை, பெரிய உடம்பினதாய்க் கூரியகோட்டையும் உடைத்தாயினும் புலி பொருமாயின் அஞ்சும்.

இஃது உள்ளமுடைமை யில்லாதார் பெரியராயினும் கெடுவார் என்றது.

600. ஒருவனுக்கு அறிவாவது உள்ளமிகுதியுடைமை: அஃதில்லார் மரமென்று சொல்லப்படுவர்: மக்கள் வடிவாதலே மரத்தின் வேறாகத் தோன்றுகிறது.

இஃது அறிவும் இதுதானே யென்றது.

# 61. மடி இன்மை

601 குடி-என்னும் குன்றா விளக்கம், மடி-என்னும்
மாசு-ஊர, மாய்ந்து கெடும்.

602 மடியை, மடியா ஒழுகல்; குடியைக்
குடியாக, வேண்டுபவர்!

603 மடி மடிக்-கொண்டு-ஒழுகும் பேதை; பிறந்த-
குடி, மடியும், தன்னினும் முந்து.

604 குடி-மடிந்து, குற்றம் பெருகும்; மடி-மடிந்து,
மாண்ட உஞற்று-இலவர்க்கு.

605 நெடு-நீர், மறவி, மடி, துயில்; நான்கும்
கெடும்-நீரார், காமக் கலன்.

606 படி-உடையார் பற்று-அமைந்தக்-கண்ணும்; மடி-உடையார்
மாண்-பயன் எய்தல், அரிது.

607 இடிபுரிந்து, எள்ளும்-சொல் கேட்பர்; மடிபுரிந்து
மாண்ட உஞற்று-இலவர்.

608 மடிமை, குடிமைக்கண்-தங்கின்; தன்-ஒன்னார்க்கு
அடிமை, புகுத்தி-விடும்.

609 குடி, ஆண்மையுள்-வந்த-குற்றம், ஒருவன்
மடி-ஆண்மை மாற்ற, கெடும்.

610 மடி-இலா மன்னவன் எய்தும்; அடி-அளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.

601. குடியென்று சொல்லப்படுகின்ற குறைவில்லாத ஒளி, மடியென்று சொல்லப்படுகின்ற மாசு மறைக்கத் தோன்றாது கெடும்.

முன்பே தோற்றமுடைத்தாகிய குடியுங் கெடுமென்றவாறு.

602. மடிசெய்தலை மடித்து ஒழுகுக: தங்குடியை உயர் குடியாக வேண்டுபவர்.

இது சோம்பாமை வேண்டுமென்றது.

603. நெஞ்சத்து மடியினாலே வினையின்கண் மடித்தலைச் செய்து ஒழுகாநின்ற அறிவிலி பிறந்தகுடி தனக்கு முன்பே கெடும்.

சோம்புடையார்க்கு உளதாகுங் குற்றம் என்னையென்றார்க்கு இது கூறப்பட்டது.

604. குடியுங் கெட்டுக் குற்றமும் மிகும்; சோம்பின்கண்ணே பொருந்தி மாட்சிமைப்பட்ட முயற்சி யில்லாதார்க்கு.

இது பிறாரால் இகழப்படுவ ரென்றது.

605. விரைந்து செய்யும் வினையை நீட்டித்தலும், செய்ய நினைந்ததனை மறத்தலும், அதனைச் செய்தற்குச் சோம்புதலும், அதனைச் செய்யாது உறங்குதலுமாகிய இவை நான்கும் கெடுந்தன்மையுடையார் காதலித்தேறும் மரக்கலம்.

காமக்கல னென்றது தன்னைக் காதலித்தேறினாரை நடுக்கடலுள் தள்ளும் மரக்கலம் போலவென்றது. இத்துணையும் மடிமையினால் வருங் குற்றங் கூறினார்.

606. பூமியையுடைய வேந்தர் பலபொருளினாலும் அமைந்த விடத்தும் மடியுடையாராயின், மாட்சிமைப்பட்ட பொருளைப் பெறுதல் இல்லை.

இது செல்வமுண்டாயினும் கெடுவரென்றது.

607. கழறுதலைச் செய்து பிறர் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர், மடியைச் செய்து மாட்சிமைப்பட்ட முயற்சி யில்லாதார்.

608. குடிப்பிறந்தார்மாட்டே மடிமை தங்குமாயின் அது தன்பகைவர்க்கு அடிமையாக்கிவிடும்.

இது கீழ்ப்படுத்தலேயன்றி அடிமையும் ஆக்குமென்றது.

609. குடியை யாளுதலுடைமையின்கண் வந்த குற்றமானது ஒருவன் சோம்புடைமையைக் கெடுக்கக் கெடும்.

குற்றம்- குடிக்குவேண்டுவன செய்யாமையால் வருங்குற்றம்.

610. மடியில்லாத மன்னவன் எய்துவன், அடியினால் அளந்தானால் கடக்கப்பட்ட வுலகமெல்லாம் ஒருங்கே.

இது மடியின்மையால் வரும் பயன் கூறிற்று.

# 62. ஆள்வினை உடைமை

611 அருமை உடைத்து-என்று, அசாவாமை வேண்டும்;
பெருமை, முயற்சி தரும்.

612 வினைக்-கண் வினைகெடல் ஓம்பல்; வினைக்-குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று, உலகு!

613 தாளாண்மை என்னும் தகைமைக்-கண் தங்கிற்றே;
வேளாண்மை என்னும் செருக்கு.

614 தாளாண்மை இல்லாதான் வேளாண்மை; பேடி-கை
வாள்-ஆண்மை போல, கெடும்.

615 இன்பம்-விழையான், வினை-விழைவான்; தன்-கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும்-தூண்.

616 முயற்சி, திருவினை ஆக்கும்; முயற்று-இன்மை,
இன்மை புகுத்தி-விடும்.

617 'மடி-உளாள், மா-முகடி' என்ப; மடி-இலான்
தாள்-உளாள், தாமரையினாள்.

618 பொறி-இன்மை, யார்க்கும் பழி-அன்று; அறிவு-அறிந்து
ஆள்வினை-இன்மை, பழி.

619 தெய்வத்தான் ஆகாது-எனினும்; முயற்சி, தன்-
மெய்-வருத்தக் கூலி-தரும்.

620 ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவு-இன்றித்
தாழாது உஞற்றுபவர்.

611. ஒரு வினையைச் செய்தல் அருமையுடைத்தென்று முயலாமையைத் தவிர்தல் வேண்டும்: முயற்சி தனக்குப் பெருமையைத் தருமாதலால்.

இது வினைசெய்து முடித்தல் அரிதென்று தவிர்தலாகாதென்றது.

612. வினைசெய்யுங் காலத்து வினைகெடுதலைத் தவிர்க: வினைக்குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்டதன்று.

இது தொடங்கின வினையைக் குறைபட விடலாகாதென்றது.

613. முயற்சியாகிய நன்மையின்கண்ணே கிடந்தது: பிறர்க்கு உபகரித்தலாகிய பெருமிதம்.

இஃது அறஞ் செய்தலும் இதனாலே யாகுமென்றது.

614. முயற்சியில்லாதான் பிறர்க்கு உபகரித்தல், படைகண்டாலஞ்சுமவன் கைவாள் பிடித்தாற்போலக் கெடும்.

இஃது அறம் செய்யமாட்டானென்றது.

615. தன்னுடம்பிற்கு இன்பத்தை விரும்பாது வினை செய்தலை விரும்புமவன் தன்

கேளிர்க்கு உற்ற துன்பத்தை நீக்கி அவரைத் தளராமல் தாங்குவதொரு தூணாம். ஆதலால் வருத்தம் பாராது முயலவேண்டு மென்பது.

616. முயற்சி செல்வத்தை உண்டாக்கும்: முயலாமை வறுமையை உண்டாக்கும்.

இது செல்வமும் நல்குரவும் இவற்றாலே வருமென்றது.

617. வினை செய்யுங்கால் அதனைச் செய்யாது சோம்பியிருப்பானது சோம்பலின்கண்ணே மூதேவி உறைவள்; அதனைச் சோம்பலின்றி முயலுபவன் முயற்சியின்கண்ணே திருமகள் உறைவளென்று சொல்லுவர்.

இது வினையை மடியின்றிச் செய்யவேண்டுமென்பது கூறிற்று.

618. யார்க்கும் புண்ணியமின்மை குற்றமாகாது. அறியத் தகுவன அறிந்து முயற்சியில்லாமையே குற்றமாவது.

அறிவு- காரிய அறிவு. புண்ணியமில்லாதார் முயன்றால் வருவதுண்டோ என்றார்க்கு, இது கூறப்பட்டது.

619. புண்ணியம் இன்மையால் ஆக்கம் இல்லையாயினும் ஒருவினையின் கண்ணே முயல்வானாயின் முயற்சி தன்னுடம்பினால் வருந்திய வருத்தத்தின் அளவு பயன் கொடுக்கும்.

இது புண்ணியமில்லையாயினும் பயன் கொடுக்கும் என்றது.

620. ஒரு வினையை மனத்திற் றளர்வு இன்றி நீட்டியாமல் முயலுமவர், பயன்படாமல் விலக்குகின்ற தீய வினையையும் முதுகு புறங்காண்பர்.

இஃது ஊழ்தன்னையும் வெல்வ ரென்றது.

# 63. இடுக்கண் அழியாமை

621 இடுக்கண் வருங்கால் நகுக! அதனை
அடுத்து-ஊர்வது அஃது-ஒப்பது இல்.

622 வெள்ளத்து அனைய இடும்பை; அறிவு-உடையான்
உள்ளத்தின் உள்ள, கெடும்.

623 இடும்பைக்கு இடும்பை படுப்பர்; இடும்பைக்கு
இடும்பை படாஅதவர்.

624 மடுத்த-வாய்-எல்லாம் பகடு-அன்னான்; உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு-உடைத்து.

625 அடுக்கி வரினும், அழிவு-இலான்; உற்ற
இடுக்கண், இடுக்கண்-படும்.

626 'அற்றேம்!' என்று அல்லற்படுபவோ; 'பெற்றேம்!' என்று
ஓம்புதல் தேற்றாதவர்.

627 'இலக்கம், உடம்பு-இடும்பைக்கு' என்று, கலக்கத்தைக்
கையாறாக்-கொள்ளாதாம், மேல்.

628 இன்பம் விழையான், 'இடும்பை-இயல்பு' என்பான்;
துன்பம் உறுதல் இலன்.

629 இன்பத்துள், இன்பம் விழையாதான்; துன்பத்துள்,
துன்பம் உறுதல் இலன்.

630 இன்னாமை இன்பம் எனக்-கொளின்; ஆகும்-தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.

621. தனக்குத் துன்பம் வந்த காலத்தும் நகுக: அத்துன்பத்தை மேன்மேலும் அடர்க்க வல்லது அந்நகுதல் போல்வது பிறிதில்லை.

இஃது இடுக்கணுக்கு அழியாமை வேண்டுமென்றது.

622. வெள்ளம்போன்ற துன்பம், அறிவுடையவன் நெஞ்சினாலே வினைப்பயனென்று நினைக்கக் கெடும்.

இது பலவா யொருங்கு வரினும், அறிவுடையா னுற்ற இடுக்கண் கெடுமென்றது.

623. துன்பத்திற்குத் துன்பத்தைச் செய்வார், அத் துன்பத்திற்குத் துன்ப முறாதவர்.

இது பொறுக்க வேண்டுமென்றது. இவை மூன்றும் பொதுவாகக் கூறப்பட்டன.

624. இடுக்கண் வந்து உற்றவிடத்தெல்லாம் பகடுபோலத் தளர்வின்றிச் செலுத்த வல்லவனை உற்ற துன்பம் இடர்ப்படுதலை யுடைத்து.

இது தளர்வில்லாதவன் உற்ற துன்பம் கெடுமென்றது.

625. மேன்மேலே துன்பம் வந்தனவாயினும், மனனழிவில்லாதவன் உற்ற இடுக்கண், தான் இடுக்கண்படும்.

இது மனனழிவில்லாதவன் உற்றதுன்பம் மேன்மேல் வரினுங் கெடுமென்றது.

626. பொருளற்றே மென்று இரங்கித் துன்ப முறார், அதனைப் பெற்றோமென்று போற்றி வைத்தலை நன்றென்று தெளியாதவர்.

இது பொருட்கேட்டினால் வருந் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

627. உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று கருதி, தமக்கு உற்ற துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளார் மேலாயினர்.

இது மேல் நன்மையாற் றவஞ் செய்யுங்கால் வருந் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

628. இன்ப முறுதலை விரும்பாது இடும்பை யுறுதலை இயல்பாகக் கொள்ளுமவன் துன்ப முறுதல் இல்லை.

இஃது இடுக்கணை யியல்பாகக் கொள்ளல்வேண்டு மென்றது.

629. இன்பம் நுகரு மிடத்து அதனை விரும்பாதவன், அதனால் வருந்துன்பம் நுகரு

மிடத்து வருத்த முறுதலிலன். இன்பம் நுகரு மிடத்து அதனை விரும்பாமையாவது அவ்விடத்துத் தான் அழிந்து நில்லாமை. இது காமத்தால் வருந்துன்பத்திறகு அழியாதாரைக் கூறிற்று.

630. இன்னாமையை இன்பம்போலக் கொள்வானாயின் அது தன் பகைவரும் விரும்புவதொரு சிறப்பாம்.

மேற்கூறியவாற்றால் செய்தலே யன்றித் துன்பத்தையும் இன்பமாகக் கொள்வனாயின் அவனைப் பகைவரும் மதிப்பரென்றவாறு.

# 64. அமைச்சு

631 கருவியும், காலமும், செய்கையும், செய்யும்-
அருவினையும்; மாண்டது-அமைச்சு.

632 வன்கண், குடி, காத்தல், கற்று-அறிதல், ஆள்வினையோடு;
ஐந்துடன் மாண்டது-அமைச்சு.

633 பிரித்தலும், பேணிக்-கொளலும், பிரிந்தார்ப்-
பொருத்தலும்; வல்லது-அமைச்சு.

634 தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச்-
சொல்லலும் வல்லது-அமைச்சு.

635 அறன்-அறிந்து, ஆன்று-அமைந்த-சொல்லான்;
எஞ்ஞான்றும்
திறன்-அறிந்தான், தேர்ச்சித் துணை.

636 மதி-நுட்பம் நூலோடு உடையார்க்கு; அதி-நுட்பம்
யா-உள, முன் நிற்பவை?

637 செயற்கை அறிந்தக்-கடைத்தும்; உலகத்து
இயற்கை-அறிந்து, செயல்!

638 அறி-கொன்று, அறியான் எனினும்; உறுதி-
உழையிருந்தான் கூறல், கடன்.

639 பழுது-எண்ணும் மந்திரியின்; பக்கத்துள் தெவ்-ஓர்
எழுபது கோடி உறும்.

640 முறைப்படச் சூழ்ந்தும், முடிவிலவே செய்வர்;
திறப்பாடு இலாஅதவர்.

631. செய்தற்கு அரியவினையும், அதற்காங்கருவியும், அதற்காங்காலமும், அதனையிடையூறு படாமற் செய்து முடித்தலுமாகிய இந்நான்கும் மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவான்.

செய்தற்கு அரியவினையாவது மறுமண்டலங்கோடல்; கருவியாவது யானை-குதிரை முதலிய படை: காலமாவது நீரும் நிழலுமுள்ள காலம்; செய்தலாவது மடியின்றிச் செய்தல்.

632. அஞ்சாமையும், குடிகாத்தலும், இந்திரியங்களைக் காத்தலும், நூல்முகத்தானறிதலும், முயற்சியும் என்னும் ஐந்தும் கூட மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவான்.

இவை அமைச்சனாவதன் முன்னே வேண்டுமாதலின், இது முற்கூறப்பட்டது.

633. மாற்றரசரிடத்து உள்ளாரையும் நட்பாகிய அரசரையும் அவரிடத் தினின்று பிரித்தலும், அவ்வாறு பிரிக்கப்பட்டாரை விரும்பித் தம்மிடத்துக் கொளலும், தம்மிடத்து நின்று பிரிந்தாரைக் கூட்டிக் கொளலும் வல்லவன் அமைச்சனாவான்.

634. ஒருவினையை நன்றாக ஆராய்தலும், அதனைச் செய்ய நினைத்தால் முடியுமாறெண்ணிச் செய்தலும், ஐயமாகிய வினையைத் துணிந்து சொல்லுதலும் வல்லவன் அமைச்சனாவான்.

635. அறத்தினையும் அறிந்து, நிரம்பியமைந்த சொல்லினையும் உடையனாய் எல்லாக்காலத்தினும் செய்யுந் திறன்களையும் அறியவல்லவன் அரசற்குச் சூழ்ச்சித் துணையாய அமைச்சனாவான்.

636. மேற்கூறிய நூற்கல்வியோடு கூட நுண்ணியதாகிய மதியினையும் உடையார்க்கு அதனினும் நுண்ணியவாய் மாற்றாராலெண்ணப்பட்டு எதிர் நிற்கும் வினைகள் யாவுள?

இது மேற்கூறியவற்றோடு மதியும் வேண்டு மென்றது.

637. செயத்தகுவன அறிந்த விடத்தும் அது செய்யுங்கால் உலக நடை அறிந்து செய்க.

உலகநடை அறிதலாவது அரசர் சீலமும் பரிவாரத்திலுள்ளார் நிலைமையும் அறிதல். இவை யறியாது செய்யிற் குற்றமாமென்றவாறு.

638. அரசன், அமைச்சன் கூறிய பொருளை யறிக: அவன் ஒன்றறியானாயினும் அவனுக்கு உறுதியாயினவற்றை அருகிருந்த அமைச்சன் சொல்லுதல் கடன்.

இஃது அரசன் கேளா னென்று சொல்லா தொழிதலாகாதென்று கூறிற்று.

639. குற்றப்பட எண்ணும் அமைச்சரில் எழுபது கோடி மடங்கு நல்லர், உட்பகையாய்த் தன் னருகிலிருப்பவர்.

இவை யிரண்டும் மந்திரிகளுள் விடப்படுவாரது இலக்கணங் கூறின.

640. அடைவுபட எண்ணியும் தம்மால் முடிவது இல்லாதவற்றையே செய்யா நிற்பர்; வினை செய்யுந் திறன் இல்லாதார்.

இஃது எண்ணவல்லாராய் வினை செய்ய மாட்டாரென்று கூறிற்று.

## 65. சொல் வன்மை

641 ‘நா-நலம்’ என்னும் நலன்-உடைமை; அந்-நலம்
யா-நலத்து உள்ளதூஉம் அன்று.

642 ஆக்கமும், கேடும், அதனால் வருதலால்;
காத்து-ஓம்பல், சொல்லின்-கண் சோர்வு.

643 கேட்டார்ப் பிணிக்கும் தகை-அவாய்; கேளாரும்
வேட்ப, மொழிவது ஆம்-சொல்.

644 திறன்-அறிந்து சொல்லுக, சொல்லை; அறனும்,
பொருளும் அதனின்-ஊங்கு இல்.

645 சொல்லுக சொல்லை; பிறிது-ஓர்-சொல் அச்-சொல்லை
வெல்லும்-சொல் இன்மை அறிந்து.

646 வேட்பத்-தாம்-சொல்லி, பிறர்-சொல் பயன்-கோடல்
மாட்சியின் மாசு-அற்றார் கோள்.

647 சொலல்-வல்லன், சோர்வு-இலன், அஞ்சான்; அவனை
இகல்-வெல்லல் யார்க்கும் அரிது.

648 விரைந்து தொழில்-கேட்கும் ஞாலம்; நிரந்து-இனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

649 பல-சொல்லக் காமுறுவர், மன்ற; மாசு-அற்ற
சில-சொல்லல் தேற்றாதவர்.

650 இணர்-ஊழ்த்தும் நாறா மலர்-அனையர்; கற்றது
உணர விரித்து-உரையாதார்.

641. நாவினது நலமென்று சொல்லப்படுகின்ற நலம் ஒருவற்கு உடைமையாவது; அந்நலம் எல்லா நலத்துள்ளும் உள்ள தொரு நலமன்று; மிக்கது.

எல்லா நலத்துள்ளும் உள்ளதொரு நலமன்று என்றமையால் இன்பம் பயக்குமென்பதாயிற்று.

642. ஆக்கமும் கேடும் சொல்லினால் வருதலால் சொல்லின்கண் சோர்வைப் போற்றிக் காக்க வேண்டும்.

இது சோர்வுபடாமற் சொல்லல்வேண்டு மென்றது.

643. வினாவினாரைப் பிணித்துக் கொள்ளுந் தகையவாய், வினாவாதாரும் விரும்புமாறு சொல்லுதல் சொல்லாவது.

இது மேம்படக் கூறல்வேண்டு மென்றது.

644. சொல்லைச் சொல்லுந் திறனறிந்து சொல்லுக; அதனின் மேம்பட்ட அறனும் பொருளும் இல்லை.

தாமறியவே புறங்கூறாமையும் பயனில சொல்லாமையும் பொய்கூறாமையும் உளவாம்: ஆதலான் அறனாயிற்று; அரசன் மாட்டும் ஏனையோர்மட்டும் தகுதியறிந்து சொல்லுதலான் பொருளாயிற்று.

645. சொல்லைச் சொல்லுக; தான் சொல்ல நினைத்த அச்சொல்லைப் பிறிதொரு சொல்லாய் வெல்லுஞ் சொல் இல்லை யாதலை யறிந்து.

646. தாம் சொல்லுங்கால் பிறர் விரும்புமாறு சொல்லிப் பிறர் சொல்லுங்கால் அச்சொல்லின் பயனைத் தெரிந்து கொள்ளுதல் மாட்சிமையிற் குற்ற மற்றாரது கோட்பாடு.

இது நயம்படக் கூறுதலே யன்றி, பிறர் சொல்லுஞ் சொல்லறிந்தும் சொல்லல் வேண்டு மென்றது.

647. ஒருவன் சொல்ல வல்லவனுமாய் அதனைச் சோர விடுதலும் இல்லானாய் அஞ்சாது சொல்லுதலும் உடையவனாயின், அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது.

648. இனிதாகச் சொல்ல வல்லாரைப் பெற்றாராயின் உலகத்தார் மேவி விரைந்து

சென்று செய்யுந் தொழில் யாது என்று கேட்பர். இது சொற்களைச் சொல்லின் இனிதாகச் சொல்லவேண்டு மென்றது.

649. பல சொற்களைச் சொல்லக் காதலியா நிற்பர், குற்றமற்ற சில சொற்களைத் தெளியச் சொல்லலை அறியமாட்டாதார்.

மன்ற - தெளிய. இது சுருங்கச் சொல்லல் வேண்டு மென்றது.

650. இணராய் மலர்ந்து நாற்ற மில்லாத பூவை யொப்பர், கற்றதனைப் பிறரறிய விரித்துச் சொல்ல மாட்டாதார்.

இது சுருங்கச் சொல்லுதலே யன்றி வேண்டுமிடத்து விரித்துஞ்சொல்லல் வேண்டு மென்றது.

# 66. வினைத் தூய்மை

651 துணை-நலம் ஆக்கம் தரூஉம்; வினை-நலம்
வேண்டிய எல்லாம் தரும்.

652 என்றும் ஒருவுதல் வேண்டும்; புகழொடு
நன்றி பயவா வினை.

653 ஓஒதல் வேண்டும், ஒளி-மாழ்கும் செய்வினை;
'ஆஅதும்!' என்னுமவர்.

654 இடுக்கண்-படினும், இளிவந்த செய்யார்;
நடுக்கு-அற்ற காட்சியவர்.

655 'எற்று!'-என்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்று-அன்ன செய்யாமை நன்று.

656 ஈன்றாள் பசி-காண்பான் ஆயினும்; செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

657 பழி-மலைந்து எய்திய ஆக்கத்தின்; சான்றோர்
கழி-நல்குரவே தலை.

658 கடிந்த கடிந்து-ஒரார் செய்தார்க்கு; அவை-தாம்
முடிந்தாலும், பீழை தரும்.

659 அழக்-கொண்ட எல்லாம் அழப்-போம்; இழப்பினும்
பிற்பயக்கும், நற்பாலவை.

660 சலத்தால் பொருள்-செய்து ஏமாக்கல்; பசு-மண்-
கலத்துள் நீர்-பெய்து இரீஇயற்று.

651. துணைநலம் ஆக்கத்தைக் கொடுக்கும்; வினைநலம் அவ்வளவேயன்றி வேண்டிய எல்லாவற்றையும் ஒருங்கு கொடுக்கும்.

துணைநலம் ஆக்கங் கொடுத்தல் எல்லாரானும் அறியப் படுதலின் ஈண்டு ஏதுவாக வந்தது.

652. எல்லாக் காலமும் தவிர்தல் வேண்டும், புகழொடு நன்மை பயவாத வினையை.

என்று மென்றது செயலற்ற காலமுமென்றது.

653. தமக்குப் புகழ்கெடவரும் வினையைச் செய்தலையும் ஆக்கங் கருதுவார் தவிர்க.

இது முன்புள்ள புகழ் கெடவரும் வினையையும் தவிர்க என்றது.

654. துன்பம் வரினும் இழிவாகிய வினைகளைச் செய்யார் துளக்க மற்ற தெளிவுடையார்.

இது பிறரால் இகழப்படுவன செய்யற்க வென்றது. இதனையும் கடிய வேண்டு மென்பது கூறப்பட்டது.

655. துணியப்பட்ட தென்று பின்னிரங்கப்படும் வினையைச் செய்யா தொழிக; வினைசெய்வானாயின் அவை போல்வனவுஞ் செய்யாமையே நல்லது.

இது பின்னிரங்கப்படும் வினையைச் செய்யலாகாதென்றது.

656. தன்னைப் பயந்தாள் பசிகண்டானாயினும் சான்றோரால் பழிக்கப்படும் வினையைச் செய்யாதொழிக.

இது நல்லோர் பழிக்கும் வினையைத் தவிர்க என்றது.

657. பழியைச் சுமந் தெய்திய ஆக்கத்தினும், சான்றோர் மாட்டு உளதாகிய மிக்க நல்குரவே தலைமையுடைத்து.

மேற்கூறியவாறு செய்யின் நல்குரவு உளதாகு மென்றார்க்கு இது கூறப்பட்டது.

658. நல்லோரால் கடியப்பட்டவற்றைக் கடிந்து நீக்காது செய்யுமவர்க்கு அவ்வினைகள் தாம் கருதியவாற்றான் முடிந்த பின்பும் பீடையைத் தரும்.

இது நன்மையல்லாத வினையைச் செயின், அது தீமை தருமென்றது. அவை பின்பு காட்டப்படும்.

659. பிறர் அழக்கொண்ட பொருள்களெல்லாம் தாமும் அழப்போம்: அவ்வாறன்றி அறப்பகுதியில் கொண்ட பொருள்கள் இழந்தாராயினும் பின்பு பயன்படும்.

இது தேடினபொருள் போமென்றது.

660. வஞ்சத்தாலே பொருள்தேடி மகிழ்ந்திருத்தல், பசுமட்கலத்திலே நீரை முகந்து

வைத்த தன்மைத்து. இது தானும் பொருளுங் கூடிக் கெடு மென்றது.

# 67. வினைத் திட்பம்

661 வினைத்-திட்பம் என்பது ஒருவன் மனத்-திட்பம்;
மற்றைய எல்லாம் பிற.

662 ஊறு-ஒரால், உற்ற-பின் ஒல்காமை; இவ்-இரண்டின்
ஆறு-என்பர், ஆய்ந்தவர் கோள்.

663 கடைக்-கொட்கச் செய்-தக்கது ஆண்மை; இடைக்-கெ
கொட்கின்,
எற்றா விழுமம் தரும்.

664 சொல்லுதல் யார்க்கும் எளிய; அரிய-ஆம்,
சொல்லிய வண்ணம் செயல்.

665 வீறு-எய்தி மாண்டார் வினைத்-திட்பம்; வேந்தன்-கண்
ஊறு-எய்தி, உள்ளப்படும்.

666 எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப்-பெறின்.

667 உருவு-கண்டு எள்ளாமை வேண்டும்; உருள்-பெருந்-தேர்க்கு
அச்சு-ஆணி அன்னார் உடைத்து.

668 கலங்காது கண்ட வினைக்கண்; துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

669 துன்பம் உறவரினும் செய்க; துணிவு-ஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

670 எனைத்-திட்பம் எய்தியக்-கண்ணும், வினைத்-திட்பம்
வேண்டாரை வேண்டாது, உலகு.

661. வினையினிடத்துத் திண்மை யென்று சொல்லப்படுவது ஒருவன் மனத்து உண்டான திண்மை; அதனையொழிய மற்றவையெல்லாம் திண்மையென்று சொல்லப்படா.

மற்றவையென்றது கருவியும் உபாயமும்.

662. வினைசெய்யுங்கால் உறும் துன்பத்தை ஓரார் ஆதலும் அவ்விடத்துத் துன்பமுற்றால் தளரார் ஆதலுமாகிய இவ்விரண்டினது நெறியென்று சொல்லுவார் நீதி நெறியை ஆராய்ந்தவர்.

663. ஒரு வினையைத் தொடங்கினால் முடிவிலே சென்று மீளல் செய்வது ஆண்மையாவது; இடையிலே மீள்வானாயின் அது மிகுதியைக் கெடாத நோயைக் கொடுக்கும்.

சென்று மீளல் சுழல்தல் ஆயிற்று. இது தொடங்கின வினையை முடியச் செய்யவேண்டுமென்றது.

664. ஒரு வினையை இவ்வாறு செய்தும் என்று சொல்லுதல் யாவர்க்கும் எளியவாம். அதனைச் சொல்லிய வாற்றால் செய்து முடித்தல் யாவர்க்கும் அரியவாம்.

665. மிகுதியெய்தி மாட்சிமைப்பட்டாரது வினைத் திட்பமானது அரசன்மாட்டு உறுதலையெய்தி எல்லாராலும் நினைக்கப்படும்.

இது வினைத்திட்ப முடையாரை எல்லாரும் விரும்புவரென்றது.

666. தாம் எண்ணிய பொருள்களை எண்ணினபடியே பெறுவர்: அவ்வாறு எண்ணினவர் அவ்வினையைச் செய்து முடிக்குந் திண்மையுடையாராகப் பெறுவாராயின்.

இது வினையின்கண் திண்மை வேண்டு மென்றது.

667. யாவரையும் வடிவுகண்டு இகழ்தலைத் தவிர்தல் வேண்டும். உருளாநின்ற பெரிய தேர்க்குக் காலாய் நடக்கின்ற உருளையைக் கழலாமல் தாங்கும் அச்சின் புறத்துச் செருகின சிற்றாணியைப் போலத் திண்ணியாரை இவ்வுலகம் உடைத்து: ஆதலால்.

668. கலக்கமின்றி ஆராய்ந்துகண்ட வினையிடத்துப் பின்னைத் துளக்கமின்றி அதனை நீட்டியாது செய்க.

இது விரைந்து செய்யவேண்டு மென்றது.

669. முற்பாடு துன்பம் உறவரினும் துணிந்து செய்க, பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை.

670. கருவி முதலான வெல்லாவற்றானும் திண்மை பெற்றவிடத்தும் வினையினது திண்மையை விரும்பாதாரை உலகத்தார் விரும்பார்.

பலபொருளும் அமைதியும் உடையார்க்கு வினைத்திட்பமின்றானால் வருங்குற்ற மென்னை யென்றார்க்கு இது கூறப்பட்டது.

## 68. வினை செயல் வகை

671 சூழ்ச்சி முடிவு துணிவு-எய்தல்; அத்-துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

672 தூங்குக, தூங்கிச் செயற்பால; தூங்கற்க,
தூங்காது செய்யும் வினை.

673 ஒல்லும்-வாய் எல்லாம் வினை-நன்றே; ஒல்லாக்கால்,
செல்லும்-வாய் நோக்கிச் செயல்.

674 வினை, பகை என்று-இரண்டின் எச்சம்; நினையுங்கால்,
தீ-எச்சம் போலத் தெறும்.

675 பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்
இருள்-தீர எண்ணிச் செயல்!

676 முடிவும், இடையூறும், முற்றியாங்கு-எய்தும்
படுபயனும், பார்த்துச் செயல்!

677 செய்வினை செய்வான்-செயல்முறை; அவ்-வினை
உள்-அறிவான் உள்ளம் கொளல்.

678 வினையான் வினை-ஆக்கிக்-கோடல்; நனை-கவுள்
யானையால் யானை யாத்தற்று.

679 நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக்-கொளல்.

680 உறை-சிறியார் உள்-நடுங்கல் அஞ்சி; குறை-பெறின்,
கொள்வர் பெரியார்ப்-பணிந்து.

671. சூழ்ச்சிக்கு எல்லை துணிவு பெறுதல்: அவ்வாறு துணிந்தவினை நீட்டித்தலின்கண்ணே கிடைக்குமாயின் அது தீதாம்.

இது வினைசெயத் துணிந்த காலத்து நீட்டிக்குமாயின் அதனை யறிந்து பகைவர் தம்மைக் காப்பார்: ஆதலால் நீட்டியாது விரைந்து வினை செய்யவேண்டுமென்றது.

672. தாழ்த்துச் செய்ய வேண்டும் வினையைத் தாழ்த்துச் செய்க: தாழாமற் செய்யவேண்டும் வினையைத் தாழாமற் செய்க.

673. இயலும் இடமெல்லாம் வினைசெய்தல் நன்று: இயலாத காலத்து அதனை நினைந்

திருந்து இயலும் இடம் பார்த்துச் செய்க. இது வினைசெய்து முடிந்ததில்லை யென்று இகழாது பின்பு காலம் பார்த்துச் செய்கவென்றது.

674. வினையும் பகைமையு மென்னும் இரண்டினது ஒழிபு விசாரிக்குங்காலத்துத் தீயின் ஒழிவுபோலக் கெடுக்கும்.

எச்சம்- சேஷம். இது வினைசெய்யுங்கால் சிறிதொழியச் செய்தோமென்று விடலாகாதென்றது.

675. பொருளும், கருவியும், காலமும், வினையும் வினைசெய்யும் இடமுமென்னும் ஐந்தினையும் மயக்கந்தீர எண்ணிப் பின்பு வினைசெயத் தொடங்குக.

இவற்றுள் ஒவ்வொன்றும் இரண்டு இரண்டு வகைப்படும்:-

1. பொருளாவது கெடும் பொருளும் பெறும் பொருளும்,
2. கருவியாவது தனக்கு உள்ள படையும் மாற்றரசர்க்கு உள்ள படையும்,
3. காலமாவது தனக்காங்காலமும் மாற்றரசர்க் காங்காலமும்,
4. வினையாவது தான் செய்யும் வினையும் பகைவர் செய்யும் வினையும்,
5. இடமாவது தனக்கா மிடமும் பகைவர்க்கா மிடமும் ஆம். இவை செய்யும்

வினைக்கு முற்பட வேண்டுதலின் முற் கூறப்பட்டன.

676. வினை தொடங்கினால் அது முடியும் வண்ணமும் அதற்குவரும் இடையூறும் முடிந்தா லுண்டாகும் பெரும் பயனும் முன்பே கண்டு பின்பு வினைசெய்க.

677. செய்யத்தகும் வினையைச் செய்யுமவன் செய்யும் முறைமையாவது அவ்வினையினது உளப்பாடு அறிவானது உள்ளத்தைக் கூட்டிக் கோடல்.

678. ஒரு வினையால் பிறிதொரு வினையைச் செய்து கொள்வது, ஒரு மதயானையால் பிறிதொரு மதயானையைப் பிணித்தாற்போலும்.

இது தமக்கு ஒரு பகைவர் தோன்றினால் அவர்க்குப் பகையாயினாரை அவரோடு பகைக்குமாறு பண்ணுவார் பக்கல் பகையாய் வருவாரில்லை யென்றது.

679. தஞ் சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும் பகைவரைப் பொருந்தி நட்பாகக் கொள்ளுதலை விரைந்து செய்யவேண்டும்.

இஃது அரசர்க்கும் ஒக்கக் கொள்ளவேண்டு மாயினும் அமைச்சர்தம் தொழிலாக ஈண்டுக் கூறப்பட்டது.

680. உறையும் இடம் சிறியார் தமது இடம் நடுங்குதற்கு அஞ்சித் தமது
குறைதீரப் பெறின் தம்மின் பெரியாரைத் தாழ்ந்து நட்பாகக் கொள்வர்.

இது சிறையானால் இவ்வாறு செய்தல் வேண்டுமென்றது.

# 69. தூது

681 அன்பு-உடைமை, ஆன்ற-குடிப்-பிறத்தல், வேந்து-அவாம்
பண்பு-உடைமை; தூது-உரைப்பான் பண்பு.

682 அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை; தூது-
உரைப்பார்க்கு
இன்றியமையாத மூன்று.

683 நூலாருள் நூல்-வல்லன் ஆகுதல்; வேலாருள்
வென்றி வினை-உரைப்பான் பண்பு.

684 அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி; இம்-மூன்றன்
செறிவு-உடையான் செல்க, வினைக்கு.

685 தொகச்-சொல்லி, தூவாத-நீக்கி, நகச்-சொல்லி;
நன்றி பயப்பது ஆம், தூது.

686 கற்று, கண்-அஞ்சான், செலச்-சொல்லி, காலத்தால்-
தக்கது அறிவது-ஆம்; தூது.

687 கடன்-அறிந்து, காலம்-கருதி, இடன்-அறிந்து,
எண்ணி, உரைப்பான் தலை.

688 தூய்மை, துணைமை, துணிவு-உடைமை; இம்-மூன்றின்
வாய்மை வழி-உரைப்பான் பண்பு.

689 விடு-மாற்றம் வேந்தர்க்கு-உரைப்பான்; வடு-மாற்றம்
வாய்-சோரா வன்கணவன்.

690 இறுதி பயப்பினும், எஞ்சாது, இறைவற்கு
உறுதி பயப்பது-ஆம்; தூது.

681. அரசன்மாட்டு அன்புடைமையும், அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்தனால் விரும்பப்படும் குணமுடைமையும் தூதாகிச் சென்று சொல்லுமவனது இயல்பாம்.

வேந்தனால் விரும்பப்படும் குணமுடைமையாவது அவன் விரும்புவனவற்றைத் தான் விரும்பாமை.

682. அன்புடைமையும், அறிவுடைமையும், தெரிந்த சொல்வன்மையுடைமையும், தூதுரைப்பாற்கு இன்றியமையாத மூன்று குணங்களாம்.

683. எல்லா நூல்களையும் கற்றார்முன்னர் அந்நூல்களைத் தானுஞ் சொல்ல வல்லவனாதல், வேலுடையார் முன்னின்று தன்னரசனுக்கு வெற்றியாகிய வினையைச் சொல்லுமவனது இயல்பாம்.

684. அறிவும், வடிவும், தெரிந்த கல்வியுமாகிய இம் மூன்றினது அடக்கமுடையவன் வினைக்குச் செல்க.

அறிவு- இயற்கையறிவு.

685. சுருங்கச்சொல்லி, விரும்பாத சொற்களை நீக்கி, மகிழுமாறு சொல்லித் தன்னரசனுக்கு நன்மையைத் தருமவன் தூதனாவான்.

இது சொல்லுமாறு கூறிற்று.

686. தன்னரசன் சொன்ன மாற்றத்தைச் சொல்லுங்கால் பகையரசன் வெகுண்டானாயின் அது மாற்றுதற்காம் உபாயத்தைக் கற்று, எவ்விடத்தினும் அஞ்சுதலின்றி மகிழ்ச்சி வருமாறு இசையச் சொல்லி நாளோடே கூடச் செய்யத் தகுவன அறிந்து சொல்ல வல்லவன் தூதனாவான்.

687. காரியம் நின்ற முறைமையை யறிந்து காலத்தையும் நினைத்து இடமும் அறிந்து தானேயெண்ணிச் சொல்லவல்லவன் தலையான தூதனாவான்.

இது தலையான தூதரிலக்கணம் கூறிற்று.

688. தூய்மையுடைமையும், சுற்றமுடைமையும், ஒரு பொருளை யாராய்ந்து துணிதலுடைமையும், இம்மூன்றின்கண்ணும் மெய்யுடைமையும் தூதற்கு இயல்பாம்.

தூய்மை- மெய்யும் மனமும் தூயனாதல்.

689. தன்னரசன் சொல்லிவிட்ட மாற்றத்தைப் பகை யரசர்க்குச் சொல்லுமவன் தன்னரசனுக்கு வடுவாகுஞ் சொற்களை மறந்துஞ் சொல்லாத அஞ்சாமையையுடைய தூதனாவான்.

690. தனக்கு இறுதி வருமாயினும், ஒழியாது தன்னிறைவற்கு நன்மையைத் தருவது தூதாவது.

# 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

691 அகலாது, அணுகாது, தீக்-காய்வார் போல்க;
இகல்-வேந்தர்ச் சேர்ந்து-ஒழுகுவார்.

692 மன்னர் விழைப விழையாமை; மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும்.

693 போற்றின் அரியவை போற்றல்; கடுத்த-பின்
தேற்றுதல், யார்க்கும் அரிது.

694 செவிச்-சொல்லும், சேர்ந்த-நகையும் அவித்து-ஒழுகல்;
ஆன்ற பெரியார் அகத்து!

695 எப்-பொருளும் ஓரார், தொடரார், மற்று அப்-பொருளை;
விட்டக்கால் கேட்க, மறை!

696 குறிப்பு-அறிந்து, காலம்-கருதி, வெறுப்பு-இல
வேண்டுப, வேட்பச் சொலல்!

697 வேட்பன சொல்லி, வினை-இல எஞ்ஞான்றும்
கேட்பினும், சொல்லா விடல்!

698 ‘இளையர், இன-முறையர்’ என்று-இகழார்; நின்ற-
ஒளியொடு ஒழுகப்படும்.

699 ‘கொளப்பட்டேம்’ என்று-எண்ணி, கொள்ளாத-செய்யார்;
துளக்கு-அற்ற காட்சியவர்.

700 பழையம் எனக்-கருதி, பண்பு-அல்ல-செய்யும்
கெழு-தகைமை; கேடு தரும்.

691. மாறுபாடுடைய வேந்தரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர் அவரை அகலுவதுஞ் செய்யாது அணுகுவதுஞ் செய்யாது தீக்காய்வார்போல இருக்க.

இது சேர்ந்தொழுகுந் திறங்கூறிற்று.

692. எல்லார்க்கும் பொதுவாகக் கருதப்பட்டவையன்றி மன்னரால் விரும்பப்பட்டவற்றை விரும்பாதொழிக; அவ்விரும்பைாம அம்மன்னராலே நிலையுள்ள செல்வத்தைத் தருமாதலான்.

அவை நுகர்வனவும் ஒப்பனை முதலாயினவுமாம். இஃது அவற்றைத்தவிர்தல் வேண்டு மென்றது.

693. காப்பின், காத்தற்கு அரியனவற்றைக் காப்பாற்றுக: ஐயப்பட்ட பின்பு தெளிவித்தல் யாவர்க்கும் அரிது.

இஃது அடுத்தொன்று சொல்லாம லொழுகவேண்டும்மென்றது.

694. அமைந்த பெரியாரிடத்து ஒருவன் செவியுட் சொல்லுதலும், ஒருவன் முகம்பார்த்துத் தம்மில் நகுதலும் தவிர்ந்தொழுகல் வேண்டும்.

இது கூற்றும் நகையும் ஆகாவென்றது.

695. யாதொரு பொருளையும் செவிகொடுத்து ஓராது, தொடர்ந்து கேளாது, அப்பொருளை மறைத்தல் தவிர்ந்தால், பின்பு கேட்க.

இது கேட்டல் விருப்பமும் குற்ற மென்றது.

696. அரசன் குறிப்பறிந்து காலம் பார்த்து வெறுப்பில்லாதனவாய்ச் சொல்ல வேண்டுவனவற்றை விரும்புமாறு சொல்க.

இது சொல்லுந் திறம் கூறிற்று.

697. எப்போதும் வேந்தனால் விரும்பப்படுவனவற்றைச் சொல்லித் தமக்குப் பயன்படாதவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுக.

சொல்லாது விடலாவது தூதனை அரசர்க்குப் படை எவ்வளவு உண்டென்று பகையரசன் வினவினால் நீ அறியாததொன்றோ வென்று அளவு கூறாமை.

698. இவர் நமக்கு இளையரென்றும் இத்தன்மையாகிய முறையரென்றும் இகழாது அவர் பெற்றுநின்ற தலைமையோடே பொருந்த ஒழுக வேண்டும்.

699. யாம் அரசனாலே கைக்கொள்ளப்பட்டோமென்று நினைத்து அவன் நெஞ்சிற் கொள்ளாதன செய்யார், அசைவற்ற தெளிவுடையார்.

இஃது அரசன் நெஞ்சிற்குப் பொருந்தினவை செய்ய வேண்டுமென்றது.

700. யாம் பழைமையுடையோ மென்று கருதி இயல்பல்லாதனவற்றைச் செய்யும் நட்பின்தகைமை தமக்குக் கேட்டைத்தரும்

இது பின் பகையானவற்றைத் தவிரல் வேண்டும்மென்றது.

# 71. குறிப்பு அறிதல்

701 கூறாமை நோக்கி, குறிப்பு-அறிவான்; எஞ்ஞான்றும்
மாறா-நீர் வையக்கு அணி.

702 ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தொடு ஒப்பக் கொளல்!

703 குறிப்பின் குறிப்பு-உணர்வாரை, உறுப்பினுள்
யாது-கொடுத்தும், கொளல்!

704 குறித்தது கூறாமைக் கொள்வாரொடு, ஏனை-
உறுப்பு ஓரனையரால், வேறு.

705 குறிப்பின் குறிப்பு-உணரா-ஆயின்; உறுப்பினுள்
என்ன-பயத்தவோ, கண்?

706 அடுத்தது காட்டும் பளிங்கு-போல்; நெஞ்சம்
கடுத்தது காட்டும், முகம்.

707 முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும்,
காயினும், தான் முந்துறும்

708 முகம்-நோக்கி நிற்க அமையும்; அகம்-நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.

709 பகைமையும், கேண்மையும் கண்-உரைக்கும்; கண்ணின்-
வகைமை உணர்வார்ப் பெறின்.

710 'நுண்ணியம்' என்பார் அளக்கும்-கோல்; காணுங்கால்
கண் அல்லது, இல்லை பிற.

701. அரசன் மனநிகழ்ச்சியை அவன் கூறுவதன்முன்னே நோக்கி அறியுமவன், எல்லா நாளும் மாறாநீர் சூழ்ந்த வையத்துக்கு அணிகலனாவான்.

இது மக்களிற் சிறப்புடையனா மென்றது.

702. பிறர் நினைத்ததனை ஐயப்படுதலின்றித் துணிந்து அறியவல்லாரைத் தேவரோடு ஒப்பக் கொள்க.

703. ஒருவன் முகக்குறிப்பினானே அவனவன் மனக் குறிப்பையறிய மாட்டாவாயின் தன்னுறுப்புகளுடன் கண்கள் மற்றென்ன பயனைத் தருமோ?

இது குறிப்பறியாதார் குருடரோடு ஒப்பா ரென்றது.

704. நினைந்ததனைச் சொல்லாமைக் கொள்ளவல்லாரோடு மற்றையர் உறுப்பால் ஒருதன்மையர் அல்லது அறிவினான் வேற்றுமை யுடையார்.

இது குறிப்பறியாதார் அறிவில்லாதார் என்றது.

705. முகக் குறிப்பினாலே உள்ளக்கருத்தை அறியுமவர்களை, உறுப்பினுள் அவர் வேண்டுவது யாதொன்றாயினும் கொடுத்து, துணையாகக் கூட்டிக் கொள்க.

உறுப்பினுள் என்பதற்குத் தனக்கு அங்கமாயினவற்றுள் எனவும் அமையும்.

706. தன்னையடுத்த வண்ணத்தைக் காட்டுகின்ற பளிங்கைப்போல நெஞ்சத்து மிக்கதனை முகம் காட்டும்.

இது முகம் நெஞ்சத்து வெகுட்சி யுண்டாயின் கருகியும் மகிழ்ச்சியுண்டாயின் மலர்ந்தும் காட்டுமென்றது.

707. முகம்போல முதிர்ந்த அறிவுடையது பிறிதுண்டோ? ஒருவனை உவப்பினும் வெறுப்பினும் தான் முற்பட்டுக் காட்டும்.

குறிப்பறியுமாறு என்னை யென்றார்க்கு, இது முகம் அறிவிக்குமென்றது.

708. முகத்தை நோக்கி நிற்க அமையும்; தன் மனத்தை நோக்கி அறியலுற்றதனை அறியவல்லாரைப் பெறின்.

இஃது அமாத்தியர் குறிப்பை அரசனும் அறியவேண்டு மென்றது.

709. ஒருவனோடுள்ள பகைமையையும் நட்பையும் கண்கள் சொல்லும்; கண்ணினது வேறுபாட்டையறிவாரைப் பெறின்.

இது கண் கண்டு குறிப்பறிதல் நுண்ணியார்க்கல்லது பிறர்க்கரிதென்றது.

710. யாம் நுண்ணிய அறிவையுடையே மென்றிருக்கும் அமைச்சர் பிறரை அளக்குங் கோலாவது ஆராயுமிடத்து அவர் கண்ணல்லது பிற இல்லை.

# 72. அவை அறிதல்

711 அவை-அறிந்து, ஆராய்ந்து சொல்லுக; சொல்லின்
தொகை-அறிந்த தூய்மையவர்!

712 இடை-தெரிந்து, நன்கு-உணர்ந்து, சொல்லுக; சொல்லின்
நடை-தெரிந்த நன்மையவர்!

713 அவை-அறியார், சொல்லல்-மேற்கொள்பவர்; சொல்லின்
வகை அறியார்; வல்லதூஉம் இல்.

714 ஒளியார்-முன் ஒள்ளியர் ஆதல்! வெளியார்-முன்
வான்-சுதை வண்ணம் கொளல்!

715 'நன்று' என்றவற்றுள்ளும் நன்றே; முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

716 ஆற்றின் நிலை-தளர்ந்தற்றே; வியன்-புலம்-
ஏற்று, உணர்வார்-முன்னர் இழுக்கு.

717 கற்று-அறிந்தார் கல்வி விளங்கும்; கசடு-அற
சொல்-தெரிதல் வல்லார் அகத்து.

718 உணர்வது உடையார்-முன் சொல்லல்; வளர்வதன்
பாத்தியுள் நீர்-சொரிந்தற்று.

719 புல்-அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க; நல்-அவையுள்
நன்கு செலச்-சொல்லுவார்!

720 அங்கணத்துள் உக்க அமிழ்து-அற்றால்; தம்-கணத்தர்
அல்லார்-முன் கோட்டி கொளல்!

711. இருந்த அவை யறிந்தாரை யறிந்து அதற்குத்தக்க சொல்லின் திறத்தை ஆராய்ந்து சொல்லுக: சொல்லின் தொகுதியை அறிந்த தூய்மையையுடையவர்.

தொகையறிதல்- திறனறிதல். இது அவையறிந்து சொல்லல் வேண்டுமென்றது.

712. சொன்னால் அதற்கு வருங்குற்றத்தை ஆராய்ந்து நன்மையாமவற்றை யறிந்து சொல்லுக: சொல்லினது வழக்காராய்ந்த நன்மையுடையார்.

இஃது ஆராய்ந்து சொல்லுமாறு கூறிற்று.

713. அவையினது அளவை அறியாது ஒன்றைச் சொல்லுதலை மேற்கொள்பவர், சொல்லின் வகையும் அறியார்; அவ்வாறன்றி வேறு வல்லதூஉம் இலராவார்.

714. ஒள்ளிய அறிவுடையார்முன்பு தாமும் ஒள்ளிய அறிவுடையராயிருத்தலும் வெள்ளிய அறிவுடையார் முன்பு வாலியசுதை வண்ணம் போன்ற வெண்மையைக் கொண்டிருத்தலும் அவையறிதலாவது.

715. நன்றென்று சொல்லப்பட்ட எல்லாவற்றுள்ளும் மிக நன்று, தம்மின் முதிர்ந்தார்முன் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத அடக்கம்.

முதுவர்- தவத்தாலும் குலத்தாலும் கல்வியாலும் பிற யாதாலும் முதிர்ந்தார். இஃது இருந்த அவையின்கண் முந்துற்றுச் சொல்லல் ஆகா தென்றது.

716. ஒரு நெறியின்கண் நின்றார் அந்நிலைமை குலைந்தாற் போல இகழப்படும், அகன்ற கல்வியைக் கேட்டறியவல்லார் முன்னர்த் தப்புதல்.

இது தப்புதல் வாராமற் சொல்லல் வேண்டுமென்றது.

717. நூல்களைக்கற்று அதன்பயனும் அறிந்துள்ளாரது கல்வி விளங்காநிற்கும்; குற்றமறச் சொற்களைச் சொல்லவல்லார் முன்னர்ச் சொல்லின்.

இது கல்வியின் விழுப்பம் கற்றார்க்கல்லது பிறர்க்கு அறிதலரிதென்றது.

718. யாதாயினும் ஒன்றைச் சொல்லுங்கால் அதனைத் தெரிந்தறியும் அறிவுடையார்முன்பு சொல்லுவது, வளர்வதொன்று நின்ற பாத்தியின்கண்ணே நீர் சொரிந்தாற்போலும்.

719. புல்லியவரிருந்த அவையின்கண் மறந்துஞ் சொல்லா தொழிக: நல்லவரிருந்த அவையின்கண் நல்லதனை இசையச் சொல்லவல்லார்.

720. அங்கணத்தின்கண் உக்க அமுதம் போல இகழப்படுவர்; தம்முடைய இனத்தாரல்லாதார் முன்னர் ஒன்றைச் சொல்லுவாராயின்.

கல்வியுடையார் புல்லவையுள் சொன்னால் உளதாகுங் குற்றமென்னை யென்றார்க்கு இஃது இகழப்படுவரென்று கூறிற்று.

# 73. அவை அஞ்சாமை

721 வகை-அறிந்து, வல்-அவை, வாய்-சோரார்; சொல்லின்
தொகை-அறிந்த தூய்மையவர்.

722 கற்றாருள் கற்றார் எனப்படுவர்; கற்றார்-முன்
கற்ற செலச்-சொல்லுவார்.

723 பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சாதவர்.

724 கற்றார்-முன் கற்ற செலச்-சொல்லி, தாம்-கற்ற,
மிக்காருள், மிக்க கொளல்.

725 ஆற்றின், அளவு-அறிந்து கற்க; அவை-அஞ்சா
மாற்றம் கொடுத்தற்-பொருட்டு.

726 வாளொடு-என், வன்கண்ணர் அல்லார்க்கு? நூலொடு-என்,
நுண்-அவை அஞ்சுபவர்க்கு?

727 பகையகத்துப் பேடி-கை ஒள்-வாள்; அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்.

728 பல்லவை கற்றும், பயம்-இலரே; நல்-அவையுள்
நன்கு செலச்-சொல்லாதார்.

729 'கல்லாதவரின் கடை' என்ப; 'கற்று-அறிந்தும்,
நல்லார் அவை-அஞ்சுவார்'.

730 உளர்-எனினும், இல்லாரொடு ஒப்பர்; களன்-அஞ்சி,
கற்ற செலச்-சொல்லாதார்.

721. தப்பினால் வருங் குற்றவகையை யறிந்து கற்றுவல்ல அவையின்கண் அஞ்சுதலால் சோர்வுபடச் சொல்லார், சொற்களின் தொகுதியையறிந்த தூய்மையுடையவர்.

இது மேற்கூறியவற்றால் கற்றவர் தப்பச் சொல்லாரென்று அக்கல்வியால் வரும் பயன்கூறிற்று.

722. கற்றாரெல்லாரினும் கற்றாரென்று சொல்லப்படுவார், தாம் கற்றதனைக் கற்றார் முன்பு அவர்க்கு ஏற்கச் சொல்லவல்லார்.

இது கற்றாரென்பார் அவையஞ்சாதார் என்று கூறிற்று.

723. பகையின்கண் அஞ்சாது நின்று சாவார் பெறுதற்கு எளியர்; அவையின்கண் அஞ்சாது சொல்லவல்லவர் அறிதற்கு அரியர்.

இஃது அவையஞ்சாமை அரிதென்றது.

724. தாம் கற்றதனைக் கற்றவர்முன்பு இசையச் சொல்லித் தாம் கற்றதினும் மிகக் கற்றார்மாட்டு அவர் மிகுதியாகக் கூறும் பொருளைக் கேட்டுக் கொள்ளுதல் அவையஞ்சாமையாவது.

725. அவையஞ்சாது மறுமாற்றம் சொல்லுதற்காக நெறிமையானே நூல்களை அளவறிந்து

கற்க வேண்டும். நூல் கற்றலாவது (1) மெய்யாராய்ச்சியாகிய நூலைக்கற்றலும், (2) வேதமும் ஆகமமும் கற்றலும், (3) உழவும் வாணிகமும் கற்றலும், (4) படைவாங்கல் மநுநீதி முதலியன கற்றலுமென நான்குவகைப்படும்.

726. வன்கண்ணரல்லாதவர்க்கு வாளினாற் பயனென்னை? அதுபோல, நுண்ணிய அவையின்கண் அஞ்சுவார்க்கு நூலினாற் பயனென்னை?

இது பிறர்க்குப் பயன்படாமையேயன்றித் தமக்கும் பயன்படாரென்றது.

727. பகையின்கண் அஞ்சுமவன் பிடித்த கூர்வாள் போலும், அவையின்கண் அஞ்சுமவன் கற்றநூலும்.

மேல் பயனில்லை யென்றார் இங்குப் பயனில்லாதவாறு காட்டினார்.

728. பலநூல்களைக் கற்றாலும் ஒருபயனில்லாதவரே: நல்லவையின்கண் நன்றாக அவர்க்கு ஏற்கச் சொல்ல மாட்டாதார்.

இஃது அவையஞ்சுவார் கற்றகல்வி பிறர்க்குப் பயன்படாதென்றது

729. கல்லாதவரினும் கடையரென்று சொல்லப்படுவர்; உலகநூல் கற்றறிந்துவைத்தும் நல்லாரிருந்த அவையின்கண் சொல்லுதலஞ்சுவார்.

இது கல்லாதவரினும் இகழப்படுவரென்றது.

730. உளராயினும் செத்தாரோடு ஒப்பார்: அவைக்களத்தை அஞ்சித் தாம் கற்றதனை

அதற்கு இசையச் சொல்லமாட்டாதார். இது செத்தாரோடு ஒப்பரென்றது. இவை ஐந்தும் அவையஞ்சுதலான் வருங்குற்றம்கூறின.

# 74. நாடு

731 தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வு-இலாச்-
செல்வரும் சேர்வது; நாடு.

732 பெரும்-பொருளான் பெட்டக்கது-ஆகி, அருங்-கேட்டால்,
ஆற்ற விளைவது; நாடு.

733 பொறை-ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்கு
இறை-ஒருங்கு நேர்வது; நாடு.

734 உறு-பசியும், ஓவாப்-பிணியும், செறு-பகையும்
சேராது-இயல்வது; நாடு.

735 பல்-குழுவும், பாழ்-செய்யும் உட்-பகையும், வேந்து-
அலைக்கும்
கொல்-குறும்பும் இல்லது; நாடு.

736 கேடு-அறியா, கெட்ட-இடத்தும் வளம்-குன்றா-
நாடு என்ப; நாட்டின் தலை.

737 இரு-புனலும், வாய்ந்த-மலையும், வரு-புனலும்,
வல்-அரணும்; நாட்டிற்கு உறுப்பு.

738 பிணி-இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்;
அணி-என்ப; நாட்டிற்கு இவ்-ஐந்து.

739 நாடு-என்ப, நாடா வளத்தன; நாடு-அல்ல,
நாட, வளம்-தரும் நாடு.

740 ஆங்கு-அமைவு எய்தியக்-கண்ணும் பயம்-இன்றே;
வேந்து-அமைவு இல்லாத நாடு.

731. தப்பாமல் விளையும் நிலங்களும் தகுதி யுடையாரும் தாழ்வில்லாத செல்வரும் சேர்வது நாடு.

தள்ளா விளையுள்- மழையில்லாத காலத்தினும் சாவிபோகாத நிலம்.

732. பெரும்பொருளாலே விரும்பத்தக்கதாகிக் கேடரிதாதலோடே மிகவும் விளைவது நாடு.

பெரும்பொருள்- நெல்லு. கேடாவது விட்டில், கிளி, நால்வாய், பெரும் புயலென் றிவற்றான் வரும்நட்டம்.

733. குடிமை செய்தால், ஒரு காலத்திலே பல குற்றம் தன்னிடத்துவரினும் அதனைப் பொறுத்து, நிச்சயித்த கடமையை அரசனுக்கு ஒருங்கு கொடுக்க வல்லது நாடு.

குடிமையாவது கடமையொழிய வருவது.

734. மிகுந்த பசியும், இடையறாத பிணியும், ஒறுக்கும் பகையும், சேராது இயல்வது நாடு.

இது சேர்தலாகாதன கூறிற்று.

735. பலபலவாய்த் திரளுந் திரட்சியும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தனை யலைக்கின்ற கொலைத் தொழிலினையுடைய குறும்பரும் இல்லாதது நாடு.

736. கெடுதலை யறியாதாய், கெட்டதாயினும் பயன்குன்றாத நாட்டினை எல்லா நாடுகளினும் தலையான நாடென்று சொல்லுவார்.

இது மேற்கூறிய விட்டில் முதலாயினவற்றால் நாடு கெட்டதாயினும் பின்பும் ஒருவழியால் பயன்படுதல் கூறிற்று.

737. மேல்நீர் கீழ்நீர் நிறுத்தலாமிடத்தினைக் கிணறுகல்லி நீருண்டாக்குமிடத்தினையும், பயன்படு மலையினையும், ஆறொழுகுமிடத்தினையும், வலிய அரணாகும் இடத்தினையும் கண்டு அவ்விடத்தை நாடாக்குக: அவை நாட்டிற்கு உறுப்பாதலால்.

இஃது இவை ஐந்துங்குறையாமல் வேண்டுமென்றது.

738. நோயின்மையும், செல்வமுடைமையும், விளைவுடைமையும், இன்பமுடைமையும், காவலுடைமையுமென்று சொல்லப்பட்ட இவையைந்தும் நாட்டிற்கு அழகென்று சொல்லுவர்.

739. தேடவேண்டாத வளத்தினை யுடைய நாட்டை நாடென்று சொல்லுவர்: தேடினால் வளந்தருகின்ற நாட்டை நாடல்ல வென்று சொல்லுவர்.

740. மேற்கூறியவற்றால் எல்லாம் அமைந்ததாயினும் பயனில்லையாம்; வேந்தனது அமைதியை உடைத்தல்லாத நாடு.

இதுநாட்டுக்கு அரசனும் பண்புடையனாகல் வேண்டுமென்றது.

# 75. அரண்

741 ஆற்றுபவர்க்கும் அரண்-பொருள்; அஞ்சித் தற்-
போற்றுபவர்க்கும் பொருள்.

742 மணி-நீரும், மண்ணும், மலையும், அணி-நிழல்-
காடும் உடையது; அரண்.

743 ‘உயர்வு, அகலம், திண்மை, அருமை; இந்-நான்கின்
அமைவு-அரண்’ என்று-உரைக்கும் நூல்.

744 சிறு-காப்பின் பேர்-இடத்தது-ஆகி, உறு-பகை
ஊக்கம் அழிப்பது; அரண்.

745 கொளற்கு-அரிதாய், கொண்ட-கூழ்த்து-ஆகி, அகத்தார்
நிலைக்கு-எளிது-ஆம் நீரது; அரண்.

746 எல்லாப்-பொருளும் உடைத்தாய், இடத்து-உதவும்
நல்-ஆள் உடையது; அரண்.

747 முற்றியும், முற்றாது-எறிந்தும், அறைப்படுத்தும்,
பற்றற்கு அரியது; அரண்.

748 முற்று-ஆற்றி முற்றியவரையும், பற்று-ஆற்றி,
பற்றியார் வெல்வது; அரண்.

749 முனை-முகத்து மாற்றலர் சாய, வினை-முகத்து
வீறு-எய்தி மாண்டது; அரண்.

750 எனை-மாட்சித்து ஆகியக்-கண்ணும், வினை-மாட்சி-
இல்லார்கண் இல்லது; அரண்.

741. வலியுடையார்க்கும் அரணுடைமை பொருளாவது; பகைவர்க்கு அஞ்சித் தன்னைக் காப்பார்க்கும் அரணுடைமை பொருளாவதாம்; ஆதலால் அதனைச் செய்யவேண்டும்.

742. தெளிந்த நீராயினும், நிழலும் நீருமிலாத வெறுநிலமாயினும், மலையாயினும், அழகிய நிழலினையுடைய காடாயினும் உடையது அரணாம்.

தெளிந்தநீர்- பெருநீர். இது கலங்காதாதலின். அணி நிழற்காடு என்றதனாலே செறிவுடைய காடென்று கொள்ளப்படும்.

743. உயர்ச்சியும், அகலமும், திண்மையும், கிட்டுதற்கு அருமையுமென்னும் இந்நான்கினது அமைதியுடையது மதிலாமென்று சொல்லுவர் நூலோர்.

திண்மையென்பது கல்லும் இட்டிகையும் இட்டுச் செய்தல்.

744. காக்கவேண்டும் இடம் சிறிதாய், மதிலகம் பெரிய இடத்தையுடைத்தாய், மதிலையுற்ற பகைவரது மிகுதியைக் கெடுப்பது அரணாவது.

சிறு காவலாவது ஒருபக்கம் மலையாயினும் நீராயினும் உடைத்தாதல்.

745. பகைவரால் கொள்ளுதற்கு அரிதாய்த் தன்னகத்தே அமைக்கப்பட்ட உணவையும் உடைத்தாய் அகத்துறைவார்க்கு நிற்றற்கு எளிதாகும் நீரையுடைத்தாயிருப்பது அரணாவது.

எனவே, புறத்தார்க்கு நிற்றற்கரிதாகும் நீரையுடைத்தாதலும் வேண்டுமென்றவாறாயிற்று; தூரத்தில் நீரைப் பிறரறியாமல் உள்ளே புகுதவிடுதலும் வேண்டும் என்பதாம்.

746. எல்லாப் பொருள்களையும் உடைத்தாய், உற்றவிடத்து உதவவல்ல வீரரையுடையது அரண்.

எல்லாப் பொருளமாவன-நுகரவேண்டுவனவும் படைக்கலங்களும்.

747. சூழவிட்டும், சூழவிடாதே ஒருபக்கமாகப் போர் செய்தும், அரணிலுள்ளாரைக் கீழறுத்தும் இம்மூன்றினாலும் கொள்ளுதற்கு அரியது அரணாவது.

748. சூழவல்லாரைச் சூழ்ந்து நலிந்தவரையும் தன்னகத்து நின்று காக்கவல்லவராய்க் காப்பவர் வெல்வது அரணாவது.

பற்றாற்றுதல் -தாம் பற்றின இடம் விடாது வெல்லுதல்.

749. முந்துற்ற முகத்தினையுடைய பகைவர் கெடும்படியாக, வினை செய்யும் இடத்து வெற்றியெய்தி மாட்சிமைப்பட்டது அரணாவது.

அஃதாவது அட்டாலகமும் மதிற்பொறியும் முதலாயின மதிற்றலையில் அமைத்தல்.

750. சொல்லப்பட்ட எல்லா மாட்சிமையும் உடைத்தாயினும் வினையின்கண் மாட்சிமை இல்லாதார்மாட்டு அரணாற் பயனில்லை.

இது வினைவல்லாரும் வேண்டு மென்றது.

# 76. பொருள் செயல் வகை

751 பொருள்-அல்லவரைப் பொருளாகச்-செய்யும்
பொருள்-அல்லது, இல்லை பொருள்.

752 இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர், சிறப்பு.

753 பொருள்-என்னும் பொய்யா-விளக்கம்; இருள்-அறுக்கும்
எண்ணிய தேயத்துச்-சென்று.

754 அறன்-ஈனும்; இன்பமும்-ஈனும்; திறன்-அறிந்து,
தீது-இன்றி வந்த பொருள்.

755 அருளொடும், அன்பொடும் வாராப்-பொருள்-ஆக்கம்
புல்லார், புரள விடல்!

756 உறு-பொருளும், உல்கு-பொருளும், தன்-ஒன்னார்த்-
தெறு-பொருளும்; வேந்தன் பொருள்.

757 அருள்-என்னும் அன்பு-ஈன்-குழவி; பொருள்-என்னும்
செல்வச் செவிலியால், உண்டு.

758 குன்று-ஏறி, யானைப்-போர் கண்டற்றால்; தன்-கைத்து-
ஒன்று
உண்டாகச் செய்வான் வினை.

759 செய்க பொருளை! செறுநர் செருக்கு-அறுக்கும்
எஃகு அதனின்-கூரியது இல்.

760 ஒண்-பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு; எண்-பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

751. ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் பொருளாக மதிக்கப் பண்ணுவதாகிய பொருளையல்லது வேறு பொருள் என்று சொல்லப்படுவதில்லை.

இது வடிவில்லாதாரைப் பெண்டிரிகழ்வார்; பொருளுடையாரை யாவரும் நன்றாக மதிப்பரென்றது.

752. பொருளில்லாதாரை எல்லாரும் இகழுவர்; பொருளுடையாரை எல்லாருஞ் சிறப்புச் செய்வர்.

இது சிறப்பெய்தலும் பொருளுடைமையாலே வருமென்றது.

753. பொருளென்னும் மெய்யாகிய ஒளி எண்ணப்பட்ட தேசமெல்லாவற்றினுஞ் சென்று பகையென்னும் இருளை அறுக்கும்.

இது, பொருள் ஒளியில்லாதார்க்கும் ஒளியுண்டாக்கும்; அரசன் பொருளுடையனானால் தான் கருதிய தேசமெல்லாம் தன்னாணை நடத்துவானென்றது.

754. அறத்தையும் தரும்: இன்பதையும் தரும்: பொருள் வருந்திறமறிந்து பிறர்க்குத் தீமை பயத்தலின்றி வந்த பொருள்.

இது பொருளால் கொள்ளும் பயன் அறஞ்செய்தலும் இன்பம் நுகர்தலும் அன்றே: அவ்விரண்டினையும் பயப்பது நியாயமாகத் தேடியபொருளாமாதலின் என்றது.

755. அருளுடைமையோடும் அன்புடைமையோடும் வாராத பொருளால் வரும் ஆக்கத்தைப் பொருந்தாது போக விடுக.

இது பொருள் தேடுங்கால் பிறர் வருத்தத்திற்கு உபகரியாதும் பயின்றார் மாட்டுக் காதலில்லாமலும் பொருள்தேடுதலைத் தவிர்கவென்றது.

756. தானே வந்துற்ற பொருளும், ஆயத்தால் வரும் பொருளும், தன் பகைவரை யடர்த்துக்கொண்ட பொருளும் அரசனுக்குப் பொருளாம்.

உறுபொருள்- காவற் பொருள்.

757. அறம் செய்தற்குக் காரணமாகிய அன்பினின்றும் தோன்றிய அருளாகிய குழவி, பொருளென்று சொல்லப்படும் செல்வத்தை யுடைய செவிலித்தாய் வளர்த்தலாலே உண்டாம்.

இது பொருளுடையார்க்கே அறஞ்செய்தலாவதென்பது கூறிற்று.

758. குன்றின்மேல் ஏறியிருந்து யானையோடு யானை போர் செய்தலைக் கண்டாற் போலும். தன் கையகத்து எய்திய பொருளுண்டாக ஒரு வினையை யெடுத்துக் கொண்டு தொடங்கினவன் செய்யும் வினை.

இது பொருளுடையார் தாம் வருந்தாமல் பிறரை வினைசெய்வாராக ஏவி வினைக்கண் விட்டிருக்கலாமென்றது.

759. பொருளையுண்டாக்குக; பகைவரது பெருமிதத்தை யறுக்கலாங் கருவி அப்பொருள்போலக் கூரியது பிறிது இல்லை.

இது பொருளீட்டல் வேண்டுமென்றது.

760. ஒள்ளிய பொருளை முற்ற உண்டாக்கினார்க்கு ஒழிந்த அறமும் காமமுமாகிய பொருளிரண்டும் ஒருங்கே எளியபொருளாக வெய்தலாம்.

# 77. படை

761 உறுப்பு-அமைந்து, ஊறு-அஞ்சா, வெல்-படை; வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

762 உலைவு-இடத்து ஊறு-அஞ்சா வன்கண்; தொலைவு-இடத்து
தொல்-படைக்கு அல்லால், அரிது.

763 ஒலித்தக்கால் என்-ஆம், உவரி எலிப்பகை?
நாகம் உயிர்ப்ப, கெடும்.

764 அழிவு-இன்று, அறை-போகாது-ஆகி, வழி-வந்த
வன்கண்-அதுவே; படை.

765 கூற்று-உடன்று மேல்-வரினும், கூடி, எதிர்-நிற்கும்
ஆற்றல்-அதுவே; படை.

766 மறம், மானம், மாண்ட-வழிச்-செலவு, தேற்றம்;
என-நான்கே ஏமம், படைக்கு.

767 தார்-தாங்கிச் செல்வது தானை; தலைவந்த
போர்-தாங்கும் தன்மை அறிந்து.

768 அடல்-தகையும், ஆற்றலும், இல்-எனினும்; தானை
படைத்-தகையான் பாடு-பெறும்.

769 சிறுமையும், செல்லாத்-துனியும், வறுமையும்
இல்லாயின்; வெல்லும் படை.

770 நிலை-மக்கள் சால-உடைத்து எனினும்; தானை
தலை-மக்கள் இல்வழி இல்.

761. யானை, குதிரை, தேர், கருவி, காலாளாகிய உறுப்புகளால் அமைந்து, இடுக்கண் உற்றால் அதற்கு அச்சமின்றி, வெற்றியுடைய படை, அரசன் தேடியபொரு ளெல்லாவற்றினும் தலையான பொருள்; ஆதலால் படைவேண்டும்.

762. அரசர் கெடுமிடத்து வழிவந்த படைக்கு அல்லது பிறபடைக்குப் போர்க்களத்து அழிவு வந்தவிடத்து, உயிர்க்கு வரும் ஊறு அஞ்சாத வன்கண்மை இல்லை.

வழிவந்த படை-வீரன் மகன் வீரன்.

763. கடல்போல ஒலித்தாலும் எலியினது மாறுபாட்டினால் வருந்தீமை யென்னுளதாம்; எலி நாகம் உயிர்த்த அளவிலே கெடும்.

இது படைமிகுத்தது வெல்லுமென்று கருதாது வீரரைத் தெளிந்தாளல் வேண்டுமென்றது.

764. கெடுதலின்றிக் கீழறுக்கப்படாததாகிக் குலத்தின் வழிவந்த அஞ்சாமையையுடையதே படையாவது.

வழிவருதல்- வீரன்மகன் வீரனாகுதல். இது படையினது நன்மைகூறிற்று.

765. கூற்றமானது வெகுண்டு தன்மேல்வரினும், சிதறுதல் இன்றியே எதிர் நிற்கவல்ல வலியுடையதே படையாவது.

இது மாற்றான் மேல்வந்தால் பொறுக்கவேண்டு மென்றது.

766. மறமும், மானமும், நல்லவழிச்சேறலும், தெளிவுடைமையுமென இந்நான்குமே படைக்கு அரணாம்.

நல்வழிச் சேறலாவது மறஞ்செய்யுங் காலத்துக் கலக்க மின்மை.

767. உற்றவிடத்து உற்றபோரினைத் தடுக்கும் இயல்பறிந்து, தாரைப் பொறுத்து மேற்செல்லவல்லது படையாவது.

இது முந்திச் செல்லவேண்டுமென்பதூஉம் செல்லுங்கால் இடமறிந்து செல்ல வேண்டுமென்பதூஉம் கூறிற்று.

768. தன் கையிலுள்ள வேலை ஒரு களிற்றின் உயிரோடே போக்கி, அதன்பின் கருவி தேடிச் செல்பவன் தன் மெய்யின் மேற்பட்ட வேலைப் பறித்துக் கருவி பெற்றே மென்று மகிழும்.

இது வீரர் செயல் இத்தன்மையாதலால், புண்பட்டால் அதற்காற்றிப் பின்னும் அமரின்கண்சாதல் அல்லது வெல்லல் வேண்டும்என்றது.

769. தான் தேய்ந்து சிறிதாகலும், மனத்தினின்று நீங்காத வெறுப்பும், நல்குரவும் தனக் கில்லை யாயின், படை பகையை வெல்லும்.

770. படையானது நிலையுடைய வீரரைப் பெரிது உடைத்தாயினும் தனக்குத் தலைவரை இல்லாத விடத்துத் தனக்கு வெற்றியில்லையாம்.

இது படையமைத்தாலும் படைத்தலைவரையும் அமைக்க வேண்டுமென்றது.

# 78. படைச் செருக்கு

771 என்னை முன்-நில்லன்-மின் தெவ்விர்! பலர், என்னை
முன்-நின்று கல் நின்றவர்.

772 கான முயல்-எய்த அம்பினில்; யானை
பிழைத்த-வேல் ஏந்தல் இனிது.

773 பேர்-ஆண்மை என்ப, தறுகண்; ஒன்று-உற்றக்கால்,
ஊராண்மை மற்று-அதன் எஃகு.

774 கை-வேல் களிற்றொடு-போக்கி வருபவன்
மெய்-வேல் பறியா, நகும்.

775 விழித்த-கண் வேல்-கொண்டு-எறிய; அழித்து-இமைப்பின்
ஓட்டு-அன்றோ, வன்கணவர்க்கு?

776 விழுப்புண் படாத-நாள்-எல்லாம்; வழுக்கினுள்-
வைக்கும், தன்-நாளை எடுத்து.

777 சுழலும் இசை-வேண்டி, வேண்டா-உயிரார்
கழல்-யாப்புக்-காரிகை நீர்த்து.

778 உறின், உயிர்-அஞ்சா-மறவர்; இறைவன்-
செறினும், சீர்-குன்றல்-இலர்.

779 இழைத்தது இகவாமைச் சாவாரை; யாரே
பிழைத்தது ஒறுக்கிற்-பவர்?

780 புரந்தார்-கண் நீர்-மல்கச் சாகிற்-பின்; சாக்காடு
இரந்து-கோள் தக்கது உடைத்து.

771. படையானது நிலையுடைய வீரரைப் பெரிது உடைத்தாயினும் தனக்குத் தலைவரை இல்லாத விடத்துத் தனக்கு வெற்றியில்லையாம்.

இது படையமைத்தாலும் படைத்தலைவரையும் அமைக்க வேண்டுமென்றது.

772. வீரர்க்குக் காட்டகத்து முயலைப் பட எய்த அம்பினும், யானையைப் பிழைக்க எறிந்த வேலை யேந்துதல் இனிது.

இதுமேலதற்குக் காரணமாகக் கூறப்பட்டது.

773. ஒன்று உற்றக்கால் அஞ்சாமையை ஒருவனுக்குப் பெரிய ஆண்மையென்று சொல்லுவர்: உலகியலறிந்து செய்தலை அவ்வாண்மைக்குப் படைக்கலமென்று சொல்லுவர்.

உலகியலறிவது- தான் உலகியலை வெளியார் சொல்லாமையறிதல்.

774. தன் கையிலுள்ள வேலை ஒரு களிற்றின் உயிரோடே போக்கி, அதன்பின் கருவி தேடிச் செல்பவன் தன் மெய்யின் மேற்பட்ட வேலைப் பறித்துக் கருவி பெற்றே மென்று மகிழும்.

இது வீரர் செயல் இத்தன்மையாதலால், புண்பட்டால் அதற்காற்றிப் பின்னும் அமரின்கண்சாதல் அல்லது வெல்லல் வேண்டும்என்றது.

775. மாற்றாரோடு எதிர்த்துச் சிவந்து நோக்கின கண்ணிலே ஒரு வேலினாலே எறிய, அதற்கு மீண்டும் இமைப்பாராயின் அஃது அஞ்சாதார்க்குக் கெட்டதனோடு ஒக்கும்.

விழித்தகண் என்பதற்கு மாற்றானை நோக்கி யிமையாத கண் எனினும் அமையும்.

776. தனது வாழ்நாளாகிய நாளையெண்ணி அவற்றுள் விழுமிய புண்படாத நாளெல்லாவற்றையும் தப்பின நாளுள்ளே யெண்ணி வைக்கும் வீரன்.

இது போரின்கண் முகத்தினும் மார்பினும் புண்படலும், முதுகுபுறங்கொடாமையும் வேண்டுமென்றது.

777. பரவும் புகழை விரும்பி, உயிரை விரும்பாதார், கழல் கட்டுதல் அழகுடைத்து.

இது புகழ் விரும்பும் படை வேண்டுமென்றது.

778. ஒன்று உற்ற காலத்து உயிர்ப்பொருட்டு அஞ்சாத மறவர் தம்மரசனால் செறுக்கப்பட்டாராயினும் தமது முதன்மை குன்றுதல் இலர்.

இஃது அஞ்சாமையுடையார் வீரியஞ் செய்யுமிடத்துக் குறைய நில்லாமை வேண்டுமென்றது.

779. முற்கூறிய வஞ்சினம் தப்பாமல் சாவாரை அவர் தப்பியது சொல்லிப் பழிக்கவல்லவர் யாவர்.

இது வஞ்சினம் தப்பின் படவேண்டுமென்றது.

780. தம்மை ஆண்டவரது கண் நீர்மல்குமாறு சாக வல்லாராயின் அச்சாக்காடு எல்லாரானும் வேண்டிக் கொள்ளும் தகுதி யுடைத்து.

இஃது ஆண்டவனுக்குக் கேடுவரின், படவேண்டுமென்றது.

# 79. நட்பு

781 செயற்கு-அரிய யா-உள, நட்பின்? அதுபோல்
வினைக்கு-அரிய யா-உள, காப்பு?

782 நிறை-நீர, நீரவர்-கேண்மை பிறை; மதிப்-
பின்-நீர, பேதையார் நட்பு.

783 நவில்தொறும் நூல்-நயம்-போலும்; பயில்தொறும்
பண்பு-உடையாளர் தொடர்பு.

784 நகுதற்-பொருட்டு-அன்று, நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்-பொருட்டு.

785 புணர்ச்சி, பழகுதல் வேண்டா; உணர்ச்சி-தான்
நட்பு-ஆம் கிழமை தரும்.

786 முகம்-நக, நட்பது நட்பு-அன்று; நெஞ்சத்து
அகம்-நக நட்பது, நட்பு.

787 அழிவினவை-நீக்கி, ஆறு-உய்த்து, அழிவின்கண்
அல்லல் உழப்பது-ஆம்; நட்பு.

788 உடுக்கை இழந்தவன் கை-போல, ஆங்கே
இடுக்கண் களைவது-ஆம்; நட்பு.

789 ‘நட்பிற்கு வீற்றிருக்கை யாது?’ எனின்; கொட்பு-இன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

790 ‘இனையர், இவர்-எமக்கு; இன்னம்-யாம்’ என்று
புனையினும் புல்லென்னும்-நட்பு.

781. நட்புப்போல உண்டாக்குதற்கு அரியவான பொருள்கள் யாவையுள? அவ்வாறு உண்டாக்கப்பட்ட நட்புப்போலப் பிறர் நல்வினை செய்தற்கு அரியவாகக் காக்கும் காவல்கள் யாவையுள?

இது நட்புத் தேடவரிது என்றது.

782. பிறை நிறையும் நீர்மைபோல, ஒருநாளைக் கொருநாள் வளரும் அறிவுடையார்

கொண்ட நட்பு; மதியின் பின்னீர்மைபோல ஒருநாளைக் கொரு நாள் தேயும் பேதையார் கொண்ட நட்பு. இஃது அறிவுடையார் நட்பு வளருமென்றும் அறிவில்லாதார் நட்புத் தேயுமென்றுங் கூறிற்று

783. படிக்குந்தோறும் நூல்நயம்போல அறிவுதரும், பழகுந்தோறும் பண்புடையாளரது நட்பு.

இது குணவானோடு நட்புக்கொள்ளின் அறிவுண்டாமென்றது.

784. ஒருவனோடு ஒருவன் நட்புப் பண்ணுதல் நகுதற்பொருட்டன்று; மிகையாயின செய்யுமிடத்து முற்பட்டுக் கழறுதற் பொருட்டு.

இது மனமகிழ நட்புக்கோடலன்றித் தீக்கருமங்கண்டால் கழறவும்வேண்டுமென்றது.

785. நட்பாதற்குப் பலநாள் பழகுதல் வேண்டா: ஒருநாள் கண்டாராயினும் உணர்வுடையார்க்கு அவ்வுணர்வுடைமைதானே நட்பாகும் உரிமையைத் தரும்.

இவ்வுணர்வுடைமைதானே நட்பாகு மென்றவாறு.

786. முகத்தோடு முகமகிழக் கொள்ளும் நட்பு நட்பன்று; மனத்தோடு மனமகிழக் கொள்ளும் நட்பே நட்பாவது.

787. நட்டார்க்கு அழிவு வந்தவிடத்து அவர் துன்பத்தை நீக்கி நல்ல நெறியின்கண் செலுத்தித் தாங்கித் தன்னால் செயலற்ற விடத்து அவரொடு ஒக்கத் தானும் துன்பம் உழப்பது நட்பு.

788. உடைசோரநின்றானுக்குக் கைசென்று உடைசோராமற் காத்தாற்போல, இடுக்கண்வந்தால் அப்பொழுதே அவ்விடுக்கணை நீக்குவது நட்பாவது.

789. நட்புக்கு மேம்பட இருக்கும் இடம் யாதெனின் மனத்தின்கண் ஐயுற வின்றிச் செல்லுமாற்றால் தளராமைத் தாங்கி நிற்கும் நிலை

வீற்றிருத்தல்-தலைப்பட இருத்தல்.

790. இவர் நமக்கு இத்தன்மையர், யாமும் இவர்க்கு இத்தன்மையோம் என்று பேணிச் சொல்லினும் நட்புவாடும்: ஆதலால் நட்பினைத் தன்னைத்தான் நினைக்குமாறுபோல நினைக்க.

# 80. நட்பு ஆராய்தல்

791 நாடாது நட்டலின் கேடு-இல்லை; நட்ட-பின்
வீடு-இல்லை, நட்பு-ஆள்பவர்க்கு.

792 ஆய்ந்து-ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை; கடைமுறை
தான்-சாம் துயரம் தரும்.

793 குணனும், குடிமையும், குற்றமும், குன்றா-
இனனும்; அறிந்து யாக்க நட்பு.

794 குடிப்-பிறந்து, தன்கண் பழி-நாணுவானை;
கொடுத்தும் கொளல்-வேண்டும், நட்பு.

795 அழச்-சொல்லி, அல்லது-இடித்து, வழக்கு-அறிய-
வல்லார்; நட்பு, ஆய்ந்து-கொளல்!

796 கேட்டினும் உண்டு, ஓர்-உறுதி; கிளைஞரை
நீட்டி அளப்பது ஓர்-கோல்.

797 ஊதியம் என்பது ஒருவற்கு; பேதையார்-
கேண்மை ஒரீஇ-விடல்.

798 உள்ளற்க, உள்ளம் சிறுகுவ! கொள்ளற்க,
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு!

799 கெடும்-காலைக் கைவிடுவார் கேண்மை; அடும்-காலை
உள்ளினும், உள்ளம் சுடும்.

800 மருவுக, மாசு-அற்றார் கேண்மை! ஒன்று-ஈத்தும்
ஒருவுக, ஒப்பு-இலார் நட்பு!

791. நட்பை விரும்பியாள்பவர்க்கு ஒருவனை ஆராயாது நட்புச் செய்வதுபோலக் கேடு தருவதில்லை: நட்டபின் அவனை விடுதலில்லை யாயின்.

இது நட்பாராய்தல் வேண்டு மென்றது.

792. குற்றமும் ஆய்ந்து குணமும் ஆய்ந்து கொள்ளாதான் கொண்ட நட்பு, பிற்காலத்துத் தான் சாதற்கு ஏதுவான துன்பத்தைத் தரும்.

இஃது ஆராயாமையால் வருங்குற்றங் கூறிற்று.

793. ஒருவனுடைய குணமும் குடிப்பிறப்பும் குற்றமும் குறைவில்லாத சுற்றமும் முன்பே ஆராய்ந்து, பின்பு அவனை நட்பாகக் கொள்க.

இவையெல்லாம் ஒத்தனவாயின் உறவு நீளச் செல்லு மென்றவாறாம்.

794. மேற்கூறியவற்றுள் உயர்குடிப்பிறந்து தன்மாட்டுப் பிறர் சொல்லும் பழிக்கு அஞ்சுமவனை அவன் வேண்டிய தொன்று கொடுத்தும் நட்பாகக் கொள்ளல் வேண்டும்.

795. குற்றம் கண்டால் அழுமாறு சொல்லி, நெறியில்லாதனவற்றிற்குக் கழறி, உலகவழக்கறிய வல்லாரது நட்பை ஆராய்ந்து கொள்க.

இது மந்திரிகளுள் நட்பாக்கற் பாலாரைக் கூறிற்று.

796. கேடுவந்தவிடத்தும் ஒரு பயனுண்டாம்; அக்கேடு நட்டாரது தன்மையை நீட்டி அளந்தறிதற்கு ஒரு கோலாமாதலால்.

மேல் கெடுங்காலைக் கைவிடுவாரை விடவேண்டு மென்றார் அவரை அறியுமாறென்னை யென்றார்க்கு, கேட்டாலல்லது அறிதல் அரிதென்றார்.

797. ஒருவனுக்கு இலாபமென்று சொல்லப்படுவது அறிவில்லாதாரோடு நட்பாகுதலை நீங்கி விடுதல்.

இது பேதையார் நட்பைத் தவிர்கவென்றது.

798. தான் சிறுகுமவற்றை உள்ளத்தால் நினையாதொழிக; அதுபோல, அல்லல் வந்தவிடத்து வலியாகாதாரது நட்பினைக் கொள்ளாதொழிக.

இது தீக்குணத்தார் நட்பைத் தவிர்க வென்றது.

799. கெடும்பொழுது கைவிடுவாரது நட்பைத் தன்னைப் பிறர் கொல்லுங் காலத்து நினைப்பினும் நினைத்த மனத்தினை அந்நட்புச் சுடும்: அவர் கொல்லுமதனினும்.

இது கேட்டிற்கு உதவாதார் நட்பைத் தவிர்க வென்றது.

800. குற்றமற்றாரது நட்பைக் கொள்க; ஒரு பொருளைக் கொடுத்தாயினும் தனக்கு நிகரில்லாதார் நட்பினின்று நீங்குக.

# 81. பழைமை

801 ‘பழைமை எனப்படுவது யாது?’ எனின்; யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

802 நட்பிற்கு உறுப்பு, கெழுதகைமை; மற்று-அதற்கு
உப்பு-ஆதல், சான்றோர் கடன்.

803 பழகிய நட்பு எவன்-செய்யும்? கெழுதகைமை
செய்தாங்கு அமையாக்கடை?

804 விழைதகையான் வேண்டி-இருப்பர்; கெழுதகையான்
கேளாது நட்டார் செயின்.

805 பேதைமை ஒன்றோ, பெருங்கிழமை என்று உணர்க;
நோ-தக்க நட்டார் செயின்!

806 எல்லைக்கண் நின்றார் துறவார்; தொலைவிடத்தும்,
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

807 அழிவந்த செய்யினும், அன்பு-அறார்; அன்பின்
வழிவந்த கேண்மையவர்.

808 கேள்-இழுக்கம் கேளாக்-கெழுதகைமை வல்லார்க்கு-
நாள், இழுக்கம் நட்டார் செயின்.

809 கெடாஅர், வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும், உலகு.

810 விழையார் விழையப்படுப; பழையார்கண்
பண்பின் தலைப்பிரியாதார்.

801. பழைமையென்று சொல்லப்படுவது யாதெனின் அது யாதொன்றிலும் உரிமையை அறுத்தலில்லாத நட்பு.

இது பழையவன் செய்த உரிமையைச் சிறிதுஞ் சிதையாது உடன்படுதல் நட்பாவதென்றது.

802. நட்பிற்கு அங்கமாவது உரிமை: அவ்வுரிமையால் செய்யுமதற்கு உடன்படுதல் சான்றோர்க்கு இயல்பு.

இது பேய்ச்சுரைக்காய்க்குப் பல காயம் அமைத்தாலும் இனிமை யுண்டாகாதுபோல, உடன்படாராயின் இனிமை உண்டாகாதாதலான் உடன்படல் வேண்டு மென்றது.

803. நட்டோரது தப்பைப் பிறர் சொல்லுங்கால் கேளாத உரிமையை யறியவல்லார்க்கு நட்டோர் தப்புச்செய்யின், அந்தநாள் நல்ல நாளாம்.

இது கேளாது செய்தலே அன்றித் தப்புச் செய்யினும் அமைய வேண்டுமென்றது.

804. நட்டோர் தமது உரிமையாலே கேளாது இசைவில்லாதவற்றைச் செய்வாராயின்

அதற்கு முனியாது அதனையும் தாம் விரும்பும் தன்மையோடே கூட விரும்பத் தப்பாதிருப்பர் மிக்கார். இஃது உடன்படுதலன்றி விரும்பவும் வேண்டு மென்றது.

805. தாம் நோவத்தக்கனவற்றை நட்டோர் செய்வாராயின் அதற்கு முனியாது ஒன்றில் அறியாமையாலே செய்தாரென்று கொள்க: ஒன்றில் பெரிய உரிமையாலே செய்தாரென்று கொள்க.

806. ஒழுக்கத்தின்கண்ணே நின்றார் பழைமையின்கண்ணே நின்றாரது நட்பை அவராலே தமக்கு அழிவு வந்தவிடத்தும் விடார்.

எல்லை- வரம்பு.

807. தமக்கு அழிவுவரும் கருமங்களைப் பழைய நட்டோர் செய்தாராயினும் அவரோடு உள்ள அன்புவிடார்: முற்காலத்து அன்பின் வழியாக வந்த நட்பையுடையவர்.

இது கேடுவருவன செய்யினும் அமைய வேண்டு மென்றது.

808. நட்டோரது தப்பைப் பிறர் சொல்லுங்கால் கேளாத உரிமையை யறியவல்லார்க்கு நட்டோர் தப்புச்செய்யின், அந்தநாள் நல்ல நாளாம்.

இது கேளாது செய்தலே அன்றித் தப்புச் செய்யினும் அமைய வேண்டுமென்றது.

809. குற்றம் உண்டாயின் அவ்விடத்து நட்பினிற் கெடாராய்க் குலத்தின்வழி வந்த நட்புடையாராது நட்பை விடுதலின்றி உலகத்தார் விரும்புவர்.

இது பழைமையைக் கொண்டாடுவாரை உலகத்தார் தாமும் நட்பு ஆகுதற்கு விரும்புவர் என்றது.

810. பழைய நட்டோர்மாட்டுக் குணத்தினின்று நீங்காதார்,விரும்பாதாராலும் விரும்பப்படுவர்.

இது பகைவரும் விரும்புவாரென்றது.

# 82. தீ நட்பு

811 பருகுவார் போலினும், பண்பு-இலார் கேண்மை
பெருகலின், குன்றல் இனிது.

812 உறின்-நட்டு, அறின் ஒரூ-உம் ஒப்பு-இலார் கேண்மை
பெறினும், இழப்பினும், என்?

813 உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது
கொள்வாரும், கள்வரும் நேர்.

814 அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா; மா-அன்னார்
தமரின், தனிமை தலை.

815 செய்து-ஏமம் சாரா, சிறியவர் புன்-கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

816 பேதை பெருங்-கெழீஇ நட்பின்; அறிவு-உடையார்
ஏதின்மை, கோடி உறும்.

817 நகை-வகையர் ஆகிய நட்பின்; பகைவரான்
பத்து-அடுத்த கோடி உறும்.

818 ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார், சோரவிடல்!

819 கனவினும் இன்னாது மன்னோ; வினைவேறு,
சொல்-வேறு பட்டார் தொடர்பு!

820 எனைத்தும் குறுகுதல் ஓம்பல்; மனைக்-கெழீஇ,
மன்றில் பழிப்பார் தொடர்பு!

811. கண்ணினால் பருகுவாரைப் போலத் தமக்கு அன்புடையரா யிருப்பினும், குணமில்லாதார் நட்புப் பெருகுமதனினும் குறைதல் நன்று.

இது குணமில்லாதார் நட்புத் தீதென்றது.

812. செல்வம் மிக்க காலத்து நட்புக் கொண்டு அஃது அற்ற காலத்து நீங்குகின்ற நிகரில்லாதார் நட்பைப் பெற்றதனால் வரும் நன்மை யாது? இழந்ததனால் வரும் தீமை யாது?

மக்களுள் இவரோடு ஒத்த இழிவுடையார் இன்மையான் ஒப்பிலார் என்றார். இது காலபுருடர் நட்புத் தீதென்றது.

813. நட்டோர்க்கும் தமக்கும் வரும் நன்மை தீமைகளை யொக்கப் பார்த்துத் தமக்கு நன்மையாகுமதனைச் சீர்தூக்கும் நட்டோரும், பெற்றது கொள்ளும் கணிகையரும், கள்வருமென்று கூறப்பட்டவர் தம்முள் ஒப்பார்.

814. தெருவின்கண் நெறிப்பட நடந்து அமரின்கண் நெறிப்படாமல் நடந்து ஏறினவன் வலிமையைக் கெடுக்கும் அறிவில்லாத குதிரையைப் போல்வார் தமராவதினும் ஒருவன் தனியனாதல் நன்று.

இது பகைவர் நட்புத் தீமைபயக்கு மென்றது.

815. நட்புச் செய்தாலும் தனக்குப் பாதுகாவலாதல் இல்லாத புல்லியாரது புல்லிய நட்பைப் பெறுவதினும் பெறாமை நன்று.

இது சிறியார் நட்புத் தீமைதருமென்றது. சிறியார்- சூதர், வேட்டைக்காரர், பெண்டிர் போல்வார்.

816. அறிவில்லாதார் மிகவும் கெழுமிய நட்பாகுமதனினும், அறிவுடையார் பகைமை கோடிமடங்கு மிக்க நன்மையை உண்டாக்கும்.

இது பேதைமையார் நட்புத் தீமை பயக்கு மென்றது,

817. நகையின் பகுதியார் செய்த நட்பினும், பகைவராலே பத்துக்கோடி மடங்கு நன்மை மிகும்.

நகைவகையர்- காமுகர், வேழம்பர் முதலாயினார். இஃது இவர்கள் நட்புத் தீதென்றது.

818. தம்மாலியலும் கருமத்தை முடியாது வருத்துமவர் நட்பை, நட்பென்று சொல்லுவதும் செய்யாராய் வீழவிடுக.

இஃது அழுக்காறுடையார் நட்புத் தீதென்றது.

819. செய்யுந்தொழில் வேறாகச் சொல்லுங்கூற்று வேறாக, ஒழுகுவாரது நட்பு, பயன்படும் நனவின்கண்ணேயன்றிக் கனவின் கண்ணும் இன்னாது.

இது பொய்கூறுவார் நட்புத் தீதென்றது.

820. மனையின்கண் நட்டோராயிருந்து, மன்றின்கண் குற்றம் கூறுவாரது நட்பைச் சிறிதும் செறிதலைத் தவிர்க.

இது புறங்கூறுவார் நட்புத் தீதென்றது.

## 83. கூடா நட்பு

821 சீர்-இடம்-காணின், எறிதற்குப் பட்டடை;
நேரா நிரந்தவர் நட்பு.

822 இனம்-போன்று இனம்-அல்லார் கேண்மை; மகளிர்
மனம்-போல, வேறுபடும்.

823 பல-நல்ல கற்றக்-கடைத்தும்; மனம்-நல்லர்-
ஆகுதல், மாணார்க்கு அரிது.

824 முகத்தின் இனிய நகாஅ; அகத்து-இன்னா
வஞ்சரை அஞ்சப்படும்.

825 மனத்தின் அமையாதவரை, எனைத்து-ஒன்றும்,
சொல்லினான் தேறற்பாற்று அன்று.

826 நட்டார்போல் நல்லவை சொல்லினும்; ஒட்டார்-சொல்
ஒல்லை உணரப்படும்.

827 சொல்-வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க; வில்-வணக்கம்
தீங்கு குறித்தமையான்!

828 தொழுத கையுள்ளும் படை-ஒடுங்கும்; ஒன்னார்
அழுத கண்ணீரும், அனைத்து.

829 மிகச்-செய்து, தம்-எள்ளுவாரை நகச்-செய்து,
நட்பினுள் சாப்-புல்லற்பாற்று.

830 பகை நட்பு-ஆம், காலம்-வருங்கால்; முகம்-நட்டு,
அகம்-நட்பு ஒரீஇ-விடல்!

821. முடியுமிடங்காணின் மற்றொருவன் எறிதற்குப் பட்டடையாம்; மனத்தினால் ஒவ்வாது புறத்து வேறுமிகச் செய்து வந்தாரது நட்பு.

இது கருமங்காரணமாக நட்டாரோடு கூடும் திறங் கூறிற்று. பட்டடையாவது தான் தாங்குவது போல நின்று வெட்டுவார்க்கு உதவி செய்வது.

822. நட்டோர் போன்று மனத்தினான் நட்பில்லாதார் நட்பு, பெண் மனம்போல வேறுபடும்; ஆதலால், அவருள்ளக் கருத்தறிந்து கொள்க.

இது நட்பாயொழுகுவாரது உள்ளக்கருத்தறிய வேண்டு மென்றது.

823. நல்லவாகிய பல நூல்களைக் கற்றவிடத்தும், மனம் நல்லாராகுதல் மாட்சியில்லார்க்கு அரிது.

இது கல்வியால் அறிதல் அரிதென்றது.

824. முகத்தால் இனியவாக நக்கு மனத்தால் இன்னாதவாக நினைக்கும் வஞ்சகரை அஞ்சவேண்டும்.

825. மனத்தால் பொருத்தமில்லாதவரை யாதொன்றன் கண்ணும் அவர் சொல்லினால் தெளிதற்பாலதன்று.

இது சொல்லினால் அறிதலரிதென்றது.

826. உற்றாரைப்போல நல்லவானவை சொன்னாராயினும் பகைவர் சொல்லுஞ்சொல் விரைந்தறியப்படும்.

827. வில்லினது வணக்கம் தீமையைக் குறித்தமை ஏதுவாகத் தாழச்சொல்லுஞ் சொல்லைப் பகைவார்மாட்டு நன்று சொன்னாரென்று கொள்ளாதொழிக.

இது தாழச்சொல்லினும் தேறப்படா ரென்றது.

828. தொழுதகையுள்ளும் கொலைக்கருவி ஒடுங்கும்: பகைவர் அழுதகண்ணீரும் அத்தன்மையதாமென்று கொள்க.

மெல்லியராகத் தொழுதுவந்து ஒத்தார்போல ஒழுகுவாரது நட்பென்றவாறு. இது கூடாநட்பினால்வருங் குற்றங் கூறிற்று. கூடா நட்பினர் வேறு காலத்தினும் அழுதகாலத்தினும் தேறப்படாரென்க.

829. பகைமை தோன்றாமல் புறத்தின்கண் நட்பினை மிகச்செய்து அகத்தின்கண் தம்மையிகழும் பகைவரைத் தாமும் அந்நட்பின்கண்ணே நின்று, புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணஞ் செய்து, அகத்தின்கண் அது சாம் வண்ணம் பொருந்தற்பான்மை யுடைத்து அரசநீதி.

830. பகைவர் நட்பாங்காலம் வந்தவிடத்து, முகத்தால் நட்பினைச் செய்து அகநட்பு நீங்கவிடுக.

# 84. பேதைமை

831 பேதைமை என்பது ஒன்று; 'யாது?' எனின்; ஏதம்-கொண்டு,
ஊதியம் போகவிடல்.

832 பேதைமையுள் எல்லாம் பேதைமை; காதன்மை
கை அல்ல-தன்கண் செயல்.

833 நாணாமை, நாடாமை, நார்-இன்மை, யாது-ஒன்றும்
பேணாமை; பேதை தொழில்.

834 ஓதி-உணர்ந்தும், பிறர்க்கு-உரைத்தும், தான்-அடங்காப்
பேதையின், பேதையார் இல்.

835 ஒருமைச்-செயல்-ஆற்றும், பேதை; எழுமையும்
தான்-புக்கு-அழுந்தும் அளறு!

836 பொய்படும் ஒன்றோ; புனை பூணும்; கை-அறியாப்
பேதை வினை மேற்கொளின்.

837 ஏதிலார் ஆர, தமர்-பசிப்பர்; பேதை
பெருஞ்-செல்வம் உற்றக்கடை.

838 மையல் ஒருவன் களித்தற்றால்; பேதை-தன்
கை-ஒன்று உடைமை பெறின்.

839 பெரிது-இனிது, பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை-தருவது ஒன்று-இல்!

840 கழாஅக் கால். பள்ளியுள் வைத்தற்றால்; சான்றோர்
குழா-அத்துப் பேதை புகல்.

831. அறியாமையென்று சொல்லப்படுவதொன்று யாதெனின், அது குற்றம் பயப்பனவற்றைக் கொண்டு நன்மை பயப்பனவற்றைப் போகவிடல்.

இது பேதைமையின் இலக்கணம் கூறிற்று

832. அறியாமை யெல்லாவற்றுள்ளும் அறியாமையாவது தனக்குக் கைவராத பொருளின்கண் காதன்மை செய்தல்.

இது வருந்தினாலும் பெறாததற்குக் காதல் செய்தலும் பேதைமையென்றது.

833. நாணமில்லாமையும், தெரிந்துணராமையும், ஈரமின்மையும், யாதொரு பொருளையும் போற்றாமையும் பேதையார் தொழில்.

இது பேதையார்செயல் கூறிற்று.

834. நூல்களைக் கற்றறிந்தும் அவற்றைப் பிறர்க்கு இசையச் சொல்லியும், தான் அடங்குதலைச் செய்யாத பேதையார்போலப் பேதையார் உலகத்தில் இல்லை.

835. பேதை ஒருபிறப்பின்கண் செய்யும் செயலாலே செய்ய வல்லவன், எழுபிறப்பினும் தான் புக்கழுந்தும் நரகத்தை.

புக்கழுந்தல்- ஒருகால் நரகத்திலே பிறந்தால் அவ்வுடம்பு நீங்கினாலும் அதனுள்ளே பிறத்தல்.

836. ஒழுக்கமறியாதா னொருபேதையான் ஒருகருமத்தை மேற்கொண்டானாயின், அப்பொழுது பொய்யனென்னவும் பட்டுப் பிறர்க்குப் புனைபூணும்.

புனைபூணல் - சிறைபடுதல்.

837. அயலார் உண்ண, உற்றார் பசியாநிற்பர்; பேதையானவன் பெரிய செல்வத்தை உற்றவிடத்து.

இதுபேதை பொருள்பெற்றால் வழங்குந்திறங் கூறிற்று.

838. முன்னே பித்தாய் மயங்கிய ஒருவன் பின்பு கள்ளினை நுகர்ந்து களித்தாற் போலாவதொன்று, பேதை தன்கையின்கண் ஒன்றுடையனானவிடத்து.

839. மக்கட்குப் பேதையாரது நட்பு மிகவும் இனிது: பிரிந்தவிடத்துத் தருவதொரு துன்பம் இல்லையாதலான்.

இது பேதை காமந்துய்க்குமாறு கூறிற்று.

840. கழுவாத காலைப் பள்ளியின்கண் வைத்தாற்போலும், சான்றோர் அவையின்கண் பேதை புகுந்து கூடியிருத்தல்.

இது பேதை யிருந்த அவை யிகழப்படுமென்றது.

# 85. புல்லறிவு ஆண்மை

841 அறிவு-இன்மை, இன்மையுள் இன்மை; பிறிது-இன்மை
இன்மையா வையாது, உலகு.

842 அறிவு-இலான் நெஞ்சு-உவந்து-ஈதல், பிறிது-யாதும்
இல்லை; பெறுவான் தவம்.

843 அறிவு-இலார் தாம்-தம்மைப் பீழிக்கும் பீழை;
செறுவார்க்கும் செய்தல் அரிது.

844 'வெண்மை எனப்படுவது யாது?' எனின்; 'ஒண்மை
உடையம் யாம்!' என்னும் செருக்கு.

845 கல்லாத மேற்கொண்டு ஒழுகல்; கசடு-அற
வல்லதூஉம், ஐயம் தரும்.

846 அற்றம் மறைத்தலோ புல்லறிவு; தம்வயின்
குற்றம் மறையா-வழி.

847 அரு-மறை சோரும் அறிவு-இலான் செய்யும்,
பெரு-மிறை, தானே தனக்கு.

848 ஏவவும் செய்கலான்; தான் தேறான்; அவ்-உயிர்
போஒம் அளவும் ஓர்-நோய்.

849 காணாதாற் காட்டுவான் தான்-காணான்; காணாதான்
கண்டான் ஆம், தான்-கண்ட-ஆறு.

850 உலகத்தார், 'உண்டு' என்பது 'இல்' என்பான்; வையத்து
அலகையா வைக்கப்படும்.

841. நல்குரவினுள் நல்குரவாவது அறிவின்மை: பொருளின்மையை நல்குரவாக எண்ணார் உலகத்தார்: அது புண்ணியம் செய்யாதார்மாட்டே சேருமாதலான்.

842. அறிவில்லாதான் அரிதாக எண்ணின மறைப் பொருளைச் சோரவிடுவன்; அதுவேயன்றித் தனக்குத்தானே பெரிய துன்பத்தினையும் செய்துகொள்ளுவன்.

சோரவிடுதல்- பிறர்க்குச் சொல்லுதல். இது பொருட்கேடும் உயிர்க்கேடும் தானே செய்யுமென்றது.

843. அறிவில்லாதார் தாமே தம்மை யிடர்ப்படுத்தும் இடர்ப்பாடு, பகைவர்க்கும் செய்தல் அரிது.

இது மேற்கூறியதனை வலியுறுத்திற்று

844. புல்லறி வென்று சொல்லப்படுவது யாதெனின், அது யாம் அறிவுடையோ மென்று தம்மைத் தாம் மதிக்குங்களிப்பு.

845. தாம் உய்யக் கல்லாதவற்றைக் கற்றாராக மேற்கொண்டொழுகல், குற்றந்தீரக் கற்றதனையும் ஐயமாக்கும்.

இது கல்லாததனை மேற்கொள்ளுதல் புல்லறிவென்றது.

846. தம்பாலுள்ள குற்றத்தைப் பிறரறியாமல் தாம் மறையாத காலத்துப் பிறர் காணாமல் மறைக்க வேண்டும் உறுப்பை ஆடையால் மறைத்தலும் புல்லறிவு.

எனவே, அதுவும் மறையானாயின் குற்றம் நாடுவாரில்லை யென்றவாறாயிற்று. இது குற்றமறையாமை புல்லறிவென்றது.

847. அறிவில்லாதான் அரிதாக எண்ணின மறைப் பொருளைச் சோரவிடுவன்; அதுவேயன்றித் தனக்குத்தானே பெரிய துன்பத்தினையும் செய்துகொள்ளுவன்.

சோரவிடுதல்- பிறர்க்குச் சொல்லுதல். இது பொருட்கேடும் உயிர்க்கேடும் தானே செய்யுமென்றது.

848. அறிவுடையார் சொல்லவும் செய்யான்; தானும் தெளியான்; அத்தன்மையனாகிய சீவன் போமளவும் உலகத்தார்க்கு ஒரு நோய் போல்வன்.

இஃது ஈட்டின பொருளைக் கொடுத்தலும் தொகுத்தலும் செய்யாமை புல்லறி வென்றது.

849. அறியாதானை அறிவிக்கப் புகுதுமவன் தானறியான்: அவ்வறியாதவன் தான் அறிந்தபடியை அறிந்தானாயிருக்குமாதலான்.

இது கொண்டது விடாமை புல்லறி வென்றது.

850. உலகத்தில் அறிவுடையார் பலர் உண்டென்பதாகிய ஒரு பொருளை இல்லையென்று சொல்லுமவன், இவ்வுலகத்தின் கண்ணே திரிவதாகிய பேயென்று எண்ணப்படுவன்.

இஃது உயர்ந்தோர் உண்டெடன்பதனை இல்லையென்றல் புல்லறிவென்றது.

# 86. இகல்

851 இகல்-என்ப; எல்லா உயிர்க்கும் பகல்-என்னும்
பண்பு-இன்மை பாரிக்கும் நோய்.

852 பகல்-கருதிப் பற்றா-செயினும்; இகல்-கருதி,
இன்னா-செய்யாமை தலை.

853 இகல்-என்னும் எவ்வ-நோய்-நீக்கின்; தவல்-இல்லாத்
தா-இல் விளக்கம் தரும்.

854 இன்பத்துள் இன்பம் பயக்கும்; இகல்-என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

855 இகல் எதிர்-சாய்ந்து ஒழுக-வல்லாரை, யாரே,
மிகல்-ஊக்கும் தன்மையவர்?

856 இகலின் மிகல்-இனிது என்பவன் வாழ்க்கை;
தவலும், கெடலும் நணித்து.

857 மிகல்-மேவல் மெய்ப்-பொருள் காணார்; இகல்-மேவல்
இன்னா அறிவினவர்.

858 இகலிற்கு எதிர்-சாய்தல் ஆக்கம்; அதனை
மிகல்-ஊக்கின், ஊக்குமாம் கேடு.

859 இகல்-காணான், ஆக்கம் வருங்கால்; அதனை
மிகல்-காணும், கேடு தரற்கு.

860 இகலான்-ஆம், இன்னாத எல்லாம்; நகலான்-ஆம்,
நல்-நயம் என்னும் செருக்கு.

851. எல்லா வுயிர்க்கும் வேறுபடுதலாகிய குணமின்மையைப் பரப்பும் துன்பத்தை, இகலென்று சொல்லுவார் அறிவோர்.

இஃது இகலாவது இதுவென்று கூறிற்று.

852. தம்மோடு பற்றில்லாதார் வேறுபடுதலைக் கருதி இன்னாதவற்றைச் செய்தாராயினும் அவரோடு மாறுபடுதலைக் கருதித் தாமும் அவர்க்கு அவற்றைச் செய்யாமை நன்று.

இது மேற்கூறிய குற்றமும் குணமும் பயக்குமாதலின் மாறுபடுதற்குக் காரணமுள வழியும் அதனைத் தவிர்தல் வேண்டும் என்றது.

853. மாறுபடுதலாகிய இன்னாத நோயை நீக்குவானாயின், அந்நீக்குதல் கேடில்லாத குற்றமற்ற ஒளியினைத் தரும்.

இது தோற்றமுண்டா மென்றது.

854. இன்பத்தின் மிக்க இன்பம் எய்தும்: மாறுபாடாகிய துன்பத்தின் மிக்க துன்பம் கெடுமாயின்.

எல்லா இன்பத்தின்மிக்க வீடுபேற்றின்பம் எய்தும் என்றவாறு.

855. இகலின் எதிர் சாய்ந்தொழுக வல்லாரை வெல்ல நினைக்கும் தன்மையவர் யார்தான்.

சாய்ந்தொழுக வேண்டுமென்றார் அது தோல்வி யாகாதோ வென்றார்க்கு அவரை வெல்வாரில்லை யென்றார்.

856. பிறருடன் மாறுபாட்டின்கண் மிகுதல் இனிதென்று கருதுமவனும், அவன் வாழ்க்கையும் சாதலும் கெடுதலும் நணித்து.

நிரனிறை. இது சாயானாயின் உயிர்க்கேடும் பொருட்கேடு முண்டாமென்றது.

857. மிகுதலைப் பொருந்துகின்ற உண்மைப் பொருளைக் காணமாட்டார், மாறுபாட்டினைப் பொருந்தின இன்னாத அறிவுடையார்.

இது மாறுபடுவார்க்கு மெய்ப்பொருள் தோன்றாதென்றது.

858. மாறுபாட்டிற்குச் சாய்தொழுகுதல் ஆக்கமாம்: அதனை மிகுதலை நினைக்கின் கேடு மிகும்.

இது மாறுபாட்டிற்குச் சாய்ந்தொழுகல் வேண்டுமென்றது.

859. மாறுபடுதற்குக் காரண முண்டாயினும் ஆக்கம் வருங்காலத்து மாறுபாடு காணான்: கேடு வருங்காலத்து அதனை மிகுதலைக் காணும்.

.இம் மாறுபாடு நல்வினை யுடையார்க்குத் தோன்றாதென்றவாறு.

860. மாறுபாட்டினாலே துன்பங்களெல்லாம் உளவாம்: உடன்பட்டு நகுதலாலே நல்ல நயமாகிய உள்ளக்களிப்பு உண்டாம்.

# 87. பகைமாட்சி

861 வலியார்க்கு மாறு-ஏற்றல் ஓம்புக! ஓம்பா,
மெலியார்-மேல் மேக, பகை!

862 அன்பு-இலன்; ஆன்ற-துணை-இலன்; தான்-துவ்வான்;
என்-பரியும், ஏதிலான் துப்பு?

863 அஞ்சும்; அறியான்; அமைவு-இலன்; ஈகலான்;
தஞ்சம் எளியன், பகைக்கு.

864 நீங்கான் வெகுளி; நிறை-இலன்; எஞ்ஞான்றும்,
யாங்கணும், யார்க்கும், எளிது.

865 வழி-நோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழி-நோக்கான்;
பண்பு-இலன்; பற்றார்க்கு இனிது.

866 காணாச் சினத்தான், கழி-பெருங் காமத்தான்;
பேணாமை பேணப்படும்.

867 கொடுத்தும் கொளல்-வேண்டும் மன்ற; அடுத்து-இருந்து,
மாணாத செய்வான் பகை.

868 குணன் இலனாய், குற்றம் பல-ஆயின், மாற்றார்க்கு,
இனன்-இலன்-ஆம்; ஏமாப்பு உடைத்து.

869 செறுவார்க்குச் சேண், இகவா, இன்பம்; அறிவு-இலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

870 கல்லான் வெகுளும் சிறு-பொருள்; எஞ்ஞான்றும்,
ஒல்லானை ஒல்லாது, ஒளி.

861. தம்மின் வலியார்க்குப் பகையா யெதிர்தலைத் தவிர்க: தம்மைப் போற்றாத எளியார்மாட்டுப் பகைகோடலை மேவுக.

இது தனக்கு எளியாரோடு பகை கோடலாமென்றது.

862. சுற்றத்தார்மாட்டு அன்புறுதலும் இலன்; வேற்றரசராகிய வலிய துணையும் இலன்: ஆதலான், தான் வலியிலன்; இப்பெற்றிப்பட்டவன், மேல் வந்த பகைவன் வலியை யாங்ஙனம் தொலைப்பன்?

863. அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுவான், பகைவனது வலிமை அறியான், மதியிலன், ஈயமாட்டான்: இப்பெற்றிப் பட்டவன் பகைவர்க்கு மிகவும் எளியன்.

.இஃது இவை நான்கு முடையவன் தோற்கு மென்றது.

864. வெகுளியின் நின்று நீங்கானாய் நிறையுடைமை இலனாயின் அவனை வெல்லுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் யாவர்க்கும் எளிது.

இஃது இவையிரண்டு முடையவ னெல்லார்க்குந் தோற்கு மென்றது.

865. ஒருவினை செய்யத்தொடங்குங்கால் பின் வருவன பாரான், பயன்படுவனவற்றைச் செய்யான், அதனால் உறும் பழியைப் பாரான், குணமுமிலன்; இவன் பகைமை பகைவர்க்கு இனிது.

இஃது இவன் பகைமையால் பகைவர்க்கு இனிமை உண்டாமென்றது.

866. மீண்டும் பாராத சினத்தனுமாய் மிகப்பெருகிய காமத்தனுமாகியவன் பகை விரும்பப்படும்.

இஃது இவையுடையார் நட்டோரிலராதலால் இவரிடத்துப் பகை கொள்ளலா மென்றது.

867. பகையை உற்றிருந்தும் மாட்சியையில்லாதன செய்யுமவன் பகையினைத் துணிந்து ஒன்றனைக் கொடுத்தும் கொள்ளல் வேண்டும்.

மாணாதசெய்தலாவது பகைக்காவன செய்யாது பிறிது செயல். இஃது இவன் பகைசெய்யமாட்டானாதலால் அப்பகை கோடலாமென்றது.

868. குணங்களுள் யாதும் இலனாய்க் குற்றங்கள் பல உடையனாயின் அவன் துணையிலனாம்; அது மாற்றார்க்கு ஏமமாதலை உடைத்தாம்.

869. அறிவில்லாத அச்சமுடைய பகைவரைப் பெறின் அவரைச் செறுவார்க்கு இன்பம் தூரப்போகாது, அணித்தாக வரும்.

அறிவு- காரியவறிவு.

870. கல்லாதானுமாய், வெகுளியுடையனுமாய்ச் சிறு பொருளனுமாகிய பகைவனை எல்லாநாளும் ஒளி பொருந்தாது.

# 88. பகைத் திறம் தெரிதல்

871 பகை-என்னும் பண்பு-இலதனை, ஒருவன்
நகையேயும், வேண்டற்பாற்று அன்று.

872 வில்-ஏர் உழவர் பகை-கொளினும்; கொள்ளற்க
சொல்-ஏர் உழவர் பகை!

873 ஏமுற்ற-வரினும் ஏழை; தமியனாய்ப்
பல்லார், பகை கொள்பவன்.

874 பகை-நட்பாக் கொண்டு-ஒழுகும் பண்பு-உடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று, உலகு.

875 தன்-துணை இன்றால்; பகை-இரண்டால்; தான்-ஒருவன்
இன்-துணையாக்-கொள்க, அவற்றின் ஒன்று!

876 தேறினும், தேறா-விடினும், அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்!

877 நோவற்க, நொந்தது அறியார்க்கு! மேவற்க,
மென்மை, பகைவர்-அகத்து!

878 வகை-அறிந்து, தற்-செய்து, தற்-காப்ப மாயும்;
பகைவர்கண் பட்ட செருக்கு.

879 இளைதாக முள்-மரம் கொல்க; களையுநர்
கை-கொல்லும் காழ்த்த இடத்து!

880 உயிர்ப்ப உளர்-அல்லர் மன்ற; செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலாதார்.

871. பகை யென்று சொல்லப்படுகின்ற குணமில்லாததனை, ஒருவன் விளையாட்டின்கண்ணும் விரும்பற்பாலதன்று.

இஃது எவ்விடத்தும் பகைகோடல் தீது என்றது.

872. வில்லை ஏராக உடைய பகைவரோடு பகைகொளினும் சொல்லை ஏராக உடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக.

இஃது அரசரோடு பகைகொளினும் அமைச்சரோடு பகை கொள்ளலாகாதென்றது.

873. பித்து உற்றவரினும் அறிவிலன், தனியனாயிருந்து பலரோடு பகை கொள்ளுமவன்.

இது பலரோடும் பகைக்கொள்ளலாகா தென்றது.

874. பகைவரை நட்புபோலக் கொண்டொழுகவல்ல பண்புடையவன் பெருமையின்கீழே உலகம் தங்கும்.

இது பகை கொள்ளாமையால் வரும் பயன் கூறிற்று.

875. பகையிரண்டாய்த் தான் ஒருவனாய்த் தனக்குத் துணையும் இலனாயின் அப்பகை யிரண்டினுள் ஒன்றை இனிய துணையாகச் செய்து கொள்க.

இஃது இருவரோடு பகைக்கொள்ளலாகா தென்றது.

876. பகைவனை ஆக்கமுள்ள காலத்து நட்டோனென்று தெளியலுமாம்; பகைவனென்று ஐயப்படலுமாம்; அழிவுவந்த விடத்துத் தெளிவதுஞ் செய்யாது நீக்குவதுஞ் செய்யாது

ஒழுகுக. இது பகையாயினார்மாட்டு அழிவின்கண் செய்வதோரியல்பு கூறிற்று.

877. தாம் வருத்த முற்றதனை அறியாதார்க்கு வருத்த முற்றுச் சொல்லா தொழிக; அதுபோலப் பகைவரிடத்துத் தமது மென்மையைத் தோற்றுவித்தலை விரும்பாதொழிக.

இது பகைவர்மாட்டுத் தமது மென்மையைத் தோற்றுவியா தொழிகவென்றது.

878. வினைசெய்யும் வகையை யறிந்து, தன்னைப் பெருக்கித் தான் தன்னைக் காக்கப் பகைவர்மாட்டு உண்டான பெருமிதம் கெடும்.

இது பகைவரைக் கொல்லுந் திறங் கூறிற்று.

879. முள்மரத்தை இளைதாகவே களைக: முற்றினவிடத்துத் தன்னைக் களைவார் கையைக் கொல்லுமாதலால்.

இது பகைவர் வலியராவதன்முன்னே களைதல் வேண்டுமென்றது.

880. பகைவரது தலைமையைக் கெடுக்க மாட்டாதார், அப்பகைவர் உயிர்க்கும் மாத்திரத்திலே அறுதியாகச் சாவார்.

இது பகை கொள்ளுங்கால் வலியாரோடு பகைகோடலாகா தென்றது.

# 89. உட்பகை

881 நிழல்-நீரும் இன்னாத இன்னா; தமர்-நீரும்,
இன்னா-ஆம், இன்னா செயின்.

882 வாள்-போல் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக,
கேள்-போல் பகைவர் தொடர்பு.

883 உட்-பகை அஞ்சித் தற்-காக்க! உலைவு-இடத்து,
மட்பகையின் மாணத் தெறும்.

884 மனம்-மாணா உட்-பகை தோன்றின்; இனம்-மாணா
ஏதம் பலவும் தரும்.

885 உறல்-முறையான் உட்-பகை தோன்றின்; இறல்-முறையான்
ஏதம் பலவும் தரும்.

886 ஒன்றாமை ஒன்றியார்கண் படின்; எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

887 செப்பின் புணர்ச்சி-போல் கூடினும்; கூடாதே
உட்-பகை உற்ற குடி.

888 அரம்-பொருத பொன்-போல, தேயும் உரம்; பொருது
உட்-பகை உற்ற குடி.

889 எட்-பகவு அன்ன சிறுமைத்தே-ஆயினும்,
உட்-பகை, உள்ளது ஆம், கேடு.

890 உடம்பாடு இலாதவர் வாழ்க்கை; குடங்கருள்
பாம்போடு உடன்-உறைந்தற்று.

881. நிழலகத்து நீர் இனிதேயாயினும் அவற்றுள் இன்னாத செய்யும் நீர் இன்னாதாகும். அதுபோலச் சுற்றத்தார் நன்மை இனிதாயினும் அவர் இன்னாதவற்றைச் செய்வாராயின் அஃது இன்னாதாயே விடும்.

இது சுற்றமென் றிகழற்க என்றது.

882. வாள்போலக் கொல்லுந் திறனுடைய பகைவரை அஞ்சாதொழிக; புறம்பு நட்டாரைப் போல மனத்தினாற் பகைத்திருப்பார் தொடர்பை அஞ்சுக.

இது பகை அஞ்சுவதினும் மிக அஞ்சவேண்டுமென்றது.

883. உடனே வாழும் பகைவரை அஞ்சித் தன்னைக் காக்க: அவர் தனக்குத் தளர்ச்சி வந்தவிடத்துக் குயவன் கலத்தை அறுங்குங் கருவிபோலத் தப்பாமல் கொல்லுவர்.

மட்பகை தான் அறுக்குங்கால் பிரறியாமல் நின்று அறுக்கும்.

884. மனம் நன்றாகாத உட்பகை தோன்றுமாயின் தனக்கு இனமாயினார் நல்லராகார்; அஃதன்றிப் பல குற்றங்களும் உண்டாம்.

இஃது இனம் பொருந்தாமல் கூடநின்று பகைப்பிக்கு மென்றது.

885. உறவு முறையோடே வுட்பகை தோன்றுமாயின், அது கெடுதல் முறைமையோடே கூடப் பல துன்பத்தினையும் தரும்.

இது சுற்றத்தாராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று.

886. தன் ஒன்றினார்மாட்டு ஒன்றாமை உளதாயின், எந்நாளினும் சாவாமையைக் கூடுதல் அரிது.

இது நட்டோராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று.

887. உட்பகையும் அஃது உற்ற குடியும், செப்பும் மூடியும் பொருந்தினாற் போலப் பொருந்தினவாயினும், பொருத்தமில்லவாம்.

உட்பகையுற்றார் செப்பும் மூடியும் ஒன்றுபட்டாற்போல இருந்து செப்பகத்துப் பொருள் வாங்குவார்க்கு மூடி துணையாய் அகன்று நிற்குமதுபோல அகன்று நிற்பரென்றவாறு.

888. உட்பகையானது உற்ற குடி, அரத்தினால் தேய்க்கப்பட்ட பொன்னைப் போல, அதனால் பொரப்படவே வலி தேயும்.

இஃது உட்பகை அழகு செய்வது போலப் பலத்தைக் கெடுக்குமென்றது.

889. எள்ளின் பிளவு போன்ற சிறுமைத்தேயாயினும் உடனே வாழும் பகையினான்

ஒருவர்க்குக் கேடு உளதாம். இது பகை சிறிதென் றிகழற்க வென்றது.

890. மனத்தினால் பொருத்த மில்லாதாரோடு ஒத்து வாழும் வாழ்க்கை, ஒரு குடிலகத்தே பாம்போடு கூடி வாழ்ந்தாற் போலும்.

இது பாம்பு இடம் வந்தால் கடிக்கும்; அதுபோல உட்பகைவர் இடம் வந்தால் கொல்லுவரென்றது.

# 90. பெரியாரைப் பிழையாமை

891 ஆற்றுவார் ஆற்றல் இகழாமை; போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.

892 பெரியாரைப் பேணாது ஒழுகின்; பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

893 கெடல்-வேண்டின், கேளாது செய்க; அடல்-வேண்டின்,
ஆற்றுபவர்கண் இழுக்கு!

894 கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்; ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.

895 யாண்டுச்-சென்று யாண்டும் உளர்-ஆகார்; வெந்-துப்பின்
வேந்து செறப்பட்டவர்.

896 எரியான் சுடப்படினும், உய்வு-உண்டாம்; உய்யார்,
பெரியார்ப் பிழைத்து-ஒழுகுவார்.

897 வகை-மாண்ட வாழ்க்கையும், வான்-பொருளும் என்-ஆம்?
தகை-மாண்ட தக்கார் செறின்?

898 குன்று-அன்னார் குன்ற மதிப்பின்; குடியொடு,
நின்று-அன்னார் மாய்வர், நிலத்து.

899 ஏந்திய கொள்கையார் சீறின்; இடை-முரிந்து
வேந்தனும், வேந்து கெடும்.

900 இறந்து-அமைந்த சார்பு-உடையர் ஆயினும் உய்யார்;
சிறந்து-அமைந்த சீரார் செறின்.

891. தவத்தினாலும் வலியினாலும் பெரியாரது வலியை இகழாதொழிதல், தம்மைக்

காப்பார்க்குக் காவலாகிய எல்லாவற்றுள்ளும் தலையான காவலாம். இது பெரியாரைப் பிழையாமையால் வரும் பயன் கூறிற்று.

892. தான் கெடுதல் வேண்டுவனாயின், பெரியாரைக் கேளாதே ஒருவினையைச் செய்க. தன்னைக் கொல்ல வேண்டுவனாயின், வலியுடையார் மாட்டே தப்புச் செய்க.

893. பெரியவர்களைப் போற்றாது ஒழுகுவனாயின் அவ்வொழுக்கம் அவராலே எல்லாரானும் இகழப்படும் நீங்காத துன்பத்தைத் தரும்.

இது முனிவரைப் போற்றா தொழியின் அது குற்றம் பயக்கு மென்றது.

894. வலியுடையார்க்கு வலியில்லாதார் இன்னாதவற்றைச் செய்தல், தம்மைக் கொல்லும் கூற்றத்தைக் கைகாட்டி அழைத்தாற் போலும்.

895. எவ்விடத்துச் செல்லினும் எவ்விடத்தும் உளராகார்: வெய்ய வலிமையுடைய வேந்தனால் செறப்பட்டார்.

இது கெட்டுப்போனாலும் இருக்கலாவதோர் அரணில்லை யென்றது.

896. தீயினால் சுடப்படினும் உய்தல் உண்டாம்: பெரியாரைப் பிழைத்தொழுகுவார் உய்யார்.

இது முனிவரைப் பிழைத்தலினால் வருங்குற்றம் கூறிற்று. முற்பட உயிர்க்கேடு வருமென்று கூறினார்.

897. எல்லா வகையானும் மாட்சிமைப்பட்ட வாழ்க்கையும் மிக்க பொருளும் என்ன பயனுடையனவாம்: பெருமையால் மிக்க தகுதியுடையார் செறுவாராயின்.

எல்லா வகையுமாவன சுற்றமும், நட்டோரும், நற்றனயரும், இல்லும், நிலமும் முதலாயின

898. மலைபோலப் பெரியாரைக் குறைய மதிப்பாராயின், உலகத்தின் கண்ணே நின்றாற்போலத் தோன்றுகின்றவர் குடியோடே கூடமாய்வர்.

குன்ற மதித்தல்- அவமதித்தல்.

899. உயர்ந்த கோட்பாட்டை யுடையார் வெகுள்வராயின், இந்திரனும் இடையிலே இற்றுத் தன்னரசு இழக்கும்.

இது பொருட்கேடு வருமென்று கூறிற்று.

900. மிகவும் அமைந்த துணையுடைய ராயினும் கெடுவர்: மிகவும் அமைந்த சீர்மையுடையார் செறுவாராயின்.

இது துணையுடையாராயினும் உயிர்க்கேடு வருமென்றது.

# 91. பெண்வழிச் சேறல்

901 மனை-விழைவார் மாண்-பயன் எய்தார்; வினை-விழைவார்
வேண்டாப் பொருளும் அது.

902 பேணாது பெண்-விழைவான் ஆக்கம்; பெரியதோர்
நாணாக, நாணுத் தரும்.

903 இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு-இன்மை; எஞ்ஞான்றும்,
நல்லாருள் நாணுத் தரும்.

904 மனையாளை அஞ்சும் மறுமை-இலாளன்
வினை-ஆண்மை வீறு-எய்தல் இன்று.

905 இல்லாளை அஞ்சுவான், அஞ்சும் மற்று-எஞ்ஞான்றும்,
நல்லார்க்கு நல்ல செயல்.

906 இமையாரின் வாழினும், பாடு-இலரே; இல்லாள்
அமை-ஆர் தோள் அஞ்சுபவர்.

907 பெண்-ஏவல் செய்து-ஒழுகும் ஆண்மையின், நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து.

908 நட்டார் குறை-முடியார்; நன்று-ஆற்றார்; நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகுபவர்.

909 அற-வினையும், ஆன்ற-பொருளும், பிற-வினையும்;
பெண்-ஏவல் செய்வார்கண் இல்.

910 எண்-சேர்ந்த நெஞ்சத்து, இடன்-உடையார்க்கு;
எஞ்ஞான்றும்,
பெண்-சேர்ந்து-ஆம் பேதைமை இல்.

901. மனையாளைக் காதலித்தொழுகுவார் நற்பயனைப் பெறார்: யாதானும் ஒருவினையைச் செய்து முடிக்கவேண்டுவார் விரும்பாத பொருளும் அவரை விழையாமை.

இஃது அறத்தினும் பொருளினும் காதலின்றி அவர்தம்மையே காதலிப்பார்க்கு அறனும் பொருளும் இல்லையாமென்றது.

902. அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பானது செல்வம், பெரியதோர் நாணம் உலகத்தே நிற்கும்படியாகத் தனக்கு நாணினைத் தரும்.

903. மனையாள்மாட்டுந் தாழ்ந்தொழுகும் இயல்பாகிய கேடு எல்லா நாளும் நல்லாரிடத்து நாணுதலைத் தரும்.

904. மனையாளை அஞ்சுகின்ற மறுமைப் பயனெய்தாதவன் ஒரு வினையை ஆளுந்தன்மை, பெருமை எய்துதல் இல்லை.

இது பொருள் செய்ய மாட்டானென்றது.

905. மனையாளை அஞ்சுவான், எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்லவை செய்தலை அஞ்சும்.

இஃது அறஞ்செய்ய மாட்டானென்றது.

906. தேவரைப்போல இன்புற்று வாழினும், பெருமை யிலராவர்; மனையாளது வேய்போலும் தோளை அஞ்சுபவர்.

இது செல்வமுடையராயினும் பிறரால் மதிக்கப்படாரென்றது.

907. பெண்டிர் ஏவின தொழிலைச் செய்தொழுகும் ஆண்மையின், நாணமுடைய பெண்மையே தலைமை உடைத்தாம்.

இது பிறரால் மதிக்கப்படாரென்றது.

908. நல்ல நுதலினை யுடையாள் விரும்பியவாறு செய்தொழுகுவார், தம்மோடு நட்டார்

குறைதீர்க்கவும் மாட்டார்; அவர்க்கு நல்ல செய்யவும் மாட்டார். குறைதீர்த்தல்- உற்ற துயரம் தீர்த்தல்.

909. அறஞ்செய்தலும் அமைந்த பொருள் செய்தலும் ஒழிந்த காமம் நுகர்தலும் பெண்ணேவல் செய்வார்மாட்டு இல்லையாம்.

இஃது அச்சமில்லாராயினும் சொன்னது செய்வாராயின் இம்மூன்று பொருளும் எய்தார் என்றது.

910. எண்ணஞ் சேர்ந்த மனத்தினை விரிவாக உடையார்க்கு எல்லா நாளும் பெண்ணைச் சேர்ந்து ஆகும் அறியாமை இல்லையாம்.

எண்ணஞ்சேர்தல் - இதனால் வருங்குற்றத்தினைத் தெரிந்துணர்தல்.

# 92. வரைவு இல் மகளிர்

911 அன்பின் விழையார், பொருள்-விழையும் ஆய்தொடியார்
இன்-சொல் இழுக்குத் தரும்.

912 பயன்-தூக்கிப் பண்பு-உரைக்கும் பண்பு-இல்-மகளிர்
நயன்-தூக்கி, நள்ளா விடல்!

913 பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்; இருட்டு-அறையில்
ஏதில் பிணம்-தழீ-இயற்று.

914 பொருட்பொருளார் புன்-நலம் தோயார்; அருட்பொருள்
ஆயும் அறிவினவர்.

915 பொது-நலத்தார் புன்-நலம் தோயார்; மதி-நலத்தின்
மாண்ட அறிவினவர்.

916 தம்-நலம் பாரிப்பார் தோயார்; தகை-செருக்கி,
புன்-நலம் பாரிப்பார் தோள்.

917 நிறை-நெஞ்சம் இல்லவர் தோய்வர்; பிற-நெஞ்சில்
பேணி, புணர்பவர் தோள்.

918 'ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு' என்ப;
'மாய மகளிர் முயக்கு'.

919 வரைவு-இலா மாண்-இழையார் மென்-தோள்; புரை-இலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

920 இரு-மனப்-பெண்டிரும், கள்ளும், கவறும்;
திரு-நீக்கப்பட்டார் தொடர்பு.

911. அன்பால் கலத்தலின்றிப் பொருளால் கலக்கும் ஆய்தொடியார் சொல்லும் இன்சொல், பின்பு கேட்டினைத் தரும்.

912. தமக்கு உளதாகும் பயனை நோக்கிக் குணமாகக்கூறும் குணமில்லாத மகளிரது இன்பத்தை யாராய்ந்து பார்த்து அவரைச் சாராதொழிக.

இதனாலே கணிகையர் இலக்கண மெல்லாம் தொகுத்துக் கூறினார்.

913. பொருளே கருதும் பெண்டிர் ஒருவனோடு பொய்யே முயங்கும் முயக்கம், இருட்டறையினுள்ளே கிடந்ததொரு வேற்றுப் பிணத்தைக் கூலிக்குத் தழுவியதுபோலும்.

இவை இரண்டினாலும் கணிகையர் கூட்டத்தினால் வரும் குற்றம் கூறப்பட்டது.

914. பொருளைப் பொருளாகக் கொள்வாராது புல்லிய நலத்தைத் தோயார், அருளைப் பொருளாக ஆராயும் அறிவுடையார்.

915. மதிநலத்தாலே மாட்சிமைப்பட்ட அறிவுடையார், எல்லார்க்கும் பொதுவாகிய நலத்தினையுடையவரது புல்லிய நலத்தைச் சேரார்.

இது புத்திமான் சேரானென்றது.

916. தம்முடைய நலத்தை உலகின்கண் பரப்புவார் சேரார்: வனப்பினால் களிப்புற்றுத் தமது புல்லிய நலத்தை எல்லார்மாட்டும் பரப்புவாரது தோளினை.

917. நிறையுடைய நெஞ்சில்லாதார் தோய்வர்: இன்பமில்லாத பிறவாகிய பொருளை நெஞ்சினாலே விரும்பிவைத்து அன்புற்றார் போலப் புணருமவரது தோளினை.

இது நிறையில்லாதார் சேர்வரென்றது.

918. யாதானும் ஒரு பொருளை உள்ளவாறு ஆராய்ந்தறியும் அறிவுடையரல்லாதார்க்கு வருத்தமாமென்று சொல்லுவர், மாயத்தை வல்ல மகளிரது முயக்கத்தை.

இஃது இவரை அறிவில்லாதவர் சேர்வரென்றது.

919. முயக்கத்தில் வரைவில்லாத மாணிழையாரது மெல்லிய தோளாவது, உயர்வில்லாத கயவர் அழுந்தும் நரகம்.

இஃது இழிந்தார் சார்வரென்றது.

920. கவர்த்த மனத்தையுடைய பெண்டிரும், கள்ளும், கவறும் திருமகளால் கடியப்பட்டாரது நட்பு.

இது நல்குரவாவார் சார்வரென்றது.

# 93. கள் உண்ணாமை

921 உட்கப் படாஅர், ஒளி-இழப்பர் எஞ்ஞான்றும்;
கள்-காதல் கொண்டு-ஒழுகுவார்.

922 உண்ணற்க, கள்ளை! உணில், உண்க, சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதார்!

923 ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என், மற்றுச்
சான்றோர் முகத்துக் களி!

924 நாண் என்னும் நல்லாள் புறம்-கொடுக்கும்; கள் என்னும்
பேணாப் பெரும்-குற்றத்தார்க்கு.

925 கை அறியாமை-உடைத்தே; பொருள்-கொடுத்து,
மெய்-அறியாமை கொளல்.

926 துஞ்சினார் செத்தாரின் வேறு-அல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சு-உண்பார் கள்-உண்பவர்.

927 உள்-ஒற்றி உள்ளூர் நகப்படுவர்; எஞ்ஞான்றும்
கள்-ஒற்றிக் கண் சாய்பவர்.

928 களித்து-அறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்!

929 களித்தானைக் காரணம் காட்டுதல்; கீழ்-நீர்க்-
குளித்தானைத் தீத்-துரீ-இயற்று.

930 கள் உண்ணாப்-போழ்தில், களித்தானைக் காணுங்கால்,
உள்ளான்கொல், உண்டதன் சோர்வு!

921. பிறரால் மதிக்கவும் படார், தோற்றமும் இழப்பர், எல்லா நாளும் கள்ளின்கண் காதல்கொண்டு ஒழுகுவார்.

இது மதிக்கவும் படார்: புகழும் இலராவரென்றது.

922. கள்ளினை உண்ணாதொழிக; உண்ணவேண்டின் சான்றோரால் மதிக்கப்படுதலை வேண்டாதார் உண்க.

923. தன்னைப்பயந்தாள் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்: அங்ஙனமாகச் சான்றோர் முன்பு களித்தல் மற்றியாதாகும்?

எல்லார் முன்பும் இன்னாமையே பயப்பதென்றவாறாயிற்று.

924. நாணமென்று சொல்லப்படுகின்ற நன்மடந்தை பின்பு காட்டிப்போம்; கள்ளுண்டலாகிய பிறரால் விரும்பப்படாத பெரிய குற்றத்தினையுடையார்க்கு.

இது நாணம் போமென்றது.

925. பயன் அறியாமை யுடைத்து: பொருளினைக் கொடுத்துத் தம்மெய் அறியாமையைச் செய்யும் கள்ளினைக் கோடல்.

இது மேற்கூறியகுற்ற மெல்லாம் பயத்தலின், அதனை அறிவுடையார் செய்யா ரென்றது.

926. உறங்கினார் செத்தாரோடு ஒப்பர், அறிவிழத்தலான்; அதுபோல எல்லாநாளும் கள்ளுண்பார் நஞ்சுண்பவரோடு ஒப்பர், மயங்குதலான்.

இஃது அறிவிழப்பரென்றது.

927. தங்கள் ஒழுக்கத்தை உள்புக்கு அறிந்த உள்ளூராலே இகழப்படுவர்; எல்லாநாளும் கள்ளுள்ளவிடத்தை நாடி, அதன்கண்ணே தாழ்வார்.

928. கள்ளுண்டால் களித்தறியே னென்பதனைக் கைவிடுக: மனத்தின்கண்ணே கரந்ததூஉம் அப்பொழுதே வாய்சேர்ந்து புலப்படும்; அது கள்ளிற்கு இயல்பு.

உளம் கெடாதென்பார்க்கு இது கூறப்பட்டது.

929. கள்ளுண்டு களித்தவனைக் காரணங் காட்டித் தெளிவித்தல், நீரின்கீழே முழுகினானைத் தீயினாற் சுட்டது போலும்.

இது பிறர்சொல்லவும் கேளாரென்றது.

930. தான் கள்ளுண்ணாதபோது கள்ளுண்டு களித்தவனைக் கண்டவிடத்துத் தான் கள்ளுண்டபோழ்து தளக்குள்ளதாகுஞ் சோர்வினை நினையான்போலும்; நினைப்பானாயின் தவிரும்.

# 94. சூது

931 வேண்டற்க, வென்றிடினும்-சூதினை! வென்றதூஉம்,
தூண்டில்-பொன்-மீன் விழுங்கியற்று.

932 ஒன்று-எய்தி, நூறு-இழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்;
நன்று-எய்தி வாழ்வதோர் ஆறு?

933 உருள்-ஆயம் ஓவாது கூறின்; பொருள்-ஆயம்
போஒய்ப் புறமே படும்.

934 சிறுமை பல-செய்து, சீர்-அழிக்கும் சூதின்,
வறுமை-தருவது ஒன்று இல்.

935 கவறும், கழகமும், கையும் தருக்கி
இவறியார்; இல்லாகியார்.

936 அகடு-ஆரார்; அல்லல் உழப்பர்; சூது-என்னும்
முகடியான் மூடப்பட்டார்.

937 பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்;
கழகத்துக் காலை புகின்.

938 பொருள்-கெடுத்து, பொய்-மேற்கொளீஇ, அருள்-கெடுத்து,
அல்லல் உழப்பிக்கும்; சூது.

939 உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி என்று ஐந்தும்
அடையாவாம்; ஆயம் கொளின்.

940 இழத்தொறூஉம் காதலிக்கும் சூதே-போல், துன்பம்
உழத்தொறூஉம் காதற்று, உயிர்.

931. வெல்லுமாயினும் சூதினை விரும்பாதொழிக; வென்று பெற்ற பொருளும் தூண்டிலின்கண்ணுண்டாகிய பொருளை மீன் விழுங்கினாற்போலும்.

இது பின் கேடுபயக்குமென்றது.

932. முன்பு ஒருபொருளைப் பெற்று அவ்வாசையாலே மற்றொரு பொருளினைப் பெறலாமென்று நூறு பொருளை யிழக்கின்ற சூதாடிகளுக்கு நன்றெய்தி வாழ்வதொரு நெறி உண்டாமோ?

933. புரளும் கவற்றை இடைவிடாது எக்காலத்தும் கூறுவானாயின், பொருள்வரவு தன்னைவிட்டுப் போய்ப் பிறர்பாற் செல்லும்.

934. துன்பமாயின பலவற்றையுஞ் செய்து தலைமையை யழிக்கும் சூதுபோல வறுமையைத் தருவது பிறிதொன்று இல்லை.

935. கவற்றினையும், கழகத்தினையும், கைத்தொழிலினையும் விரும்பி விடாதவர் முற்காலத்தினும் வறுவியரானார்.

கவறு - நெத்தம், கழகம் - உருண்டையுருட்டு மிடம், கைத் தொழில் - கவடி பிடித்தல்.

936. தமக்கு உள்ளதாகிய இந்திரியங்களும் மனமும் இன்புற்று நிறையப்பெறார்; அதுவேயன்றி அல்லற்படுவதும் செய்வர்; சூதாகிய மூதேவியாலே மறைக்கப்பட்டார்.

மறைத்தல்- நற்குணங்களைத் தோன்றாமல் மறைத்தல்.

937. சூதுகழகத்தின்கண்ணே காலைப்பொழுது புகுவானாயின், அது தொன்றுதொட்டு வருகின்ற செல்வத்தினையும் தமக்கியல்பாகிய குணத்தினையும் கெடுக்கும்.

938. சூது, முற்படப் பொருளைக் கெடுத்து அதன் பின்னர்ப் பொய்யை மேற்கொள்ளப்பண்ணி அருளுடைமையைக் கெடுத்து அல்லற்படுத்துவிக்கும்.

939. உடையும், செல்வமும், உணவும், புகழும், கல்வியுமென்று சொல்லப்பட்ட ஐந்தும் சூதினைக் கொள்ளின் சாராவாம்.

செல்வம்- பொன்னும், மனையும், பூமியும், அடிமையும் முதலாயின.

940. பொருளை இழக்குந்தோறும் பொருளைக் காதலிக்கும் சூதுபோலத் துன்பத்தை உழக்குந்தோறும் இன்பத்திலே காதலுடைத்து உயிர். இவை இரண்டினுக்கும் அஃதியல்பு.

# 95. மருந்து

941 மிகினும் குறையினும், நோய்-செய்யும்; நூலோர்
வளி-முதலா எண்ணிய மூன்று.

942 மருந்து-என வேண்டாவாம், யாக்கைக்கு; அருந்தியது
அற்றது போற்றி உணின்.

943 அற்றால், அளவு-அறிந்து உண்க! அஃது-உடம்பு
பெற்றான் நெடிது-உய்க்கும் ஆறு.

944 அற்றது-அறிந்து, கடைப்பிடித்து, மாறு-அல்ல
துய்க்க, துவரப்-பசித்து!

945 மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து-உண்ணின்
ஊறுபாடு இல்லை; உயிர்க்கு.

946 இழிவு-அறிந்து உண்பான்கண் இன்பம்-போல்; நிற்கும்
கழி-பேர் இரையான்கண், நோய்.

947 தீ-அளவு-அன்றித் தெரியான் பெரிது-உண்ணின்;
நோய்-அளவு இன்றிப்-படும்.

948 நோய்-நாடி நோய்-முதல்-நாடி, அது-தணிக்கும்
வாய்-நாடி, வாய்ப்பச் செயல்!

949 உற்றான்-அளவும், பிணி-அளவும், காலமும்
கற்றான், கருதிச் செயல்!

950 உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான் என்று
அப்-பால் நாற்-கூற்றே; மருந்து.

941. உணவும் உறக்கமும் இணைவிழைச்சும் தன்னுடம்பின் அளவிற்கு மிகினும் குறையினும், நூலோரால் எண்ணப்பட்ட வாதமும் பித்தமும் சீதமுமாகிய மூன்றும் நோயைச் செய்யும்.

942. யாக்கைக்கு மருந்தென்பதொன்று வேண்டா, குற்றமற முற்காலத்து அருந்திய உணவு அற்றமையறிந்து பாதுகாத்து உண்பானாயின்.

இஃது இவ்வாறு செய்யின் மருந்து தேடவேண்டாமென்றது.

943. முன்பு உண்டது அற்றால், பின்பு உண்ணுங்கால் இத்துணையறுமென்று தான் அறிந்து உண்க. அஃது உடம்பு பெற்றவன் அதனை நெடுங்காலம் செலுத்துதற்குரிய வழி.

944. முன்பு உண்டவுணவு அற்றதனை அறிந்து பின்பு அறுமளவும் கடைப்பிடித்து உண்ணுங்கால் ஒன்றினோடொன்று மாறுகொள்ளாத உணவினை மிகவும் பசித்து உண்க.

மாறுகோடலாவது நெய்யும் தேனும் இனியவாயினும் தம்மிலளவொக்குமாயின் கொல்லும்; அதுபோல்வதாம். இஃது உண்ணுங்கால் அளவறிந்துண்ணலேயன்றி மாறல்லவும் உண்ணவேண்டு மென்றது.

945. சுவையும் வீரியமும் மாறுபாடில்லாத உணவை நீக்கி யுண்பானாயின் தன்னுயிர்க்கு வரும் இடையூறு இல்லை.

மாறுபாடு- பலாப்பழந்தின்றால் சுக்குத் தின்றல்.

946. அறும் அளவறிந்து உண்பவன்கண் இன்பம்போல உண்டாம், மிக உண்பான்கண் நோய்.

947. பசியின் அளவின்றி ஆராயாதே மிகவுண்பானாயின் மிகநோய் உண்டாம்.

இது, நோய் தீர்ந்தாலும் பசியளவு அறியாதே உண்பானாயின் மீண்டும் நோயா மாதலான் அளவறிந்து உண்ணல் வேண்டுமென்றது.

948. நோயினையும் ஆராய்ந்து நோய்வருதற்குக் காரணமும் ஆராய்ந்து அந்நோய்

தீர்க்கும் நெறியையும் ஆராய்ந்து அது தீர்க்குங்கால் தப்பாமற் செய்க. இது நோய் தீர்க்குமாறு கூறிற்று.

949. நோயுற்றவனது அளவும் நோயினது அளவும் அதுபற்றிய காலமும் அறிந்து அதற்குத்தக்கவாறு மருந்து செய்க: ஆயுள் வேதம் வல்லவன்.

950. நோயுற்றவனும், நோய்தீர்க்குமவனும், மருந்தும், அதற்குத்தக்க மருந்தினைக் காலம் தப்பாமல் இயற்றுவானும் என்றிவ்வகைப்பட்ட நான்கு திறத்தது மருந்து.

# 96. குடிமை

951 இற் பிறந்தார்கண் அல்லது இல்லை; இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

952 ஒழுக்கமும், வாய்மையும், நாணும் இம்மூன்றும்
இழுக்கார்; குடிப்-பிறந்தார்.

953 நகை, ஈகை, இன்-சொல், இகழாமை நான்கும்
வகை-என்ப; வாய்மைக்-குடிக்கு.

954 அடுக்கிய கோடி பெறினும், குடிப்-பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

955 வழங்குவது உள்-வீழ்ந்தக்-கண்ணும், பழங்குடி
பண்பின் தலைப்-பிரிதல் இன்று.

956 சலம்-பற்றிச் சால்பு-இல-செய்யார்; 'மாசு-அற்ற
குலம்-பற்றி வாழ்தும்' என்பார்.

957 குடிப்-பிறந்தார்-கண் விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல், உயர்ந்து.

958 நலத்தின்-கண் நார்-இன்மை தோன்றின்; அவனைக்
குலத்தின்-கண் ஐயப்-படும்.

959 நிலத்தில் கிடந்தமை கால்-காட்டும்; காட்டும்,
குலத்தில் பிறந்தார் வாய்ச்-சொல்.

960 நலம்-வேண்டின், நாண்-உடைமை வேண்டும்; குலம்-ே
வேண்டின்,
வேண்டுக, யார்க்கும் பணிவு!

951. உயர்குடிப்பிறந்தார்மாட்டல்லது பிறர்மாட்டு நடுவு நிலைமையும், பழி நாணுதலும், இயல்பாக ஒருங்கே உண்டாகா.

இஃது இல்பிறந்தார் இவையிரண்டும் இயல்பாக உடையரென்றது.

952. ஒழுக்க முடைமையும் மெய்ம்மை கூறுதலும் அற்றம் மறைத்தலாகிய நாணமுடைமையும் ஆகிய இம்மூன்றினையும் தப்பார் உயர்குடிப்பிறந்தார்.

953. முகமலர்ச்சியும், கொடையும், இனியவை கூறுதலும், பிறரை இகழாமையுமாகிய நான்கினையும் மெய்ம்மையுடைய குலத்தினுள்ளார்க்கு அங்கமென்று சொல்லுவர்.

954. பல கோடிப் பொருளைப் பெறினும் உயர்குடிப்பிறந்தார் தங்குடிக்குத் தாழ்வாயின செய்யார்.

இது சான்றாண்மை விடாரென்றது.

955. வழங்கும் பொருள் தம்மளவிற்குக் குன்றிச் சுருங்கியவிடத்தும், பழைய பண்பு வழுவாத குடிப்பிறந்தார் தமது இயல்பினின்றும் நீங்குத லிலர்.

இது பண்புடைமை விடாரென்றது.

956. பொய்யைச் சார்ந்து அமைவில்லாதன செய்யார், குற்றமற்ற குலத்தைச் சார்ந்து உயிர்வாழ்வோ மென்று கருதுவார்.

இது சான்றாண்மை விடார் என்றது.

957. உயர்குடிப் பிறந்தார்மாட்டுக் குற்றமுளதாயின், அது வானத்தின் மதியின்கணுள்ள மறுப்போல உயர்ந்து விளங்கும். ஆதலால் குற்றப்பட ஒழுகற்க.

இது குற்றம் செய்தலைத் தவிர வேண்டுமென்றது.

958. ஒருவன் குடிநலத்தின்கண்ணே நீர்மை யின்மை தோன்றுமாயின் அவனைக் குலத்தின்கண் தப்பினவனென்று ஐயப்படுக.

959. வித்து நிலத்தின்கண் மறைந்து கிடப்பினும் அது மறைந்து கிடந்தமையை அதன் முளை யறிவிக்கும். அதுபோல உயர்குடிப்பிறந்தாரை அவரவர் வாயிற்சொல் அறிவிக்கும்.

960. ஒருவர் தமக்கு நலத்தை வேண்டுவாராயின் நாணுடமையை விரும்புக: அவ்வண்ணமே குலத்தை விரும்புவாராயின் யாவர்மாட்டும் தாழ்ந்தொழுகுதலை விரும்புக.

இது பணிந்தொழுக வேண்டு மென்றது.

# 97. மானம்

961 இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்,
குன்ற வருப விடல்.

962 சீரினும், சீர்-அல்ல-செய்யாரே; சீரொடு
பேராண்மை வேண்டுபவர்.

963 பெருக்கத்து வேண்டும், பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும், உயர்வு.

964 தலையின் இழிந்த மயிர்-அனையர்; மாந்தர்
நிலையின் இழிந்தக்கடை.

965 குன்றின் அனையாரும் குன்றுவர்; குன்றுவ
குன்றி அனைய செயின்.

966 புகழ்-இன்றால்; புத்தேள்-நாட்டு-உய்யாதால்; என்-மற்று,
இகழ்வார்பின் சென்று நிலை?

967 ஒட்டார்-பின் சென்று ஒருவன் வாழ்தலின், அந்-நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

968 மருந்தோ, மற்று ஊன்-ஓம்பும்-வாழ்க்கை; பெருந்தகைமை
பீடு-அழிய-வந்த-இடத்து?

969 மயிர்-நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்-நீப்பர், மானம் வரின்.

970 இளி-வரின், வாழாத மானம் உடையார்;
ஒளி-தொழுது-ஏத்தும், உலகு.

961. இன்றியமையாத சிறப்புடையனவாயினும் தமது தன்மை குறையவரும் பொருளையும் இன்பத்தையும் விடுக.

இது பொருளும் இன்பமும் மிகினும் தன்மை குறைவன செய்யற்க வென்றது.

962. தமக்குப் பொருள் மிகுதி உண்டாமாயினும் நிகரல்லாதன செய்யார், தலைமையோடே கூடப் பெரிய ஆண்மையை விரும்புவார்.

963. செல்வம் பெருகிய காலத்து எல்லார்க்கும் பணிதல் வேண்டும்: செல்வம் மிகவுஞ் சுருங்கின் காலத்துத் தமது தன்மை குறைவுபடாமல் ஒழுகல் வேண்டும்.

964. தலையினின்று இறங்கிய மயிரைப்போல இகழப்படுவர்: மாந்தர் தமது நிலையினின்று நீங்கித் தாழ ஒழுகின விடத்து.

965. மலைபோலப் பெரிய உயர்வுடையாரும் தமது தன்மை குறைபடுவர்: ஒரு குறைவு வருவனவற்றைக் குன்றி அளவாயினும் செய்வாராயின்.

இது மிக்காராயினும் இகழப்படுவ ரென்றது.

966. இம்மைப் பயனாகிய புகழைத் தாராதாயின், மறுமைப் பயனாகிய சுவர்க்கத்துப் புகுதலில்லை ஆயின், தன்னை இகழ்ந்துரைப்பார்பின் சென்று ஒருவன் நிற்கின்றது பின்னை என்ன பயனைக் கருதி?

இது தம்மை இகழ்வார்மாட்டுச் சென்று நிற்றலைத் தவிர்க வென்றது.

967. ஒருவன் தன்னை இகழ்வார்பின் சென்று வாழும் வாழ்க்கையின், அவர்பால் செல்லாத அந்நிலையே நின்று கெட்டானென்று பிறரால் சொல்லப்படுதல் நன்று.

968. தமது பெரிய தகைமை வலியழிய வந்தவிடத்துச் சாவாதே இருந்து உயிரினை ஓம்பி வாழும் வாழ்க்கை பின்பும் ஒருகாலஞ் சாவாமைக்கு மருந்தாமோ.

பெருந்தகைமை அழியவந்தவிடத் தென்று கூட்டுக.

969. ஒரு மயிர் நீங்கின் உயிர்வாழாத கவரிமானைப் போன்ற மானமுடையார், மானம் அழியவரின் உயிர்விடுவர்.

970. இளிவரவு உண்டானால் உயிர் வாழாத மானமுடையாரது புகழைத் தொழுது துதிக்கும் உலகு.

# 98. பெருமை

971 ஒளி, ஒருவற்கு உள்ள வெறுக்கை; இளி-ஒருவற்கு,
'அஃது-இறந்து-வாழ்தும்' எனல்.

972 பிறப்பு-ஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு-ஒவ்வா,
செய்-தொழில் வேற்றுமையான்.

973 மேல்-இருந்தும், மேல்-அல்லார் மேல்-அல்லர்; கீழ்-இருந்தும்,
கீழ்-அல்லார், கீழ்-அல்லவர்.

974 ஒருமை மகளிரே போல, பெருமையும்,
தன்னைத்தான் கொண்டு-ஒழுகின், உண்டு.

975 பெருமை-உடையவர் ஆற்றுவார்; ஆற்றின்
அருமை-உடைய செயல்.

976 சிறியார், உணர்ச்சியுள் இல்லை; 'பெரியாரைப்
பேணிக் கொள்வேம்' என்னும் நோக்கு.

977 இறப்பே புரிந்த தொழிற்று ஆம் சிறப்பும்-தான்
சீர்-அல்லவர் கண்-படின்.

978 பணியுமாம், என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம், தன்னை வியந்து.

979 பெருமை, பெருமிதம் இன்மை; சிறுமை,
பெருமிதம் ஊர்ந்து-விடல்.

980 அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமை-தான்
குற்றமே கூறி-விடும்.

971. ஒருவனுக்கு மனப்பெருமை புகழாம்: அதனை நீங்கி வாழுமென்று பிறர் சொல்லுதல் ஒருவனுக்கு இளிவாமாதலான்.

இது பெருமையாவது நிறையுடைமை யென்று கூறிற்று.

972. எல்லா வுயிர்க்கும் பிறப்பால் ஒரு வேறுபாடில்லை. ஆயினும் தான்செய் தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினாலே பெருமை ஒவ்வாது.

எனவே, இது பெருமையாவது குலத்தினால் அறியப்படா தென்பதூஉம் அதற்குக் காரணமும் கூறிற்று.

973. மேலான இடத்திருந்தாலும், மேன்மையில்லாதார் மேன்மக்களாகார்: கீழான இடத்திருந்தாலும் கீழ்மை யில்லாதார் கீழ்மக்களாகார்.

இடமென்பது செல்வத்தினால் இருக்குமிடம்.

974. கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டொழுகுமாறு போலப் பெருமைக் குணனும் ஒருவன் நிறையின் வழுவாமல் தன்னைத்தான் காத்துக் கொண்டொழுகுவானாயின் அவன்கண் உண்டாம்.

975. பெருமையாவது செருக்கின்மை: சிறுமை செருக்கினை மேற்கொண்டொழுகுதலான்.

மேல் குலத்தினாலும் பெரியாரைப் பெரியாரென்று கொள்ளல் படாதென்றார். இனிப் பெருமை யிலக்கணங் கூறுவார், முற்படச்செருக்கின்மை பெருமையென்று கூறினார்.

976. சிறுமையுடையார் உணர்வின்கண் இல்லை, பெருமை யுடையாரைப் போற்றித் துணையாகக் கொள்வேமென்னும் கருத்து.

இது பெரியாரைப் பெறுதலும் பெருமையென்று கூறிற்று.

977. செல்வமானது தனக்கு நிகரில்லாதார்மாட்டே நிற்குமாயின், நிதியை இறப்பாரிடத்தே பொருந்தின தொழிலை உடைத்தாம்.

சீரல்லவர்- பெரியரல்லர்.

978. பெருமை எக்காலத்தும் பிறரைத் தாழ்ந்தொழுகும்: சிறுமை தன்னைப் பெருக்க நினைத்து அலங்கரிக்கும்.

இது பெருமையாவது பணிந்தொழுகுதலென்று கூறிற்று.

979. பெருமையுடையவர் நெறியினானே செய்யவல்லர்: செய்தற்கு அருமையுடைய செயல்களை.

இது செய்தற்கு அரிய செய்வார் பெரியரென்றது.

980. பெருமை பிறருடைய குறைவை மறைத்துச் சொல்லும்: சிறுமை அவர்க்குள்ள நன்மை சொல்லுதலைத் தவிர்ந்து குற்றத்தையே சொல்லிவிடும்.

இது குற்றம் கூறாமை பெருமையென்று கூறிற்று.

# 99. சான்றாண்மை

981 கடன்-என்ப, நல்லவை எல்லாம்; கடன்-அறிந்து,
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு.

982 குண-நலம், சான்றோர் நலனே; பிற-நலம்
எந்-நலத்து உள்ளதூஉம் அன்று.

983 அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு
ஐந்து; சால்பு ஊன்றிய தூண்.

984 கொல்லா நலத்தது, நோன்மை; பிறர்-தீமை
சொல்லா நலத்தது, சால்பு.

985 ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அது-சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

986 'சால்பிற்குக் கட்டளை யாது?' எனின்; தோல்வி
துலை அல்லார்-கண்ணும் கொளல்.

987 இன்னா-செய்தார்க்கும் இனியவே-செய்யாக்கால்,
என்ன பயத்ததோ, சால்பு?

988 இன்மை ஒருவற்கு இளிவு-அன்று; சால்பு-என்னும்
திண்மை உண்டாகப்பெறின்.

989 ஊழி பெயரினும், தாம்-பெயரார்; சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்.

990 சான்றவர் சான்றாண்மை குன்றின்; இரு-நிலம்-தான்
தாங்காது மன்னோ, பொறை!

981. நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல்லுவர் நூலோர்.

982. சான்றோர்க்கு நலமாவது குணநல்லராகுதல்: குணநலம், பிற நலமாகிய எல்லா நலத்தினும் உள்ளதொரு நலமன்று.

இது குணநலம் சால்பிற்கு அழகென்றது.

983. அன்புடைமையும், பழிநாணுதலும், ஒப்புரவுடைமையும், கண்ணோட்டமும், மெய்யுரையுமென்று சொல்லப்பட்ட ஐந்தும் சால்பினைத் தாங்கும் தூண்.

இஃது இவை ஐந்தும் சால்பிற்கு அங்கமென்றது.

984. தவத்துக்கு உறுப்பான சீலங்கள் பல உண்டாயினும் கொல்லாத நலத்தையுடையது தவம். அதுபோலச் சாண்றாண்மைக்கு உறுப்பான நற்குணங்கள் பல உண்டாயினும் பிறர் பழியைச் சொல்லாத நலத்தையுடையது சால்பு.

985. பெரியார் பெருமையாவது எல்லார்க்கும் தாழ்ந்தொழுகுதல்: சான்றோர்தம் பகைவரை ஒழிக்கும் கருவியும் அதுவே.

986. சால்பாகிய பொன்னினளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின், அது தம்மினுயர்ந்தார் மாட்டுக் கொள்ளுந் தோல்வியை இழிந்தார் மாட்டுங் கோடல்.

987. தமக்கின்னாதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின் அச்சால்பு வேறென்ன பயனை யுடைத்து.

988. ஒருவனுக்குச் சால்பாகிய நிலை உண்டாகப் பெறின் பொருளின்மை இளிவாகாது.

இஃது அமைதியுடையராதல் பெறுதற்கரிதென்றது.

989. சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார், ஏனைக் கடலுங் கரையுள் நில்லாமற் காலந் திரிந்தாலும் தாம்திரியார்.

990. பலகுணங்களானும் நிறைந்தவர் தம்தன்மை குன்றுவராயின் மற்றை யிருநிலந்தானுந் தன்பொறையைத் தாங்காதாய் முடியும்.

# 100. பண்பு உடைமை

991 எண்-பதத்தால், எய்தல் எளிது-என்ப; யார்மாட்டும்,
பண்பு-உடைமை என்னும் வழக்கு.

992 அன்பு-உடைமை, ஆன்ற குடிப்-பிறத்தல்; இவ்-இரண்டும்
பண்பு-உடைமை என்னும் வழக்கு.

993 உறுப்பு-ஒத்தல் மக்கள்-ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்பு-ஒத்தல், ஒப்பது-ஆம் ஒப்பு.

994 நயனொடு நன்றி-புரிந்த பயன்-உடையார்
பண்பு பாராட்டும், உலகு.

995 நகையுள்ளும் இன்னாது, இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்பு-உள, பாடு-அறிவார் மாட்டு.

996 பண்பு-உடையார்ப் பட்டு, உண்டு-உலகம்; அது-இன்றேல்,
மண்-புக்கு மாய்வது-மன்.

997 அரம்-போலும் கூர்மையரேனும், மரம்-போல்வர்;
மக்கள்-பண்பு-இல்லாதவர்.

998 நண்பு-ஆற்றார்-ஆகி, நயம்-இல செய்வார்க்கும்,
பண்பு-ஆற்றார்-ஆதல் கடை.

999 நகல்-வல்லர் அல்லார்க்கு மா-இரு-ஞாலம்,
பகலும், பாற்-பட்டன்று, இருள்.

1000 பண்பு-இலான் பெற்ற பெருஞ்-செல்வம்; நன்-பால்
கலம்-தீமையால் திரிந்தற்று.

991. யாவர் மாட்டு மெளிய செவ்வியராதலால் அரிதாய பண்புடைமையென்னும் நன்னெறியினை யெய்துதல் எளிதென்று சொல்லுவர் நூலோர்.

992. பிறர்மேலன்புடையனாதலும் உலகத்தோடமைந்த குடியின்கட் பிறத்தலுமாகிய இவ்விரண்டும் ஒருவனுக்குப் பண்புடைமை யென்று உலகத்தார் சொல்லும் நன்னெறி.

993. செறியத்தகாத உடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன்மக்களோடொப்பாகாமையின் அது பொருந்துவதன்று; இனிப் பொருந்துவதாய ஒப்பாவது செறியத்தக்க பண்பாலொத்தல்.

994. நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்குந் தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை உலகத்தார் கொண்டாடா நிற்பர்.

995. தன்னை யிகழ்தல் ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்னாது: ஆகலாற் பிறர் பாடறிந் தொழுகுவார்மாட்டுப் பகைமையுள் வழியும் அஃதுளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன.

996. பண்புடையார்கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்று முண்டாய் வாராநின்றது: ஆண்டுப் படுதலில்லையாயின் அது மண்ணின்கட்புக்கு மாய்ந்து போவதாம்.

997. நன்மக்கட்கேயுரிய பண்பில்லாதவர் அரத்தின் கூர்மை போலுங் கூர்மையுடையரே யாயினும், ஓரறிவிற்றாய மரத்தினை யொப்பர்.

998. தம்மொடு நட்பினைச்செய்யாது பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும் தாம் பண்புடையராய் ஒழுகாமை அறிவுடையார்க் கிழுக்காம்.

999. பண்பின்மையான் ஒருவரோடும் கலந்து உண்மகிழ்தல் மாட்டாதார்க்குப் பெரிய ஞாலம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின்கட் கிடந்ததாம்.

1000. பண்பில்லாதவன் முன்னை நல்வினையா னெய்திய பெரிய செல்வம் அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல், நல்ல ஆன்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும்.

# 101. நன்றி இல் செல்வம்

1001 வைத்தான், வாய்-சான்ற-பெரும்-பொருள்; அஃது-உண்ணான்
செத்தான், செயக்கிடந்தது இல்.

1002 ‘பொருளான் ஆம், எல்லாம்’ என்று, ஈயாது இவறும்
மருளான், ஆம், மாணாப்-பிறப்பு.

1003 ஈட்டம் இவறி, இசை-வேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

1004 எச்சம்-என்று என்-எண்ணும்-கொல்லோ; ஒருவரால்
நச்சப் படாஅதவன்!

1005 கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு, அடுக்கிய-
கோடி-உண்டாயினும், இல்.

1006 ஏதம், பெருஞ்-செல்வம்; தான்-துவ்வான், தக்கார்க்கு-ஒன்று
ஈதல் இயல்பு-இலாதான்.

1007 அற்றார்க்கு-ஒன்று ஆற்றாதான்-செல்வம்; மிகு-நலம்
பெற்றாள் தமியள் மூத்தற்று.

1008 நச்சப்படாதவன் செல்வம்; நடுவூருள்
நச்சு-மரம் பழுத்தற்று.

1009 அன்பு-ஒரீஇ, தற்-செற்று, அறம்-நோக்காது, ஈட்டிய
ஒண்-பொருள் கொள்வார், பிறர்.

1010 சீருடைச்-செல்வர் சிறு-துனி; மாரி
வறம் கூர்ந்தனையது உடைத்து.

1001. இடம் நிறைந்த பெரும்பொருளை ஈட்டிவைத்தானொருவன் அதனை நுகரானாயின் செத்தான்; அவன் பின்பு செய்யக்கிடந்தது யாது மில்லை.

இஃது ஈட்டினானாயினும் தானொருபயன் பெறானென்றது.

1002. பொருளினாலே யெல்லாச்சிறப்பும் எய்தலாமென்று பிறர்க்கு யாதொன்றும் ஈயாது உலோபஞ் செய்கின்ற மயக்கத்தினாலே மாட்சிமையில்லாத பிறப்பு உண்டாம்.

இது தீக்கதியுள் உய்க்குமென்றது.

1003. பொருளீட்டுதலை விரும்பிப் புகழை விரும்பாத மாந்தர், தாம் பிறந்த நிலத்துக்குப் பாரமாவர்.

இஃது இவர் பிறப்பதினும் பிறவாமை நன்றென்றது.

1004. ஒருவராலும் நச்சப்படாத செல்வமுடையவன், தனக்குப் பின்பு நிற்பதென்று யாதினை எண்ணுமோ?

இது புகழில்லையா மென்றது.

1005. பிறர்க்குக் கொடுத்தலும் தாம் நுகர்தலும் இல்லாதார்க்குப் பல கோடிப் பொருள் உண்டாயினும் அவை இன்மையோ டொக்கும்.

1006. தானுந் துவ்வாது பிறர்க்கும் ஒன்று ஈயாத இயல்பினை யுடையான் பெற்ற பெருஞ் செல்வம் குற்றமுடைத்து.

1007. பொருளற்றார்க்கு யாதானு மொன்றைக் கொடாதவனுடைய செல்வம், மிக்க அழகினைப் பெற்றாளொருத்தி தனியாளாய் முதிர்ந்தாற்போலும்.

இது செல்வம் தானும் ஒருபயன் பெறாதென்றது.

1008. பிறரால் ஆசைப்படாதவனது செல்வம், ஊர் நடுவுள் பழுத்து நிற்பதொரு நச்சுமரம் பழுத்த தன்மைத்து.

இது நச்சுமரப்பழம் தமதாசையாலே தின்பாருண்டாயின் அவரைக் கொல்லுமென்றது.

1009. பொருள் தேடுங்கால் பிறர்மாட்டு அன்பு செய்தலையும் நீக்கி, அது தேடினானாகிய தன்னைக் காத்தலுமின்றி அறத்தையுஞ் செய்யாது, தொகுத்த ஒள்ளிய பொருளைக் கொள்வார் பிறர்.

1010. சீருடைய செல்வர் சிறுதுனியால் ஈயாதொழிதல், மாரி பெய்யாமை மிக்காற் போலும்.

# 102. நாண் உடைமை

1011 கருமத்தான் நாணுதல், நாணு; திருநுதல்
நல்லவர் நாணு, பிற.

1012 ஊண், உடை, எச்சம், உயிர்க்கு-எல்லாம் வேறு-அல்ல;
நாண்-உடைமை மாந்தர் சிறப்பு.

1013 ஊனைக்-குறித்த, உயிர்-எல்லாம்; நாண்-என்னும்
நன்மை குறித்தது, சால்பு.

1014 அணி-அன்றோ, நாண்-உடைமை சான்றோர்க்கு! அஃது-இன்றேல்
பிணி-அன்றோ, பீடு-நடை!

1015 'பிறர்-பழியும் தம்-பழியும் நாணுவார்; நாணுக்கு
உறைபதி' என்னும், உலகு.

1016 நாண் வேலி-கொள்ளாது-மன்னோ, வியல்-ஞாலம்
பேணலர்; மேலாயவர்.

1017 நாணால் உயிரைத்-துறப்பர்; உயிர்ப்-பொருட்டால்
நாண்-துறவார்; நாண்-ஆள்பவர்.

1018 பிறர் நாணத்-தக்கது தான்-நாணான் ஆயின்,
அறம் நாணத்-தக்கது உடைத்து.

1019 குலம்-சுடும், கொள்கை பிழைப்பின்; நலம்-சுடும்,
நாண்-இன்மை நின்றக்-கடை.

1020 நாண் அகத்து-இல்லார் இயக்கம்; மரப்பாவை
நாணால் உயிர்-மருட்டியற்று.

1011. தாம் செய்யும் வினையினாலே நாணுதல் நாணம். அஃதல்லாத நாணம் அழகிய நுதலினாலே நல்லாராகிய கணிகையர் நாணத்தோ டொக்கும்.

மேற்கூறிய நாணம் எத்தன்மைத் தென்றார்க்கு இது கூறப்பட்டது.

1012. உணவும் உடையும் ஒழிந்தனவும் புன்மக்க ளெல்லார்க்கும் வேண்டும்; தலைமக்களுக்கு விசேடமாக வேண்டுவது நாணுடைமை.

இது நாணம் வேண்டுமென்றது.

1013. பலவகை உயிரும் மேற்கூறிய எல்லாவற்றினும் உண்டியைக் கருதிற்று: அதுபோலச் சால்பு, நாணமாகிய நன்மையைக் கருதிற்று.

இது சான்றோர்க்கு நற்குணங்கள் பலவும் வேண்டுமாயினும், இஃது இன்றியமையாதென்றது.

1014. சான்றோர்க்கு நாணுடைமையாவது அழகன்றோ? அஃதில்லையாயின் பெரிய நடை நோயன்றோ?

இது சான்றோர்க்கழகாவது நாணுடைமை யென்றது.

1015. பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியைப்போல அஞ்சி நாணுமவர்களை நாணுக்கு இருப்பிடமென்று சொல்லுவர் உலகத்தார்.

இது தம்பழிக்கு அஞ்சி நாணுதலேயன்றிப் பிறர்பழிக்கும் அஞ்சி நாண வேண்டுமென்றது.

1016. உயர்ந்தவர் தமக்கு ஏமமாக நாணினைக் கொள்வதன்றி அகன்ற ஞாலத்தைக் கொள்ள விரும்பார்.

1017. நாணுடைமைப் பொருட்டாக உயிரைத் துறப்பார்: உயிர்ப் பொருட்டாக நாணைத்துறவார், நாணம் வேண்டுபவர்.

இது நாண் உயிரினும் சிறந்ததென்றது.

1018. உயர்ந்தார் பலரும் நாணத்தகுவ தொன்றினைத் தான் நாணாது செய்வனாயின் அவனை அறம் நாணியடையா தொழியும் தகுதியுடைத்தாம்.

இது நாணமில்லாதாரை அறம் சாரா தென்றது.

1019. ஒழுக்கம் தப்புமாயின் அத்தப்புதல் குலத்தினைச் சுடும்: அதுபோல நாணின்மை நிற்குமாயின் தமது நலத்தினைச் சுடும்.

இது நலமில்லையா மென்றது.

1020. மனத்தின்கண் நாணமில்லாதார் இயங்குதல், மரப்பாவை கயிற்றினாலே இயங்கி உயிருள்ளதுபோல மயக்குமதனை ஒக்கும்.

இது நாணமில்லாதார் மக்களல்லரென்றது.

# 103. குடி செயல் வகை

1021 ‘கருமம் செய’, ஒருவன், ‘கைதூவேன்’ என்னும்
பெருமையின், பீடு-உடையது இல்.

1022 ஆள்வினையும், ஆன்ற-அறிவும்; என-இரண்டின்
நீள்-வினையான், நீளும் குடி.

1023 ‘குடி செய்வல்’ என்னும் ஒருவற்கு, தெய்வம்
மடி-தற்று, தான் முந்துறும்.

1024 சூழாமல் தானே முடிவு-எய்தும்; தம்-குடியைத்
தாழாது உஞற்றுபவர்க்கு.

1025 குற்றம் இலனாய், குடி-செய்து வாழ்வானைச்
சுற்றமாச்-சுற்றும், உலகு.

1026 நல்-ஆண்மை என்பது ஒருவற்குத் தான்-பிறந்த
இல்-ஆண்மை ஆக்கிக்-கொளல்.

1027 அமரகத்து வன்கண்ணர் போல, தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே, பொறை.

1028 குடி-செய்வார்க்கு இல்லை, பருவம்; மடி-செய்து,
மானம் கருத, கெடும்.

1029 இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ; குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு!

1030 இடுக்கண் கால்-கொன்றிட, வீழும்; அடுத்து-ஊன்றும்
நல்-ஆள் இலாத குடி.

1021. ஒருவன் கருமஞ்செய்தற்கு நான் ஒழியே னென்று சொல்லுகின்ற பெருமைபோலப் பெருமையுடையது பிறிது இல்லை.

1022. முயற்சியும் நிரம்பின அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினாலும் வளருகின்ற வினையினாலே குடி உயரும்.

1023. குடியை யோம்புவனென்று கருதி முயலுமவனுக்குத் தெய்வம் மடிதற்றுக் கொண்டு தான் முற்பட்டு முயலும்.

மடிதற்றல் - தொழில்செய்வார் ஆடையை இறுக உடுத்தல்.

1024. தங்குடியைத் தாழச் செய்யாதே உயரச்செய்யக் கருதுவார்க்கு அவ்வுயர்ச்சி எண்ணாமல் தானே முடிவுபெறும்.

கருதினவளவிலே அவரது நல்வினைதானே முடிக்கும்: இவர் தம்கண் அதனை மேற்கோடலே வேண்டுவ தென்றவாறு.

1025. குற்றப்பட ஒழுகுத லினாய்த் தன்குடியை யோம்பி வாழுமவனை உலகத்தாரெல்லாரும் தமக்குற்ற சுற்றமாக நினைத்துச் சூழ்ந்துவரும்.

1026. ஒருவனுக்கு மிக்க ஆண்மையென்று சொல்லப்படுவது, தான் பிறந்த குடியை ஆளுதலுடைமையை மனத்தின்கண் போக்கிக் கோடல்.

ஆளுதலுடைமை- குடியோம்புதலை எப்பொழுதுஞ் சிந்தித்தல். எனவே இது குடியோம்புதல் வேண்டுமென்றது.

1027. போர்க்களத்துச் செல்வார் பலருளராயினும் போர்தாங்கல் வன்கண்ணர்மாட்டே உளதானாற்போல, ஒருகுடியிற் பிறந்தார் பலருளராயினும் குடியோம்பல் வல்லவர்கண்ணதே குடியாகிய பாரத்தைப் பொறுத்தல்.

1028. குடியோம்புவார்க்குப் பருவம் இல்லை; தம் குடும்பத்தின் குறையை நினைத்து மடிசெய்து அதனை உயர்த்துவதனாலுள தாகும் குற்றத்தை நினைக்கக் குடிகெடும் ஆதலான்.

இது குடிசெய்வார் இன்பநுகர்ச்சியை விரும்பாரென்றது.

1029. சுற்றத்தார்மாட்டு உளதாகிய குறையை மறைக்கக் கருதுவான் உடம்பு துன்பத்திற்குக் கொள்கலமாம்.

1030. இடும்பையாகிய நவியம் அடுத்துத் தனது வேரை வெட்டுதலானே வீழும்: பக்கத்திலே அடுத்து ஊன்றுகின்ற முட்டுக்கோல்போலத் தாங்கவல்ல நல்ல ஆண்மக்கள் இல்லாத

குடியாகிய மரம். (நவியம்-கோடாரி) இது குடியோம்புவாரில்லாக்கால் அக்குடி கெடுமென்று கூறிற்று.

# 104. உழவு

1031 சுழன்றும் ஏர்ப்-பின்னது, உலகம்; அதனால்,
உழந்தும் உழவே தலை.

1032 உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃது-ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

1033 உழுது, உண்டு, வாழ்வாரே வாழ்வார்; மற்று-எல்லாம்
தொழுது, உண்டு, பின்-செல்பவர்.

1034 பல-குடை நீழலும், தம்-குடைக்-கீழ்க் காண்பர்;
அலகு-உடை நீழலவர்.

1035 இரவார்; இரப்பார்க்கு-ஒன்று ஈவர்; கரவாது
கை-செய்து ஊண் மாலையவர்.

1036 உழவினார் கைம்மடங்கின், இல்லை; 'விழைவதூஉம்
விட்டேம்' என்பார்க்கு நிலை.

1037 தொடிப்-புழுதி கஃசா உணக்கின், பிடித்து-எருவும்
வேண்டாது, சாலப் படும்.

1038 ஏரினும் நன்றால், எரு-இடுதல்; கட்டபின்,
நீரினும் நன்று, அதன் காப்பு.

1039 செல்லான் கிழவன் இருப்பின், நிலம்-புலந்து
இல்லாளின் ஊடி-விடும்.

1040 'இலம்!' என்று அசைஇ இருப்பாரைக் காணின்,
நிலம்-என்னும் நல்லாள் நகும்.

1031. உழவு ஒழிந்த எல்லா நெறிகளிலும் சுழன்று திரிந்தாலும் ஏருடையவர் வழியே வருவர் உலகத்தார்: ஆதலான் வருந்தியும் உழுதலே தலைமையுடையது.

இஃது உழவு வேண்டுமென்றது.

1032. உலகத்தாராகிய தேரினுக்கு அச்சாணிபோல்வார் உழுவாரே: அதனைச் செய்யாதாரே பிறர் பெருமிதத்தினால் செய்வனவெல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பார்.

இஃது உழுவார் தம்மையும் அரசனையும் பெரியராக்குதலன்றி உலகத்தையும் தாங்குவரென்பது கூறிற்று.

1033. உலகின்கண் வாழ்வாராவார் உழுதுண்டு வாழ்பவரே; மற்று வாழ்கின்றா ரெல்லாரும் பிறரைத் தொழுது உண்டு அவரேவல் செய்கின்றவர்.

இது செல்வமானது உழவினால் வருஞ் செல்வமென்றது.

1034. பல அரசர் குடைநிழலும் தம் அரசர் குடைநிழற்கீழே வரக்காண்பர், குடையில்லா நிழலை யுடையவர்.

குடையில்லா நிழலாவது பைங்கூழ் நிழல். இது தாம் வாழ்தலே அன்றித் தம் அரசனையும் வாழ்விப்பர் என்றது. (அலகுடைய நீழல்-கதிர்களையுடைய நெற்பயிரின்நிழல்)

1035. பிறரை இரவார்; தம்மை இரப்பார்க்குக் காத்தலின்றி யாதொன்றாயினும் ஈவர்; கையாலே உழவுத் தொழிலைச் செய்து உண்ணும் இயல்பினையுடையார்.

1036. உழவை யுடையவர் அத்தொழிலைச் செய்யாது கைம்மடங்கு வராயின், யாதொரு பொருளின்கண்ணும் விரும்புவதனையும் விட்டேமென்பார்க்கு அந்நிலையின்கண் நிற்றல் இல்லை.

எனவே துறவறத்திண்கண் நிற்பாரை நிறுத்துதல் உழவர்கண்ண தென்றவாறு.

1037. ஒரு பலப்புழுதியைக் கஃசாக உணக்குவனாயின், ஒரு கையாற் பிடித்தது எருவும் இடவேண்டாமல் அமைந்து விளையும்.

மேற்கூறிய உழவு செய்யுந்திறன் கூறுவார் முற்படப் புழுதியுணக்க வேண்டுமென்றார்.

1038. உழுகின்றதினும் நன்றாம் எருவிடுதல்; களை கட்டபின்பு நீர் விடுதலினும் நன்றாம் அதனை அழியாமற் காத்தல்.

இது பல்கால் உழவு வேண்டுமென்பதூஉம் எருவிடவேண்டும்மென்பதூஉம், களைபறிக்க வேண்டுமென்பதூஉம் பசுப்புகுதாமற் காக்க வேண்டுமென்பதூஉம் கூறிற்று.

1039. நிலத்திற்கு உரியவன் நாடோறும் அந்நிலத்தின்பாற் செல்லாது மனையகத்திருப்பானாயின், அது தான் செல்லாமையாற் புலந்த இல்லாளைப் போலப் புலந்துவிடும்.

இது நாடோறுஞ்சென்று பார்க்க வேண்டுமென்றது.

1040. பொருளிலோமென்று சோம்பி இரப்பாரைக் கண்டால் நிலமாகிய நல்லாள் இகழ்ந்து நகும்.

இது நிலம் மடியில்லாதார்க்கு வேண்டியது கொடுக்குமென்றது.

# 105. நல்குரவு

1041 ‘இன்மையின் இன்னாதது யாது?’ எனின், இன்மையின்
இன்மையே இன்னாதது.

1042 இன்மை என ஒரு-பாவி, மறுமையும்
இம்மையும் இன்றி, வரும்.

1043 தொல்-வரவும் தோலும் கெடுக்கும், தொகையாக;
நல்குரவு என்னும் நசை.

1044 இற்பிறந்தார்-கண்ணேயும், இன்மை; இளி-வந்த
சொல்-பிறக்கும் சோர்வு தரும்.

1045 நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்-
துன்பங்கள் சென்று படும்.

1046 நற்-பொருள் நன்கு-உணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொல்-பொருட் சோர்வு படும்.

1047 அறம் சாரா நல்குரவு, ஈன்ற-தாயானும்,
பிறன்-போல நோக்கப்படும்.

1048 இன்றும் வருவது கொல்லோ; நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு!

1049 நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாது-ஒன்றும் கண்பாடு அரிது.

1050 துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

1041. நல்குரவுபோல இன்னாதது யாதெனின் நல்குரவுபோல இன்னாதது
தானே. (தானே - நல்குரவே)

இது தன்னை யொத்த இன்னாதது பிறிதில்லை யென்றது.

1042. நல்குரவென்று கூறப்படுகின்ற நிகரில்லாத பாவத்தை யுடையவன்
இம்மையின்கண்ணும் மறுமையின்கண்ணும் நுகர்ச்சி இன்றி விடும்.

தன்மம் பண்ணாமையால் மறுமையின்கண்ணும் நுகர்ச்சியில்லாமையாயிற்று. இது
நல்குரவு துன்பமாக்கு மென்றது.

1043. தொன்றுதொட்டு வருகின்ற குடிப்பிறப்பினையும் வடிவழகினையும்
ஒருங்கு கெடுக்கும்; நல்குரவென்று சொல்லப் படுகின்ற ஆசைப்பாடு.

நல்குரவு ஆசையைப் பண்ணுதலினால் ஆசையாயிற்று. தொல்- ஆகுபெயர். இது
குலத்தினையும் அழகினையும் கெடுக்குமென்றது.

1044. நல்குரவு, குடிப்பிறந்தார்மாட்டேயும் இளிவரவான சொற்கள் பிறக்குஞ்
சோர்வினை உண்டாக்கும்.

1045. வறுமை யெனப்படும் இடும்பையுள் பலவாகிய வன்மையுடைய
துன்பங்கள் வந்து சோர்வுபடும்.

இது துன்பங்கள் சென்றுளவாமென்றது. பல்குரைத் துன்பம்- இரப்பார்க்கு
உரைக்கத் துன்பம்.

1046. நல்ல பொருளினை மிகவும் ஆராய்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொல்லும் பொருள் சோர்வு படும்.

ஏற்றுக்கொள்வாரில்லை என்றவாறாயிற்று. இது கல்வி கெடும்: சுற்றத்தாரும்
கைவிடுவ ரென்றது.

1047. அறத்தோடு இயைபில்லாத நல்குரவுடையான், தன்னை ஈன்ற தாயானும்
பிறனைக் கருதுமாறு போலக் கருதி நோக்கப்படும்.

1048. இன்றும் வரும்போலும்; நெருநற்றும் என்னைக் கொன்றது போலுற்ற
நிரப்பிடும்பை.

இது நாடோறும் அச்ச முறுத்து மென்று கூறிற்று.

1049. நெருப்பினுள்ளே கிடந்து உறங்குதலும் ஆகும்; நிரப்பிடும்பையுள்
உறங்குதல் யாதொரு முகத்தினாலும் அரிது.

இஃது உறங்கவொட்டா தென்றது.

1050. நுகரும்பொருள் இல்லாதார் பொருளின்மேற் பற்றறத் துறவாது வருந்துதல்,
உப்பிற்குங் காடிக்குங் கேடாக வேண்டியாம்.

துறப்பாராயின் நன்றென்வாறாயிற்று. நல்கூர்ந்தார்க்குத் துன்பமுறுதலன்றி இன்ப
நுகரும் நெறியுளவோ என்றார்க்கு, இது துறப்பாராயின், இன்ப முறலா மென்று
கூறிற்று.

# 106. இரவு

1051 இரக்க, இரத்தக்கார்க் காணின்! கரப்பின்,
அவர்-பழி தம்-பழி அன்று.

1052 இன்பம் ஒருவற்கு இரத்தல்; இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

1053 கரப்பு-இலா நெஞ்சின் கடன்-அறிவார், முன்-நின்று
இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து.

1054 இரத்தலும், ஈதலே போலும்; கரத்தல்
கனவினும் தேற்றாதார்-மாட்டு.

1055 கரப்பு-இலார் வையகத்து உண்மையான், கண்-நின்று,
இரப்பவர் மேற்கொள்வது.

1056 கரப்பு-இடும்பை இல்லாரைக் காணின், நிரப்பு-இடும்பை
எல்லாம் ஒருங்கு-கெடும்.

1057 இகழ்ந்து, எள்ளாது ஈவாரைக்-காணின்; மகிழ்ந்து-உள்ளம்
உள்ளுள் உவப்பது-உடைத்து.

1058 இரப்பாரை இல்லாயின், ஈர்ங்கண் மா-ஞாலம்
மரப்பாவை சென்று-வந்தற்று.

1059 ஈவார்-கண் என்-உண்டாம், தோற்றம்; இரந்து-கோள்
மேவார் இலாஅக்கடை?

1060 இரப்பான், வெகுளாமை-வேண்டும்; நிரப்பு-இடும்பை
தானேயும் சாலும் கரி.

1051. தமக்கு இல்லாதவிடத்து இரக்கத்தக்காரைக் காணின் இரந்து கொள்க: அவர் இல்லை யென்பாராயின் அஃது அவர்க்குப் பழியாம்; தமக்குப் பழியாகாது.

இது கூறுகின்ற இரத்தல் எல்லார்மாட்டுஞ் செயலாகா தென்பதூஉம், தக்கார் மாட்டிரத்தலென்பதூஉம் கூறிற்று.

1052. இரத்தல் ஒருவர்க்கு இன்பமாம், இரக்கப்பட்ட பொருள்கள் தான் வருத்தமுறாதவகை எய்துமாயின்.

இது வேண்டிய பொருள் பெறின் துன்பமாகா தென்றது.

1053. கரப்பிலாத நெஞ்சினை யுடைய ஒப்புரவறிவார் முன்பே நின்று, இரத்தலும் ஓரழகுடைத்து.

இஃது ஒப்புரவறிவார் மாட்டு இரத்தலா மென்றது.

1054. கரத்தலைக் கனவின்கண்ணும் அறியாதார்மாட்டு இரந்து சேறலும் கொடுப்பதனோடு ஒக்கும்.

ஈதலேபோலும் என்பதற்குக் கரத்தல் கனவிலுந் தேற்றதார் என்றமையால் இரப்பான் தாரானென்று கொள்ளப்படும்.

1055. ஒருவன் முன்னே நின்று இரத்தலை இரப்பார் மேற்கொள்வது, கரப்பில்லாதார் உலகத்து உண்டாதலானே; மற்றொன்றாலன்று.

மேல் கரவாதார்மாட்டு இரக்கவென்றார்; உலகத்தில் அவரைப் பெறுத லரிதென்றார்க்கு இது கூறினார்.

1056. கரப்பிடும்பை இல்லாதரைக் காண்பாராயின், நிரப்பினான் ஆகிய இடும்பை யெல்லாம் ஒருங்கு கெடும்.

கரப்பிடும்பை யில்லார் என்றமையால் இது செல்வராயினார் மாட்டு இரக்க லாகா தென்றது.

1057. இரப்பாரைக் கண்டால் உதாசனித்தலும் இன்றி அவர் சொன்ன மாற்றத்தை இகழ்ந்துரைத்தலும் செய்யாது வேண்டப்பட்டதனைக் கொடுப்பாரைக் காணின், இரந்து சென்றவர் மனம் மகிழ்ந்து நின்று உள்ளுள்ளே இன்புறுந் தன்மை யுடைத்து.

1058. குளிர்ந்த இடத்தையுடைய பெரிய உலகம் இரக்குமவர்களை உடைத்தல்லவாயின்,

உள்ள மக்களது இயக்கம் மரப்பாவை சென்றுவந்து இயங்கினாற்போலும். இஃது இரத்தலும் ஈதலும் உலகியல்பாதலான் இரத்தல் இழிவென்று கொள்ளப்படா தென்றது.

1059. இரந்து கோடலைப் பொருந்துவார் இல்லாதவிடத்து ஈயக கருதியிருப்பார்மாட்டுப் புகழ் யாதான் உண்டாம்.

இஃது இரப்பாரில்லாராயின் புகழுடையார் இலராவார். ஆதலால் இரவு பழிக்கப்படா தென்றது.

1060. ஒருவனை யிரந்தால் அவன் ஈந்தில னென்று தான் வெகுளா தொழிதல் வேண்டும். பொருளரிதென்பதற்குத் தன்னுடைய நிரப்பிடும்பை தானேயும் அமையுஞ் சான்று.

இஃது இரப்பார்க்கு வேண்டியதோ ரியல்பு கூறிற்று.

# 107. இரவு அச்சம்

1061 கரவாது, உவந்து-ஈயும் கண்-அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

1062 இரந்தும் உயிர்-வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக, உலகு-இயற்றியான்!

1063 ‘இன்மை இடும்பை இரந்து தீர்வாம்’ என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

1064 இடம்-எல்லாம் கொள்ளாத்-தகைத்தே; இடம்-இல்லாக்-
காலும், இரவு-ஒல்லாச் சால்பு.

1065 தெள்-நீர் அடு-புற்கை-ஆயினும், தாள்-தந்தது
உண்ணலின் ஊங்கு-இனியது இல்.

1066 ‘ஆவிற்கு நீர்’ என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

1067 இரப்பன், இரப்பாரை எல்லாம்; ’இரப்பின்,
கரப்பார் இரவன்மின்’ என்று.

1068 இரவு-என்னும் ஏமாப்பு-இல் தோணி, கரவு-என்னும்
பார்-தாக்க, பக்கு விடும்.

1069 இரவு-உள்ள, உள்ளம் உருகும்; கரவு-உள்ள,
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

1070 கரப்பவர்க்கு யாங்கு-ஒளிக்கும் கொல்லோ? இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்!

1061. தமக் குள்ளது கரவாது இவர் வரப்பெற்றேமென்று உண்
மகிழ்ந்துகொடுக்குங் கண்போலச் சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன்
வறுமை கூர்தல் செல்வமெய்தலிற் கோடிமடங்கு நன்று.

1062. துப்புரவு இல்லாக்கால் இறந்துபடாதே பிறர்மாட்டு இரந்து கொண்டும்
உயிர் வாழ்தல் வேண்டுமாயின், உலக நடையை இவ்வாறாகக் கற்பித்த
முதல்வன் மிகக் கெடுவானாக வேண்டும்.

இஃது இரக்குமதனின் இறத்தல் அமையு மென்றது.

1063. வறுமையாலுற்ற துன்பத்தைப் பிறர்மாட்டு இரந்து பெற்ற பொருளினாலே
தீர்ப்பே

மென்று கருதுகின்ற வன்மைபோல, வன்பாயிருப்பது பிறிது இல்லை. இஃது
இரந்தாலும் நல்குரவு தீரா தென்றது.

1064. தஞ்சுற்றத்தளவு தமக்கு வருவாய் இல்லாக் காலத்தினும் பிறரை
இரத்தற்கு இசையாத சால்பு, அகன்ற உலகமெல்லாம் கொள்ளாத
பெருமையே யுடைத்து.

இஃது இரவாதார் பெரிய ரென்றது.

1065. மோரினும் காடியினும் அடப்பெறாது தெளிந்த நீரினாலே யட்ட
புற்கையாயினும் தனது தாளாண்மையால் வந்ததனை உண்ணுதலின் மிக
இனிதாயிருப்பது பிறிது இல்லை.

1066. இப் பசுவிற்குத் தண்ணீர் தருமினென்று பிறரை இரப்பினும் நாவினுக்கு
இரத்தல்போல இளிவரவு தருவது பிறிது இல்லை.

இஃது அறத்திற்காக இரத்தலும் ஆகா தென்றது.

1067. பிறர்மாட்டு இரந்து செல்வா ரெல்லாரையும் யானிரந்து கொள்ள நின்றேன்:
இரக்குமிடத்து இல்லை யென்பவர்மாட்டு ஒரு பொருளை இரந்து
சொல்லன்மின் என்று சொல்லி.

இரந்து சொல்லாமை இரந்து பெற்ற பொருளினும் கோடி மடங்கு
மிகுதியுடைத்தென்றவாறு. இஃது ஈவார்மாட்டும் இரத்தலாகா தென்றது.

1068. ஒருவன் வறுமையாகிய கடலை நீந்திக் கடக்க அமைத்துக் கொண்ட
இரத்தலாகிய அரணில்லாத தோணி, இரக்கப்பட்டார் மாட்டுக்
கரத்தலாகிய கல்லோடே தாக்க இறந்துவிடும்.

இஃது நல்குரவு தீராமைக்குக் காரணங் கூறிற்று.

1069. இரப்பென்று நினைக்க உள்ளம் கரையும்: இரக்கப்பட்டவர் கரக்கு மதனை
நினைக்கக் கரைந்து நின்ற உள்ளமும் மாய்ந்து கெடும்.

இஃது இரப்பார்க்கு ஆக்கமில்லை என்றது.

1070. எமக்கு யாதும் இல்லை, சிறிது ஈயவேண்டு மென்று சொல்லுவார்க்குக்
குறித்தவர்கள் இல்லையென்று சொன்ன அளவிலே அவர் உயிர்போய்ப்
பிணம்போல நிற்பார்: பொருள் உடையராய் வைத்து அவர் சொன்ன

இல்லையென்னுஞ் சொல்லையே சொல்லி ஈயாதார்க்கு உயிர் எவ்விடத்து ஒளித்து நிற்கின்றதோ.

இது பிணத்தை யொப்பரென்றது.

# 108. கயமை

1071 மக்களே போல்வர், கயவர்; அவர்-அன்ன
ஒப்பாரி யாம்-கண்டது இல்.

1072 நன்று-அறிவாரின் கயவர் திரு-உடையர்;
நெஞ்சத்து அவலம் இலர்!

1073 தேவர் அனையர், கயவர்; அவரும்-தாம்
மேவன செய்து, ஒழுகலான்!

1074 அகப்-பட்டி ஆவாரைக்-காணின், அவரின்
மிகப்-பட்டுச் செம்மாக்கும், கீழ்.

1075 அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்
அவா-உண்டேல், உண்டாம் சிறிது.

1076 அறை-பறை அன்னர் கயவர்; தாம்-கேட்ட
மறை-பிறர்க்கு உய்த்து-உரைக்கலான்.

1077 ஈர்ங்-கை-விதிரார் கயவர்; கொடிறு-உடைக்கும்
கூன்-கையர் அல்லாதவர்க்கு.

1078 சொல்ல, பயன்படுவர் சான்றோர்; கரும்பு-போல்
கொல்ல, பயன்படும் கீழ்.

1079 உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்-மேல்
வடுக்-காண வற்று-ஆகும், கீழ்.

1080 எற்றிற்கு உரியர் கயவர்; ஒன்று உற்றக்கால்,
விற்றற்கு உரியர் விரைந்து.

1071. மக்களை யொப்பவர் கயவர்; அம்மக்களை யொக்குமாறு போல ஒப்பது ஒன்றனோடு மற்றொன்று உவமை கூறப்படுமவற்றில் யாங்கண்டறிவது இல்லை.

உறுப்பொத்துக் குணமொவ்வாமையால் கயவர் மக்களல்லராயினார்.

1072. நன்மையறிவாரினும் கயவர் திருவுடையர்; இம்மை மறுமைக்கு உறுதியாயின செய்யப்பெறுகிலோமென்னும் கவற்சி நெஞ்சின்கண் உறுதலிலராதலான்.

இது தாமறியா ரென்பது.

1073. கயவர் தேவரை யொப்பவர்: அத்தேவரும் இக்கயவரைப் போலத் தாம் வேண்டியன செய்தொழுகுவராதலான்.

இது கயவர் வேண்டியன செய்வாரென்றது.

1074. மனையகத்திருந்து பொற்புடையராகிய பெண்டிரைக் காணின், அவரினும் மிகப் பொற்புடையாராய் அதனைப் பெற்றேமென்று இறுமாப்பர் கயவர்.

இது நிறையிலரென்றது.

1075. கயவர் ஆசாரமுடையராதற்குக் காரணம் அச்சமே: அஃதொழிய ஒருபொருள்மேல் ஆசையுடையராயின் அது காரணமாகவும் சிறிது ஒழுக்கம் உண்டாம்.

இஃது இயல்பான ஒழுக்கம் இலரென்றது.

1076. கயவர் அறையும் பறைபோல்வர்; தாங்கேட்ட மறைகளைப் பிறர்க்குக் கொண்டு

சென்று அறிவித்தலான். இஃது அடக்கமில ரென்றது.

1077. தம்கதுப்பினை ஒடிக்கும் வளைந்த கையினை உடையரல்லாதார்க்கு, ஈரக்கையையுந் தெரியார் கயவர்.

ஈரக்கை- கழுவினகை. இஃது இரப்பார்க்குக் கொடா ரென்றது.

1078. பிறர் தங்குறையைச் சொல்ல அதற்கு இரங்கிப் பயன்படுவர் மேன்மக்கள். அவ்வாறன்றிக் கரும்பு பயன்படுமாறு போலத் தம்மை நெருக்கினால் பயன்படுவர் கீழ்மக்கள்.

இஃது ஒறுப்பார்க்குக் கொடுப்பரென்றது.

1079. பிறர் உடுப்பதனையும் உண்பதனையும் காண்பாராயின், அவர்மாட்டு உள்ள குற்றங்களை ஆராயவல்லாராவர் கயவர்.

இஃது அழுக்காறுடையா ரென்றது.

1080. கயவர் யாதினுக்கு வல்லரெனின், தமக்கு ஒரு துன்பமுற்றால் விரைந்து தம்மை விற்க வல்லவர்.

இது நிலையிலர் என்றது.